சுரம் - சன்னி - குளிர்தோஷம் - குமரகண்டவலிவு பாரிசவாய்வுவிடும் - வேறு விருத்தம்

கொடுத்திடசுர சன்னிக் குடோரம்போம்
குமரகண்ட வலிப்பாரிசங்கள்போம்
அடுத்துடனாறு நாளிருவேளையு
மனுசரிசுர சங்களினிகுணம்
பெருத்திடும்பிணி நோய்தனக்கீய்ந்திட
பின்னிடைந்திடும் பித்தமுமில்லையே
கடுத்திடுங்கனல் காசிவிட்டேகுமாங்
காலனில்லை வினைப் பயனில்லையே. (84)

இராமபாணக்குழம்பினால் நோய்களதம்

இல்லையேராம பாணக் குழம்பினால்
தில்லை நாயகி சேவடி போற்றியான்
வல்லைவாயுவு மகோ தரசூலையும்
யில்லையில்லை யிதற்கெதிரில்லைதான்
சொல்லச்சொல்லச் சுடர்முப்பு மூன்றினால்
கல்லெனும்வைரக் கல்லும் பிளந்திடும்
அல்லல்போமறு பத்துநால் பேருமே
கொல்லுமுப்பூ குருவென்றறிந்திடே. (85)

கல்லுப்பு அன்னக்காடியிற் கரைப்பது வேறு - விருத்தம்

குருவிகால்குழம் பானவார் குன்றிடை
கருவிதானுங் கல்லுப்பது மோர்பலம்
விரிவிலா அன்னக் காடியிலுப்பிடு
கருகவேகரைத் தாகுந் தெளிவதே. (86)

தெளிவுதீரக் குடிநீர்

தெளிவுநீரிற் சிறக்கப் பணவிடை
வளியதாகமை போலுங் குழைத்திடு
களியுமேபிணி நோய்கள் பறந்திடும்
அழிவதேது அபரஞ்சியாண்டையே. (87)

கனல்வாய்வுகள் தீரும்

கட்டிடுங்கனல் வாய்வுமெழுப்பிடுஞ்
சுட்டிடுஞ்சுடர் நீரதுபோலவரும்
மட்டிலாது மதுவெனுமேசலம்
நெட்டிட்டேறிநீர் கடுக்கும் வாயுவே. (88)

வாய்வுசேரில் மதுநீரிறங்குதல்

வாய்வுசேரில் மதுநீர்சுவரிடும்
பாய்தலில்லாப் பழக்கம்போய் நெட்டிடும்
தேய்வுவன்னியுஞ் சிக்கிடுங் காற்றினால்
மாய்வதில்லை மருந்தது கேளுமே. (89)

கற்கங் குடிநீரறிதல்

கேளுமாகாச கெருடன் கிழங்குநீர்
வாளலாமதுர சஞ்சீவியிலிடு
தூளதாகுந் திரிகடுகுதன்வகை
ஆளலாஞ் சுர சத்திலடக்குமே. (90)

இராமபாணக் குழம்பினால் நோய்களலறிடும்

அடக்குமேராம பாணக்குழம்பதில்
அடக்குமோர்பண மாயிகிடையதுங்
கெடுக்கும் நோய்தனக் கேற்றிடுமஞ்சுநாள்
அடக்கிலா அதி காலையுமாலையே. (91)

இந்தக் குழம்பில் குமரகண்டன் குடல்வாதசூலை இவைகள் போம்

குமரகண்டன் குடல்வாதசூலைபோம்
அமரசோகை யதீதவுஷ்ணம்போம்
தமரசத்தோடு தசைசச்சு வாய்வுபோம்
சமரசதேக சவுக்கியமாண்டையே. (92)

கருடன் கிழங்கில் ஆனைவாதம்போம்

ஆகாசகரு டன்கிழங்கொன்றதால்
    ஆனைவாத மகுவத்தின் வாதம்போம்
ஆகாசகரு டன்கிழங்காவதா
    லனேக நோய்க ளலைகடல்புக்கிடும்

ஆகாசகருட னொருவாண்டுமே
யருணன்றன்முக மானபின் சூரணம்
ஆகாசமகம் மேருமறியலா
மறுபத்துநாலு பேரும்பாருங்களே. (93)

பஞ்சநிலமறிதல் - வேறு

பாரையுப்புப் பளிங்கதுமாகிடில்
காரசுண்ணங் கனவேகங் காண்கிலீர்
சாரமென்ற சமுசயமாமிது
வீரம்வீரம் வெளிநிலவுப்பதே. (94)

முல்லைநிலம் - அஞ்சுநில உப்பறிதல்

நிலவுப்பஞ்சு நிலநேர்மையுரைப்பதால்
கலனும்வாரி கார்மேகக்கருவியால்
வலமேமுல்லைக்கா டாவதும்வாய்த்ததால்
நிலமும்நெய்தல் நிச்சமயமாண்டையே. (95)

நெய்தல் நிலம் குறிஞ்சி நிலம் இஞ்சிப்பால நிலம் மருதநிலம் ஆக 5

மலைக்குறிஞ்சிவாழ் மாமலைச் சார்பிலும்
வலுத்தநாடு மருதநிலத்தினும்
உவர்த்துமேவு முவர்நிலந்தீச்சுரம்
நிலைத்தயிஞ்சிப்பால் நேர்கல்லெடுப்பதே. (96)

ஐந்து நிலத்தில் எழுபிறவி உற்பவம் - வேறு

ஐந்துநிலமேழுபிறப் பெந்தநிலமாகில்
இந்திரநிலவுப்பெரிய யெந்தநிலங்காண்கில்
விந்தைவனங்கல்களறு வீறுஞ்சலமூறும்
அந்த லவுணம் புனல்தன் னானக்கல் லிதாண்டே. (97)

பேர்மலைவளப்பம்

பேர்கள் மலை யாறு நதி யோர் கறைகள் தோறும்
மேர்கள் வளநாடு வுவர் பூர்க்கும் நிறவண்மை
தார்புவியி லுப்புகளா தன்னிறங் கொக்கதுபோல்
நீர்பெருகி வட்டமதாய் நிற்பது காணுப்பே. (98)

வெள்ளைக்கொக்கு சாயல்பூநீர்பூர்க்குதல்

கும்பல் கும்பலா யனேக கொக்குத்திரள் போலும்
கம்பிகம்பியாய்ச்சிலது கல்லின்மணிபோலும்
நம்புதலுமா யுவர்தன் னாடதிலுமுண்டு
வம்பிலைகாண் சூழ்ந்துமதி யகிலமதிலுண்டே. (99

மாநிலத்திலுவர்களதீதம் - வேறு விருத்தம்

மாநிலந்தனிலு முவர்கள் நாடதுவும்
　மதியினுப்புவளர் மகிமைகாண்
ஊனிருப்பது ஒளிவுதன்னறிய
　உவர்கள் சூழ்ந்து மதியூசுரம்
வானிலுண்டுகளர் வாரிபோவதுமுன்
　வந்துநாடிமதி பூண்டுமே
தோனில்சத்தி சிவரூபுதன்சுரூபந்
　தோன்றுமவ்விட மிருப்பதே. (100)

சிவவிந்து - வேறுகூறு

வேறு கூறுசிவ விந்துவுற்பகமும்
　மேலுங் கீழும்வளர் நாதமும்
தாறு தோறுமிது போதுதிப்பதெனி
　லுணர்விரா யதுவுங் குப்பியில்
தேறு காரமொடு சாரவித்தையெனிற்
　சிவமுஞ் சத்திதசை தீட்சைகாண்
வாறு காடியரை வதுசலம்படியில்
　மாறிமாறி தசை வைத்திடே. (101)

சிவவிந்து ஆறுதிங்களில் தசதீட்சை

வைத்திடும் பலம் தஞ்சுநேர்மையிடை
　ஆறு திங்களதின் காடியில்
மைத்துமே விதசை திட்சைதன்றவியில்
　வைத்துமே தெளிய நீரதை
முத்துபோல் மதிநீர் பீங்கான்றன்னிலிடு
　மூலமிந்தரவி முகமதில்
அற்றுமெண்ணையறு மானைக் கல்லின்குணம்
　அருமையாரறிவர் யோகியே. (102)

ஆனைக்கல்லு உவரறிதல்

ஆனைக்கல்லுவர்தன் னம்புவிதனிலும்
　அரிதரிதுவெகு அதிசயம்
கானகத்தினிலுங் களர்கள் கோடியதில்
　கல்லுப் பாவதுவுங் காண்கிலார்
ஞானசித்திபுவி நாதசத்திவளர்
　[illegible]கி தலமதுசூழ் வட்டமாய்
பு[illegible]த்திபப்பு நிருப்பு[illegible]அஞ்சுபல
　பாகமாகும்[illegible] வாலன்டையே. (103)

அரைப்படி நீரில் பூநீரிட்டுக்கரைத்தல்

நீரரைப்படியில் பூநீரிட்டுக்கரை
 நின்றுநாள்தினமு மூன்றுதான்
வாகுரைத்தபடி தெளிநீர் வாங்கிமரு
 பீங்கான் தன்னிலிரு வாரிநீர்
நேருரைத்தகதிர் முகவன் வாலைரவி
 நேர்மையாக தசை தீட்சைதான்
ஆருரைத்தவர லாறுசுத்தசலம்
 நாடிடும் முவர்கள் நீங்குமே. (104)

களர்நிலத்தி லுவர்பூர்க்குதல்

நீங்கிடுங்களரி லுவர்கள் பூர்க்கும்
 நிலவுப் புக்கல்லெனவு நிகழுவார்
வாங்கிடும்புனலு மாமதியின் சலம்
 வழலை நாதமெனுஞ் சத்திதான்
பாங்குடன்புனலி நாதஞ் சூழ்ந்துவுவர்
 படர்ந்து சுண்ணமதும் பாரில்வாழ்
ஆங்குசுத்தள ராதீ தங்களுவ
 ரானதன்மயமே யுணருவாம். (105)

களர்நிலத்தி லருவி சலஞ் சொரிதல்

சுத்தமாமதீத களர்நிலந்தனிலுஞ்
 சோருமேசல நீரருவியும்
மித்துமேவியுவர் சாரமாகிவளர்
 வேதமாமறை விளங்கிடில்
சத்தமேழுகளர் நித்தமேவிவர
 சார்புவிகளறி னிலமெலாம்
வைத்தாரீசனுவர் சாரவித்தைதிரு
 வள்ளுவனுரைநூ லுண்மையே. (106)

உவர்நிலத்தில் வெண்ணுப்புப் பூர்ப்பது

உவர்புவியதின் மேலூரமதுகூ
 ழருவில்ரவிவெண் ணுப்பதாய்
தவர்களே துவுவர் சாரமேயதீத
 தவளமாமதிநீர் பூர்க்குமால்
கவர்கள் கோடியிது தைப்புமில்லைகசி
 வில்லை நல்லசலங் காண்கிலார்
உவர்நிலத்திலொரு சாணதுக்குள்சிவ
 முலகோர் சொல்வதினி யூரலே. (107)

உன்னுடலிலறிவது உலகத்திற் சுத்தசலமில்லை

உலகில்சுத்தசல மொன்றுமில்லையுன
துள்ளஞ்சுத்திசெய் யமுர்தமாம்
உலகெலாமுழுது மேபடைத்தஅரன்
உண்டுமார்க்கருக் கண்டுயான்
கலகலத்துவிடு முவர்கள்கைப்புவிடுங்
காரசாரமிதாற் கட்டிடும்
வலுவலுத்துவுவர் கசியமெண்ணைவிடும்
வாரியுப்புகடற் பாரையே. (108)

ஒருகரையோரம் - இராமநாதபுரம் - வேறு

கரைகளோரமதில் ராமநாதபுரங்
காணுமக்கடலில் கடிகைபத்
தூரவுங்கடலில் போயெடுக்குமவர்
சோனகர்க்குவழி தோன்றிடும்
வாருவார்களெனில் முத்து சிப்பியது
வாரும்போ துகடற் பாரையும்
தேறுங் கல்லினுரை சீவரத்தினம்பசை
செங்கதிர்ப்படவெண் ணொளிவதே. (109)

ஐப்பசி கார்த்திகை யறிதல் - வேறு

ஐப்பசியுமது கார்த்திகையளவி
லண்டரண்டமிரு கூறினால்
உற்பகங்களெனும் வன்னிவாய்வுசல
மூன்று மொன்றுரு வதாகிடும்
கற்பவாரிகடல் நீரிற் பாய்ந்துகனல்
காற்று மாமழையுங் கருதினால்
சொற்ப மல்லகட லாதீதங்களூமே
சூழ்ந்து வாரிதி சுழலுமே. (110)

வாய்வு - அப்பு - வன்னி இவை மூன்றுமறிதல்

சுழலு வாய்வுசல வன்னிமூன்றுமது
சுழன்ற மூர்த்தயிர் போன்றதாய்
வழலையுப்பு வெளி வாரிகட்டிடினு
மலைகள் போற்கடலில் வாசமாம்
பொழு தருணன்பட புனலுங்கட்டியது
புவியில் சித்தரெடுத் தனைவர்வாழ்
உழலையஞ்சுபல முப்பெடுத்துணர்க
லூட்டும் பாரைக்குளிக் கல்லிலே. (111)

பாரையுப்புக் குழிக்கல்லிலிடவும்

பாரை யுப்புகுழிக் கல்லினில்பதன்
பாச்சியாட்டியெடு கிளிதாய்
வேரை பாண்டமது திங்கள் காடியினில்
விட்டொருப்படியு மேவினால்
காரம் பூநீரது பல்மும்பதெனவும்
கருதுமே கரையுந் வதாய்
வீர்மா குந்திரி நாளும்தெளிந்
வேண்டியே சலநீர் காணிடே. (112)

பாரையுப்பு ஐந்துபலம்

கண்டநீர் களதில் பாரையஞ்சுபலன்
காட்டி வன்னிதனிற் காய்ச்சிட
சுண்டியேவ ருநல்சுவரும் பாகமதில்
சூட்டிடு வீர்குளிக் கல்லினில்
தூண்டு வேண்டுவென தூளதாக்கியதில்
சூதிலாக் கருதன் னாலையும்
அண்ட நீர்விடவு மாட்டிசாமமிகு
அருணன்றன் முகம்வைத் தாண்டையே. (113)

நீர்தெளிவு அருணன்முகத்தில் வைக்கவும்

வைத்தருணன் முகம் வட்டஓட்டிலிடு
வாய்தனக்கொருமே லோடுதான்
சுத்தமண்தடவி சீலையேழுபுகல்
தொந்தியேகவிழ வலுவெனில்
ஐந்துநீறிவிடுங் கொல்லன்றன் குகையி
லனல்படமிகவுஞ் சாடினால்
சத்துசெத்துவிடுஞ் சித்தப்பாரையெனுஞ்
சித்தர்சொன்னமறப் பாண்டையே. (114)

பாரையுப்பாவது வாய்வினுப்பு

கருதுவார்கள் கடல் பாரையுப்பெனவுங்
காலியானதுவுங் காற்றினால்
விருதுசுண்ணமிதால் வேதை கோடியிதில்
வெண்கிளிஞ்சியெனும் நீறதால்
கருதுவுன தில்லமேவிவரு
மன்னசுத்தசலம் நீர்படி
துரிதமாயதனைப்பிங்கான் குப்பிதனிற்
சுட்டியேவிடுநீர் சலமதே. (115)

சுத்தசலம் வேரிருக்குதல்

சலநீர்சுத்தசல நீர்விடும்நிழலில்
சலமேல்தூசிபடி யாமலும்
பலமதாயொருதன் மண்டலந்தனிலு
பாச்சியேவிடுவீ ரானபின்
வலமுமேவிசல மேலுமேவயிர
வச்சிரத்தகடு போலவும்
தலமேயுப்புமதி சந்திரனொளிவு
சற்குருவின்முறை யாண்டையே. (116)

குருமுனியருளும் வசனம்

குருமுனியருள் தன் கமலமும்பணிய
கோடிகோடி துதி செய்துயான்
அருள்மிகுத்ததிரு வள்ளுவன் மொழியும்
வசனமாயிரமன் னூறினில்
திருமிகுத்தநவ ரத்தின மெண்ணூறிதின்
செய்தி காண்பதுவுந் திரையிலா
கருவினுப்புவித மூன்றதுவுஞ் சமனாய்
கவியவொவ்வொன்றொரு பலமதே. (117)

குழிக்கல்லிடு மருந்து

கவியவுங்குழிதன் கலுவமாமதனிற்
கருவினுப்புவித மூன்றதும்
அவியசுத்தசலக் காடிவிட்டொருதன்
மாற்கமாய்மயனம் வருதலில்
குவியசூடனொரு பலமதற்கினிய
கூட்டிநீர துவிட் டாட்டிடில்
பலியமாகும்பத மாய்வருதலிது
பார்த்தெடுவழிதன் பில்லையே. (118)

அகலிலடைவைத்து மேலகல்மூடவும்

வழியதற்கினிய வட்டஓட்டிலிவை
வைத்து மேல்மூடிதன் னோடதும்
தழியசீலையதில் மண்ணுமேழுவிதந்
தடவியுமருணன் முகம்பட
கழியசாவல்புட மாறியானதுபின்
கவிழமேவி யெடுத்தானபின்
அழியச்சுண்ணமெடுத் தாட்டவுங்கலுவ
மருகிருத்தியரு ளெய்தவும். (119)

ஆறிசுண்ணமெடுக்க அதிகவேகம்

ஆறிசுண்ணமதி வேகமாமதுவ
மாறியானதுபின் னாண்டேகாண்
வீரம்பூரங்குரு வண்டு நாபியுறம்
வீசும்வகைக்குகளஞ் சேர்த்திட
கூறுசுண்ணமதி லோர்கலக்கவுமே
கொண்டுமேவிடுசவ் வாதுடன்
தாருலாவிசித் தண்டநீர்விடுமே
சாடிடுவீற்சதுர் சாமமே. (120)

எட்டு சாமமரைப்பது - அருணன் செயநீரறிதல் - வேறு

நாலுசாமமிரு நாலுங்கூட்டியரை
நாடிநின்பழநீர் காடியும்
நாநிலந்தனிலுங்குக் குடத்தின்கரு
நாதம்விட்டுவிடு மவிந்துகாண்
பாலருணன்பரி யிதழின் பூவிரசம்
பாகுமாகுமிவை பாச்சிடில்
பலகோடி கோடி விதமாகிலும்புகல்
பாடுபட்டு வுழைப்பார்களோ
வேலுமாமயிலு மீதிலும்நடன
விசிதசித்தர்நவ உப்புவால்
வேதநான்மறையு மானவாறறிதல்
பேதபேதமெழிற் கூறுகாண்
ஆலகாலவிஷ மானகல்லறிய
ஆசாபாசமதம் போக்கினால்
மேலும் நாலுஞ்சரி யாகவுஞ்சமனாய்
விட்டுடன்னுவர் தன்சாரமே. (121)

உவர்மண்ணின் மேற்படரும் உவர்சாரமறிதல் - வேறு

உவர்தன் மேலும்படர் மண்ணின்சாரமது
மண்ணினாலதுபூ வாறுகாண்
உவர்தன் சாரம்விட உப்புவானதுவும்
ஒருகளஞ்சியதிற் பாச்சினால்
உவர்சார நீர்படவு மூன்றுமேயறிவி
யூடுருவிசலந் தோன்றிடில்
உவரான நீர்சலமும் விட்டுசாடியொரு
நாள்முழு மசை யாமலே. (122)

மயனபாகம்

சாடியோர்மயனம் வருதல்பாகமறி
தனிய நின்றுவிடு காமலும்
தேடியோடியலை யாமலும்பகலிற்
செய்பதமிதனை பில்லைசெய்
வாடிடாவருணன் ரவிமுகம்படவும்
வாட்டிசுக்கதும் வாடினால்
நாடிசில்லதுவு மேமுஞ்செய்துரவி
நமனாதன் வைத்துப்புடஞ் சாவலே. (123)

சாவற்புடம்

சாவலானபுட மேவியாறினபின்
றானதற்கவுழம் போக்கிடு
ஆவலானகிரி தாபமாறிவிடு
மானைக்கல்லிதனை சுன்னமுங்
காவலாய்பதன மேவிடும் பரணிற்
கருதிவைத்துக்கண பதிதனை
புவன குண்டலியின் கமலபாதமலர்
பூசனைத் தொழுது பணியுவாம். (124)

சுழிமுனை வளர்பிறை

முனை சுழியிளவள ரிடைபின்மேவுகலை
முதலெழுத்தகர மூலமே
கணை தொடுத்துவிடும் வாசிவாசியுணர்
கருணை மேவுகலை யூதவும்
தினமு நாள்விடுதி விநாடிமூன்றுவிசை
தியான உவ்வுமென செபித்திடும்
அணை யிதற்குமறு படிதொடுப்பதிலை
யருளில் நின்றுதொழு தங்ஙனே. (125)

துருசுசுண்ணம்

தொழுதுமே விகுரு முப்புசுண்ணமிதிற்
றொந்தங்கோடிவித தொழின்முறை
பழுதிராதொருதன் பலமிதாருமண்ட
பச்சையானமயில் துக்கமே
முழுதும்நாடிகுரு முப்புதாசிடையில்
முத்துபோலுநீர் விட்டிமை
எழுவிதப்பிறவி யதீதகாரமிது
யிதனில் துட்டிடையு மூட்டிடே. (126

ரவிகனல் வீசுமுகம்

ஊட்டி டுமிரவி கனலும் வீசுமுகம்
உருவு மேற்படவு மொளிவதாஞ்
சாட்டி யோரிலையின் றாமரைமயனஞ்
சாடித்தே புகல்வி ரங்கணே
வாட்டி மேற்கவழஞ் செய்துசீலையெழு
வாலை தன்றவியில் வைத்தெடு
நாட்டி டும்புடமும் ராவில்நாடும்புவி
நன்ற தாகும்பதம் நல்குமே. (127)

கவுதாரிப்புடம்

பதமிலங்கவு தாரியா மெனினும்
பார்த் தெடுப்புடமு மாறிபின்
அகமதாகும் பசை மேனிபோய் வெளுமை
யதீதசுண்ணமட வாய்வரும்
இதமதாய்ப்பதன மிட்டிடும் பரணில்
மேவுஞ்சூதரச மாரணம்
விதமதாய முர்த பற்பமாகுமினி
மேலுரைப்பதொழில் பதனமே. (128)

துருசுபற்பகுரு சுண்ணம் விராகனிடை

துருசுபற்பகுரு சுண்ணம் விராகனிடை
சூரமாவதொரு பலமிடை
வரிசையாகவுமி நீரில்மார்த்தனமும்
வைத்து வைத்ததின்மேற் பூசிடும்
முரியுஞ் சாமமதிற் கவிழஞ்சாடிடவு
முத்துப் போலதுவு மட்டையாம்
அரனுமாலயனுங் கூடியுற்பகம
தா[illegible] றுரசங் கட்டுமே. (129)

சூதரசபற்பம்

கட்டுஞ்சூதரசம் வட்டுப் போல்வருதல்
கண்டெடுத்துமெழு கானதை
துட்டுப்போலுந்திரு மேனிமூலியறை
தொந்தியும்மயன கவுழமும்
சட்டுமேலுமூடி கீழுமேலும்வலு
சாத்தியே விடுவீர் கதிர்முகம்
மட்டுமேலகலு மூடிசீலையெழு
மண்ணும் பூசிவளஞ் செய்திடே. (130)

கவிழம் - ரவிமுகம்

செய்திடுங்கவிழம் ரவியமுகத்தினிலுந்
தெளியவைத்துசுடர் வீசவும்
பழுதிறாதினி வராகதன்புடமும்
பகர்வீர்பாகமிது நீறிடும்
வயதுகாணதித வேதைகோடியிதில்
வாய்வு பித்தம்றுஞ் சூலைபோம்
கழுதுமேகவினை காணதிகங்களறுங்
கன்ன சூலைவிடுங் காண்பிரே. (131)

குஷ்டம் பாண்டுகள்போம்

குஷ்ட நோயகலும் பட்சம் பற்பமது
குன்றி தன்னிடைகொண் டுணர்விராய்
பட்சமா வின்னமுர் தங்கள் தன்னிலுணர்
பாச்சு நாலுமிரு வேளைதான்
நிட்சயங்கள் சய காசமீளையதும்
நிவ்வுடலதுவிட் டேகிடும்
கஷ்டநோயகலு மஷ்டகுன்மம்விடுங்
கண்கள் காணார்கடல் புக்குமே. (132)

கடலிற் புக்கும்வினை

கடலிற்புக்கும் வினைக் கண்காணாதொழியுங்
கருதினோ மவிழ்தங் கண்டுபார்
உடலிருக்குந்திரை நரைகளோடிவிடு
முடலில் நோய்கள்பிணி மாறிடும்
மடம்விட்டே குமறு பத்துநாலுசுகம்
வாடுஞ் சேத்துமமிரு பத்தொன்றும்
தடவனங்கள் தொறுங் கனமிருப்பதுவுந்
தார்புவியிலும்வான் குமரியே. (133)

வான்குமரிக்கிருதம்

வான்குமரிவானை மாதுநாதசலம்
வாங்கிமரதின்சோர் வானுநீர்
தேன்பொழியுமது பானசூதரசந்
தேவராலெனினுஞ் செய்வரோ
யான்புகலுமாது நாததீர்தனிலு
மாவின்கிருத மாட்டுப் பாலதும்
கானகத்திற்கரு நொச்சியின் றசமுங்
கற்பூரத்தின்வள்ளி ரசமதே. (134)

அஞ்சுங்கூடி வகைக்கஞ்சுபலம்

அஞ்சுங் கூடிவகைக் கஞ்சுமஞ்சுபல
மந்த நீரில்பஞ்ச தாரைகொண்
டஞ்சு மேகசரி தாரையொன்றுசரி
யாறுங் கூடிவகை யதுசரி
மிஞ்சொணாதுயிடை பஞ்சபாணமிது
மீறிடும்பிணிக ளேகிடும்
அஞ்சொணாதுமருந் தஞ்சொணாதுவினை
யானைமும்மதம் நடுலகுமே. (135)

அஸ்வகெந்திச் சூரணம்

அசுவ கெந்திவேர்க் கொம்புவாள்மிளகு
யானை திப்பிலி யறத்தையும்
பசுவ மாக்கிச்சரி சமன்களஞ்சியிடை
பாச்சு மஞ்சுவிதப் பாகமாய்
நிசுவ பாலுஞ்சரி யிடையிரண்டுவிதம்
நேறு கூறதுவொன் றாகிடில்
பசுவங் குன்றியிடைப் பாச்சிபட்சமிரு
பாலித்தேதினம் பகர்ந்திடே. (136)

இந்த விதமொரு பட்சமுண்டுவர
யிச்சாபத்திய மொரு பட்சமாம்
அந்த வீதம்வரும் பத்துமண்டலமு
மானதாலும் நரை திரைகள்போம்
சுந்த ரங்கமெனும் வீரதத்துவமுஞ்
சொர்ண சித்தும் விளையாடலாம்
அந்த மென்னரச கோடிகோடிகளங்
காடும் வேதைக ளனேகமே. (137)

அரிதாரபற்பம் - வேறு

வெந்து போம்வினை தாரபற்பங்களால்
கொந்தி யேவிடுங் குன்மச்சயங்களை
நொந்து போம்பலம் வெந்துநீராகிடும்
இந்த வாறுறையா ரறிவார்களே. (138)

தந்தையின்னாடு

தந்தைதாயொடு நாதவிந்தாகுமாய்
வந்துமேலபி வாச்சுதுமூன்றுப்பால்
எந்தநாடு யென்றேசிலர் தேடுவார்
தந்தைநாடுவர் தான்வினைவானமே. (139)

வனத்திலேய்ந்து வகைதெளியார்சிலர்
செகத்திலெங்குந் திருக்கூத்தாய்ப்போச்சுது
பணத்தின்மீதிற் பன்னிகொள்ளுமாலினை
சணத்திலேயறிந் தோர்கள்நிலத்திலே. (140)

இந்திரிய நாதம்

மனத்தினாலறிந் தாலென்னமாய்கைபோம்
வனத்திலெங்குமப் பூடுவனாந்திரம்
குணத்தினாலுங் குறிகண்டறிவரோ
எனத்தின்வாரறி இந்திரியநாதமே. (141)

உவருப்பின் வரலாறு - வேறு

நாதமென்றதறு திங்கள் காடியது
நாள்கள் தோறுஞ்செக மாதிதம்
நாதமென்றதிது பானமென்றுஞ்செக
நாதமென்றமுரி கள்ளுதான்
வாதமிந்துரச சூதமானமிது
வாதப்பாலிரத வஸ்துகாண்
ஓதினார்சிலர்க ளுதகமாந்தயில
முலகமாதிதமு முவர்ப்பூவே. (142)

உவரிருக்கும் நாடு -வேறு

உவர்தன்னாட்டிலிரு கூறிலேழுவிதம்
உண்டோயில்லை யுலகந்தனில்
உண்மையுண்மையுரு வேற்படும் பொழுது
உற்றுப் பார்க்கரவி மதியெனில்
உவர்நிலத்திலுவர் சாரம்பூநீரெனும்
ஒன்றிரண்டு விதமாகிடும்
உற்பனங்களறிந் தோர்கள் செய்வதினி
உறுதிபாருமுவ ராளதில்
கற்பசுத்திகடல் நீரையுண்டு
கருநாகமானது கைகட்டிடும்
காரங்கட்டகட லுப்புங்கட்டிவிடுங்
காலிதன்வசம தாகிடும்
அற்பதேகமழி யாதுமாய்கையும்
அகத்தினாலருங் கிடுவிறளம்
அவனிமீதிலள வில்லாநூல்மறைகள்
அருளினாரிதுபோ லில்லையே. (143)

கடற்குருவியென்பது பாரையுப்பு வேறு - கொச்சகம்

கடற்குருவியுப்பதின்வார் கண்டதின்பின்பாரை யுப்பாங்
கடற்குருவியுப்புபலங் கல்லுப்புமந்திடைகாண்
கடற்குருவியந்திடைக்குக் காண்பதும்பூநீர் பலந்தான்
கடலுப்பதிற் கூடிரண்டுங் கலந்துவுற வானதுவே. (144)

உவரானது பாரையுப்பு

உறவான பாரையுப்பு வுண்மையுளருப்பதுகாண்
திறவான பூநீருஞ் சேர்த்துயிவை மூன்றுவிதங்
குறைவிலாக் கற்குழியிற் கொண்டுயிதை யண்டசெயநீர்
பரவசமாய் விட்டுமெழு பாகமதாயாட்டிடீரே. (145)

மைபதம் அண்டச் செயநீர்விட்டாட்டவும் - ரவிகாந்தி

ஆட்டிவிடு மைப்பதமா யண்டச்செயநீர் விட்டுமெழு
காட்டிவிடு மோர்தினத்தில் மையதுபோலாகு மெனில்
ஓட்டியெடு மேவழித்து நற்சதிரபில்லைசெய்து
காட்டிவிடு மேகதிரின் கடூரமென்ற காந்தியதே. (146)

காந்தியதோருணன் கதிரவன்றன்னாலிறுகி
யேந்தவலுத்தேயமுந்தி யேற்படுமேயாமாகில்
முந்து முத்துச்சிப்பியிந்தோ டிரஞ்சதுவோரஞ் சதுவும்
அந்திதனிலெய்திடுங்கா ணாவியனலேற்படுமே. (147)

ஆறுதிங்கட் காடியறிதல்

ஆவியொரு பாண்டமதி லாறுதிங்கட் காடிபடி
சேவிசந்திரபுட்கரணி தீர்த்தமென்ன சுத்தசலம்
பாவியெனமாய்ச் செலுத்திப் பாச்சும்வெண் கிளிஞ்சியைவிட்
டேவிகடலுப்பதுவும் விட்டிரண்டின்முநாதவிந்தே. (148)

சத்திநாதபூநீர் வேறு - கலித்துறை

சத்தியும்நாதம் பூநீர்விளங்கிய சாரமதால்
கொத்திப் பயிரிடும் பாவனையாய்ச்சிலர் கூட்டமிட்டு
சத்தியைநம்பி வெகுபாடுபட்டுத் தயங்கினர்கள்
வித்தையிருக்குது வீட்டுக்குளொன்று வெளியில் ரெண்டே. (149)

வீட்டுக்குள் காடியறிவது

வீட்டுக்குள்சுத்த நீர்சலக்காடி வேணதுண்டு
நாட்டுக்குளேகளர் நாநிலமுண்டு நால்வகையில்
காட்டுக்குளேயுவர் கல்லுப்புமுண்டு காட்டில்வளர்
கூட்டும்பூநீர்வகை வெண்கிளிஞ்சி தன்னைக் கூறுவனே. (150)

சிப்பித்தோடு

ஏனம்விரும்பச் சிப்பித்தோடிட்டு யினமிரண்டும்
பானமெனுஞ்சலம் பாரையுப்பிட்டுப் பத்துபத்தாய்
வானஞ்சுருங்க யெறியிட்டுத்தொக்க வலுத்த வைதான்
ஞானமூன்றுப்பு மொன்றாகிச் சேர்ந்தது நாதவிந்தே. (151)

மூன்றுப்பும் வாரியெடுப்பது

மூன்றுப்பும்வாரி யொன்றாகச்சேர்த்து முத்துச்சிப்பி
ஊன்றிக்குழிக்கல்லுஞ் செயநீருவிட்டுறவுசெய்து
நன்றுப்படிகவெண் வருகலும்போலும் நளினமதாய்
என்றோரு நாட்சென்று யிதைவழித்தேபில்லை வெயில்முகமே. (152)

வட்டவோட்டில் வைப்பது

முகங்கதிர்வேகம் வட்டோட்டில்வைத்து மேல்மூடிகொண்
டகமாய்மண்சீலை வலுவேழுஞ்செய்து அருணன்முகம்
முகமேவிசாவற் புடமேவிகாட்டு வூரெருவால்
புகழாகும்வன்னி கனலாறிமேவும் புடம்பிரித்தே. (153)

சிப்பிச் சுண்ணங் கடூரம்

பிரித்தெடுத்தங்க மன்னாட்சென்றுபின்பு பின்னிருநாள்
குறித்துடன்முத்துச் சிப்பியின் சுண்ணங் கொடூரமென்ன
முறித்துட நின்னிறங் கலுவத்திலிட்டு மூன்றுமொன்றாய்
நிறுத்துச் சமனிட்டு செயநீரதுவிடும் நீர்கொண்டுமே. (154)

நீர்கொண்டு சாடிவிடவும்

நீர்கொண்டுசாடி நாள்விதஞ்சென்று நேர்படவும்
வார்கண்டுபில்லை ரவிமுகங்காட்டி வாட்டியெடும்
சீர்கொண்டவட்டச் சதுரோட்டிலிட்டுச் செலுத்தி மூடி
பார்கண்டுசீலை மண்ணேழுஞ்செய்துப் படரவியே. (55)

சாவற்புடம்

படமுத்துக்காட்டிப் புடமதுஞ்சாவல் பகர்ந்து வன்னித்
தடமதையாற்றி யனலாறும்பின்பு தனையெடுத்துத்
திடமெனுமாகக் குழிக்கல்லிலிட்டுச் சேர்க்கும் விதம்
தொடுநவச்சாரஞ் சுண்ணத்திற்பாதி தொடுத்திடுரே. (156)

செயநீர் பனியில் வைக்கவும்

தொடுத்துநுணுக்கிப் பீங்கானில்விட்டுத் துதிப்பனியில்
அடுத்தொருவாரஞ் செயநீரிறங்கு மடவறிகாண்
கொடுத்திடுமஞ்சள் விசைக்கி துகுன்றி கொடுக்கநிறம்
எடுத்திடும்வர்ணங் குங்குமம் போலிது வின்னிறமே. (157)

செயநீர்நிறம் - வேறு வெண்பா

இன்னிறமாஞ்செயநீ ரிதில்வீரம் பூரமதும்
நன்னிறமாநுணுக்கி நாட்டிடவும் இன்னிறமும்
காட்டுப்புரசமலர் காந்தியொளிவாயிலகும்
நாட்டில் சரக்கானதெல்லாம் நாட்டே. (158)

அறுபத்துநாலு சரக்கும் நீறும்

நாட்டுமறுபத்து நாலுசரக்கானதுவும்
மாட்டிவிடுஞ் செயநீரில் மாளும் வாட்டிடவும்
கெந்திகெட்டும் வெண்மதிபோற் கிலேசமில்லைத் தாளகமும்
அந்தநிறஞ் சந்திரனொளி யாமே. (159)

பாஷாணக்கட்டும் பளிங்குநிறம்

பாஷாணங்கட்டுப் பளிங்கு நிறமாகும்
மேஷாணமில்லையிது வெண்துத்தம் - பாஷாணம்
பசுமையறுந்துருசு பசலைநிறமதுபோம்
கசுவறுந்து வுப்பதுவுங் கட்டுமே. (160)

லவணமிருபத்தஞ்சும் கட்டும்

லவணவகையிருபத் தஞ்சு முழுக்கட்டதுவாம்
லவணமதுவலுத்து நல்குமே - லவணவகை
முப்பூவினாற் கட்டும்முன்சுத்தி போலிதுநீற்
றப்பூவிதில் முப்பூவைக்கொண் டாக்கே. (161)

முப்புமுதல் பின்பு சுத்தி

முன்சொன்னமுப்பு மூலசுத்திப்பாகபடிப்
பின்செய்த அம்முறைபோற் பேணினால் முன்செய்த
அன்னரசக்காடி ஆணிமுத்துச் சிப்பிசலம்
முன்விதமாய்க் காச்சும்ரவி முத்தி. (162)

முப்புரவி தீட்சை பத்து

ரவியில் முப்புமூன்றும் ரவிதீட்சை பத்தும்
கவியயிந்த வெண்கிளிஞ்சிக் கங்கையால் ரவியிலுப்பு
வெண்மையிலும் வெளுமை வெண்கிளிஞ்சிநீர் படவும்
பண்மைப் பளிங்காகுமிது பார். (163)

லவணவெண்மை - வேறு விருத்தம்

பளிங்கது வெளுமைப் பகர்வதுலவணம்
பகர்ந்திடில் முன்செய்த பாகம்
பாரிலுப்புவர்ப்பு நாதமும்பூநீர்
பாரையுப்பதுவெ னின்மூன்றும்
களங்கெனுங்கலுவ மதனிலுப்பிட்டுக்
கருவெனும்வெண் கருகாக்கிக்
கற்பூரமும்பலமிட் டொருதினஞ்சாடிகைப்
பாகமாய்வழித்துடன் பில்லை
விளங்கவும்ரவியில் முகம்படவுலர்த்தி
விதுரமென்ற கலிநில்தாக்கி
மேல்மூடிசந்து சீலைமண்ணேழு
விதிப்படிசாவல்தன் புடத்தில்
உளமதுங்கனிய சுடர்கனலாறி
உடன துகவுழமே யுடைத்து
உள்ளிருந்ததுநீர் குருசுண்ணமெடுத்து
வுற்பகக் குழிக்கல்லி லூட்டே. (164)

முப்பூவின் சுண்ணம் சரக்குகளூட்டியரைக்கவும்

ஊட்டிடும்வீரம் பூரமுங்குருவண்
டுறமதும் புழுகு சவ்வாது
ஓங்கிடும்நாபி யுணரவுமேழு
வொக்க வேகற்குழி யதனில்
ஊட்டிடுமுப்புச் சுண்ணமுஞ் சேர்த்து
வொளிவெனும் காடிநீர் தாக்கி
யோர்தினஞ்சாடி மெழுபதவாட்டா
யுரவதாய்க்கதிர்முகங் காட்டி
வாட்டிடுமனலில் கணிலெனும்வருதல்
வளம்பெற வூட்டிதன்னூட்டி
மறுவட்டிமுடி சீலைமண்ணேழு
மருவியசாவல்தன் புடத்தில்
பூட்டியேவன்னி யாறினபின்பு
புடம்பிரித்து வரவுஞ்சுண்ணம்
போற்றியே பணிந்து அம்பிகைப்பாதம்
பொன்மலர் சாற்றியே தொழுவாம். (165)

தாளகபற்பம்

தொழுதுடன் பணிந்து வெண்கிளிஞ்சலுநீர்
சுகாதீதசெயநீரி லெனினுஞ்
சுத்திதாளகமு மோர்பலமெடுத்துச்
சுயமெனுமயச்சட்டி தனிலும்
பழுதிலாமலுமே வன்னியு மூட்டிப்
பகருஞ்சீலையில்நீ ரூட்டிப்
படர்ச்சிடுந்துளிநீ ரிருபக்கம்பாய்தல்
படபடப்பது விலாச்சுருக்கம்
முழுதுநீர்படவுந் திருப்பிமுன்பின்னாய்
முதுற்படசெயநீர்விட் டுறவாய்
மூன்றுசாமத்தில் வலுத்துகட்டிடுவாய்
முன்னமே வெளுத்து தாளகமும்
எழுதும் வெண்கிளிஞ்சி நீர்படபளிங்கா
மிதையெடுத்தருள் முப்புசுண்ணம்
மிகக்களஞ்சதுவில் கிளிஞ்சிநீர்விட்டு
விரவியே கவிழமுஞ் செலுத்தே. (166)

சுண்ணக்கவிழம்

எனமதாய்சுண்ணக் கவழமுஞ்செய்து
யிடர்வருகாமலும் பிரமி
இனியதோர்மூலியுமி நீர்விட்டரைத்து
யிளகவுமிருபலந் தாக்கி
வனமலைமஞ்சள் மருவியமூலி
மாநிலந்தனிலுமே வளப்பம்
வசனியுங்கோழிப் புடம்வன்னிமூட்டி
வளறனலாற்றி யக்கினியை
கனமிவைதார மதீதமாம்பற்பம்
சங்கையில்லாமலும் பரணில்
சாத்திசற்குருவின் பதமலர்போற்றி
சவுந்தரிபதம்பணிந் துதித்து
கனம்பெற வினைபோம் காசநோய்பித்தம்
கர்மநோய் பிணியதும் விலங்கக்
கருந்துந்தேன்முறித்து வுளுந்திடைதாரங்
காலையுமாலையு மூட்டே. (167)

மூட்டரிதார மீளையுமிரும்பல்
முகவாத சன்னியுங் காசம்
முன்கழுத்திசுவுந் தமரகஞ்சச்சு
முசல்வலி குமரகண்டனுமே

ஆட்டிடும்பித்த மகோரமாஞ்சுரமும்
அளவிலா நோய்பிணி யகலும்
அகற்றவுங் கோபம் நடைபிணியுறக்கம்
அதீதகூக்குரலுமே யகமும்
நாட்டினில்வாதி பிழைக்கவும் வழிகாண்
நாடுஞ் செம்பது பத்துக்குகையில்
நாடியேயுருக்கு முகந்தனில்தாரம்
நவிலவுங் குருவொன்று தாக்க
நேட்டிடுஞ் செம்பொன் வயதுபத்தரைதான்
தேடியுந் தேசத்தில் கிடையா
சீலவு செய்தருமம் வருமுனக்கெய்துந்
திருவுளத்தாலையு மெய்யே. (168)

சாதிலிங்க பற்பம்

மெய்யெனுஞ்சாதி லிங்கமும் பலங்காண்
வெண்ணிறக் கிளிஞ்சிநீர் தன்னில்
மேவிநாற்சாமஞ் சுருக்கதுங் கொடுக்க
வெளுத்துக் கட்டினமது வருதல்
பையவெண்பளிங்கு மதிதனக்கொவ்வாப்
பாரினிற் செய்வது மரிது
பகரும்பொன் முசுட்டை யுமிநீர் விட்டரைத்துப்
பணமிடை முப்புவிற் கூட்டி
எய்யவுங்களஞ்சி குருசுண்ணங்கவிழ
மிரவியின் முகம்படத் தாக்கி
யிலைய துமூடி சீலைமண்ணேழு
யிவைசுத்திக் குக்குடப் புடத்தில்
வையனமூட்டிப் புடம்பிறித்தாறி
வைத்திடும் பாணியிற் பதனம்
வாலையம்பிகையின் மலரடிபணிந்து
வரும்வினைக் கவிழ்தமே யூட்டே. (169)

இங்கிலியபற்பத்தால் நோய்கள் தீருதல்

வருமிங்கிலிக பற்பங் குன்றிடைதான்
வருந்திடும் வயிர்வலி வாயுவும்
வாதகுன்மமும்போம் சிரமது நோய்போம்
மருவியபாண்டு சோகையும்போம்
கருமம்விட்டகலு மிஞ்சி நீர்தேனுங்
கலந்துடன விழ்தம்விட் டிழைத்து
கருதிசற்குருவைத் தொழுதுடன் பணிந்து
கவிந்திருவேளை பட்சமுந்தான்

இருவினையகல மனதுருத்தியல்பாய்
இவ்விதமாகவு முணர்ந்தால்
எழில்வினையகலும் பத்தியமிச்சா
திருப்பது மொருவைராக்கியம்
பருவமென்னுளமே யகத்தியர் பதமும்
பன்னிரண்டாண்டவர்க் கடிமை
பாடுபட்டுழைத்துக் கற்பசாதனையால்
பகர்ந்திடவாதம்வந் தெய்தே. (170)

பிரபஞ்ச வாழ்க்கையால் மாய்கைசூழ்ந்து இறப்பதும் பிறப்பதும் இருப்பதும் அறிதல்

எய்தும் பிரபஞ்ச மாய்கையாற் சுண்ண
மெடுப்பதாலிகம்பரப் பொருளால்
ஈன்றெடுத்தது விந்தொளி பரநாத
மீரேழுலோகங்களும் படைத்தாய்
மெய்ப்பரமன்னைக் காற்று மாரியைப்போல்
மேதினி யெலாவையுஞ் செனித்தாள்
வேதமிவ்விதியால் தாபரஞ்செடிபூ
டிவையேழு தோற்றமும் படைத்தாள்
வியம்பிடும்வாறு கடல்புவிவானம்
விந்ததுமப்புவே சமுத்திரம்
விளைவனமண்ணு விண்ணுலாவியுவா
ரிறவியுங் காற்றுமேற் பிறப்பாய்
மயமெலாமேல்கீழ் வாரிதன்னளவால்
வான்புவியிரண்டுமவ் விதத்தால்
மனீசனோயறிதல் மைத்துயிர்காணேன்
மண்ணும் விண்ணப்புவை யறிந்தே. (171)

தாய்வணக்கம் - இறப்பும் பிறப்பும்

எய்தலா லெனையே யீன்றெடுத்தெவரா
லினியசத்தியதாய் விளங்கும்
இறப்பதும் பிறப்பு மினியவாழ்தலுமே
யாவையு மனைத்துயிர் செனித்தாய்
மெய்யிவளன்னை யன்னம்போல் தாய்தான்
மேதினி யெலாவையும் பிரித்தாள்
வேதசத்திரியர் வைசியருஞ் சூத்திரர்
விளங்கிடுஞ் சாதிகள் நாலாய்
தையலாள்பதினெட் டுயிர்குலமுடைத்தாய்
சாதிவெவ்வேறதாய்க் குணித்தாள்

சதுர்குலமொன்றாற் சாதிதன்பேதந்
தார்புவி சாகரம் படைத்தாய்
வெய்திடுமுயிராய்ப் புனலெனுமதியாய்
விளைவனம் பிறவியாய் விதித்தாய்
விளங்கலாலுலகம் வெந்து மாண்டதுபோல்
விந்தது மருவிந்தா யுதித்தே. (172)

தயிலம் - உதகம் இரசம் - தயிலம் - லேகியம்

உதித்ததாயன்னை யுட்பொருள் தந்தை
யுயிர் சலப்பிராணனு மாவி
உகமைபோல் உதித்தல் விந்ததுநாதம்
உடலெனு முயிரதா யெடுத்து
விதித்த வார்சுத்த சலகங்கையன்னை
யிதுரெண்டு மருவிய போகம்
விளங்கலாலுலகில் தாயுமேதந்தை
யிதுவல்லாப் பிரபஞ்ச முளதோ
நிதிதவறாது சுத்தநீர் சலமும்
நெறிதவறாதுகாண் பூமி
நியலெனுஞ்சார முவரெனுநிலமே
நினைத்தனற்காடியா லுவர்போம்
மதியெனுந்துலங்கு முப்புவுமுடிவு
மறைத்த சுத்தசலம் விண்டேன்
மகிமையின்னூல்காண் சயிலமுமுதகம்
இரதமுந்தயில லேகியமே. (173)

இவையந்துகூறும் உடலிலிருப்பது வெளிக்காரசாரமல்ல

மயமெனுமன்னை வாமப்பால்காடி
மாதுட நாதமென் றிதுபோல்
மருவியகார சாரமாயுதித்தல்
வழக்கமே யிதைவிட மாண்பர்
பயமும் வந்தெய்து மயமுமஞ்சுளதாய்
பரிபூரணானந்த போதம்
பத்தர்சித்தர்களு முனிவரும்யோகி
பதினெண்பேர்மகுத்துக ளிதனால்
தயிரியங்கூர்ந்து அயன்மலர் போற்றி
சகலமும் படைத்தது நீயே
சரகுடன்களியுங் கிழங்குபாலினிப்பும்
சாரமேய முரியென் றுரைப்பார்

செயலெனுமூலப் புளியெனுமலமே
    தெளிவிது கற்பமென் றுரைப்பார்
தேவர்களாலு மறியொணாரகசியஞ்
    சித்தர்கள் மறைத்த பூட்டறியே. (174)

நாட்டில் கருவின் பெயர்

பூட்டிதுமறிய வுலகெலாம் படைத்த
    பூமியின்னாதமாய் விளங்கும்
புனலதுஞ் சொரியு மதியெனுஞ் சூழும்
    புகழெனுஞ் சாகர மதனால்
புவனமுமிருநூற் றிருபத்திநாலும்
    புதுமையிவ்விதமள வாலும்
பொரியுமைங்காய மறுசுவைசெயநீர்
    புனலெனு மறிந்துமே கற்பஞ்
சாட்டினாரில்லம் வீட்டினிலிலகுஞ்
    சாதுவாமன்னநீ ரொழிய
சாரமுங்கங்கைக் காரமுமன்னஞ்
    சாற்றினாமுரியு மலமாய்
நாட்டினிலிலகுங் கூட்டியே வடிக்கும்
    நாதமே வீட்டினி லிலகும்
நாரியர் வசமாய் நீரதுநாதம்
    நாட்டினிற் கருவெனும் பெயரே. (175)

அமுர்தரசக்கிருதம் - வேறு கலித்துறை

பால்தயிராகுந் தயிரினிற்கிருதம் பகர்ந்ததுமோர்
ஆலவிழமாகு மவ்விழமுண்ட வரனருளால்
காலனுங்கூற்றன் கருவிலுதித்திடுங் கண்டறிய
மாலடிபோற்றி வாசியைக்கொண்டு வழங்குவிரே. (176)

அகஸ்தியர் பூரணசூத்திரம் - வேறு விருத்தம்

என்குருசாமி யருளியச்சூத்திர
    மிருநூற்றுப் பதினாறுக் குளகாய்
இயம்பிடுங்கற்பந் தசையெனுந் தீட்சை
    யிடறிலாமலுமுரைத் தனர்கள்
நன்மலர்பொழியு வாமப்பாலமுர்தம்
    நாட்டிய முப்புவுக் குறுதி
நான்மறைப் பொருளு மறிவிந்தாலுதித்த
    ஞாயமென்றறிவிலா மாண்பர்

பானமென்றிதுவே பகருவரிதுவே
பதினெண்பேர் மகத்துவமிதுவே
பலகலையிதுவே பரிபாஷையிதுவே
பழம்பொருட் பூரணமிதுவே
றெண்விதத்தொழிலே திரவியக்கடலே
தேடின பொக்கிஷமிதுவே
திவ்வியரத்தினமே நவநிதிசாரந்
திருவள்ளுவ நாயனுமுணர்வே. (177)

வேறு சில பதிப்புகளில் இப்பாடல்கள் காணப்படுகின்றன. 15ஆம் பாடலுக்குப் பின் இப்பாடல் உள்ளது. வாதிகள் ஏங்கியதெனல்

மாநிலந்தனில் வாதிகள் கூடியே
யேநிந்தப்படி யேமத்திற் கேங்கினார்
நானிந்தப்படி நாட்டிற் பூநீரினால்
றேனிந்தப்படி ஜீவனங் கண்டிடே. (178)

114ஆம் பாடலுக்குப்பின் இப்பாடல் உள்ளது. சிவவிந்து நாதத்தின் விபரமறிய

சித்தராலு மறைப் பொருள்கள்
காண்பதெனுந்தேவி யுப்புவற் சத்திதான்
வித்துவான் புனல்மதியினுப்பு வளம்
வெள்ளைக் கல்லெனவு மேருகாண்
சுத்தமான சிவகங்கை யென்பதுச்
சுடர்கள் போலவும் பிரகாசமாங்
கற்றபேர்கள் சிவவிந்து நாதமெனும்
கருதுவார்கள் வெளி ரெண்டதே. (179)

121ஆம் பாடல் இரண்டு பாடல்களாக பிரிக்கப்பட்டுள்ளது. 131ஆம் பாடலுக்குப் பின்னர் இவ்விரு பாடல்கள் உள்ளன. சூலைப்புண், மதுமேகம், வயிர்விம்மல், வாந்தி நீங்குமெனல். (180)

சூலைபுண்கள் மதுமேக மேகவெடி
சூதகத்தினுள வாயுவு போ
மாலை தன்விழிநோய் வாதமோடுவலி
வயர்தன் விம்மலிடு வாந்திபோம்
காலை மாலை இரு ஏழு நாள்
கணிதங் கண்டதுண்டமது வாதிடும்
வாலையாகும் பதினைந்து சூலைவிடு
மகோ தரங்களறும் பாரிரோ. (181)

தமரகவாய்வு தனுர்வாதம் விப்புருதி நீங்குமெனல்

பாரிலோடிவிடுஞ் சூதபற்பமிது
பருமஞ் ருசியிடை நெய்பலம்
வாரியே விடுதல் வாய்நீர் குன்மமது
வயர்வலியுந் தமர்வாயுவும் போம்
காலில் நோயகலும் அஞ்சுநாள் கெடுவு
தனுரகத்தினுள வாதம்போ
மேருவிப் புருதியிச் சாபத்தியமிடு
இவை யறிந்துரை பண்டிதர்களே. (182)

ஊசரம் உப்பு அப்பு மூன்றொன்றாக விவரமறிய

உவரதுசார மூசரங்கார
முப்பூவுமப்பூவுமே யொன்றா
யுயர்நிலமுளமேகளர் நிலஞ்சலமே
யுலுத்தர்களறி விலாவுத்தி
யுவற்சுண்ணமது வாஞ்சலமெலாமுப்பா
முசுரமப் பதுமுரவா
யுவற்பூவரஞ் க்ஷாரமுத்திவெண்கார
முற்பகங்களுவூர் நாடெனிலு
மூவரதும்விட்டு மூசாரம்விட்டு
மூர்தோறுஞ்க்ஷார மென்றலைந்தா
ருவரதுமறிந்து வூசரமறிந்து
வுதியாய்ப் பாரையுப்பி துவென்
றுவரின்கீட்சிவமு முவரதுமேலு
முண்டுயிவ் விதமதியாம
லிரண்டுமே லொன்று மொன்றதுஞ் சேர்ந்தா
லிரண்டொன்று வொன்றுமே மூன்றே. (183)

ஒன்றுயிரண்டு ஒன்று நான்குஞ்சேர்ந்து குரு முடித்தால் யாவுமெனல்

ஒன்றுடனிரண்டு வொன்றுமே நான்கு
முவரதாய்ச் சற்குருமுடிந்தா
லுயிருடன் பொருளுமாவி நின்றிலகு
முண்மையான் கண்டு வுரைக்கக்
கன்றுவிட்ட கலாக்காடி வைப்பதனைக்
கருத்தினாற் கண்டெடுத்தவர்கட்
கற்பங்கொண்டுணர்வார் கனகமுஞ்செய்வார்
கருத்தினால் கருக்கண்டு முடிப்பார்
அன்றுயின்றதுவு மறியலாங்கண்டு
அற்புதஞானமே புரிந்து

வட்டதிக்கெங்கும் புகழ்பெற வாழ்ந்து
வடிமுடிவதுமடு நடுவாற்
சண்டனென்றெமனைத் தடுத்திடுவார்கட்
ஜலகங்கையான ருண்விண்டேன்
சத்தியுஞ் சிவமும் நடனமுஞ்செய்வார்
சதாநித்தமுனைப் பிரியாரே. (184)

தசதீக்ஷைய றிந்தவனுக்கமைக்கும் நேர்மை

உனைப் பிரியாமலுன் மணங்கனிய
யுயிர்பிலக்கவிழ்தமே யுணர்வே
னுலகெலாம் படைத்தஅன் னையிந்நாத
மொருவராற் சொலக்கேழ்வி யறியேன்
உனைப் பிரிந்தகலு முடலதுமுயிராய்
விந்துவிட்டவன் பொருட்டதனால்
விரகமாய்ச் சூழ்ந்து மேகமாய்ப்படர்ந்து
வெளியொளிவாரி சாகரத்தால்
முனைசுழி பாய்ந்து வருடரவேண்டி
மூலத்தின்வாசி கொண்டூதி
மூன்று மண்டலங் கொண்டளவிலாதாரை
முச்சுட ரக்கினியாலுந்
தனைப்பிரியமிர்த மேகமாய்ச்சூழ்ந்து
தாபரமெலாமிடி மழையாய்ச்
சர்வஜெந்துகளு முயிர்க்குயிரான
தசதீக்ஷ யறிந்தவனாரோ. (185)

அகத்தியர் முன்னமேயுரைத்த அமுரியையுண்டு அனேகநாள் வாழலாமெனல்

வாய்வு மக்கினியும் வருணனுங்கூடி
வாய்த்தது போலொரு சாட்சி
வையகமுழுதும் படைத்த வாரனேகம்
வாரது போலொரு சாட்சி
மாயுரீர்வீணே வாறுதான் கங்கை
வந்தவரெவற்குமே யுதவி
வாசிவாவென்று வப்புங் கூட்டுண்டால்
வளரலாம் வெகுபெலனுளதா
யாயுதவமுரியை வகைநீரை
யகத்தியர் முன்னமே யுரைத்தா
ரரிப்பிரமாதிகளுங் காணொணாரகசிய
மாண்டேவுன்பதந் துதித்தொழுது

நீயுமேயானும் நெஞ்சமேயறிதல்
நீந்தினாவலைகடல் நிகரோ
நெறிதவறாத யோகவானொருவ
நிலையி நின்றொரு கலையூதே. (186)

பாஷாண பற்பத்தாற்றோஷசுரம் ஜன்னி பாண்டுபித்த சோகை யறுமெனல் வேறு - கெளிச்சகக்கலிப்பா

பாஷாண பற்பமதாற் பாண்டுபித்த சோகையறுந்
தோஷசுரஜன்னிவிடுந் துன்பமது போமெவற்கு
மேஷாண மில்லையினி வெப்பும்விடும் வெண்கிளிஞ்சிற்
பூஷணச்சுண்ண நீரதனிற் புகலுஞ்சுருக் கானதுவே. (187)

சுருக்குப் பாகமறிய

நாடிவிடுஞ் சாமஞ்சதுர் காலுஞ் சுருக்கிடவு
மாடிவிடுமேயுருவி யலரிவெள்ளைப் பூவிலுந்
தேடிமுப்புச் சண்ணமது சேர்ந்திடுவிராகனிடை
கூடியதைமத் தனஞ்செய் கொண்டுகவிழ்த்தே கவசம். (188)

புடபாகமறிய

விளாங்கனிபோ லுண்டைசெய்து
வெள்ளையைக் கொண்டுள்ளடக்கி
விளாங்களிமேற் சீலைமண்செய்
விரும்பியேமுமே கவசம்
விளாங்கனிகொண்டே யருணன்
வேழ்விதனிலே யுலர்த்தி
விளாங்கனியை குக்கிடத்தில்
மேவிப்புட மாறியதே. (189)

பாஷாண பற்பத்தால் தீரும் வியாதிகள்

ஆறினதோர் வெள்ளையி தகோரமென்ற வேகமதாய்ப்
பாரிசத் தோடட்டகுன்மம் பத்துடனே வாய்வதுபோ
மேரிவிடும் விப்புறுதி யெலும்புருக்கி மூலமெட்டும்
நாரியர்தன்யோனிப்புற்று நாடாமலோடிடுமே. (190)

பாரிசவாய்வு அட்டகுன்மம் விப்புறுதி யெலும்புருக்கி யோனிப்புற்று காசரெத்தம் சூலைபுண் புரைமூலம் நீங்குமெனல்

நாடிவிடுங்காசரெத்தம் யோனிப்புற்று கற்கணிகமு
மூடிவிடும் புண்புரைகண்மூலம்விட்டுப் புக்கிவிடுந்
தேடிமதுவுங்கிறுதஞ் சேகரித்துக் குன்றியிடைச்
சீடியுண்ணபற்பமிதிற் சூலைவிடுஞ் சொன்னோமே. (191)

பத்தியபாகமறிய வேறு - நேரிசை வெண்பா

ஆவிநிடப்பாலு மதினுடைய நெய்மோருந்
தாவியரைக்கீரைச் சுண்டைத் தானாகு மாவிநிடப்
பாசிப்பயருடனே பத்தியமாயுண்டுவர
வாதிபெல மாகுமிது பார். (192)

இதுவும் தீரும் வியாதிகளின் விவரம்

மாலையொடுகாலை வருதினம்போய்ப் பதினைந்துஞ்
சூலைப்புண்களாரிவிடுஞ் சொன்னேன் மாலையொடு
வாய்வுமறும்வாதமறு மந்தாரகாசமறும்
வேலையில்லை நோய்களறும் வேரு. (193)

ஈளை, க்ஷயகாசம், குன்மம் சத்திவிக்கலுக்கு வனுபானமறிய

விளாவரிசி வேற்கொம்பு வில்வவிரை வெட்டியின்வே
ரிளவருப்பாய்ச் சரிசமனா யிவ்வகையும் விளாவரிசி
சூரணரசாயனமாய்த் தேனதுவிட்டேயிழைத்துக்
காரணமாய்க் குன்றிபற்பங் காட்டு. (194)

காட்டுகுன்ம மீளைக்ஷயங் காசமொடுசத்திவிக்கல்
நாட்டும் பக்ஷநாளிலும்போம் நன்று - காட்டவுமே
அல்லியதுகரப்ப னானைப்புண்கட் சூலைவெடிக்
கொல்லுஞ்சரி கூற்றனையுங் கூறு. (195)

வாதம் பித்தவாய்வு சேத்துமம் மூதகவாய்வு நீங்க வனுபானமறிய

வால்மிளகுத் திப்பிலியும் வாலுளுவைக் கோட்டமது
யேலமுட னஞ்சுமிளவறுப்பாய் - வால்மிளகு
தூளிதமதாக்கித் தேனுமது கூடவிட்டு
வாளிதெனுங் குன்றிபற்பம் வைத்தே. (196)

வைத்து பற்பமுண்ண மாலையொடு காலையுமே
யொத்துபற்ப முண்ணயிலே யோகோகோ - வைத்துபற்பம்
வாதம்போம் பித்தம்போம் வாய்வுபோஞ் சேத்துமம்போஞ்
சூதகத்தின் வாய்வுபோஞ் சொல். (197)

சுரஞ்சன்னிக்கு வனுபானம்

சொல்லுமிரு சீரகமுந் சுக்குடனே நாகமலர்
வல்லமையாய் நாலங்கையும் வாட்டி - சொல்லுமிரு
வின்பமதுரங்கிறுத சேகசரிச் சூரணமாய்
வல்லமையாய்க் குன்றிபற்பம் வைத்து. (198)

வைத்திழைத்துவூட்டு மாலையொடு காலைபதி
யற்றுவிடும் நோய்க ளகன்றுவிடும் - வைத்திழைநீ
யிந்தமுறைசெய்து மெவர்க்குஞ்சுர ஜன்னிகட்கு
வந்தவினை போமளவு மாட்டு. (199)

கெற்பவெட்டை கிறுமி கிருகிருப்பு வுடலை விட்டேகுமெனல்

சித்தரத்தைக் கிராம்புடனே செண்பகமுங் குங்குமப்பூ
வைத்துயிது நால்வகையும் வாட்டி - சித்தமுடன்
றூளிதம் போலாட்டிச் சுத்தப்பசும்பாலுடனே
பாலுஞ்சீனி கூட்டியதிற் பற்பம். (200)

வேறு கட்டளைக் கலித்துறை

பற்பமும்பாகங் கொண்டுட்டிபக்ஷம் பரிந்ததுவு
மற்பமென்றெண்ணாமற் காலையுமாலை யறிந்துவுண்ண
கெற்பத்தின் வெட்டைக் கிருமிப்பூநாகங் கிருகிருப்புத்
துற்பந்த நோய்க ளுடலைவிட்டேகுந் துலைதூரத்திலே. (201)

பறங்கிப்புண் சூலை படற்றாமரை நீங்க வனுபானம்

பறங்கிவேற்கொம்பு யேலங்கிராம்பு பற்பாடகமுந்
திறமிந்தவஞ்சும் வறுத்துப் பொடித்துத் தேனும்விட்டு
யிறங்கிய மயனத்திற் பற்பமுங்குன்றி யிழைத்தவுழ்தம்
பறங்கிப்புண் சூலை படற்றாமரைகளும் பட்டிடுமே. (202)

தோஷாமுர்தங்கள் தொண்ணூற்றாறுக்குங் குருவெனல்

இந்துப்புச்சுக்கு யிதற்குச்சரி யிருசீரகமு
முந்திவறுத்துப் பொடியாகச்செய்து மூலமதில்
விந்துவெள்ளாட்டின் பாலுங்கிருதமும் விட்டுடனே
யந்திரச்சீனியது விட்டுமத்தித் தருளுவீரே. (203)

மத்தியம் பற்பமிருவேளைக்குன்றி மயங்கிவிடாப்
புத்தியும் வேறுமனதும்வேறாகா பூவையர்மேல்
வெத்திமயக்கும் பிறபல்லியவாசையி நேக்கம்விட்டு
பத்தியுடன் கொண்டு பக்ஷமுமுண்டு பார்ப்பவர்க்கே. (204)

நீக்கவேண்டிய பதார்த்தங்களின் விபரம்

வாதமும் வாய்வு பதார்த்தமுந்தள்ளி வழக்கமதா
யாகமசாஸ்திர நூற்படியே வன்னியானமுதற்
போதரவாயுண்டு போம்பொழுது வெருபக்ஷம் சென்றால்
வேதமுஞ்சொல்லு மீரேழுலோகமுமெய் சொல்லுமே. (205)

சிவயோகிகட் கண்டதெனல்

பாஷாணபற்பம் பதிநாலுங்கட்டும் பாரில்வள
ரூசரங்கட்டு முவற்சாரமேறு முன்பிடையாற்
றோஷாமுர்தங்க டொண்ணூத்தாறுந் தொடுகுருவாங்
காஷாயம்பூண்ட சிவயோகஞானிகட் கண்டவரே. (206)

சரக்குகளை கட்டும் பாகமறிக

சூதமுங் கட்டுஞ்சூதத்தைக் கொண்டு வீரமுங்கட்டு வீரமதாற்
பூதமுங்கட்டும் பொன்மயமாகும் பொன்மயத்தால்
ரசவாதமுங்கட்டும் வாலைசரங்கட்டு மாலுங் கட்டும்
நாதமுங்கட்டும் விந்ததுவுங்கட்டும் நாதத்திலே. (207)

பிராணவாசியைக் கட்டுமெனல்

ஊதுந் துருத்தித்தமர் வாசற்கட்டு முள்மூலங்கட்டு
மோ தும்பிராணன் வாசியுங்கட்டு மோங்காரத்தை கொண்
டுதுங்காந்தாரி நாடியங்கட்டு மோராண்டுக்குள்
வாதமுங்கட்டு மனுவீசனுப்பில் வல்வினைப்படுமே. (208)

பசுபதியாஸ்திரமென்றுஞ் சொல்வது இதாற்றூசிசு பசுமையறுமெனல்

பட்டாற்றுசிப் பசுமையறும் வெளுற்பாஷாண பற்பந்
தொட்டாற்பசுபதி யாஸ்திரமென்றுஞ் சொல்வதற்கு
யெட்டாளுந் தேசமுமட்டதிக் கெங்குமிரு வினைக்கு
மிட்டாற்றூதியம் வச்சிரதேக மிருவினை யொழிந்தே. (209)

கௌரிபாஷாண பற்பம் வேறு - முடுகு சந்தம்

திருவருளு ததியுமருட் துதிமதிமலற் றிருவடி பொற்கமலஞ்
செழுமலரனுதினந் தொழுதடிகுருமுனி சேவடி பணியவும்யான்
மருமலற்பொருயமுதினை புனமருவிய வளர்பரி பூரணமு
மகிதலமிலகியப் புனற் சொறிந்துவற்பரி வழலை மகுத்துவமா. (210)

லறுமூவரதிசய மெவரறிவதுசரக் கறுபத்து நாலுமுரு
மலைகடலிததி கொண்டலும் முரிதஜெக மனைத்தையும் படைத்துருவாய்க்
கறுவிப்பஞ்சறு சுவைஜலஜெயநீர்படக் காரமுஞ் க்ஷாரமியற்
கருணை நடம்புரிபரவை யொளிகௌரி பாஷாண பற்பமுணர்வாம். (211)

தரு-இ-ம்-சாவேரி-அடதாளம்

மாருங்கௌரி பாஷாணத்தை யானருட்
பற்பஞ்செய்வாருண்டோ பாரினிற்

சரணங்கள்

சீர்புகழுங்கரு வூர்வள நாட்டினிற்
சித்திரச்சாவடி ரத்தினக்கோபுரங்
கார்பொழியுஞ்சுழி யிடையின்கலையினிற்
தண்டத்திலூதியே யண்டத்திற்புக்கியான்
கருணைப்பொழி யமுர்தக்கலை
மதிதன்மலர் கமலச்சுழி. (212)

எரிப்புப் பாகமறிய

ஊரினிலுங்கெளரி யொருபலத்தினிடைதா
னொன்று மோட்டினிலிட்டு வுருகவனற் பெருக
வீரியமாமிது காண்கிளிஞ்சியின் நீரிற்
பாரிரோநாலு ஜாமத்திற் பாஷாணம் வெள்ளையதாகும்
பதராமலுங் கலாக்கினை
யுதிராமலுஞ் சுருக்கானபின். (213)

கட்டும் பாகமறிய

மஞ்சனிறம் போம்போது மாறும்வயிரமின்னும்
செஞ்சுலகும் புகழுஞ் சித்திர்வலுக் கட்டாகுங்
கஞ்சன்மற ஜலத்தாற் கல்லுப்பதனைச்சாடி
மிஞ்சிடாமலுஞ்சரி மேலுங்கவசஞ்செய்து
விழுதீயிலை யுமிர்நீர்விடுத்
தொழுதேயரைத் துருவேத்துமே. (214)

புடபாகமறிய

மூலியரைத்து முன்போல் வடுகுக்கசஞ்செய்துச்
சீலையேழுமண்செய்து திரிமூன்றெருவிற்போடும்
வாலைப்பருவமுத்து வர்ணந்துய்யநிறங்காண்
சேலைசுத்தியமாது செப்பிய கருவிதுகாண்
தேய்வாகிய யனலாறிபின்
பாய்வாய்யெடுப் பரணி தனிற் பாருங்கெளரி. (215)

அன்னப்புறா சாட்சியெனல் வேறு - கட்டளைக்கலித்துறை

சிங்காரச்சோலையி லன்னப்புறாவந்து தியங்கிடுபோ
தாங்காரங்கொண்டு வல்லூரெழுப்பி யதையடிக்க
போங்காலமரத்தின் மடித்துவிடுமந்தப் புறாவதனைச்
சாங்காலமாச்சுப் பிராணம நித்தியஞ் சவுரியமே. (216)

சவுரியமான நோய்கள் தீருமெனல்

சவுரியமான வதிவீரச்சிங்கந் தலைவலிக்கிற்
றவரில்லைபற்பம் பணவிடை கொண்டுத்தலை மயிற்சுட்
டவுரியதேனும் மிட்டிழைத்தே யிருநாட்கொடுக்கச்
சவுரியநோயகட் தலத்தைவிட்டோடுஞ் க்ஷணப் பொழுதே. (217)

அனுபானமறிய

திப்பிலியிந்து சீரகமோமஞ்சித் தரத்தை
யொப்பிதமாமிவை யோரைந்துள்வாங்கி யொருகளஞ்சி
விப்படிவன்னிக்கனலில் வெதுப்பி யிதைப்பொடித்து
முப்புரமான்மதுரத் தேனிட்டு முடிவிதுவே. (218)

அகத்திய சுவாமியை வேண்டி முன்னிடையாக நோய்கட்கிட வேண்டுமெனல்

முடிவாங் கௌரி பாஷாணபற்ப முன்னிடைதான்
வடிவாய் மத்தித்து நோயாளிக்கீய்ந்து வரும்பக்ஷமு
மடியார்க்கடியான கத்தியசுவாமி யருட்பதமே
முடிசாய்ந்து போற்றி கிருபாகரம் வைத்து முன்னிற்கவே. (219)

நவமூலம் பித்தசுரம் பின்னிசிவு வெப்பம் பித்தகாமாலை நீங்குமெனல்

முன்னெதிர்நிற்கப் படுபாவிநோய்கண் மூலமெட்டும்
பின்னிற்காதொன்றும் பிறமூலமெட்டும் பித்தசுர
முன்னெதிர்நிற்கா வுட்சுரமேழு முட்டினமும்
பின்னிசுவெப்பம் பித்தகாமாலைப் பிரிந்திடுமே. (220)

மதுமேகம் சூலைப்புண் சீழ்கட்டி நீர்கட்டு பிரியாத மேகம் நெஞ்சடைப்பு நீங்குமெனல்

பிரியாத நோய்கண் மதுமேகச்சூலைப் புண்களுஞ்சீழ்
நெறியானகட்டி நீர்கட்டுமேகம் நெஞ்சடைப்பும்
வரியாமலோடி வனவாசமாகி வலுவதுபோய்ப்
பிரியாதமேகம் பிரிந்திடும்பின்பு பேச்சில்லையே. (221)

இஞ்சிசுரசத்திலிட வேண்டுமெனல்

இஞ்சிச்சுரச மெலுமிச்சந்தன்னி லேலஞ்சுக்கு
மஞ்சுமதுர மைவகையும்பிரித் ததுசமனாய்
சஞ்சீவிரெண்டும் வறுத்துப்பொடி செய்து ஜலமதனிற்
றொஞ்சிமத்தித்து பற்பத்திற்குன்றி தொடுத்திடுமே. (222)

ஓர்பக்ஷம் யிச்சாபத்தியமா யுண்ண வேண்டுமெனல்

தொடுத்திடும்பக்ஷங் காலையுமாலையுந் தொடுசரமா
யெடுத்திடும் நோய்கண் யாவையும்விட்டு யெடுபடுமாங்
கொடுத்திடும்பற்ப மவிழ்தமுமுரிக் குணமதுவாந்
தடுத்திடுமிச்சா பத்தியமென்று சாத்தினோமே. (223)

பிரம அண்டத்தின் கருவறியாதுயினஞ் சேற்கறியாது முப்புவாண்மையை விட்டால் யாதொன்று மாகாதெனல்

ஆண்டேயிவ்வாறு ஆனதெல்லாமுப்பு வாண்மையைவிட்
டேனிந்தப்பாடு செய்கையினாலினஞ் சேற்கறியா
மாண்டதினாலென்ன வருகாதுஞான மாய்கைவிட்டு
பிர்மாண்டத்திலென்றுங் கருவறியாவித பிறப்பறிந்தே. (224)

ஏழுவகையுப்பு நிலமறியா பாவிகட்கு உழுதுபயிரிடச் சொன்னதெனல்

ஏழுவகையுப்பு நிலமறியார்க ணின்னிலமென்
றறிந்திடுஞ்சிந்தை யினந்தெரியாம லாசைகொண்டு
பழுதுவரும்வித மவ்வாறறிந்திடா பாவிகட்கு
வுழுதும்பயிரிடச் சொன்னேனிதற்கென்ன வுற்பகமே. (225)

கற்பத்திற்காதி வுவற்சாரம் விந்துவல்லாது யாதுமாகாதெனல்

கற்பத்திற்காதி யுவற்சாரம்விந்து காடிதன்னி
லுற்பனமாகி லுடன்சித்தியாகு மொன்றும்ரெண்டு
மற்புதச்சுத்திச் சுத்தசலமது வுப்புக்கல்லுச்
சொற்பமென்றெண்ணில் வெகுபாடுமுண்டு சொல்லுவேனே.(226)

பொய்சொல்பவற் கெழுநரகமெனல்

ஏதாகிலும்பொய்கட் சொல்வானேயாகி லெழுநரகில்
வாதாகும்நோய்கண் மலைபோலும்வந்து வாய்க்குமெனில்
வேதாகமத்தி லுரைதப்பாதாகில் வீணுழைம்போற்
சேதாந்திரமெனிற் செப்புவதாறு தெளிவிப்பனே. (227)

முப்பொருட்காண்கிற் றிரவியமாமெனல்

உப்பாகிலுந்தெரிந் துண்பதுங்கற்ப மூவரைவிட்
டப்பாதுதீக்ஷைத் தவரில்லைகல்லுப்புத் தானறிந்தா
லெப்போதும்பால னுயிர்வாட்கைக்கொண்டு யிருந்திடலாஞ்
செப்பாது நூல்கண் முப்பொருட்காண்கத் திரவியமே. (228)

ஆசான் சொன்னாலொழிய அருகிற் காணக் கூடாதெனல்

திரவியமான வுப்பினிடத்திற் றெளிந்திருக்கக்
குறைவதுமேன்வரும் விந்துடநாதமுங் குமரிதன்னிற்
றூரவில்லைச்சற்குரு வாசானுஞ்சொல்லத் தூரமில்லைப்
பாவசமாகு மருகாமற்றோன்றும் பளிங்குவுப்பே. (229)

அனுபோகமில்லையாகையால் யாரையும் நோகப்படாதெனல்

ஆரையும்நோக வனுபோகமில்லை யறிவிருந்தாற்
றூரமுமேதுத் துலைதூரமில்லைச் சூதுமில்லைப்
பேரையுரைக்கு மெண்ஜாணிவீட்டிற் பிராணவுப்பா
முரையாருஞ்சொல்ல வறிவதுண்டோ வுலகோர்களுக்கே. (230)

தந்தையின் தவத்தாற் புலன்கள் வகைப்பட வேண்டுமெனல்

உலகோர்மயங்க வுண்டிரைப்பாரென் றுரைக்கவுமே
வலதோசித்தற்கு வாய்க்கொழுப்போ வருமவ் வாரதுவேர்
தலைமோதலை விதிதந்தைமினாட்டத் தவமதனாற்
புலனோவகைப்படும தியாகியரவிப் பூதலமே. (231)

பூநீர் களர் நிலவளமறிய வேறு - கலிவிருத்தம்

பூதலந்தனிற் பூநீர்களாநிலஞ்
சாதச்சிவ யோகிகட் சர்வமும்
வாதிகாள் வனவாசமும் புக்கினால்
நாதம்பூநீர் நடத்தையறிவரே. (232)

உப்பறிந்தவர் சொல்லாரெனல்

பூநீர்க்களரெனிற் பூதலந்தன்னிலே
காணீரோவதைக் கண்டவர் சொல்வரோ
மாநிலந்தனில் மருவியயோகிக
ளானபேரிதை யறிந்தாலுரைப்பரோ. (233)

கடற்பூ நீற்பாரையெனல்

நாட்டினில்வளர் நாதவிந்துப்பதுங்
காட்டினில்வளர் கல்லுப்புக்காரமாம்
வீட்டினில்வளர் மேவுஞ்சுத்தஜலம்
பூட்டினேன்களற் பூநீர்சவுடாகுமே. (234)

கல்லுப் பேபூ நீரெனல்

பாரைப் பூநீர் பகருங்கல்லுப்பதாம்
வேரேயுண்டோ வெளியினில் ரெண்டதா
மூரையேயடுத் துழவர்காண்கிலார்
நீரைவிட்டு நெறியைவிட்டாரன்றே. (235)

சந்திரனுப்பு அறிந்து செய்ய பலிக்குமெனல் வேறு - மட்டுவிருத்தம்

தரணி தனிற்பாலைநிலம் தர்மபுரி திருப்பத்தூற் றழைக்கும் நாட்டிற்
கரணி சந்திரனுப்பதுவாங் களர்நிலத்திலோர் சாணிற் காலங்காணுங்காணு
மரணதாமறுபத்து நாலுசரக்கதீ தமதும வயிரம்நீராம்
பரணிதனில் வைத்து கெந்தி பற்பமதுசெய்ய நன்றுபலிக்குந்தானே. (236)

அனுபோகி சொல்லாவிடி லிந்நிலமறியக் கூடாமையெனல் வேறு - நேரிசை வெண்பா

இந்தவிதமறிய வெய்துமோவெய்திடிலார்
அந்தவிதமறிய வந்நாளி - லிந்தவித
மனுபோகிசொல்ல வறியலாமந்தநில
மினவறிய ரிவ்வுலகிலில்லலையே. (237)

கங்குல்விடியாதமுன் காலங்கண்டெடுக்க வேண்டுமெனல்

மாசிபவுர்ணமியில் வந்தெடுப்பரந்தநிலந்
தோஷிபலபாவிகட்குத் தோன்றாது - மாசியும்போய்ப்
பங்குனியுஞ் சித்திரையும் பவுர்ணமியிற் சித்தர்களுங்
கங்குல்விடியாத முன்புகாண். (238)

கெந்தி பற்பம்
வேறு
தருவு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்
பல்லவி

அந்தமுடனேயிந்த கெந்திபற்பத்தைச்சொல்ல
வறுமையாரறிவரோ வவனிதனிற்

சரணங்கள்

சிந்தையகற்றும்நந்தித் திருச்சிற்றம்பலநாட்டி
விந்துமதியைநாடிப் பைந்தமிழையுந்தேடி
இருள்விளங்கயிடை - கலைகுலுங்ககசுழி
யிரவி தன்மகிழ் மதிவிளங்கவருள். (239)

கெந்தி சுத்தியறிய

சுந்தர ரத்னக்கருவி கெந்தகத்திற்பலங்காண்
விந்தைவட்டோட்டிலிட்டு வைந்துஜாமஞ்சுருக்கு
வெகுவேகமனலிற் பாகமாகவிடு
வேகுங்கிளிஞ்சிநீர் - விடுதிருப்பிப்பதம் அந்த (240)

திருப்பித்திருப்பிச் செயநீர் திகட்டாய்ச்சீராய் சுருக்கு
வருமேகட்டுண்டு கெந்தி வச்சிரமெழுகுபோலும்
வடியும்நீர்பசுமை படிகமெனும்வருதன்
மதியினொளியுகதி ரவியுமதிகதிகம் அந்த (241)

மெழுகு பதமறிய

வருமேதுய்யமதிபோல் வந்நிப்பட மெழுகாந்
தருமேசொர்னவசியஞ் சங்கைவராதுவாண்டே
தவறிடாமற்பத மனவில்லாமலெடுத்
தணிவதாகுமருந் தொளிவுகோடிரவி. அந்த (242)

சுத்தியில தீதகெந்தி சோதிப்பிரகாசமின்னல்
வெற்றிபெறவும்பூநீர் விளங்குமுப்பிற்பலந்தான்
விதமித்தனை லவணத்தினி
லருளுஞ்செயநீர் மெழுகுப்பதம். அந்த (243)

அரைப்பு பாகமறிய

பதமாய் வருதலெனிற் பதராமலுங்கவசஞ்
சிதராமலுமேசெய்து செழுமருணன்ரவியிற்
செலுத்தித்தண லுலத்திக்கரு
துளசிதனி லரைத்திப்படி. அந்த (244)

கவச பாகமறிய

கருந்துளசிக்கவசங் கதிராமலுந்தொடுத்து
வருமேரவிமுகத்தில் மண்சீலைகளுமேழு
வலுத்திப்படி விடுத்துக்கனன்
மயங்காமலும் வகைசெய்பதம். அந்த (245)

குக்குடத்தினில்நீறுங் குருவின்கடாக்ஷமதால்
வைக்கும்பரணிதனில் வரும்நோய்கள் தனக்கிய
வாய்வோடலை துர்வாதமும்
வயிர்தன்வலித் தமர்வாய்வொடு. அந்த (246)

கற்கவனுபானமறிய
வேறு-கொச்சகக்கலிப்பா

கெந்திபற்பங் குன்றிடைக் கிராம்பரத்தைத் திப்பிலியு
மந்தமுடன் வேற்கொம்பு வதிமதுரமக்காரம்
விந்தையதாய்ப் பொன்வறுப்பு வேகமுடனே வெதுப்பி
தந்திரமாய்ச் சூரணித்துத் தானேடுத்துக் கொள்வீரே. (247)

உண்ணும் யிடைபாகமறிய

களஞ்சியதிற் சூரணத்திற் காற்களஞ்சுகற் கண்டதில்
விளஞ்சிடுந் தேன்கிருதம் விரலினில்மத்தித் திடுங்காண்
வளஞ்சிபற்பங் கூட்டிமத்தி மண்டலங்காண் பக்ஷமுண்ண
துளைத்துவிடும் புண்கள் வினைத் துலைந்துகடற் புக்குமாதே. (248)

ஆனைச் சிலந்திபுண் புழுவெட்டுத் தாமரை மதுமேகம் நீங்குமெனல்
வேறு- கட்டளைக் கலித்துறை

தேகாதிதேகக் கூர்தனிலும் பிணிசேர்க்கையினா
லாகாதநோய்ப்புண்க ளானைச்சிலந்திய தேகமெல்லாம்
போகாப்புனற் கொண்டு புழுவெட்டுத் தாமரைப் புண்புரைகண்
மேகாதி மேகமது மேகமூத்திரம் வெளிப்படுமே. (249)

மாதுசூதகம் மேற்படி பற்பத்தால் நீங்கும்
பத்திய விவரம்

வெளிப்படுமிச்சா பத்தியங்கொண்டு வினையொழியச்
சளிப்பிடும் நோய்கண் மறுபத்தியம்பக்ஷந் தனித்திருந்து
தெளியப்பிணியகன் மாதாந்த சூதகஞ் செய்கையும்போல்
களிப்படுங்கெந்தி பற்பத்தி நாட்டங்கரை யில்லையே. (250)

வெள்வங்கஞ்சேரு வயச்சட்டிதன்னில் வெந்துருகி
வெள்வங்கநீருவுருகிப் பெருகுமந்த வேளையினும்
வெள்வங்கநீரிற் கெந்திபற்பங்குன்றிவிடும் பொழுது
களங்கமில்லாத ரசிதங்களாகுங் கண்டுகொள்ளே. (251)

தசமாத்துக் காணுமெனல்

இரசிதங்களேழு தேய்வது மூன்ற நாடியபின்
வசியமிதாகுங் கொல்லன் குகைதனில் வைத்துருக்கிக்
கசியச்சலமது கெந்திபற்பங்கொண்டு கருதிடினுந்
தசமாற்றுகாணு மென்றுநம்பிச் சாற்றுவீரே. (252)

இரசவேதைக்கு யிக்கெந்தி கட்டவேண்டுமெனல்
வேறு - நேரிசைவெண்பா

இந்த கெந்திபற்ப மிருவினைக்கு மெய்துமே
கந்தமலற் பூங்குழலை காணீரோ - யிந்த
கெந்தகமுங் கட்டினாற் கேளும் ரசவேதையது
வந்துவிடுமே தொழிலின் வார். (253)

கெந்திபற்பம் இரண்டுவிதமறிய

கெந்திபற்பமிரண்டுவிதங் கேளுமதின் வரலார்
முந்தியொரு மூலிகையால் முன்னுமாங் - கெந்தியது
வாதமறுமிந்தபற்ப மானுகாட் பண்டிதமுந்
தாதுவலுவாகுமது தான். (254)

சூதமாளும் காயம் வலுக்குமெனல்

வலுக்குமதுகாய மதுகெந்தியாற் சடலம்
பலிக்கும் பலகலையும் மதுப்பாடினால் - வலுக்குமது
கோதமடமானே குளிகைக்குச் சாரணையா
மதுகெந்தியாற்சூத மாளும். (255)

ஜெயரசத்தாலாகும் விவரமறிய
வேறு - விருத்தம்

ஜெயரசமாக் கெவுனமதுங் குளிகை சாரணைகளுக்குங் கெடியதாகும்
ஜெயரசத்தாற்றசதிகைஷ ஹூற்றுக்கொள் றியத்தசமாத்து காணும்
ஜெயரசமே குருவாகுஞ் செந்தூரங் களங்காகுஞ் செய்வீதத்தாற்
ஜெயரசத்தாற் கோடானகோடி தொழிற்செய்வதற்குச் செப்புவோமே. (256)

வாதம் ஏவல் வயித்தியமடுமையாகையால் இச்செயரசத்தை
பதினெண்பேருஞ் சொல்லவில்லையெனல்

சூதஜெயரசமதுவே பதினெண்பேர் சித்தர்களுஞ் சொன்னாரில்லை
வாதமுனக்கேவற் செய்யும் வையித்திய முனக்கடுமை வசியமாகும்
பேதமென்ற பேதமெல்லாமென் குருவின்கடாக்ஷத்தாற் பிசகாதொன்றும்
நாதவிந்து வொன்றல்லோ பிராணனுக்குப் பிராணமாய் நாட்டமாமே. (257)

ஜெயரசச் செந்தூரம்
வேறு - தரு - இ - ம் - சங்கராபரணம் - அடதாளம்
பல்லவி

காணுஞ்செயரசத்தைக் கண்டாற்கோடிப் பிரகாசங்
கதிர்மதியின் கடாக்ஷங்காணுவீரோ

சரணங்கள்

தோணும்பூரணச்சந்திரன் சுடரொளியின் பிரகாசஞ்
சூக்ஷகாரண வாசி யோகமறியும் நேசம்
மூணும் விஜயநாடி உகாரமகாரஞ்சூடி
நாணுமூன்றெழுத்தோதி நமச்சிவாயத்தைதேடி
நதிதன்புன லறிவாற்றிரு
நடனச்சபை கணர்வாருளர்
நயனச்சுழி யிடைபின்கலை
முனையோடிழி மவுனத்துதி. (258)

சுடருப்பு வேகங்கொண்டு சூதமுறை செய்வாரோ வென்று குருவைத் துதித்தல்

சந்திரபுட்கரணீரின் சமுத்திரமறியலாங்கா
ணந்தவெண்சாரைகண் டரவந்தெளியலாங்காண்
கந்தன் கருதயெந்தன் கருணையானந்தசுவாமி
சுந்திரமிகு மெய்ஞ்ஞானச் சுருக்கமெண்ணூருரை தான்
சுடருப்பது வேதங்கனற்
சுவைகல்லுவ ரானைவலு
சூதந்திவ்விய முறைசெய்வரோ
தொழில்தான்பரி சூக்ஷப்பொருட் காணுஞ். (259)

ஜெயசூத நவநீதபாகமறிய

ஜெயசூதமேயரு ளாவிநமுரிசாணந்
தேங்காய்ப்போலு முருட்டித் திரட்டியிரு ரெண்டாக
ஜெயசூதமேயருட் கரைத்துப்பாண்டமதனிற்
றெளியவைத்து மூன்றுநாட் டெளிந்த நீரிதிற் காணுந்
திருகிப்பிசைந்ததுதன்பொடி
ஜலநீருமி யிடுமேபிசைந்
திலகுஞ் சலமதின் மேற்படர் காணுஞ் (260)

இப்பொடி பதினெண்பேர் சொல்லவில்லையெனல்

வெள்ளையப்பிரேகமெல்லாம் விதமும் வெவ்வேறதாகும்
வெள்ளப்பிரேகமாய்வாங்கி மேடமில்லாமற்றானு
மள்ளிப்பார்த்திடும்போது மதிதந்துய்யமதியா
மெள்ள வாகிலுமச்ச மிருக்காமலும்படிக்கு
மீடேதுநூற் கருதுஞ்செய
லிதற்கொன்றுயி றுடலெய்தினோ
ரெவரோதுரை கரைகண்டெனிற்
பொடிவிண்டிலற் பதினெண்பர்கட் காணுஞ் (261)

அரைக்கும்பொழுது நைவேத்தியத்துடன் தியானிக்க வேண்டிய விவரம்

நாலுகன்னியுமாச்சு நாதனருட்பெறவும்
வாலையம்பிகைபாத மலற்கமலந்தொழுது
பாலுங்கனியோடறு சுவையும் பாயசத்தோடு
வேலுமயிலின்மீதில் மிகவும் பிரகாசமாகில்
விநோதத்துடன் சுரூபக்களை
மிகசேர்வைத நொளிவேதரு
மரவங்களி விடமுண்டரு
ளரன்புத்திரன் குமரக்குரக் காணுஞ் (262)

விதமாய்வெண்ணப்பிரகத்தின் விளங்கும்பொடிதானவாங்கி
மயனமதாய்வருத லாட்டினாலு ஜாமத்தி
லிதமாய்க்கலுவத்தூட்டி யானைகற்றாழைநீரி
லிணையோவி துக்குநிக ரினமாய்விசை கொண்டாட்டி
வழித்துப்பத மெழுகுச் செயல்
நிருத்துச்சரி சமனுண்டையும்
வளமொன்பதில் ஸ்திரமென்றெடு
மவைதன்குளி நவவுண்டைசெய். காணுஞ் (263)

எரிப்புபாகமறிய

உண்டையொன்பதுஞ் செய்து வொருவுண்டையைச்சட்டியி
லுருபத்தீரும்பள்ளமா யுணர்வீர்ச்சூதமொருசே
ரண்டமதின்மேற்சட்டி யனையப்பதியமூடிக்
கண்டுயெழுமண்சீலைக் கவசஞ்செய்துவலுவாய்க்
கதிர்முன்முக மனல்வைத்திடு
கருத்துத்தடுப் பதின்தீச்சுடர்
கமலாக்கினை விறகிட்டெரிக்
கடிகையது கெடுவானபின். காணுஞ் (264)

சண்டைமாருதம்போலுந் தனலெரித்திடுவேகங்
கொண்டுநாலுஜாமத்திற் குறித்துத்தீ தனைமாற்றி
நின்றெரியுமிருநாள் நிகழ்த்துமிவ்விதப்பாகம்
நினைவோ யெடுவிவையும் நினைத்தப்படிமுன்செய்கை
நிருபத்துடணதுவொன்பதும்
வரும்பத்திலா - ஜலநீர்மதம்
நிலவுஞ்செய - ரசமாகிடும்
நிகரோயிதற் - கிணையொன்றிலைகாணுஞ் (265)

பதங்கமேறாது தளத்தில் நிற்குமெனல்

தந்திரமாய்ப் பதங்கந் தானேராதுவுயர
மெந்தன்சற்குருபாத மிந்தப்படி செய்தாக்கால்
வந்துலபித்திடுங்காண் வாலைரசமிதுவு
மைந்தனென்றகத்தீசர் வாழ்த்தியெனக் குரைத்தார்
வளர்தன்பிறை - பவர்ணமியில்
மதிபூரண - மகிழுஞ்செயல்
மலர்தன்வடி - கமலந்திகழ்
வருமேஜெய - ரசமிப்படிக். (266)

மாலயனாற் செய்தற்கரிதாகிய ஜயரசத்தை எவர் செய்யப் போராரென்பது

ஜெயரசங்காணுலகிற் செய்பவர்களெவரோ
செகதலத்திலுஞ்செய்ய திரமோதெளிவில்லார்க
ளரனுமறியுமாலு மவராற்செய்யொண்ணாது
வகத்திலுதித்தவ ரறிந்தவர்களுஞ்செய்வ
ரானவிவ்விதக் குருவாலறிந்
தவனிதனி விவையெண்ணுரு
வருளுஞ்செய - ரசவாலையி
னனுக்கிரகமெய்ப் பொருட்சொல்வனே. (267)

வேறு கொச்சகக்கலிப்பா

அந்திரந்தனிற்பதக்க மட்டதிசையும் நடுங்கும்
விந்துதனையெடுத்து மேவிடீலோருண்டை தனிற்
சுந்தரவிசைக்குவிசைச் சுத்தமது வாயெடுத்து
சிந்தையறத்தென்மனதை சேர்க்கையெட்டுஞ் சென்றாண்டே.(268)

கெஜ [illegible]த்திலும் வத்தாதெனல்

செய்கைப்பதமாய்வருதற் சென்றுயெடுமேல் விசையும்
செய்கையுடனே பதங்கந் தெளிவதொன்பதாகி லுங்காண்
பொய்கைநதிபோலிலகும் புடமாகிலுங்கிஜத்தில்
வைகைநதிபோலவுமே வாலைரசம் வத்தாதே. (269)

இவ்வாலை ரசச்சுண்ணம் வாடாதெனல்

வடவாக்கினிரவியில் வைத்தாலுஞ்சுத்தஜலங்
காடாக்கினிப்பிடத்திற் காட்டிடநீர்கங்கையதாம்
நாடாகிலுங்குளிகை ரசசூதமுங் களங்காம்
வாடாதுசெந்தூரம் வாலைரசச்சுண்ணமதே. (270)

வேதையிதிற் கோடிவிதமெனல்

மெழுகுரசவெண்ணையதாம் வேதையிதிற் கோடிவித
மொழுகுபற்பநோய்தனக்கு மூட்டிடவுமென்ன சொல்வேன்
றொழுது ஜெயவாலைரசுந் தொந்தமென்னகோடி தொந்தம்
பழுதுமில்லையே ஜெயமாம் பாரும்ரச வெட்டையதே. (271)

சுணங்கன்புல் அடையாளமறிய கலித்துறை

தெற்பையெனும் புல்லதுபோற் செழித்துத்தேன் பொழியு
மெப்போதுமூர்களிற்சாமையெனு மந்தசாயலைபோற்
கெப்புங்கிளையுஞ் சுணைக்கதிர்வாங்கி மஞ்சட் கிழங்கதுபோற்
குப்பைகளாரச்சுவர்களின் றோருங் குறிப்பறிந்தே. (272)

இப்பூடுயெங்குமுண்டெனல்

குறிப்பான புல்லுயெங்கெங்கு முண்டு குவலயத்தின்
மறிப்பார்களில்லை மந்திரமில்லை வழலையில்லைப்
பறிப்பார்களில்லைப் பிழைக்கடைதோறும் பிரபல்லியங்கண்
டுரைப்பாருமில்லைச் சூதொன்றுமில்லைச் சூக்ஷுமிதே. (273)

சூதகக்கட்டு

சூதானமூலிகைக் கிழங்கதின்சாறு துவைத்திடித்துச்
சேதாந்தரமில்லைஜெய ரசச்சூதஞ்சேர்க்கைபல
மீதேகலுவந்தனிலிட்டு ஜாமமிகவரைத்துப்
பீதாம்பர சுத்தசற்குருநாதர் பிரபல்லியமே. (274)

அரைப்புப் பாகமறிய

அரைப்படச்சூதரசம்வந்துகட்டி அட்டையைப் போற்
குறைபடாதென்னின் மெழுகுபதத்திற் குறித்துவில்லைச்
சிறப்புடன்செய்து வட்டகையதனிற் செய்கைப்பதந்
திறப்பட வைத்துக் கரிகொண்டு கும்மட்டிச் செலுத்துமதே. (275)

வசமாகவைத்து வந்நியிட்டுதீ வலுவதுவாய்த்
துசமாகும்பிர்மதண்டதின்பாலுந் துவட்டுபஞ்சி
லிசவாகரெண்டுபலங் கொண்டுநாட்டி வியல்பதுவாய்
வசமாய்த் துளிதுளிவந்நியிட்டுத வலுவதுவே. (276)

சுருக்கிடும் பாகமறிய

வலுவாய்த் திருமபித் திரும்பித் துளிதுளி வட்டத்தின்மேற்
றளுக்குவராதுநவரெங்கும்பாலுஞ் சரிகிடவும்
பிலமாம் ரசவெட்டை கோடான கோடிபிரபையி னொளிக்
கொலுவாய்ப் பரணியிற் பதனமதாகக்குறித் துவையே. (277)

இரசவேதைக்கு முப்பு முந்நிற்காதெனல்

கட்டுப்படாது மும்மதயானைக் கருத்தழிக்கும்
வெட்டுப்படாது மூலிகைவேகம் விதுரமெனுங்
குட்டுப்படாது யில்லத்திலாதற் குவலயமு
முட்டுப்படாது ரசவேதைமுப்பு முந்நில்லையே. (278)

பதினெண்பேர்களிம் முறை சொல்லவில்லையெனல்

நயமானசூதஞ் செயரசங்கொண்டு நாடிக்குப்பிச்
சுயமானசூதஞ் செயரசவெட்டை சொர்ணபற்ப
மயமானச்சுண்ணம் வேகாதிவேகம் வான்மறையோர்
செயலானசித்தர் பதினெண்பேரிம்முறைச் செப்பிடிலே. (279)

வெண்பா

மூலிகையின்றன்னால் மூலரசவெட்டை
மூலிகையிற்றன்னால் முடியா - மூலிகையால்
வாதமுண்டு வேதையுண்டு வைப்புமுண்டு வுப்புமுண்டு
கோதையயேகே ளெண்ணூறின் கூறு. (280)

கற்பமுண்ணாதார்க்கு

குறிப்படுத்துமூலி கோடானகோடிரச
முறிப்படுத்திக் கொள்ளுமினி முன்னமே - குறிப்படுத்து
வுப்புதொட்டுகற்ப முண்டறியாதாற்கு
செப்போதுங் காலனெமன். (281)

விருத்தம்

குருமுனியாலருள்திரு வள்ளுவனெனுஞான
வெட்டிக்கூறாச் சொன்னேன்
திருமருவுப்பெருனூலைக் குறுக்கியின்னூ
லெண்ணூறாய்த் தெளிவாய்ப்பாடிக்
சிறுவருக்குந் தெரியகருக்குருவருளே
கெதியெனவுந் தேருங்காலைப்
பொருளுரைக்கச் செயசத்தினதி
வேகவெட்டை யெனும்புகழுவேனே. (282)

இரச செந்தூரம்
வேறு-தரு-இ-ம்-பந்துவராளி
பல்லவி

துரைராஜத்தங்கம் ரசசெந்தூரங் கரையில்லாச் சிங்கம்

சரணங்கள்

அரையாகிய திரைகண் டருளவகத்தியசுவாமி
அற்புதமாகவுங்கற்ப சற்பயாகத்தினிற்சொற்க
வனுபோகங்கண்டு சிவராஜயோக
நமனோவேகத்தினிலுங் - கண்டதாரையி
லம்பிகாயோகவிநாடி கெம்பீரவுத்தண்டமாக
ஸ்தம்பனமூலத்தூதிக் கும்பகப்பூரகஞ்சூழ
வற்சித்துப்பூசி மூலாதாரத்திற்
கெற்சித்துப்பாய்ந்து - யிடைபின்கலை
நேசித்து ஔவும் ஒவ்வென வாசித்துச் சுழிமுனையிற்
பூசித்துவிநாடியூதி தேசிகன்பதத்தையுன்னி
யம்பிகாயோகம் வுவரசமாக
நம்பிகும்பகத்தி - லுல்லாசமேவும்
புருவத்திநடுவிற் குருவிருப்பதுவாச
மருவசற்குருநாடி யருளிருப்பதுந்தேடி
வசியக்கண்ணாட்ட மவுனமாகப்
பசியவிண்ணாட்டங் - காலைமாலையுந் (துரைராஜ) (283)

அரைப்புப்பாகம்

ஜெயசூதரசத்தின் மயமானவட்டதுஞ்
செயலான துபலங்கொண் டுறரவாய்க்குழிக் கல்லினிற்
றிருவானகெந்தி ஜெகமுழுதுங்
கருவால்செனித்து - வண்டகோளகையும்
றிருபுவனங்கட்சூழ மிருனூத்துநாலிருபத்
தியங்கிடுமதுவாகிற் றிசையெட்டுலகுதிரள்
மயங்கிடுவார்கண் இருகமொடு
பயங்கரமாகு - மிதுவல்லாமல்
பகிரண்டமும் நடுங்கும் அகிலங்களும் பதுங்கும்
பரப்பிர்மமுந்தயங்கும் வரப்ரசாதகசித்தி
பாதாளஞ்சென்று வுருகியேதான்
வேதாளம்போலும் - பிர்ம்மாண்டகிரி
படுசூரணமாகுமே வடவாக்கினிமுதலும்
பாழாய்ப்போகுமேமக மேருவும் சூரணம்
பதராகும்பாரு வஸ்திரகாயும்
மதியேபுண்ணாகும் - [illegible]ஸ்தாரம்
அந்தபரிபூரணி கெந்தத்திற்பலங்கொண்
டகலாமலுமுவர்ப்பு வதுவுமல்லிதங்காணும்
ஆகமூன்றதுவுங் குழிக்கல்லினிற்
பாகமாகிடிலுங் - கிளிஞ்சியிநீர்

நாதமதாகிய ஜெயநீர் நேகவேமயனமாகும்
பாகமாயிந்நீர்விட்டொரு வேகமாநெகவேஜாடி
ஐயைந்துஜாம மிணைவிடாமல்
நையவேமெழுகாய் - வரும்பதமே.
வம்பிகையருடன்பாதம் நம்பியுஞ்செய்வீராய் சத்தியம்
கும்பமாமுனியுரைத்தக் குளிகைஜெயரசத்தால்
கோடானகோடி யளவில்லாத
புாடில்லைமேலும் - சூதத்தின் வெட்டைப்
படுமேநவலோகமு முபரசங்களும்வரும்
பருவம்போன்றெடுபதங் குருவானதுமெழுகைப்
பகர்ந்துபில்லையதாய் ரவியின்முகங்
கூர்ந்தெடுப்பீராய் - வட்டிதனோட்டில். (284)

வளர்பிறையில் வாசியைரேசித்து கும்பித்துவூதி தம்பிக்க வேண்டுமெனல்

மேலுமூடிசீலைமண் ணோரஞ்சந்துகட்செய்து
வெற்சக்கிராயுத வடிவேலுமயிலின்மீதிற்
பாதாரவிந்தம் பணிந்துநாடி
யூதுந்தாரையினி - லொருவிநாடி
பரியிற்காலையிலெட்டு மதியிலீரெட்டுமேவி
பகலுமிரவொன்றாகப் பழக்கம்விநாடி யெட்டு
வைராக்கியத்துடனே வளர்பிறையி
வசையாமல்வாகி - கண்டகாரையிற்
றானே தன தனன தந்தையருணவாக்கியம்
நானே நாளுஞ்செய்த ஞாயம்நாடோருமொன்று
மறவாமல்விட்டூதக் கடிகையிலுந்
திறவாமல்வாயை - மவுனஸ்தம்பனம்
வாசியைவங்கென்றுவாங்கி ரேசியுங் கும்பகம்தன்னி
லூசியின் முனைமீதினில் வாசியைவரவழைத்து
கும்பித்துவூதி மூலந்தட்டிடத்
தம்பித்துக்கும்பி - விநாடியெட்டு துறை. (285)

புடபாகமறிய

ரசசெந்தூரமிதனை யுரையார்பதினெண்பேரும்
நிசமாமிதனைக் குக்குடம் நெறியாப்பிடமும் வன்னி
கொண்டருளாரிப் பின்கவசமெடு
வளமாய்வைத்துடனே - முன்னமேயென்
மதீதமிது பெருமை யெவருமறிந்திடார்க
ளருமையெனுஞ்செந்தூர மானால்நல்லதேயாச்சு
ஆட்டமேயாட்டம் சூதரசமும்
காட்டவும்பதினா - ரெனையாட்கொண்ட

கருணையானந்தசுவாமி சமலமலர்பதமுந்
தருணமினமிதுவே சுவாமியுனைத்துதித்தேன்
வந்தருட்காட்சி மோக்ஷதரைத்
தந்தெனைக்காரும் - கிருபைபாரும்
வடிவேலனேகுமர குருவேஷண்முகவேலா
வருவாய்மயின் மீதினிற்றருவாய்த் தெரிசனங்காண்
மனமகிழ்ந்தடியேன் - றிருவள்ளுவநிருவினை
யொழிந்தேன் - மெய்ஞ்ஞானபாதம் துரைராஜ (286)

விந்தையாக சிந்தையிற் பார்க்கதந்தையுந் தாயைக்காணலாம். இதாற் சயித்தியங்கட்தீர வனுபானம்

ஞானமென்னபெருமை ராஜயோகமேகற்பம்
வானமும்புவியும்வந்த வாறுகாணன்னரசமே
வாதமுமென்பதினாலன்னப்பிறவிச் சாதமுண்டாச்சு - யிவைகண்முதற்
றாபரங்களீரேழுந் தார்புவியுமன்னத்தாற்
சாரகாரமதுந்தந்தையுந்தாயுமெனிலுஞ்
சிந்தையிலேபார் கதிர்மதியும் விந்தையிதாகும் பூரணமான
தந்தையுந்தாயுமிருக்கத் தானிறப்பது வோமாய்கை
யெந்தையேநாயினுங்கடை யிகபரத்தை யறியேன்
நவநீதரத்தினம்பாண்டிதர்கட்கு இவையெண்ணூர் சித்திரம் சிந்தாமணிகாண்
வயித்தியங்களும்ரச வற்கமேலஞ்சுக்கு
சயித்தியங்களுமேகுஞ் சந்நராட்டந்திப்பிலி
வாங்கிடும்நாலும் பொன்வறுப்பதாய் வறுத்துச் சூரணஞ்செய் நிகண்ட
துரைராஜ (287)

சிலையோட்டங் குட்டங்கற்கணிதம் முரடு வாய்வு ஜன்னி சுரம் நீங்குமென்பது

ஆவின்கிருதபஞ்ச தாரையதுசமனாய்த்
தாவிப்பொடிகளஞ்சுச் சரிபாகமேவகைக்கு
நானதைவாங்கி ஜெயசெந்தூர மானக்குன்றிடைதான் மத்தித்துமேனுஞ்
சாருமண்டலம்பக்ஷங் காலைமாலையுமுண்ண
சத்தியஞ்சேத்துமரோகஞ் சிலையோட்டங்களுங்குட்டம்
ஆராதரிணங்கட் கற்கணிகத்தோடு மாரிப்போய் விடுமே-சோகைகாமாலைச்
சுருட்டம்பரம்போலடந் திரட்பித்தங்களுமேகுஞ்
சுவைகள் ருசிகண்மாரி அவையவங்களுந் திரைந்து
கழன்றிடும் நோய்களளவில்லாத முரண்டிடும் வாய்வு - கனமேகம்போந்
துடருமொருமண்டலந் திடமாயுண்டுவரவுஞ்
சொரியுஞ்சுகஜன்னிகட்சுரமுங்கடற்புக்குமாய்ச்
சோதிப்பிரகாசத் தேகவச்சிரஞ் குட்டிப்பிரகாச-மவிழ் தமுண்போர்.
துரைராஜ (288)

அண்டவாதங் குண்டிவலி அரையாப்பு துடை வாழை சூலைகட் போமெனல்

அண்டவாதங்கள் வாய்வு குண்டிவலிப்பு முஷ்ணம்
அரையாப்புகளுங்கட்டித் துடைவாழைகளும் புண்க
ளதமாயோடிடுங்கா ணதுவல்லாமற் சதமாசூலை கட்போங் கன்னப்புத்துகட்
சண்டாளப்பிணிகளேகுங் கண்ட போதிலுஞ் செந்தூரம்
க்ஷணப்போதிலுமமயாக் கெடிப்போதி லுந்தியங்கா
ஜனகாதிரிஷிகள் பதினெண் பேருங்கனமானூ லாய்ந்தா ரதீதநூல்கட்
சதகோடானகோடி விதாவிதங்கட்பாடி
மதாசாரப்படிச்சிச் சுதாகமக்கிரமத்துடனே
கெதியோவடைந்தார் மோக்ஷப்பதவி யுதவி செய்யாம-லருளில்நின்று
ஜெயசூதசெந்தூரம் க்ஷயமுந்தொண்ணூத்தாறுமே
கயம்போற்றூசிகளாகப் பயமில்லாதப்படிக்கு
காத்தியக்குணமண-மவுழ்தவேகம் நீத்தும்
நோய்பிணியைச்-சேரவொட்டாமல் துரைராஜ (289)

கணசுரமாந்தத்திற்கு கியாழம்

கணசுரங்கண்மாந்தம்போங் கீழ்விழியுமேல் விழியுஞ்
சுணங்கிவிடுஞ்சுழலுஞ் சுத்துங்கா - கிணசுரங்கள்
வில்வயிலை நன்னாரி விளாத்தியுடனே துளசி
வில்வயிலையோடுடதனால் வெதுப்பு. (290)

ஓரிடியாயிடித்து வுத்தவட்டிற் றன்னிலிட்டு
நீரிலொருபடி காணேற்பாகு - மோரிடியாய்
வாதமடக்கியுடன் வால்மிளகு சுக்குடனே
கோதையே கேளேலமெனுங் கூறு. (291)

நாலுவிதச்சரக்கும் நன்றாய்க் களஞ்சுவித
மேலும்வட்டியிட்டு வன்னிவீசினால் - நாலுவிதம்
பொன்வெதுப்பாய்வெதுப்பிப் பூணுவது மோரிடையா
யன்பருக்கெல்லா மிதுவுமாம். (292)

அந்நீரிலிட்டு வனற்படவும்வீசினா
லுன்னிதமா யெட்டுக்கொன்றாக்கி - 'பந்நீரிற்
கொதித்துவரும்பாகம் குங்குமப் பூகஸ்தூரி
விதித்தகோரோசனையும் வேண்டு. (293)

ஆரவிட்டுக்குடிநீ ரக்குனியுங்குளுந்தா
லாரவிட்டச்சலத்தை வார்த்துமே யாரவிட்டுச்
செயரசமாஞ்செந்தூரந் தேன்மொழியே குன்றியிடை
மயமணுகா பாச்சிவிடும்பார். (294)

இரதிகேளிக்கை யனுபவத்தால் வருமாறு

தந்தையுமேசெய்த தவப்பயனோவிந்தமதி
வந்தவரலாறுசொல்ல வாதுகாண் - தந்தைமதி
ரதிகேளிக்கைதன்னில் நாடிமங்கைமன்னவனும்
கெதியடைந்த சொற்கவழிகேள். (295)

ஏழுவித உஷ்ணவெட்டையால் நேரும் வியாதிகளின் விவரம்

கெற்பவெட்டையாலுங் கேளிக்கையிற்செய்தகுண
முற்பகத்திலேயுதித்து வோங்கினாற் - கெற்பமதில்
வெட்டைதனிலுட்டிணமா மேதினியிலேழுவிதம்
பட்டசட்ட முற்பமோபார். (296)

தந்தையின் வெட்கையால் பிண்டங் கனலிலடிபட்டு கிரசுரம் வருமாறு வேறு கட்டளைக் கலித்துறை

பாரான கெற்பவெட்டையுமீரும் பக்குவத்தில்
வேரானவிந்து வெளிப்பட்டு யோனிவிழுந்து தென்றாற்
காரானபிண்டங்கனலிலடிபட்டுக் காந்தியினாற்
கூராய்கிணசுரமெய்து மென்றேயன்கூறினோமே. (297)

துரும்புபோலாகிச் சுரம் பேதியுண்டாகும் விதமறிய

சுருக்குழிவிட்டுப் பார்தனில் வந்துகருதினதால்
வெரும்புழி கானமைந்தன்பிறந்து விளங்கிடினு
முருக்குமஸ்திகட்தேய்பிறையாலு முடலழிந்துச்
சுருக்கஞ்சுரம்வந்துப் பேதியுண்டாகித் துரும்பதுவே. (298)

அரும்பாகி யீரஞ்சு திங்கட்குட் துரும்பாகி பிண்டங் கருவைப் பிழிந்த சக்கைபோலாகுமெனல்

துரும்பதுவாகுமீரஞ்சுதிங்கட் செல்லுமுன்னே
யரும்பதுவாகுமது தள்ளிப்பார்க்க வனந்தனிலுங்
கரும்பைப்பிழிந்து சக்கையதாக்கின கதையதுபோற்
றுரும்புந் தூணாகுங்கரும்பதுபோற் சுத்தங்கொள்கினரே. (299)

இருநூற்றெண்பத்தொன்பதாவது பாடற்படிக்கு குடிநீர் செய்து ஜயரச பற்பத்துடன் கொடுக்க பாலர்கட்கு வெட்டைசுரம் நீங்குமெனல் வேறு - நேரிசை வெண்பா.

குடிநீரிற்பங்குடுக்கவுமே தாய்க்கு மைந்தன்
வெடிக்கு முழித்திடும்பின் விட்டுவிடுங் - கடித்தவிடம்
பார்க்குமஞ்சு நாளதனிற் பாலர்கட்குவெட்டைச்சுர
மூர்க்குமுன்பின் னோடிவிட்டுப்போம். (300)

பத்தியமறிய

சுத்தமுளநீர்சுண்டச் சோருடனே வெந்நீறு
மற்றுமொன்றுமாகாது மாரிவிடுஞ் - சுத்தமது
நித்திரையுமாகாது நேற்பல்வாற்சூரியனி
லித்தைவிட்டுச் சந்திரனிலேறு. (301)

வாய்வுவலி மாந்தசுரம் நீங்க வனுபானம்

இப்படியேபக்ஷ மிருவருமேயுண்டதனாற்
சொற்படியுமுண்டோ சுரவெட்டை - யிப்படியே
மதளைதனக்காகும் வாய்வுவலிமாந்தசுர
முதலை வலித்த மரகம்போமுன். (302)

முருங்கையிஞ்சி மாவிலங்குமுத்தக் கொடிவேலியின்வேர்
தோருக மூலமெல்லாஞ் சுத்தமதாம் - வேருருக
வெள்ளெருக்கன்பட்டை விதமஞ்சும் நீர்ச்சுரசம்
வள்ளலெனும் வெதுப்பு வாங்கு. (303)

வாங்குஞ்சரிசமனாய் வார்த்து விடுங்கிண்ணமதிற்
றாங்கிவன்னிநீர்கொதிக்கச் சாத்திடும்பின் - மாங்குயிலே
கூர்தெளியநீரிருத்து நீரிற்பலம் ரெண்டரையாய்க்
கூறுஞ்ஜெய செந்தூரங் குன்றிவை. (304)

காலை மாலை மேற்படி சுரசத்தில் கொடுத்துவர வேறு கொச்சகக்கலிப்பா

செந்தூரங் குன்றியிடைச் சேர்த்துவஞ்சு நாட்செலுத்தி
யிந்தவிதமா யிரண்டு யிரவிமதி வேளையிலுஞ்
சுந்தரமாம் பண்டிதரே சூதரசச் செந்தூரம்
வந்தவிதம் பொன்னிறமாம் வையகத்தில் காண்கிலரே. (305)

சாத்திய, வசாத்தியஜன்னி தாபஜன்னி வாதஜன்னி பித்த ஜன்னி சூதஜன்னி நீங்குமெனல்

ஜன்னிதனிலேயுதித்தச் சாத்திய சாத்தியமு
மின்னவிதமென்றறிந் தெடுத்தவிழ்தமே யுணர்வீர்
வன்னிசுட ற்றாபஜன்னி வாதஜன்னி பித்தஜன்னி
சொன்னசூதஜன்னியும்போஞ் சூதகம்போஞ் சூட்டுவீரே. (306)

முன்னமேயான் சொல்லிவிட்டேன் முன்னோர்கட் சொன்னமொழி
யின்னதினியாவதொன்றும் யாதுமேதானுரையாற்
கன்னன் மொழிமாமதுர கற்பகத்தையானறியே
னன்னையெனும் வம்பிகையே யான்துதித்தறிகிலனே. (307)

ஜெயரச செந்தூரத்தால் வேதை பார்த்து கற்பமுண்ண மட்டு விருத்தம்

தேயுவெனுஞ்செம்பதுவுங் களஞ்சுமூன்றும்
திங்கண்மதிரசிதமொரு களஞ்சியேழு
தாழ்வில்லா குகையிலிட்டு வுருக்கும்போது
தரும்படியேகுன்றியிட்ட தாக்கிப்பார்க்க
வாய்திறந்து சொல்வதற்கு நாவுமேது
வயசதுவுமெட்டரையென் றுரைக்கலாகு
ம்மாயாமலிருக்கவுமே கற்பங்கொண்டால்
வாலையிந்தஜெயரசத்தை வைத்திடீரே. (308)

சித்தம் வைத்து இந்நூலைப் பார்த்தவர்க்கு இக்கருவங்பற்பம் சித்தியாமெனல்

வைத்திடுவீர்கருவங்க பற்பஞ்சொல்ல
மகத்தானமுறையிதுபா ரெவருஞ்சொல்லார்
கற்றவர்களிருக்குதென்றும் எவருஞ்சொல்லார்
கண்டவர்களில்லையென்றும் விள்ளமாட்டார்
குற்றமொன்றும்பாராட்டஞ் செய்யார்மேலோர்
குறைவில்லாதில்லையென்றுங் கூறார்பண்போர்
சித்தமது விரங்கவிந்த நூலைப்பார்ப்போர்
சித்தியெய்தும்யானுரைப்ப தாண்டேகேளீர். (309)

கருவங்கம் வெட்டையாமெனல் வேறு - கட்டளைக்கலிப்பா

கேளுமேகருவங்க மொருபலங்
கேட்கவும் கிளிஞ்சியிநீர்தனில்
மேழுமேழுவிசை யெனுமூசையில்
விட்டுமேஜெயநீர் விட்டுருக்கிடு
நாளுமேயதுநாடிடும் வெட்டையாம்
நாயனார்குறையொன்றில்லை யாண்டேகேள்
நீளுமேமதிநின் னொளிவேநிறம்
நிலவுபோலொளி நேர்மையெடுத்திடே. (310)

வேறு கலித்துறை

எடுத்திடுந் துடைத்தாற் பொடியாகிடுங்
கடுத்திடாது கலவந் தனிற்பாச்சிடும்
விடுத்துப்பாரையி னுப்பொன்று சேர்த்திடுங்
கொடுத்திடும் நிலவுப் பென்றுகூட்டிடே. (311)

முப்புவிதற் கொப்பில்லையெனல்

உப்புரெண்டிடை யோரிடைவங்கமு
மப்புவானதோரண்டச் ஜெயநீரினாற்
செப்புவுந்தின மூன்றுநாளாட்டிடு
முப்புவான முறை யிதற்கொப்புமோ. (312)

மெழுகு பதமறிய

மெழுகதாகும் விதமறிந்தேயெடு
கழுகுபோலுங் கருத்துற்றிருப்பதா
லொழுகுமேகதிரொளிவு முன்வைத்தெடு
வழுதிராது வட்டிக்கு ளடக்கிடே. (313)

புடபாகமறிய

அடக்கிமேலோ ரகலதுமூடிகா
ணடக்கிடும்ரவி நன்முகமேபட
மடக்கிடும்வலு வாகுங்கெஜப்பிடந்
திடுக்கிடாதெளிந் தாரிடுமாண்டையே. (314)

செந்தூரமாகியவாறு
வேறு முடுகு சந்தப்பா

ஆருமக்கினியுமானபின்புவன லாரிடுமனவிலதுபதந்
தேரும்வட்டிலிடு செந்தூரந்தனையே சித்தியெய்த சிறுபரணியில்
மேருவிட்டுவதிற் பதனஞ் செய்திடுதல் மேவிவாலையருடன்பதம்
பேர்வளர்ந்திலகுதியானபூசைவிதி பேசவும்வசனபேதமே. (315)

மண்டலம் 48 நாளுண்ண வேண்டுமெனல்
வேறு கட்டளைக்கலிப்பா

பேதமாங்கருவங்க செந்தூரமே
 மாதமும்பதினைந்து நாண்மண்டலஞ்
சாதனையதிகாலையு மாலையுஞ்
 சேதம்வராதிவை செப்பவுங்கேட்டீர்
நாதவிந்துரகசிய முப்பினால்
 கோதையேவேதை கோடியுமாதலாற்
பாதைகாணும் பதினெண்பேர் சொன்மொழி
 வாதைவாதைவரும் விசனங்களே. (316)

மதுமேகம் நீங்குமெனல்
வேறு கலிவிருத்தம்

செந்தூரஞ் சிறு குன்றிடை நெய்தனில்
முந்தவேயுலகோர்க ளறிந்திட
வந்தநோய்கண் மதுமேகமோடிடும்
வெந்துமீறி வியாகூலமாகுமே. (317)

வாதபித்தமேகஞ் சோகையுள் மாந்தை புண் காமாலை நீங்குமெனல்

வாதமேகம் வருபித்தமேகமுஞ்
சூதமேகஞ் சிலைத்திடு புண்களு
மூதுஞ்சோகையுள் மாந்தைகாமாலையுங்
காதமோடிகடற் புக்கும்பாருமே. (318)

தகரை சூரணத்திற் காலை மாலை ஒரு பக்ஷமுண்ண வேண்டுமெனல்

பாங்கையான் றகரையின் சூரணஞ்
சேருமேசீனி சக்கரைக்கூட்டியே
காருமண்டலங் காலையுமாலையுஞ்
சோருமே சுகமாமெனவுண்டிடே. (319)

விஷப்பாண்டு நீங்குமெனல்

பாண்டுமேவிஷப்பாண்டு விலகிடும்
பூண்டுமேவிருமண்டலங் கொள்வீரா
யாண்டுபத்துமாராத மேகங்களுந்
தாண்டியோடியே தாரணிபுக்குமே. (320)

வெண்குட்டம் இருமல் க்ஷயம் கண்டமாலை பித்தகாசம்

தேத்தான்கொட்டை நற்கீரகந்தரணியும்
பார்த்தெடும்பலமாகுஞ் சரிசமன்
போர்த்துமேயிடித்தே யொருப்பாண்டமில்
கார்த்துமோர்படி சுத்தஜலமிடே. (321)

தொக்கதாகச் சுக்காகவேசுண்டினா
லெக்காயெக்கா யெட்டுக்கொன்றுமாகிடுந்
தக்கதாகவெண் சக்கரைக்கிருதமு
மக்கதாகவரைக்குன்றி பற்பமே. (322)

மண்டலங்காலை மாலையுமுண்டதால்
வண்டநோய்கண்மணி கண்டமாலைபோல்
கண்டீரோபித்தகாச மகன்றிடும்
விண்ணடிடுமேவெண் குட்டம் போமாண்டையே. (323)

குட்டமுமட்டக் கிராணியும்போய்விடு
மட்டியேது விரும்பல் க்ஷயங்கட்போந்
துட்டநோய்கள் துலைந்திடுமாதலாற்
கட்டமேது கருவங்க செந்தூரமே. (324)

சூதகத்திற் சூடுண்டாகி நேரும் வியாதிகளின் விபரம்
வேறு முடுகு சந்தப்பா

சூதகத்தில் வெகுசூடுண்டாகிகனற்
சூலையாலுந் தணல்வேகமாய்
வாதம்வந்து சூலைமேவி வாய்வதும்
வாதனை யதீதம்வருமெனி
வேதுநோய்கட் பிணியேவல்கோபமது
வெய்துங் கர்மவினைமீறிடில்
மாதுசூதகமுமேது யேகிவிடு
மன்னன் மங்கையுமே கூடுவார். (325)

குன்மங்குடல் வாதம் எய்யும் விவரம்

மன்னன் மங்கையரும் புணரும்போதுதனு
மாரிபாரிசமும்புக்கில்
அன்னம்போலுமடமாது கெற்பக்குட
வன்னியாவதுபின் னொன்றுமே
குன்மமெய்துங்குடல்வாத மெய்தும்வலி
கோபமெய் துங்கனற்கோடிதான்
பின்னமேதுபிர மேகமெய்துமெனும்
பேசுவார்கட் பெரியோர்களே. (326)

குன்மங் குடல்வாதந்தீர வனுபானம்

தூதுபத்திரியும்ரசமும் வேம்பின்ரசஞ்
சூட்டிடும் புனற்றன்பாகமாய்
சாதுவாவெனவும் பஞ்சதாரையிடைத்
தாக்கி நீரிலிடும்பலமெனற்
பேதமேதுயிடை சீனிகாசிடையும்
பேதியமிதனை யொக்கவுஞ்
சூதுமேது கருவங்கசெந்தூரமுந்
தூக்குவாயிடைதன் குன்றியே. (327)

நாற்பத்தஞ்சு நாளுண்ண வேண்டுமெனல்

வெட்டையான கருவங்க செந்தூரமும்
வேதை வேதை வெகுகோடிதான்
விட்ட நீரிலதுவவிழ்தமேவியிரு
வேளை காலையுடன் மாலையு

மட்டமாமது வெண்ணஞ்சு நாற்பது
நாளாகயேகவொரு மண்டலஞ்
சட்டை மேலரவம் பூண்டசாகரநீர்
சமரசமுரிய வரன்னமே. (328)

இக்கருவங்க செந்தூரமுண்டவர்கள் கற்பதேகிகளாவாரெனல்

உள்ளிருந்தவினை மேலெழும்பியொரு
கோடிகோடி பிணிமாறிடும்
எள்ளளவுமின்னூற் கன்மங்களில்லா
மேலுமேலும் ரவியொளிவதாய்க்
கள்ளமில்லாகருவங்க முண்டவர்கட்
கற்பதேக சிவயோகிகாண்
விள்ளாலாக பெரியோர்களிட்டவிதி
மேகமென்றது வொளிக்குமே. (329)

இச்செந்தூரத்தால் தீரும் வியாதிகளின் விபரமறிய

நீர்க்கடுப்புகனல் நீரெரிப்புஜல
நீர்சுரப்பது நீரிழிவதும்
நீர்வெட்டிப்புதனல் நீர்தடிப்புவதில்
நீருரைப்பது மேகநீர்
வார்களற்றகொறுக்கா குமாந்தையொடு
வடிவழித்திடு மகோதரம்
டேரனந்தம் புரைபுண்களாவதுவும்
பேர்கட்சொல்ல பிணிமாறுமே. (330)

வான்குமரி ஜலமாகும் பாகமறிய

வான்குமரிவளமான பூமிதனில்
வாசமாமெனில் வனாந்திர
மீனமேஷமது தோஷமேதுமிலை
விதமதாகியச் சொல்விசிதமா
மோனமாமதிலும் விசைரெண்டுணர
வோகோகேளுங் கடுக்காய்ப்பொடி
தானதைப் பிசையச் சலமதாகிவருஞ்
சலமுநீருணர் வெனாண்டையே. (331)

வான்குமரி நீரிலனுபானஞ் செய்துண்ண

நீர்தனிலும்பஞ்சதாரை விராகனிடை
நீரொருப் பலமதாகிடிற்
சாரமாமதிலுபாலின் கிறுதமது
தான்களஞ்சியிடை சாத்திடும்

மாரியாவதவிழ்தங்கட் குன்றியிடை
வகையதாக வொருமித்துடன்
சூரதாகிவிடு மத்தியேகுஞ் க்ஷயஞ்
சோம்பற்றூக்க விடுமாண்டையே. (332)

இராமநாதபுரங் கடற்கரையிற்சாரிபோய் சவுக்காரிகள் வருகிறதாக வுத்தமர்கட் சொல்வது

தூக்கமேது சுகபோகமேது
நடைமுடியுமேது கோவமேதுகாண்
உக்கிரமேது மழைக்காத்துமேது
ரவியோட்டமேது விழிநாட்டமும்
வக்கிரமேது சிவவிசனமேது
மதிவாய்களேது கவிபாட்டவும்
அக்கரைக்கடலில் ராமநாதபுர
மருதேமாரி தசைக்காதமே. (333)

வாரியான கடலானவோரக்கரை
வாசமாய்ப் பெரியோர் வருதலால்
சாரிபோவர் சவுக்காரியானவர்கள்
சத்தமிட்டுணாவ தாளிதிரந்
தோரிபோலு மேயுணர்ந்து கூறுவர்
உத்தமர்கள் மொழி கேள்விடார்
பாரிர்பாரீர் பசைபாரை யுப்பெனவும்
பார்த்தெடுத்துமே பாலிப்பரே. (334)

யாத்திரை வாசிகளறிவார்களெனல்

உப்பரிந்தவர்கள் யோகிவாசிகளு
முலகமாமிது வீரேழுமே
செப்பொணாதவர்கள் யாத்திரை வாசமெனில்
தீர்த்தமாடிடுவர் செய்திகாண்
சுப்ரமே பெரிதுதனியவே தனிய
சுத்தவான தொருதபசிகள்
கைப்புமுப்புக் கட்லுப்புவாமெனவுங்
கைவசப்படுதலவிழ்தமே. (335)

பாடபேதம: கடலுப்பு – 'கடல் பாரையாமெனவும்'

அவிழ்தமண்டலமு மானபின்சடல
மானதால் வயிரவச்சிரம்
அவிழ்தமுண்டவர்க ளாருமில்லைசெக
மாதிதங்கள் முதல்தேவரு

மவிழ்தமானதிவை யாரறிவர்சிவ
யாத்திரை வாசிகளுமறிவராம்
அவிழ்தமுண்ட பெரியோர்கட் செந்தூரமு
மாடலாம்பரிச வேதையே. (336)

இதனால் வேதை கோடிபாதை கோடி நாதவிந்து வுவற்சாரங் கோடியெனல்

வேதைகோடி ரசவாதங்கோடிரச
மெழுகுங்கோடி தொழிலாகுமாய்
வுாதங்கோடி ரசவர்க்கங்கோடிமணி
[illegible]
பாக்கோடிபல் கலைகட்கோடிபரி
பாஷைகோடிமதி பரியெனும்
நாதவிந்துவுவற் சாரங்கோடியுவர்
நன்மை துன்மையறிவோர்களே. (337)

அரிதாரசயஞ் செய்யும்பாகமறிய

ஏதுதாரமெனுமாலின் றேவியிசை
வானதோர் பலமுமொன்றதால்
யேதுதாரமதி லியமாகும்வகை
யென்றறிந்து வொருபுத்தியாய்
யேதுதாரம் வன்மூலியெட்டியிலு
மேவுமான கனியிவ்விதம்
ஏதுதாரமதின் வித்திடுங்கலவ
மிட்டிடுப்பழநீர்விட்டிடே. (338)

விரையில் நாலுபலங்கனி யதின்ரசனை
விட்டுமேவியிருசாமமுந்
திரையிலாமற்படி மயனமாகவதைச்
சிதறிடாமலுமே சாடிப்பின்
கரையிலாமெழுகுப் பாகமும்வருதல்
கண்டு காண்பதினிக் காண்கிலா
மறையின் சொற்படி ரிஷிகட்சொல்லதுவும்
வசனசித்தியறி தரணுடையே. (339)

மெழுகு பதமறிதல்

மெழுகுதன்பதமும் வருதல்கண்டுவழி
மேலுமேலுங் குகைசெய்திடு
தழுகுதாரமது குகையில் வைத்துமறு
நாளுமூடி யனலானபின்

வழுகுசீலையது வலுவதாய்ப்பிழிய
 மண்ணுமேழு விதமானதால்
ஒழுகில்லாரவிதன் முகமும்வீசகனல்
 உணரும்பின்பு குழிப்புடமதே. (340)

வங்கஞ்சவளையா மெனல்

புடமுங்கான கமதேகிடிலெருவு
 பூட்டிடுமிருவதே புடம்
புடமுமாறியபின் னெடுமைவாலையருட்
 பொற்கவசம் பிரித்தொருமையாய்
யடவுதாரமெனும் வங்கமாஞ்சவளை
 யருமையாகிய தோரீயமாங்
குடுமே குப்பிதனிற் பதனமேற்பிரடை
 குப்பிவைத்திடுவீர்க் கூர்ந்துமே. (341)

கெந்தகத் தகத் தயிலம் (வேறு) விருத்தம்

இடுங்கெந்தித் தயிலமுரைக் கொணா
 ரகசியம்யான ருட்கருத்தினைவிளங்க
இகத்தினிற் பெரியோர் சித்தர்கள்
 மகிழிலகும் பொன்னதிசயமுரைக்க
திடரிலாக்கெந்திப் பலமெட்டுவாங்கி
 செயமெனும் பாண்டமொன்றெடுத்துச்
செயல்பெருங் குப்பைமேனியின்சாறு
 சிறந்திருபடி கொண்டுதாக்கி
நெஞ்சரக்கூட்டி வன்னியிட்டனல்தான்
 நேரதாய் நீர் சுண்டக்காய்ச்சி
நேர்மையாய்க் கல்வமதில் மருந்தூட்டி
 நிகழ்த்திடீர் பிசகுவ்ராமற்
படமெனுங் குப்பைமேனியின்ரசமும்
 பாச்சிமற்று மஞ்சுநாள்தான்
பகர்ந்துகாசதுபோல் நிகரெனும்விதமும்
 பரிவெனும்பில்லைசெய் பலமே. (342)

பாட பேதம் : பகர்ந்திளங் கனிபோல் நிகரெனும் விதமும் பரிவெனு மிதனை செய் பதமே.

பரிவுடன்கனிபோல் நிழலிலுலர்த்திப்
 பாச்சிடுங்கல்வத்திற் பொடியாய்ப்
பண்ணிமாங்கிஷமுஞ் சரிசமன்சேர்த்துப்
 பக்குவமாய்ப் பொடித்தூவி

அறிவுடன் வாரமேனிச்சார்விட்டு
யதையிடித்தரைத்து முன்மணிபோல்
அடக்கஞ்செய்நிழலிற் கலையத்திலிட்டு
அதன்மேலோர் சட்டிமண்ணேழு
விரிவில்லாமலுமே நடுமையஞ்சில்லு
விளக்கமாய்ச் சுப்பியுஞ்சொருகி
விதமெனும்புவியிற் குளிகையுஞ்செய்து
மேவுமக்குளி தனிற்கவசம்
தெரியவும்புதைத்த துமரைத்திடுங்கலசந்
தியங்கவொட்டாமலே பொதிந்து
திருத்திமண்சீலை வலுவதாய்ப் பொதிந்து
செப்பவு மேருகொண்டுவனலே. (343)

தயில பாகமறிய

அனலதுவீச பிடமதுவாறி
யானபின்பிடம் பிரித்தெடுத்து
வழகுதன்தயிலங் குப்பியிற்றாக்கி
அதிகெந்திமுருக்கன் பூநிறமாய்
வனலெனுந்தயிலம் பதனமாயுணர்ந்து
வாலையின் பதமெனுங்கமலம்
மலரடிபோற்றிவண ங்கியேபணிந்து
மற்சித்து வயிரவன்பூசைக்
கனலெனுங்குருவின் கடாக்ஷம் பெற்றடுமைக்
கணபதிகந்தனைத்தொழுது
கருணையானந்தப் பரகுருபாதங்
கடவுளைத் தியானமுஞ் செய்துப்
புனலெனுமுப்பு முவரெனும் காடா:
புவியெலா மதுமயம்பு தல்வார்
பொன்னடிபோற்றி ''படியேனும் வணங்கிப்
புகழ்ந்தனொரு முறைப்புகல்வாம். (344)

தாளகக்கட்டு
வேறு கட்டளை கலிப்பா

தாளகங் கரடாகவுமொரு
சட்டியாவதி லிட்டுடன்
தேளெனுமடுப்பா மதிலனற்
செந்தணல் கொண்டுமூடியும்
சூளவுந்தயிலத் தினிற்பலந்
துளிதுளியெனச் சூட்டியுந்
தாளகத்தினிற் சாமமுஞ்
சுருக்கானதால் வலுக்கட்டதே. (345)

சூதவங்க வெட்டையறிதல்

காரியமுன் னானதும்வலுத்
　　தயிலமால் வெட்டையாகிடுந்
தேருஞ்சூதரசத்தின் வாலைரசச்
　　சிங்கமாகுஞ் சரக்கொன்றுதான்
பாருங்காரீயமு முருகும்பக்குவம்
　　பகர்வதும் பதந்தன்னிலே
யாருமேயறியார்கட் காண்கிலா
　　ரானவங்கமி தாண்டையே. (346)

வங்கவெட்டையின் நிறமும்பதமுமறிய

வங்கசூதமிரு பாகமாகவொரு
　　அங்கமாகவருங் கூறதாஞ்
சிங்கமாவது வெழும்பியேவருதற்
　　சீரலாகுமது காண்கிலார்
தங்கவெட்டையது போன்றிடுதற்
　　சலசாயலாத லதுவேபதங்
கங்கள் மூசையெனுங் கண்விட்டாடுமது
　　கருதிடில் தயிலங்காட்டுமே. (347)

கருதுவீர்தயிலம் பலமுமாவதரைக்
　　கனலுஞ்சோர துளிதுளிவிடும்
வருதும்வீரரைதன் சாமம்வன்னியதும்
　　அனல்படவுஞ் சுருக்காமது
துருதுவானுலகு மானுகாளருகிற்
　　சூதர்வாசனை யகற்றிடும்
அரிதரிது குகையனல்களாறிவரு
　　மதுதன்பாகம துபார்த்திடே. (348)

வர்ண சாயலறிய

பார்க்கப்பார்க்க மயில்பாவனையதனிற்
　　பஞ்சவர்ணமது வஞ்சுகாண்
கார்க்கக்கார்க்கச் செகஜ்ஜோதிவீசுமது
　　காணும்வாதிகளே காண்கிலீர்
யேர்க்குமேபசுமை யென்னமாயமிது
　　யென்னகாரணமி தாகையால்
வேர்க்கவும்உருக்கி வார்க்கவும் தீரும்
　　ஈசனாருரைதா னாண்டையே. (349)

இதால் வேதையறிய

கடுகுதன்னிடை விராகன் செம்பிடையுங்
கருதிடுங் குகையமுகிட
முடுகு துருத்தியுமே வீசிடவுருகு
முன்னமே குருவினாலெனும்
படுகுவாயெனவே பத்துடனரையும்
பாச்சிட அவிழ்தம் வயதுகாண்
சூடுகுடுக்கையது கல்லின்மீதில்விடு
கூறுவீர்கனக வேதையே. (350)

வயது எட்டரை யென்றறிய

கனகவேதையெனும் ரசிதமாவதுவுங்
கட்டியூத்தி மறுபடியெனில்
வினகவே குகையிலுருகிடும்பதமு
மிஞ்சிடாமல் வருபாகமாய்
களகமாமதுவுங் கடுகின்வீ தமதி
வஞ்சியேவிடுவர் போதென
தனகமாமயமும்வருக வெட்டரையுஞ்
சஞ்சிதந்துலையுமேமமே. (351)

கருவங்க சூதரசத்தாற் குடவன் பேரில் பதினாறு வயதெனல்

குடவனாவதுமீ ரெட்டுபங்குரசங்
குருவுமாவதுவுங் குன்றிதான்
நடனமேபுரியுங் களையுஞ்சோதிநிறம்
நளினமாகும் பதினாறெனு
முடலதாகிவிடுஞ் சத்தவோசையிடல்
மோசமில்லைப் பயமில்லைகாண்
கடலுஞ்சூழுஞ் செகமீரேழுஞ்சூழுங்
கருவங்க சூதரசங்காணுமே. (352)

அயவெட்டையுடன் மேற்படி வங்கசூதவெட்டையைச் சேர்க்க வயதாமெனல்

மோசமேதுவயவெட்டை விராகனிடை
மூசைதன்னி லிடுதாக்கியும்
பாசம்வைத்து ஜெயசூதமென்றரசம்
பாச்சிடுங்கருதி வெட்டையில்
வாச்சுதாகிலிரு வெட்டையுமுருகி
மணியதாகும்விடு கல்லினில்
மாசிலாததித மெட்டரைக்குள் வரும்
வாதசஞ்சீவியி தாண்டையே. (353)

பஞ்சபூதமல்லாது சுத்தஜலமுமுவற்பூவு மல்ல வெனல்

வாதசஞ்சீவியும் யோகிகட்கொருதன்
வறுமையேதுகாண் மவுனிகள்
நாதவிந்துவுவர்பூநீர் பாரையெனில்
நாடிடுங் கருவினாலையும்
பூதமைந்தைவிடப் பூதலங்கள் தனிற்
பூவுமேதுவு வரேதுகாண்
சூதவிந்து ஜெகந்நாத சுத்தஜலஞ்
சூக்ஷமாரறிவா ராண்டையே. (354)

இவ்வெண்ணூறு நவரத்ன சொச்சத்தில் வில்லுமெனல்

எண்ணூர் சொச்சம் நவரத்தினசூத்திரமிது
எவரறிவார்களோ யானுணர
சொன்னார் சித்தர் பதினெண்பேர்யோகிகளுஞ்
சொல்லவில்லை எனில்வைப்புகாண்
அன்னை வாலையரு ளம்பிகையின்கிருபை
யாதலாலு மூன்றாகையா
இன்னமேது கருக்கடையதாகயினி
மேவியானருள வில்லுமே. (355)

வேறு கலிவிருத்தம்

வில்லும்வைப்பு விரும்பினதேதுகாண்
கள்ளமில்லா கருக்கடைசீனமாம்
முள்ளுசுத்த ஜலமெனக்காடிதான்
இல்லதுண்டு வியம்புறேனாண்டையே. (356)

பூநீற்சுத்தியறிய

இயம்புங்காலையி லிந்நீர்படியொன்றில்
இயம்புபூநீர் இதுபத்துமேபலந்
தயம்பில்லாமற் றண்ணீர்தனிற்சுத்தியாம்
இயம்புவாரெனு மிச்சுத்தியாண்டையே. (357)

வேறு கட்டளைக்கலிப்பா

சுத்தியாங்கதிர் சூரியன்முகஞ்
சோரவுஞ்சலஞ்சுண்டியே தொக்கினால்
வெற்றியாமனற்போலும் வருதலில்
மீதுகாரம் விரும்புமறுபடி

சத்தியானப்பூநீரது நாதமாந்தவளம்
    போன்றதிற்றசை பத்துஞ்சென்றதாற்
குற்றமேது கொடூரமுமில்லைகாண்
    கூரறியுவருப்பை யறிவதே. (358)

பூநீர்குருவுக்குச் சுத்தியறிய வேறு கலிவிருத்தம்

உப்பென்றா லிதுவருவற்சாரமாங்
குப்பல்குப்பலாய்க்கொட்டி வைத்தார்கள்போல்
செப்பொணாதுச் செழுமைநிலந்தனில்
அப்பவல்லோ அறியலாமாண்டையே. (359)

குடிசைபோடுங் காலமறிய வேறு கட்டளைக்கலிப்பா

அறியும்நாள்கள் தைமாசியுபங்குனியந்த
    நாட்கட்போன்றரியுஞ் சித்திரையிற்
குரியதாம்பதினைந்தாம் பவர்ணமிக்
    கூடும்நாள்கட் குறிப்பறிவாரில்லை
பிரிவுமே துமுதற்பக்ஷஞ் சித்திரை
    பின்புபங்குனி மாசியுந்தையொடு
நெறியதாகுஞ் சதுர்த்திங்கள்நேரறி
    நீமுன்சென்று குடிசையும்போடுமே. (360)

சிவயோகிகட்குக் கல்லுப்பின் கருத்துத் தெரியுமெனல் வேறு கலிவிருத்தம்

போடும்வீடு பூநீரருகாமலும்
நாடுங்கண்டு நாள்தோறு மேயவ்விடங்
காடேவீடு கல்லுப்பின் கருத்தறிந்
தேடுவார்கள் சிவயோகிகளாண்டையே. (361)

சிவனேநீ கெதி யென்றிருப்போர்தமக்
கவனமேது கல்லுப்பதுங் காணுவார்
உவர்களுப்பு உவர்சுத்தியானதால்
உவரதேயுவர் சாரமதாகுமே. (362)

சாரமேகார சாரமதாகிடும்
தூரமேயிருந் துப்புஉவரெசடு
வீரமாவது வெள்ளைக்கல்லுப்பதாஞ்
சாரமாகுஞ் சமுசயங் காண்பீரே. (363)

வேதாளப்பூடீதெனல்

காணுமாலையிற் கல்லதுவிண்டிடார்
ஊணுமேயுவர் சாரம்புனலெனில்
பூணுமேயுவர் பூத்திருக்குமிடம்
வீணுவீணல்ல வேதாளப்பூடதே. (364)

சூதவிந்தறியாமற் றிகைத்தார்களெனல்

வேதவேதமறிந்த பண்போர்களும்
நாதநாதமென்றே சிலர்தேடினார்
பேதபேதங்கண்டே சிலர்வாடினார்
சூதவிந்தறியாமல் திகைத்தரே. (365)

உப்புசுத்தி யறியவெனல்

அருகவுமிருந்தாடு தரவமுங்
குருகவுஞ்சனி கொண்டுமறிந்திடில்
பெருகவுமுவர்க் கல்லிற்பத்துபலங்
சுருகவுஞ்ஜலக் காடிபடியதே. (366)

இட்டுமேகரைத்தேவிடு மூன்றுநாள்
கட்டுமேஜலங் காடியில்லாவிடில்
வெட்டுமே வெண்ணிறமும் நிறமில்லை
கட்டும்விந்துவுப் பூவுக்கினமிதே. (367)

அவரவர றியாம லலைந்ததெனல்

கெங்கைகெங்கை யென்றேசிலர்தேடினார்
அங்கையுண்டென்ப ததிற்சிலர்வாடினார்
துங்கவெண்ணதி யென்றேசிலரோடினார்
பங்கமெய்தியே பாரிலலைந்தாரே. (368)

அவரவர்மொழியும் மொழிகளையறிய

மேகநீரென்றிலகிய மாமதிப்
போகநீரும் புனற்சலமெனறுமே
தோகைநீரிற் சுத்தியாமெனில்
ஆகமற்றோ ரனேகமொழிந்தரே. (369)

அன்னக்காடி யதுபடியொன்றினில்
பின்னமில்லாவிவை மூன்றுநாட்கள்சென்
றன்னைக்காடியது ஜலம்வாங்கியு
முன்னமமக்கல் லந்நீரினிற்சுத்தியே. (370)

தசதீக்ஷை பாகமறிய

அந்நீரில்தீக்ஷைபத் தாகுமுன்போலிது
முன்செய்தபாக முப்பூவின் சாயல்காண்
உந்நீரிலுஞ்சுத்தி யுறவுசெய்தானபின்
வின்னமில்லை விந்துநாதமூலமே. (371)

முன்சொல்லிய சீனவைப்புக்குச் சேர்க்கும் பாகமறிய வேறு கொச்சகக்கலிப்பா

மூலமெனு மிந்திரனுப்பா
முச்சுடரில் முன்பருளும்
வேலைரெண்டு பங்காவதில்
விடும்பூநீர் பங்கொன்றாகும்
மூலமென்ற பாண்டமதில்
முன்முடிந்தவுப் பதுவும்விட்டு
வீழமாம் வேலியெனுமிக்
கொடிச மூலமதை. (372)

உத்தாமணி யிலைச்சா
றொக்கவிடுமே பழச்சார்
முத்தாகுமே தையின்பால்
மூன்றுமொக்க வேசமனாய்ப்
பத்திரமாய் பாண்டமதிற்
பாச்சிவிடுமே சரியாய்
வித்தாகு மேல்மூடி
வெளிப்புரம்பாய்ச் சாணமதே. (373)

காரத்தாற் சூடனானதெனல்

வெளிப்புரம்பாச் சாணமத்தி விளங்கிடினு
மரவிருக்கு மிடமேதென்னில்
துளிப்பிசகாத் தோழமதிற் குழிவெட்டிப்
புதைத்து விடுசொன்னேன்யானும்
வழிப்படுமே மண்டலஞ் சென்றெடுத்திடுமே
சீனமதுவைப் பேயாகுஞ்
சுழிப்பதெனுமிச்சரக்கு
சீனமதாங்காரமதாற் சூடனாச்சே. (374)

சீனமதால் வெண்கார வைப்பதுவும்
பலகையைப்போற் றிறமதாகும்
பானமதாற்றுரிசு வெள்ளைப்
பாஷாணம் பரிகோடி பண்புண்டாச்சு

யேனமதால் ரசவாத மிதைவிட்டாலொன்று
மில்லையா தொன்றில்லை
யானதனாலபிமானிய தீதமென்ற
முறைகளெல்லா மறியலாச்சே. (375)

வேறு கட்டளைக்கலிப்பா

ஆச்சுதேசவுக்காரம் பூநீறினா
லாதியாதி வழலைக்கு மாதிதான்
பேச்செனிலிவை ப்ரமரகசியம்
பிராணவிந்து பெரியோரறிவதாம்
வாச்சுதென்ன வழலைக்கு மாதிதான்
வாய்த்திடும் ரசவாதத்திற் காதிதான்
ஏச்சிடாதுயெவ்வைப் புக்குமாதிதான்
இயல்பதாகவினி யிதைக்கேளுமே. (376)

பாட பேதம்: ஆச்சுதே யானைக் கல்லின் பூநீரினால்

வேறு கலிவிருத்தம்

கேளும்பூரங் கெடியான வைப்புதான்
நாளுமேகஞ்ச நாதத்தைவாங்கிடு
வேளுஞ்சீனம் விளங்கிடுங்காலுதான்
நாளுமேயதி ரம்பையின்மூலமே. (377)

வாலை நாதமறிய

மூலமானது மூட்டிடும்பானமுந்
தேலவேதீப மேத்திடுஜாமமுஞ்
சூலவேயது சூடனுமாச்சுது
வாலைநாதம் வரிசையதாகுமே. (378)

வரிசையான வளமென்னபூரமாம்
வாதவித்தை வழலையிதற்குள்ளாம்
வரிசையான வுப்பைவிடவொன்றுமே
சரிதையாஞ் சரக்கானதுமில்லையே. (379)

அரசர்வித்தை யகப்படாதெனல் வேறு கட்டளைக்கலிப்பா

அரசர்வித்தையகப்படுமோ சொல்லுமாண்டே
வெண்காரவைப்பை யுரைக்கவுங்
கரசையானகல்லுப்பு பூநீரெனுங்
காணுங்காணுங் கல்லுப்பதுரெண்டுமே

பரிசைகோடிகோடாகோடி வித்தைகாண்
பாடினார்பதினெண் மகுத்தோர்களும்
வரிசையான திருவள்ளுவனானதால்
வைப்புமேயருள் வாதமி தாண்டையே. (380)

வெண்கார வைப்புப் பாகமறிய

இரண்டதாகும்படிக மொன்றதாம்
நேர்மையாகு முளுந்ததின் தூளதுங்
கண்டதாகுங் குண்டுமணிவித்ததுங்
கருதிடும்பருப் பாகுமேயாதலால்
விண்டிடுங்கள்ளிப்பாலதும் வார்த்துகாண்
மேவுமேயதைக்கிண்டி கிளறித்தான்
சண்டெனுமதிற் பாண்டமதிலிடு
தூபியுமிந்தச் சங்கைவராதிதே. (381)

இவ்வெண்கார வைப்பால் யாவுமாகவேண்டியதெனல்

சங்கைகள் வருகா மனோசிலைகூட்டித்
தடையில்லாமலும் பாண்டமூடி
சார்வதாப்புவியில் குழிவெட்டிப்
புதைத்துத்தகுந்த மண்டலஞ்சென்றெடுக்க
பங்கமெய்தாது பலகைபோன்றிடுதற்
பாண்டமேல் மூடியையவாங்கி
பார்க்கவெண்கார வைப்பிது வெனிற்
பாடினார் பலவிதமாகவே. (382)

வங்கநீர்கோடி காரநீர்கோடி
மருவிய வுவரசங்கோடி
வழலைநீர்கோடி தூம்பரவேதை
வரிசையாஞ் சத்துகட்கோடி
அங்கமாஞ் ஜெயநீர்த் திராவகங்கோடி
யளவில்லாச் சுண்ணமுங் கோடி
அதிதசெந்தூர மருள்வதுங்கோடி
யாண்டையுன்ன னுக்கிரகமுரைத்தே. (383)

வேறு கட்டளைக்கலிப்பா

உரைக்கமேவும்வெண் காரச்சவுடெனின்
உளுந்தின்மாவும் உணர்த் திடுஞ்சீனமுந்
தெரைப்பதேதென்னிலூர் கள்ளிப்பால்படிச்
சேர்த்திடுமிருபாக முமாமெனிற்

பரைக்குமேபத்துப் படாபாண்டமிற்
பகர்ந்துடன் சரக்காவ தூள்தாக்கியுந்
துரைப்பெண்வாலைச் சுகந்திரஞ்சொல்லவுஞ்
சூட்டிமேல்மூடி சூக்ஷமிதாண்டையே. (384)

பூமி புடபாகமறிய

ஆண்டே கேளுமி தென்னவதிசயம்
ஆனநாலுமொரு மண்டலம் பூமியிற்
பாண்ட மென்ன மண்சீலையெழுவிதம்
பானுவாகிக் கதிர்முகம் வீசுவும்
வேண்டிடு வெள்ளை மேழத்தெருவினில்
விடுங்குழிதனிற் பாதியும் பூண்டிடு
போன்றிடுகுடம் வைத்துமேல் முன்விதம்
பூட்டிடுமெரு பூமிப்பிடமதே. (385)

வெண்காரத்தால் கோடி வேதையெனல்

மண்டலமிதை வைத்து யெடுத்துப்
பாரண்டர் கோனயன் மாலும்புகழுவார்
கண்டபேரினிக் காணலாமேதினிக்
கள்ளர்சூதர்க :படர்கட்கோடிதான்
விண்டபேரிதைவிள்ள விடங்கொள்ளார்
வெண்காரமிதில் வேதையுங்கோடிதான்
அண்டரண்டமளாவும் பொதிகைதான்
அகத்தியமாமுனி யருளினாலானதே. (386)

சாரவைப்பு - வேறு

சாரவைப் புலகேழும்சூழ சவடானதேயுவர் தரணியி
லதிகாரமேதெவராலுங்காண்கில ரந்தமேயதுக் காதிதான்
பூரமாம்பூநீராவதும் பூமிநாதமா மெனிற்சத்திதான்
பூதலங்களில்மாதவஞ்செயும் வாதிகாளிவற்சூதெனி
லாரந்தனுபோகிநேசமு மம்புவிதனிலறிவரோ
வவர்கட்சுத்தவானெனி லாண்டையேயகத்தீசரால்
வாரறிந்துடலானசுத்தமு மாச்சுதாண்டேயவர்களால்
மாயமாஞ் செகமாய்வலர் வாரிதியினாற்பிறவியே. (387)

வேறு - கட்டளைக் கலிப்பா

பிறவிசுக்கில சுரோணிதமிரண்டுமே
பிரபல்லிய முவற்காடது காடெலாம்
மறலியேது மதிர வியாச்சுது
ளாச்சுதுவிந்து நாதமறிந்தபேர்

ஆவின்கண்ணே விழிப்பார்வையால்
ஆண்டேசற்றும் அறிவிப்பதாகையால்
இரவிசூழுமதி வளர்சாரமே
என்னவைப்புமிதன் பிறப்பாண்டையே. (388)

ஏனமாங் கரிமாவுஞ்சீனமொடு
எய்துமொட்டக மத்தகமாதலாற்
பானமாமமுரியெனுங் கங்கைதான்
பாரிஷபமீனமெனக் கூறுவார்
கானறுங்கம் பியுப்பதின் சுண்ணமுங்
கலந்துமே பொடிப்பாண்டந் தனிலிட்டு
வானமுமூடி சீலைமண்ணேழிடு
வைத்துதன் ரவிபாரு முகமதே. (389)

க்ஷாரத்திற் கெரிப்புபாகம்

வைத்துமே யடுப்பேத்தி யனற்பட
வாட்டிடு மந்தப்பாண்ட மெடுத்துப்பின்
சுத்தமேவிச் சிலாகையுடனதுந் தோண்டிப்
பள்ளமதி விட்டிடுமனற்
சத்துமேலும் புகையும் வீசாமலுந்தாளி
யொன்றுவாய்த் தானகலாமலுங்
கைத்திடு மவுரியெனு மூலமே
கண்டிடித்துக் கனற்குழி மூடுமே. (390)

கருவங்கம் நீறிச்சுண்ணமாமெனல் - வேறு

ஊனுடலுமண்டலம் நாலொன்றுவேளை
யுபாயமெனும் புகையது வுமோடாமற்றான்
வேணுமணலாரியெடு க்ஷாரந்தானும்
வெகுபுதுமை யுலகமதில் விள்ளார்சித்தர்
காணுமதிற் சரிகாரம்பட்டால் வெள்ளைக்கடை
சரக்கு வறுபத்து நாலுங்கொல்லும்
பூணும் கருவங்கம் நீறிப்போகும்
பூட்டுமுன்னே காரியஞ் சுண்ணமாமே. (391)

துரிசு வைப்பு

சுண்ணமாந்துரிசானதும் வைப்பரியச்
சோரா வென்பதிணங் கனுமேசரி
மன்னமே தயிர்நிம்பப் பழரச
மதுசரி செம்பதுவிடைக் கூட்டியு

மின்னங் தேசியமுரிபடிசரி
யிரவி செப்புயிவையதின் பாத்திரம்
வன்ன மாங்கமுதையிட லத்திகாண்
மாரிப்பாத்திர மருவிடுமுன்னமே
முன்னமேயிது பாத்திரமுள்ளுணர்
மூட்டிடும் வகையாகப் பதமெனிற்
சொன்னதோர் மூடிசெப்பது மேருவாற்
சூட்டிடுமறு பண்டமதற்குளே
வின்னம் வராமலு மேல்மூடிச்சட்டியு
மேலுமூடி மண்சீலை யேமுதவியே
முன்னமே யறுதிங்கட் பூமிக்குள்ளே
மிவ்வித மிப்பொரு ளாண்டையே. (392)

அறுபத்துநாலுமிதால் நீத்தினமாமெனல் வேறு தரழிசை

ஆனைக்கல்லு மிதற்குட்சேர்த்து
அண்டமண்டல மூன்றுமே
அறுபத்துநாலு மிதற்குள் நீத்தினம்
அண்ட பிண்டமுங் கட்டினங்
கானகந்தனி லூசரந்தனைக்
கண்டிரோ வதிற்கம்பிதான்
களர்நிலந்தனி லுயர்ந்ததுமூவற்
காடுகாடு கல்லுப்புகாண்
தானறிந்தது மதிவிளங்கிய
தாபரங்க ளீரேழுமே
சாரகார மிரண்டு மொன்றுபாற்
தாரணி தனிற் காண்கினுஞ்
சேனைகாவல ரானை தன்படை
சிங்கம் யாளி மிருகங்களுஞ்
செகதலம் புகழ்பர பல்யத்தொடு
தேசாதிபதி யாண்டையே. (393)

தூரிசி வர்ணம்

தேசதேச முலாவியே நதி
தீர்த்தமாடிடு வோர்சிலர்
செப்பொணா துரிசான வப்பிது
செய்தியென்ன முபபாலுடன்
வாசஞ்செய் துலகாசைக் கொண்டுணர்
வையத்தோர் சுடுவாதிகள்
வனவாசஞ் செய்கிலு மென்ன காண்குறை
வாரபோது மறிப்பீரோ

தாசனாய்ச் செகமீதிலும் புவி
சார்ந்துமேயவர் சுத்தியுஞ்
சரக்கான துய்ய வெண்மேனி நீலமுஞ்
சாற்றினோஞ் செழுவண்மைகாண்
ஆசாபாச மகற்றியேயரு
ளமுரி சாரணைச் செய்கையால்
ஆண்டு தென்றிசைப் பூண்டுமாரிடு
மப்புவுப்பு மொன்றாகுமே. (394)

அப்பும் உப்புமறிந்தவர்கள்

அப்புமுப்பு மறிந்தபேர் சிவ
ராஜயோக மெய்ஞ்ஞானிகள்
அவனிமீதிற் பிராணாய சூக்ஷ
ம[illegible]ந்துவாசி கொண்டுதினாற்
சுப்[illegible]ஞ் செழுசூரியன் நிறஞ்
சோதியுப் பன்னை நீரினாற்
சுண்ணமாம் புளிகாரசாரமுந்
துரியா மெனுஞ் சூட்டினாற்
[illegible]கப்பொழிந் துவருப்பு கட்டினாற்
காலனே துடலமுரிதான்
கல்லுப் பாமிவை கொல்லுமே
யறுபத்துநாலுக்கு மித்திரம்
உப்பறிந் தறியா தலைந்தனர்
உப்புமப்பு மொன்றானதால்
யோகவா னிவராஜ யோகியென்
றோதினார் பெரியோர்களே. (395)

சீனபாஷாண வைப்பு

வண்மை சீனப்பாஷாண நேர்மைதான்
வாதிக ளறிவார்களோ
வழலைக ண்டுணர்வைப் பரிந்தனர்
வையமீதினிற் சித்தர்தா
னுண்மை யானதோர் செப்புபாத்திர
முறுதி யானதோர் வட்டமா
யுற்பனத்துடன் செய்து மேவியு
முப்புடன் வெடிவங்கமுந்
தண்மையாகிய சீனங்காலது
சரத்து வெண்கரு பண்ணிநெய்த்
தடையில்லாதெரி கமலத்தீதனிற்
சருக்கிடாப் பதஞ்சாத்தினா

லுண்மையாமிது வுறுதியாமெனில்
 லோகோ சீனப்பாஷாணமு
முற்றுப்பார் வெளிர் படிகமா மெனினும்
 உசிதமா மிது வைப்பிதே. (396)

முப்பில்லாதயினம் உப்பில்லாதமய மேதினியி லொன்றில்லையெனல் - வேறு

வைப்பிலாதருமைச் செம்புசுத்தியில்
 மகிமை பாரு வலு வேகமாம்
வங்கமாவதுவுங் கட்டுங் வெட்டையெனில்
 வாலையாகும் ரசங்கட்டிடுங்
கைப்பிலாது வுவற் கசிவுமாறிவிடில்
 கம்பிபோ லதுவுங் கட்டிடுங்
கண்டபோது வறுபத்து நாலுசரக்
 கானதும் வலுவேகமா
முப்பிலா தினமும் வுப்பிலாதமய
 மொன்று மேதினியி லில்லைபார்
மூலியான வனமூலி வேகமது
 மூவுலகிலு முண்டாகையாற்
செப்புநாடு தனிலே மிகுந்தவனந்
 தேசநாடு வயற்சூழ்கினுஞ்
சென்னி தோரும்வளர்கற்ப மூலிகையுஞ்
 சித்துமாடுவன மூலியே. (397)

இதாற்சூதமுனக் கடிமையெனல்

மூலிதன்னிலை கட்காய் கட்பூடதுவு
 மூலமானதொரு வித்தது
முன்னமே மதிலென்னபோது பொருண்
 முன்னெதிற்க வருமே வலாய்ச்
சோலியேது கொடிவேலையேது ரசசூதம்
 வந்துவுனக் கடிமையாஞ்
சொன்னபோதில் நொடியன்னையின்பதம்
 தோத்திரம் செய்துதொழுவர்காண்
வாலிபத்தில் மதி வேறுபட்டு மன
 தாசைவிட்டு வலுவேறினால்
வாதசித்தி வருமாது மையல்விட
 வாசிசித்தி வருமாதலால்
மேலியென்ன திரைப்பாதையென்ன
 மறப்பேதுவிட்ட குறையெய்தினால்
வேதமேது செகநாத மொன்றொழிய
 வேறு பாரதனி லுள்ளதோ. (398)

கைபாகஞ் செய்பாகஞ் குருவனுக்கிரகம் புடபாக மறியாவிடில் யாதுஞ் சித்தியாகாவாம்

பாகம்வேணுங் குருபாதம் வேணும்புட
பரிகைக்ஷவேணு மருந்திடையுமே
பார்வைவேணு மனுபோகம் வேணும்
பழுதென்று மென்றறியப் பலிதமா
பாகம்வேணு மனுக்கிரகம்வேணு
மருந்தறிய தூம்ப்ரமொடு கெவுனமா
மண்டரண்ட வரைப் பாயவுங் குளிகை
யதீத செந்தூரமும் வேணுமாம்
வேகமான வதி பற்பமு மெழுகு
வேதைகோடி வெகுவிதமது
மேவற் செய்யுந் தங்க பூபதிகளொடு
விசிதமான களங்கானதுந்
தோக்க வாலை வடிவம்பிகை யமுர்த
சூக்ஷமாய்த் தொழில் கட்சூட்டினற்
சொல்லு மேவுதலும் வாதசூக்ஷ மதுஞ்
சொன்னவா ரறியத் தோன்றுமே. (399)

கொங்கணர் சிவயோக அருள் பெற்றது

தோணலாகும் பதினெண்பேர் பரீகைக்ஷயதில்
சூக்ஷநூல் கவியாய்க் கொங்கணர்
சூதறிந்து வொரு னூறும்பாடி
சிவயோக முத்தியருட் பெற்றனர்
வேணதுண்டு ரசவேதைகோடி
வெகுபாதையான பரிதூம்பர
மேவினாற் சில நூலோதினாற் பெரியோர்
வேதநூல்கட் பலவாறதாய்க்
காணுமெண்ணூறு மொழியாய்ந்துபாடுபடக்
காருமாண்டு பனிரெண்டெனிற்
காலகாலம் வெகுகாட்சி கண்டுவிடக்
காரணப்படி முடியுமாய்ப்
பூணுமே கௌரிவைப்பு தானறியப்
பூநீருப்புக் கருவங்கமும்
பூட்டிடும் படிகங் கூர்மக் கிருதமொடு
பொன்னதாகு மரிதாரமே. (400)

சூதரசவேதை

தாரமுட்டி செழுந்தாம் பிரத்தினிடை
தாளிசட்டிதனி லூட்டியுந்
தானெரித்து தணலோ பதத்திலது
தானுருகிப் பதமானதாற்

சோரவுமருவி நீரதாகிமதஞ்
    சொரியுமே கௌரிவைப்பதுஞ்
சொன்ன சொற் பிசகா சூட்டினோங் குருவின்
    சூக்ஷுமாகத் திருவள்ளுவன்
காரமாகுமதின வேகமாகுங்கரு
    வானதாகுங் கருவங்கமாற்
காணலாகும் வெகு பேதமா மமுரி
    காட்டுஞ் சூதரச வேதையாத்
தூரமேது வுலகோர் விளங்குமுறை
    சிக்கியா லெய்து மென்பர்காண்
சொற்புரட்டுமிலை கைப்புரட்டுமிலைத்
    தொடுகுறி முதலுந் தோன்றுமே. (401)

தொட்டி பாஷாண வைப்பு

குறியறிய யினிமொழிய தென்னவிதங்
    கூறுந் தொட்டியிட வைப்பதுங்
குவலயந்தனிலு மரிதறிது முரைக்
    கோதையே யறியக் கடினமாம்
நெறியறிவ தெனிற் சீனமாவதுவும்
    நிலைபெரு மதீத காரமும்
நேர்மையாகும் பராசத்தி நாதமெனில்
    நிகழ்த்திடும் வெடிதனுப்பதும்
பாரிதற்கு நிகரேது வைப்புமுறைப்
    பகருஞ் சூதரசங் கால்வீதம்
பரவிடு மினிய நாக மாவதுவும்
    பாரீர் காந்தமெனி லவ்வித
மறியும் வெண்கருவினாலு மாட்டியபின்
    அதீத சட்டியினில் தாக்கியே
அடவுமேலொரு தன்சட்டி மூடியெழு
    வதீத மண்சீலையுஞ் செய்திடே. (402)

காரசாரம் பூரமீதெனல்

எரியும்போது தணற் கமல வன்னியது
    வியைவெளின் மெதுவுமாகிடு
மெரியுமே யெரித லாறிடும் வருத
    லினிய ஜாமமிரு கூறெனிற்
பெரிய தொட்டியதும் பாகமாய் வருதற்
    பாருபாரும் பாஷாணமும்
பண்பிதற்கு நிகர்ப் பாரிலேதுபுகழப்
    பதினெண் பேர்களு மறைத்தனர்

துரியமாது பராசத்தி நாதமிது
சொல்வா ரில்லைப் புவிமீதினில்
தொண்டுசெய்து காரசாரமா மெனிலுஞ்
சூட்டினார்கட் பூரமா மெனுஞ்
சிறியவீர மொடுதார மென்பதினிற்
றேசமா மதனிற் செப்புவார்
திவ்வியமான ரசபாஷாண மெனிலும்
தேடிடாமலுந் தெளிந்தனர்களே. (403)

குருவேதை

தெளிவில்லா தருமை கூரறிபர
தேவியம்பிகையின் கிருபையால்
தீக்ஷைபத்துந் தெளிந்தான பின்புரசச்
செய்கை வைப்பறியலா மெனில்
அளவிலா கௌரியானதற்கு இன
மாகுங் கெந்திதனைச் சேர்த்திடில்
ஆவதுமரிது வாதம் வேறுபடு
மானதுந் தவறிப் போய்விடும்
அழிவதற்குயின மாய்கையாற் சடலம்
பாழுபாழு பெரும் பாழதாம்
பானவாசி பரவெளியும் விட்டு
பரலோக மேகி படுவார்கள்தான்
களியுங் கற்பமிலாக் காயமேகிவிடுங்
காமிதங் களினிற் கருதினோர்
கனகமேது ரசகுளிகையேது கரு
காண்கிலார்கட் குருவேதையே. (404)

கற்பமுண்டவர்கட்கு காயசித்தியெனல்

கற்ப சாதனையில் விதியிருந்த பலன்
காயசித்தி வலுவாகிடுங்
காயமு மரணக்கால மெய்துவிடற்
கண்டுங் காணார் தசதீக்ஷையும்
அற்ப மூடரனு போகஞ் காணரிது
ஆசைகொண்டு பரியாசமாய்
அதித நூல்களறி லான சித்தியினில்
ஆய்ந்துஆய்ந்து அலைத்தனர்கள்தான்
சொற்பொருளறி யாகற்பமுந்தவர்தல்
துரியமாவ்துவுஞ் தவறிடில்
துன்பமெய்தும் ப[illegible]ர்யமூலமதுஞ்
சுத்தப் பாழதுவு மாகிவிடும்

உற்பவித்த கருவிந்து நாதபிறை
யோகமான திசைலக்கின
முன்னிதங்களில் வாழ்வுதான்பிறவி
யோகயோகி ராஜபுனிதானே. (405)

அறிவழிந்தலர்

பிறவிதன் கருவியமைப்பது மரிது
பின்னமேது பிசகாதுகாண்
பிராணசூக்ஷ மெனிலசைதற் போற்பிரபைப்
பேதமான வழிகண்டனர்
பிறவியாய்க் கெவுனர் வாசியோக முணர்
பூதமைந்து மொழிவழியதாம்
போகுமோ வருதல் போலவுமுறவு
போதலாற் புகழு மாதலால்
கருவிபாசந்துடராது தந்தைவழி
காட்டினாலுங் கருக்காண்பதோ
கமக்குரோத லோபமத மோக மாச்சர்யங்
கனதிடும்பை வழிகருதினால்
திரவியக்கடலீரேழுஞ் சூழுமதி
தேசந்தோறும் புவிவாரிசூழ்த்
திங்களுங்கதிருங் கார்மேகம்பொழியுந்
தென்பொதிகை யகத்தீசனே. (406)

நெல்லிக்காய் கெந்தி வைப்பு

ஈசனாலெனது வாசமும் பெரிது
யெய்துங் காட்சியிது புதுமைதான்
இலகுங் கெந்தியெனும் வைப்பின் நேர்மையி
னிதாகுங்காண் கருதியெய்தலால்
வாசமாகிடுதலே சரக்குகளும்
ராஜயோகிகளும் புகழுவார்
அடிகனத்த செழும் பாண்டமாமதனில்
ராசிசேரதிலு மூட்டியும்
வீசுமேனியுவரான வுப்புவதில்
வேணதுண்டு வுலகங்களில்
விசிதமோர்படியு மூலிகைரசமும்
விட்டுபின்பு வெடியுப்பதும்
பாஷையானதொரு சீனமாமதுவும்
பகருமேதி யிடத்தயிரதும்
படிபத மிவையுந் தாக்கி பாண்டமதிற்
பாச்சிடுமேரண் டவித்ததே. (407)

சூதஞ்சேர்த்துக் குளிகையாகும் பாகமறிய

வித்ததீத விரைவிட்டுக் கிண்டியினி
மேலுமாவதும் விளம்பிடில்
வேறுகூறுமிலாப் பாண்டமானதினில்
மேதினிதனிலும் வைத்துப்பார்
கைத்துப்பாருந்திரு மேனிச்சாரதுவுங்
கண்டுபார்க்கத் தெளிந்தேவிடும்
கருதுஞ்சூதமொரு பலமதாகுமது
காணீர்ச்சாறுதனில் தாக்கிடுஞ்
சுத்தமான புவிதன்னிலும் புடமே
சூட்டிடும் புதையமண்டலஞ்
சொர்ணகெந்தி வளரமுர்தமாகும் வெகு
சூக்ஷங் கண்டிலர் கள்காணிடார்
வெத்தி யெய்துஞ் சூதசத்துவென
மேலுமாமதனை வாங்கிடும்
மேவிசத்துயினஞ் சேர்த்துமே குளிகை
விசிதமாகவுமே செய்திடே. (408)

கெந்தகச் சத்து

கெந்தகத்தினிட சத்து நாலு ரசங்
கெட்டியாகும் வலுவேகமாய்க்
கேள்வியாலும் ரசவற்க மூலிகையில்
கெவுனமாடுங் கனகட்டதாம்
அந்தமானவிதம் ஆரறிவதெனும்
அருமையாகு மிது வருமைகாண்
ஆகிலுங் கனக பரிச யேமமெனு
மனுபவிப்பவர் களறிவர்காண்
சுந்திரர்க்குமிது சொன்னோ மிம்முறையைச்
சூக்ஷங் கண்டறிவ தெவர்களே
சூட்டினோ மிது நூலெண்ணூறு சொச்சமெனில
தொகுதி வேதமறைநீதிகாண்
கந்தசோலை மலர்வாசம் வீசும்புவி
களர்நிலத்தி லுவர்கண்டதால்
காணுஞ்சுத்திதிசைப் பத்துமானவிதங்
கண்டவற் கருமை யில்லையே. (409)

அடையாளம் கண்டு எடுப்பது

கொக்கிருந்த வித பாவனைக் குறிகள்
குப்பற் கும்பலது கொண்டுதான்
கோள வட்டமொடு சூழ்ந்து பூநீரது
கொந்தித்தே கோஜபீஜமா

அக்குண மறித லானவுப்பெனினும்
　　அருளினார்கள் பெரியோர்களும்
அந்தவுப்புக் கடுவேது காணுமலை
　　கடலுக்குள் ளினியக்ஷாரமாய்ப்
பக்கம்பார்த்து வெகுகவனமாக ஒரு
　　பாரில் தன்னில் தசதீக்ஷையும்
பத்துஞ்சென்று கடல்வாரி வெண்களறு
　　பன்மையான செயநீரிலும்
இக்கருத்தறிய வேணபேரலைவர்
　　நேரும் நேரறியநாட்செலும்
நீதியாகு மனுபோகி சொல்லபுவி
　　நேர்மை கண்டறிய லாகுமே. (410)

வீரவைப்பு

என்ன காரண மென்றே துவாறறிய
　　யெய் துஞ் சவ்வீரத்தின் வைப்புமே
என்னவீ ரமது வென்ன சைகையறி
　　யேதுபாக மெனுமவ்விதம்
மன்னர் மண்டலிகர் மகிழும் பூபதிகள்
　　வைப்பிற் செந்தூரமும் பற்பமாம்
மகபதியெனினும் பேருபெற்றவர்கள்
　　மகிதலத்தினிலும் வாழ்பவர்
அன்னையம்பிகையின் பாதபங்கயமும்
　　அடிபணிந்து வனுக்கிரகமாய்
அற்புதங்களினி லற்சனைப்புரியும்
　　அனுபோகந்தனையே யருளிடிற்
சின்னமேது வெடியுப்பு நாலுயிடைக்
　　காச்சல்நாலு தெளிவானதாய்ச்
சேரும் வெள்ளறுகு வுருவிவேளைசிறு
　　வெள்ளுடன் கதலிமூலமே. (411)

சேர்க்குஞ்சரக்கு மெரிப்பு பாகமறிய

மூலமான சமன் மூலியுப்பதுவு
　　முன்சொன்ன வெடிதனுப்பது
முடிவதாகுமிவைக் கூட்டிப்பக்குவமா
　　யூட்டுஞ் சூதமிரு பலமெனிற்
சாலவுமிதனைச் சட்டிக்குள்ளடியிற்
　　றாபியுமவையே தாக்கிடுச்
சரிசமனுடனுங்கெந்தி-கூட்டிவிடுஞ்
　　சந்துமண் சீலையுமேழெனில்

வாலையானவடுப் பேத்திவன்னியெரி
வஸ்துவாகு மறுஜாமமும்
வகையதாகதணல் முன்புதானெரிவு
வசனிமேலது சட்டியுமெனற்
கோலமானசரக்காதி தங்கடெனிற்
குப்பியானதுவி லூட்டியுங்
கொண்டுமேற் பிரடைமூடி வெண்கருவி
நாலுளுந்ததனிற் சீலையே. (412)

இரண்டாவது மடக்கு

சீலைசெய்துவிடு சட்டிமீதினிலுஞ்
செய்கை வைத்திடுமே சட்டியுள்
தெளிவதாகிவிடுங் கற்பூரத்தினிலைத்
தியக்கமேதினி வெத்திலைரசம்
வேலையும் விரவிபூசிமேலும்பத
மேலுஞ்சட்டி மூடிசீலையேழ்
விசிதடுப்பினள வாகவைத்து கனல்
வீசிடுங்கமலத் தீயெனி
லோலமாமதுவுநாலு ஜாமமது
வுகமையாகவுமே தணலெரி
யுருதியாகிலென வாலுகையதனி
லோர்தினமிரவிலு சிதமாய்க்
காலைசென்று மறுகாலை பின்புவெனில்
வாலைத் தீயெனவும் வீசிடிற்
காரணப்படியே தேங்கு யெண்ணிரமுங்
கட்டுங்கட்டும் பச்சைப்பூரமே. (413)

மூன்றாவது மடக்கு

பூரபச்சைப் பங்களாப் பச்சையெனிற்
புரவியானதுவே ரூபமாய்ப்
புகழான வாருகருவான சூக்ஷமிது
புகட்டியானுந் திருவள்ளுவர்
ஆனபார வெடியுப்பு க்ஷாரமுடன்
அதீதநாபியொடு பாரையும்
அதனுட் சேருஞ்சமன் வீரமந்திடையும்
ஆனபின்பதனைப் பொடியதாய்
மாரிகுப்பிதனில் வைத்து சீலையது
மாவில் வெண்கரு விட்டாட்டியும்
வச்சிரமண்ணது செய்தேழும் வன்னியதில்
வகையதாக வடுப்பாமதிற்

தாருமாறுவிலாவாறு ஜாமமெரி
சட்டியாறியபின் குப்பியைத்
தானுடைத்துயிரு பாகமாகியிவைத்
தாக்கிடுங் கலுவத் தூளதே. (414)

நான்காவது மடக்கு

தூளதாகியபின் குப்பிதனிலிடுத்
தொழுமுன்படியே சீலைசெய்
தொழுதுவாலை பதமே பணிந்துசிவ
தோத்திரந்தனையே செய்துபின்
மூளவுங் கனலுமெட்டு ஜாமமது
முடுகியே தணலு மூட்டிடு
முனையதாகப் பதமாகவே யெரிதன்
முன்பு பாகமெனும் வருதலால்
ஆளுமே யனலுமாறிப் பின்புபத
மந்தக்குப்பி யுடைத்தங்ஙனே
அறியுமேலதீத சவ்வீரத்தினிட
ஆண்மை யிதுவதீதமாம்
பாருபாருமறு பத்துநாலு
சரக்கான வீதமதும் நீறிடும்
பகிரண்டவண்ட நவகண்ட கொள்கையும்
பத்தியே யெரியும் பாருமே. (415)

இதாற்கோடி வித்தையாமெனல் - வேறு

சவ்வீர வைப்பதனை சாற்றிடவுஞ் சங்கையில்லா
தவ்விதமாயானளித்தேன் கனகபரிவேதையெனில்
அவ்விதியாற் கோடிவித்தை மாறிவிடு மாமாகிற்
பலவிதமா யானருளும் பாரையுப்பு நாதமதே. (416)

இதுமூடற் கெய்யாதெனல் - வேறு

நாதாந்த வங்கத்திற் பச்சையெனுமது நாடினதாற்
பேதானபேதமெனில் வெள்ளூரமென்றும் பேசுவர்காண்
சூதானசூதந்தொட்டி யுருக்கிடுந் தொந்தமெனும்
வேதாந்த வைப்பு மூடர்க்கெய்தாது விளங்கறிதே. (417)

ரசசூதவித்தை யீதெனல் - வேறு

விளங்குயிந்த வீரவைப்பு
மேதினியி லேயறிது
களங்கம் வைத்துச் சொல்லவில்லைக்
காரணத்தால் யானுரைத்தேன்

புளங்குமிந்த வைப்பறிந்தாற்
புவியில்தன வேதையெய்தும்
துலங்கும்ரசச் சூதவித்தைச்
சொன்னமுறை யுண்மையிதே. (418)

ஜாதிலிங்க வைப்பு

ஜாதிலிங்க வைப்பதனைத் தானருளவே கருதான்
வாதியெனும் பேர்படைத்தால் வைத்தியற்குவே வேணுமின்னூல்
ஆதியென்ற வங்கமொன்று வதித ரசமாகும் ரெண்டு
சோதியென்ற வங்கமதிற் சொற்குருத்தான் பாதியிட்டே. (419)

கட்டளைக் கலித்துறை

சேர்த்திடுஞ்சற்குருச் சீனமெனுமிவைச் செய்கையெனிற்
பார்த்திடுங் குப்பிதனிலிட்டு மேல்மூடிப் பாகமதாய்க்
கார்த்திடுஞ் சட்டிக்குட் குப்பிதனையிட்டுக் கவசமதும்
வேர்த்திடுமேற்கட்டிச் சீலைமண்ணேழும் விரும்பிடுமே. (420)

விரும்பிடுமே யடுப்பாவதின்மேற்சட்டி வெய்திடினுந்
திரும்புங் கனற்கொண்டு முச்சாமந்தீயுந் திருத்தமதாய்
துரும்புந் தூணாகுந் தொந்தங்கட் கோடித் தூம்பரமாஞ்
சுருங்கும் வன்னிபட ஜாதிலிங்கமதுஞ் சோதித்திடே. (421)

லிங்கம்பதங்கித்து குப்பியில் நிற்கும் பாகம்

கொண்டெடுத்தாறி குப்பியெடுத்
துடை குப்பிகழுத்
தண்டமதாறிச் சுத்திலும்
கட்டிடு மருணனைப்போற்
கண்டெடும்வைப்புக் கருக்கண்டுச்
செய்கைக் கருதினதால்
தொண்டுசெய் சற்குருப்
பாதாரவிந்தந் தொழுதிடுமே. (422)

நிலையினின்று தொழ வேண்டுமெனல்

தொழுதிடுமுப்பாழது கடல்தாண்டித் துரியமதிற்
பழுதுவராமல் வாசிகொண்டுதிப் பழக்கமதாய்ப்
பொழுதும் ரவியொளிப் பிரணவவீடும் புகழ்விஜய
மெழுதுமீரெட்டுக்கலை தாண்டி வன்னியை விட்டிடுமே. (423)

மாய்கையை நீக்கி - வேறு

வாதமெனும்பேதம் வருமரிது யாவதினுங்
காதவளி யோடிவிடுங் காண்கிலார் - வாதமிது
மாய்கைமயல்தாண்டி மையலதையறுத்துக்
காயகற்ப முண்டிடுவோர்க்காம். (424)

வேறு

பெண்ணாசை விட்டும்
பொருளாசைநீக்கிப் பேரின்பத்தில்
மண்ணாசைவிட்டு மகிதலம்
விட்டு வரும்வினைவிட்டு
உண்ணாசைக் கொண்டு
யோகத்திருப்பவர்க் கேதுகுறை
கண்ணாளுஞ் சூக்ஷச்
சுழிமுனைகாணக் கற்பசித்தே. (425)

சூக்ஷமரூப நிலையறிவது

பெண்ணாலழியும் பிராணனழியும் பொருளழியும்
வண்ணான்பிறவி யுவர்தானழியும் வளர்பிறைபோல்
சொன்னா ரகத்தியர் சூக்ஷச்சுடர்மணி சுரூபமதில்
விண்ணாட்டம் பாருஞ் சோதிப்பிரசகாச வின்பமதே. (426)

குருவை யடுத்தால்

இன்பமதுதாண்டி மெய்விளங்குங் கண்டத்தில்
அன்பனெனும் வாசிகொண்டு ஆராய்ந்தால் - இன்பமது
மூலத்திருந்துணர்ந்தால் முப்பாழுஞ் சுட்டுவிடக்
காலனில்லைச் சற்குருவாற் காண். (427)

லிங்கவைப்பு யோகிக்கெய்தும்

இப்பிறவியிங்கிலிக மெய்தும்படியான் குருவைத்
தப்பிதமில்லாமல் முறை தவறிடாதிப்பிறவி
யோகியிவர்செய்வா ருலகமதி லுள்ளவர்கள்
அயோகி செய்வதில்லை யெனுமாம். (428)

மிருதார் சிங்கி வைப்பு

செய்கையாலு மிருதாரசிங்கிசெய
வைப்புசொல்லத் திருவள்ளுவன்
சிவயோகியானவர்கட் கற்பதீக்ஷயிலுஞ்
சித்திபெற்றவர்கட் கெய்தலால்

வையமீதிற் பெரியோர்கட் செய்வதெனும்
வாறுகண்டறிய வேணுமால்
மாய்கையேது மறைப்பேது வேறுமிலை
மதிவிதியு மிருந்தாதலால்
ஐயமேது வமைப்பேது நாதமது
வையைந்து பலமுமாமெனில்
அந்தமான வெடிலவண மோர்பலமும்
அதீத சீனமொடு ரெண்டுகாண்
கொயயகாரம் பலங்காலுங் கூட்டியெடு
குகையதனி லிவைதாக்கிடுங்
கூறுமேற் சதிரவட்டு முடிசீலை
கொண்டுயேழது மண்செய்திடே. (429)

கண்டவர்கட்கு கலி நீங்கி விடுமெனல்

சீலைசெய்து சிரமுடியும் வலுவெனுஞ்
செய்ததோர் குகைதன் குகையினுள்
திறமதாய் மறுபின் குகையில்வைத்து
சிறுகம்பியா லிறுகி முடிகிடில்
வலியதோர் வலுவுநாடி பின்னிசுவு
வாங்கிமுன்னிசுவும் பின்ன்ல்போல்
வந்நியான தளிலுன்னிதக் கருவும்
வாரி தன்னிடு வீரைம்பலஞ்
செல்வபூரணி கிருபாகரத்தினருட்
ஜெகத்ரக்ஷகியின் பதமலர்
சித்திமுத்திபெற அட்டகர்மதிசைத்
தீக்ஷைபத்து நடனமிடும்
கல்லுமேருகிரி பர்வதங்களொடு
காந்திகாந்தி படுசூரணங்
கனகரத்தினம் நவரத்தின மென்பதுவுங்
கண்டபோது கலி நீங்குமே. (430)

மெய்ஞ்ஞானிகளைக் காண்பதரிது

கலியுகத்திலருண் முத்திபெற்றவர்கட்
காணலாகுமொரு கோடியில்
கண்டெடுக்கச் சிவயோகஞானி
கலிநீங்கினோர் களரிதரிதுகாண்
சலுதிஞானநெறிக் கருவியாய்ந்துமதி
தனையை நம்பி விருதாவிலும்
சடைவளர்த்து முடிநிகம் வளர்த்துமே
சந்நியாசியாகி யுலகேழிளில்

கலியசற்குருதன் கிருபையாகிடுமுத்
தளமதாகத் திருநீறுகாண்
கவுனசாதனை கஞலகத்தோருந்திரிந்
தாடுவார்கள்நதி தீர்த்தமுங்
குலையுங் குக்கவதி னாண்மை வாசமதுங்
குறியறிந்திடுவீர் ஞானிகாள்
கூறுகாணுலகில் வாறுபோன்றிடுவர்
குவலயந்தனிலு மாண்டையே. (431)

வேறு

முருதார சிங்கியெனில் முன்னோர்கட் சூக்ஷமிது
அரிதரிது சிங்கிவைப்பு ஆரறியப்போரார்காண்
விருதாவிலே யலைந்து மேதினியெல்லாஞ்சுழன்று
பரியாசங் கொண்டுமிகப் பாரிலுமலைந்தனரே. (432)

முப்புவென்றா லுப்புவித்தை மூடர்களேயுங்கள் புத்தி
அப்புமுப்புங்கண்டறியா யறிவறியாதேயலைந் தீர்
செப்பரியசித்தர்கள் நூல் செயலறியா தென்னவித
முப்பூவுஞ் சிங்கிவைப்பு வெண்ணத்துலை யாதென்றே. (433)

எண்ணத்துலையாதறியு மிப்புவியிலே பெரியோர்
பன்னுமறையோர் விளங்கும் பழங்கதையென்றே யுரைப்பார்
வண்ணக் கருவங்கமென்பார் மாநிலத்தோர் நிமிளையென்பார்
மண்ணுலகத்தோ ருரைக்கும் வகைதனைச் சொல்வோமே. (434)

பூரவைப்பு - வேறு

பூரவைப் பதனை யானுரைப்பதினிப்
பூதலந்தனிலும் புண்ணியர்
பொருள்களான கருவாத நேர்மைதனைப்
புகலுமோ மதனைக் கேளுமின்
தேருமித் தொழில்கள் ரவிதன்நாதமொடு
சீரொருப் பலமுஞ் சீனங்கால்
சேரும்வால்மிளகு சீந்திலேலமொடுத்
தெளிவதாய் மிளகுக்காரமுங்
கூறவும்புனுகு கோரோசினை யிவையுங்
கூட்டிடு மிவைதன் கூறதாய்க்
கோலமான கஸ்தூரி குங்குமமுங்
கொண்டு சந்தனத் தயிலமுந்
தூரமாமதுவுந் தாயைக் கொல்லிரசந்
தொந்தமாவதுவுஞ் சரியிடை
தோகைவான் குமரிவேரின் சாருவிடுஞ்
சுத்த பீங்கானதில் விட்.டிடே. (435)

தாயைக்கொல்லி - வாழை

விட்டிடுமதனை மத்தியுமமன
வேகமாகப் பிசைந்தானபின்
வீருஞ்சட்டியதற்குள்ளே பூட்டியபின்
மேலுஞ் சட்டியதற்குள்ளெனும்
நாட்டிடும் பனையினோலைதன் சுருளு
நாட்டி சட்டியதிற் பூட்டியும்
நளினமாகவுமே யோடு மூடியபின்
நன்றுசீலை யெழுமண்ணதுங்
கட்டியுங்கவசம் வலுவதாகவெனிற்
கருதிடுவீரொரு ஜாமமுங்
கானற்பாயதணல் வன்னியிட்டுவனற்
காரணப் படியுமானதாற்
பாட்டினிலு மருண்மடல்கட் போலும்வரும்
பதமதாகவுமே செய்வீராய்ப்
பாரும்பூரமது வேறுகூறிலைபார்
பத்தியாறவுமே வைத்திடே. (436)

இது கோஜபீஜமெனல்

பத்திபாரும் ரசபூர வைப்பிதுகாண்
பாதைபாதை பெரும்பாதைகாண்
பாரில்மாண்பர் பீஜகோஜமென்பதுவும்
பகரும்வீர மெனுமருளுவார்
உத்துப்பார்க்க ஒருகோடி வேதையெனி
லோகசுண்ண முறைகோடிதான்
உருக்கினங்களொரு கோடிசத்துமுறை
உவரசங்கள் முறை கோடிதான்
வித்தையிலதீத வித்தையாகுமிது
விரிவுகோடி பரிகோடிதான்
வேணவேண சரக்கானதோர் முறைகள்
வெகுவிதத்தினிலும் விசிதமாங்
கற்றபேர்களிதை வெளிவிடாதபடிக்
கண்ணிலின் னூல்தனைக் காட்டொணாக்
கருவிதனிலமைத்தோர்கள் விட்டகுறை
காண்கிலீர் புவியின் மனிதரே. (437)

ஞானவெட்டி 1500 காரணக்குரு

புவியில் வாதிகளும் வைப்பு செய்பவர்கள்
பூதலத்திலுவர்க் காட்டினில்
புனலுஞ் சுண்டகதிர் படவுமேரவியும்
புகல்வதேதசை தன்தீக்ஷையில்

புவியிலிந்தவிதம் நீரில்பத்துவிசைப்
 பூட்டியே ரவிதன்முகம்பட
பூநீராருமிது வூசரமிதுகாண்
 பூட்டினார்கட் ஜெயநாதமாய்க்
கவியன் முத்தமிழின் ஞானவெட்டியருள்
 கருதுமா யிரமுமைனூற்
கைவசப்படுதலன்றோ வுண்டுலகில்
 காரணக் குருவின் கிருபையால்
ரவியொண்ணாது தவமெலி யொண்ணாதுவிதி
 தந்தையிந்தவழி ஆண்டையகாண்
ஜாதிபேதமதாசாரம் போலிருகிச்
 சடம்வலுத் துப்பிலமாகுமே. (438)

சாம்பிராணி வைப்பு

சடம்வலுத்திடும் சாம்பிராணி வைப்பதனைச்
 சாந்தினா ரகத் தீசர்தான்
சாம்புவனெனும் பேருபெற்றருமைச்
 சாட்சியாரறிவர் நூல்விதிச்
சடம்வலுத்திடு தலமேற்புவிவரைநீட்
 கேளர்கண் மலையாளமுங்
கீர்த்திகீர்த்தியெனில் துய்யகுங்கிலியந்
 தேசந்தோறும் வளரதிகமாம்
உடல்பிளக்கும் நவநீதமாகுமூல
 காதிதங்களுமே தூபமா
ஓரிலஞ்சுபலங் கொம்பரக்குசமன்
 உற்பகமிதனைப் பாகமாய்ப்
படபடப்புவிலா கல்லுரலதனிற்
 பாச்சிஜாடி அயுக்கம்பினாற்
பதமதாய்ப்பொடியிற் சாம்பிராணிபிசின்
 பாரீர்கண்டு யெடுப்பாகமே. (439)

சேர்த்துருக்கும் பதமறிய

பாரீர்கண்டுஅயச் சட்டிதன்னில்
 பரிவாக ஆவினிடகிருதமும்
பாண்டமாமதனில் தாக்கிமேற்படியும்
 பாகமாய்வருதற் பக்குவம்
மாறி மட்டிப்பிசின் காரமுஞ் சமனாய்
 தருக விப்பொடியைத் தூவியும்
வசமதாகவருமுருகும் பாகுவெனில்
 வச்ரம்போ லொளிவுவருதலால்

ஊரிலாதபொடி யீச்சம்பாய்தனி
லோகோமுன் பதமதாகிடில்
உதிரமும்பசையகிருத நெய்யதனை
யுடனும் பூசியபின் பாகதை
துரிதமாகவதிற்கொண்டு லூட்டியிசைச்
சொற்காலடி யில்சொரியுமுன்
சுடர்களாறிவிடுஞ் சுடும்சுடாதிவையுஞ்
சூக்ஷமாகும் பதங்காண்பீரே. (440)

பூமிப் புடம் வைப்பு

அந்தபாகமிதுவான பின்புவது
பாயில்கட்டி வலுவாகவும்
அகிலமாம் புவிதனில் லமேபுதைய
யரையுமட்டுங் குழித்தோண்டிப்பின்
சொந்தமாகவதில் வைத்துமேற்பலகை
சூட்டிடும் பதனமாகவுஞ்
சொரியுமே மணலுந் தாக்கி மண்டலமுஞ்
சுத்தமாகயெடு பார்வைகாண்
வந்தபேர்கள் மதிசோர்ந்துடன் விழுவர்
வாசமாகிய தோர்வாடைகாண்
மாநிலந்தனிலுமேது விப்புதுமை
மனிதர்வைப்பு மதுக்கதீதமாம்
விந்தைவிந்தையெனிற் கோவிற்சந்நிதிகள்
வீசும்வீசும் பலவாடைதான்
மிகவிசிதமெனுஞ் சாம்ப்ராணியிது
மேவிப்பாருலகி லதீதமே. (441)

சரக்குவைப்பறிந்தவர்கட்குச் சமுசயங்கள் தீர்ந்துவிடுமெனல்

அதீதசுத்தி யிதிலாகுஞ் சீனசரக்
கானவுண்மை யினியறியலா
மனந்தங்கோடி யறுபத்துநாலுசரக்
கருளு நீத்தினமுமாகிடில்
அதீதவாலையு பிராமிநாதமிது
வகையறிந்தவர்க ளவனியில்
வாதிவாதி ரசவாதயோகியெனவ்
வாறுகண்டனர் கண்மெத்தகாண்
அதுயிதுக்கொருத் தனீடுயீடதுவோ
தரணிமீதில் திவகுகோடிகாண்
சரக்குவைப்புமறி யோர்கட்கென்னகுறைச்
சமுசயங்களுமே தீர்ந்திடும்

நிதிகண்மேவிடற் சாம்பிராணிவாடையிது
    நீநினைத்தபடி புகையெனல்
நின்றுமேவிடுதலன் பனானசிவ
    யோகியானவர்கள் செய்வரே. (442)

நாகவைப்பு முறையறிவது

நாகவைப்பு திறமாகயானருள
    நாடியுமுணர நாளில்லை
ராச்சியந்தனிலுஞ் சித்தர்மெச்சிடினும்
    நளினமாகும்மிது நண்பெனப்
பாகமாகுஞ் சரக்காகும்மாதகுறி
    சூதமாவதும் நாகமாம்
பண்பிரண்டுவிதமொன் றெனப்படியும்
    பாருபாரு ரசவாதிகள்
போகமானதிது சூதநாகமொடு
    புகழும்நாலில் வெடியுப்பதும்
புதுமை சூதமெனி லெட்டிலொன்றுவிதம்
    போதமஞ்சள் கருவங்கமும்
ஆகுமாகுமிவை நாகபுத்துடனும்
    அறியுங் குண்டுமணி வித்தது
ஆனைக்கல்லவணமுமி நீராகமெனி
    லாண்டே யாரறிவதே. (443)

ஆனைக்கல்லிதுவு மடவுதன்வகைகள்
    ஆதலாற்கலு வந்தனிலிடு
ஆண்டவெண்கருவிட் டாட்டிமூசையது
    மானதோர் கவசமதற்குமேல்
ஆனநீர்படவும் வெகுகீழ்மேலுடனே
    வன்னியிட்டு குகையூதினால்
சோனைதன்பொழி தல்தெளிவெடுத்துவிடு
    சூக்ஷமாகயிதைச் சாய்த்திடு
சோதிமின்னலொளி வாகுத்துய்யநிறஞ்
    சூட்டினோமிதுகாண்நூகமுங்
கோனறுளிலகும் வேதைகோடி தொழில்
    கூடநின்றுநடனமிடுங்
கூறுஞ்சித்தர்களுஞ் சூதவாதரச
    கோடி தூம்பி ரமிதுவாகுமே. (444)

மடையனென்றும் பெயரெனல்

பரிகைக்ஷ வேதையிது பாடுபாடுவெகு
பாரிலிந்த குகைநீர் யார் செய்வா
பரிசயேமமது தாம் பிரவித்தையெனில்
பாடுபட்டவர் கட்செய்கையாம்
துரிதமாகவே மடையனாவதுவுஞ்
சொல்லும் வைப்பிதனைச் சூட்டியான்
சுத்தமாமிவைதன் வித்தைகோடி தொழிற்
சுகிர்தவானொரு வனாகிலும்
சரசமோடு சரக்கான வாறுகளைச்
சாடிநீத்தினமுஞ் செய்பவற்
சத்தியான சிலவுப்பெனிலுந்
தரணிமீதிலி வையரிதுகாண்
அரசனானயிரு கூறுங்கூடிவிடில்
மடையனென்றது பேர்வசனமா
மதியினுப்பறியவகை தன்கண்டறியு
மறிவுள்ளோர்கட் டெளிந்திடுவீர். (445)

கருவங்கச் சுண்ணஞ் செய்முறை

தெளிவதாகுங் கருவங்கம் பத்துபலஞ்
சேர்த்திடும் வெடிதனுப்பதுந்
திருமேனிதன் ரசமிற் காச்சிடுவதெனுந்
தேரவுமொருமை யொன்றது
களிவதாகுங் கருவங்கமானதுவுங்
கணக்கதாகவொரு பலமெனிற்
கலசமீதிலிலைச் சாருவிட்டுகரு
வங்கமான பொடியதிலிரு
வனியதாகப்பதங் கலசமேல் மூடியும்
வைத்து மண்ணதனாற் சீலையேழ்
மண்டல முழுதுங் கண்டிடும்பருவ
மார்க்கமாகவு மேகவசமாய்ப்
பொளியவுந்தச நாட் சென்றெடுத்துப்புடம்
புகழதாகவுமே கவசமும்
பிரித்தெடுத்து வளமாகவும்பெருமை
பின்னும்யான் புகல்வதாண்டையே. (446)

குருசுவாமி உரைத்தது

பெருமையானதுமுன் துரிசுவாங்கியிரு
பேதமானதொரு வங்கமும்
பின்புபாரதனை யுருக்கிடும் விதமும்
பேதாபேதமிவை யில்லைகாண்

அருமையாகுமது நீட்டிப்பாரதனை
அக்கினியிற்றெளிந் தாடுமாம்
அற்புதமதுவுஞ் சாத்திடுங் குகைத
னாகையாலுங் கருவங்கமுஞ்
சுருவமாகிடுதல் வங்கமானதிவைச்
சுத்தியில் தீதரசிதமாஞ்
சொற்குருமுனியு மருளினாரிவையுஞ்
சுத்தஞான குருசுவாமிதான்
பொருமைவைத்தகத் தீசரென்குருவும்
பொருளருளுமென வோதினாற்
புகழ்பெருமமுர்த ஞானவெட்டிதமிழ்
போற்றியானருளும் புகல்வதே. (447)

நடனவொலி காண

பொருளறிந்து குருமுணர்வறிந்துமதி
புகழறிந்துரவி போற்றிவாட்
பொதிகைமேவுங் குருசுவாமி நாயனருட்
புண்ணியயோக பலபுகழினால்
அருளறிந்துசுழி யிடையின்மேவுகலை
யனுதினம்புரியும் வாசியா
லவ்வுமுவ்வுமெனும் விநாடியூதிவிடு
மசைவிலாதபடி தாரையிற்
சுருள்தெரிந்துகனற் பொரியுங்கும்பிதனிற்
சுடர்கள் வீசகலையூதினாற்
சுழலும் பம்பரமும் நடனதாளமது
துந்துதிந்தி மிந்திமிதனம்
மிருளகன்றுவொளி மின்னற்சோதியிரு
விழிதுலங்கவுமே ரேசியு
மெம்பிராணிலகுங் கும்பகத்திலிரு
யிடர்களொன்று மினியில்லையே. (448)

இடர்களொன்று மினியாவதொன்றறிய
இன்னூலெண்ணூறு தமிழ்சூத்திர
மிலகும்சொச்ச நவரத்தினகோர்வைசர
மிவ்வுலகி லெவரருளுவார்
தூர்கஜேது பரிபாஷையேது சுய
மாகும்வுப்பு வுவராலெய்துந்
துய்யவெண்மதி யுப்பானசந்திரகலை
சோடசம்பதினா ராகுமாங்
களர்நிலத்திலுவற் பூடுபூவெனவுங்
காடுதோரு மலைநாட்டிலும்

காந்திதன்னொளிவு கூறிரண்டுவிதக்
கல்லிலும் வயிரக்கல்மதம்
படர்நிலத்திற் சிவசக்தியுப்பெனினும்
பாரிலுண்டு விந்துநாதமாய்
பார்க்கப்பார்க்கப் பரஞ்சோதி தன்னொளிவு
பனியினால் விளைவதாகுமே. (449)

சுத்த கங்கையான வகை

பூநீர்ச்சத்தியடிநாதம் பூநீரதும்
பூவழலையெனும் புளியதாம்
புவியில்மானிடர்கள் மலசலமெனிலும்
புகலுவாரிவை பூறிடகிலார்
ஊணீர்நாதமது சுத்தகங்கைவழிந்
தோடுமூர்கட் ஜகமுழுதுமாய்
யுகாரமென்றபுவிய காரமென்புனலு
மோகோகோடி பொருட்பெயரதாங்
காணீரோகடலிற் பாரையானதுவுங்
காற்றும் வந்நியு மப்பூவுமாய்க்
கலந்தேபுணர்ந்து வுறவாடியின்பரசக்
காந்திவீசுமொளி காணீரோ
ஞானியான பெரியோர்கள் கண்டுமதி
யான்விளங்கிடினு முப்பெனில்
நாலுமேபொருளு மாலுந்தேடறியா
நாதவிந்துகுரு வாண்டையே. (450)

சுரோணித நாதம்

செப்பொணாதுகுரு சுத்தகங்கையெனில்
சூக்ஷம்சூக்ஷம் வெகுநீச்சுதான்
சுரோணிதமெனவும் நாதமானதுவும்
சொன்னார் பண்போர் பெரியார்களும்
வெல்லொணாதுகுரு தந்தைதாயுமிவர்
வேறுள்ளதோ ரன்னைபிதாவுமாய்
மிகவுமேயுலகிலள விலாதவுயிர்
வேணதுண்டு புவிமீதினிற்
புல்லரானவர்கள் வல்லவர்களெனிற்
புகலவுமுலகிற் பேதமாம்
புதுமையாகும் வெகுபிராணசூக்ஷநிலை
புலையர்கண்டறிய வாகுமோ
நில்லொணாதுநினை வோடொணாது
நிலைநிற்கொணாது நெடுநாட்செலும்

நேரொணாது கலைமாறொணாது
நெடுநாளறிவதிலை நெஞ்சமே. (451)

விந்துநீர் சா[illegible]கத்தால்

நெஞ்சமானதுவுஞ் சஞ்சலங்களெ[illegible]ில்
நீஞ்சொணாது மனதேதடா
நிலையதாய்ச்சரிதை மாய்கைவிட்டுவிட
நிலையொணாது யோனியாசையாற்
றன்செயலுமிலைத் தவறிடுந்தவமுந்
தானினைத்தபடி சாருமோ
சாகாக்கா லொழியவிளை வனமிதுகாண்
சற்றும் நேரிடுவதாநிலை
வஞ்சியன்னைய மூர்தங்களுட்டி
வளர்த்தே யெடுத்தவகை மாறுமோ
மாதுமாதுமய லாசைகொண்டு
மரணமடைவதுவும் நிச்சயம்
வெகுஜனங்களெனிற் கஞ்சிதண்ணீரென
வேதநான்மறையு மோதிடும்
வேள்விநீருசெய நீரமுரியெனும்
விந்துநீரெனில் விளம்புவாம். (452)

சுத்த ஜலத்தின் பெயர்களின் விவரம்

கருணையானவறு சுவையிநீருசிறு
நீருவஸ்துவு நீர்ப்பானநீர்
கடல்நீரதனிற்றா பரங்களொடு
கார்பொழிந்திடு மீரேழினி
லருணன்றன்னுதய மதிபொழிந்தருளு
மண்டபிண்ட பகிரண்டமு
மநேகஜெந்துவுயிற் ஜீவனாய்ப்பிறவி
யனுபோகத் தீதவ்வாழ்க்கையாற்
பாரனுமுப்பதனை யறிவினாலறியும்
பாடுபட்டருமைப் பகர்வர்காண்
பகலும்போலிரவு மாகுந்தன்னுளமே
பண்புமாரறிவர் ஞானிகள்
தருணமாம்புருவ காலநாளறிவ
தந்தைவிந்துப லனாதலாற்
றசதீக்ஷையாண்டுவளர் கற்பமுண்டுணர்வர்
தார்புவியிலறிந் துள்ளமே. (453)

விந்துநாதம் காரசாரம் வீட்டிலொன்று நாட்டில் ரெண்டென்பது

வீட்டிலொன்றறிதல் நாட்டில்ரெண்டறிதல்
மேலும்வாரியி லொன்றறிதலால்
வீட்டிலொன்றுவெளி கூட்டில்ரெண்டெனிலு
மேவிளங்குங்கரி யுப்பதாய்
நாட்டிலொன்றுரவி வீட்டிலொன்றுமிவை
நாட்டினார்கட் பதினெண்மரும்
ராஜராஜர்களுமே மயங்கிடுவர்
நாணயப்படுவ ரில்லைகாண்
காட்டிலொன்றுகடல் நீரில்ரெண்டு
கருவீட்டிலொன்று வெளிநாட்டினிற்
கருவியொன்றுயினமறிவு மொன்றுவழி
கானலுண்டுகளர் பூமியில்
மேட்டிலொன்றுபுனல் நாட்டிலொன்று
கனன்வெடியு முண்டுவுவர்வழலைதான்
விந்தநாதமெனிற் காரசாரமெனு
மேலும்பூ நீர்வளராகுமே. (454)

பெருங்காய வைப்பறிய

உருவறிந்து பெருங்காய வைப்பதனை
யுணர்வறிந்து மொழியோதலால்
உலகருக்குஞ்சிவ யோகிகட்குத்தவ
முனிவருக்கும் ரிஷியனைவற்குங்
கருவறிந்து பனவெல்லம் ரெண்டுபலஞ்
சுக்குரெண்டு பலமாதலாற்
கஞ்சநாதமெனுங் குங்கிலீகமது
கருதிடிலொரு தன்பலமதுஞ்
சுரூபமாகுமிவை வெள்ளுள்ளியினிட
சுத்தமாந்தயில மிருபலம்
சூட்டும்வாலுளுவை வித்ததுமெனிலுந்
தூக்குவாயுளுந்தின் மாவதும்
பருவமாகுமறு பலமுமாகுவிதம்
பாருங்கூவிளத்தின் பழமதும்
பாகமெட்டு பலமாவது முழுவிற்
பதமதாகவுமே தாக்[illegible] (455)

தாக்கிடுங்கருங்கல் லுர[illegible]டியிடித்
தானதுமெழுகு [illegible]
தனதுருபமதிற் கடுகதின்றயிலுந்
தாக்கிடுமதையே ஜாடிப்பின்

ஆக்கிடும்பதமில் மேழரோமமது
வதுருபோலதனைத் தூளதாய்
அதனிலும்விடுமை போலுஞ்சாடி
விடுயிதை வழித்துவதின்தோடதிற்
பாக்கிடும் அளவுதான் கொடுத்துபுவி
பாதாளக்குழி நெல்லுமியினிற்
பதியமண்டலமும் பாவித்தேவிடுநீற்
பாரும்பாரும் பண்டதர்கள்தான்
நீக்கிடுமதுநாட் சென்றெடுத்துவிடு
நீட்புவிக்கு மதுவாடைபார்
நின்றுலாவியவிழ் தங்களானதுவில்
நிகழ்த்திடுவீர் வைத்தியர்களே. (456)

இதைச் சிவயோகிச் செய்வாரெனல்

ஆதியானசிவயோகி செய்வதெனில்
அபினிவைப் பதனையானருள்
அதிதஞானயோகாதி யோகமெனில்
அறிவிளங்கிடுத லானதால்
வாதயோகிரச சூதயோகிதவ
மவுனயோகி சிவயோகிகள்
வழலயோகிஜய கற்பயோகிமணி
மந்திரயோகி யிவர்களானதாற்
சோதிஞானபரசு ரூபயோகிதிவ்விய
சுத்தவாசிக்கியான யோகிதான்
சுழினைவாழ்பதியிற் கமலயோகிவளர்த்
துரிதமாபதியில் மருவுவார்
வாதியாகும்வன வாசியோகியிவர்
மதிமலர்ப் புகழுமகிபதி
வாழும்யோகபதி காயசித்திவளர்
மாயசித்தர் பதிமார்க்கமே. (457)

அபினி வைப்பு
வேறு கலிவிருத்தம்

மார்க்கமாமெட்டி யிந்தவித்ததுபலம்
சேர்க்கையாமதிற் றேய்வினில் வைத்திடும்
பார்க்கவுங்கனற் கொண்டுமுகம்பட
ஆர்க்கவுமொரு வாரமதற்குளே. (458)

வேறு கட்டளைக் கலிப்பா

எனவுஞ் சலநீர்கட் பிரிந்திடு
மெண்ணையு மதற்குள்ளே சிதறிடுங்
காரமாமிவை வித்ததின்தோடதுங்
கண்டுபார்த்தெடு வானபருப்பதை

பாரமாம் பருப்பான திவையெலாம்
பாகமாகப்ப தரிடாமலுஞ்
சேரவுமெடுத்தேசி தறாமலுந்
தீங்கிலாவித்ததனையே வாங்கிடே. (459)

வித்ததின் பருப்பான தெல்லாமெடு
மேருவாங்கல்லு ரலினீற் றூளதாய்
முத்துபோற்பொடு தூளிதம்வாங்கிடு
முதிரிடாமலெருக்கம் பாற்சட்டியிற்
சத்தும்விட்டுப் பால்வந்நியடுப்பினிற்
சாத்திடீற்பலங் காச்சியெடுத்திடு
நித்தமேவிடும் வேம்பின் பிசினதும்
நிறுத்தி நாலிடைதா னும்பண்டிதரே. (460)

நாட்டிடுவீர் கசகசாரெண்டிடை
நாம் சொல்வோம்பனை வெல்லரெண்டிடை
வாட்டிடுமத்தஞ் சாரதும் விட்டிடில்
மாட்டி நன்றாய் மயனமரைத்திடுஞ்
சாட்டிடுவீர் நல்லெண்ணையுந் தாக்கிடு
சாத்தியொன்று படக்கிண்டி பதத்தினில்
வேட்டிடுமென்ன கஷ்டப்படுகிறீர்
மேலுமேலு மெழுகை யறிந்திடே. (461)

இதைவிட லாகிரியில்லையென்பது

அறியும்வாலை யம்பிகையனுக்கிரக
மடியேன்மீதி லருட்தந்தளித் திடீர்
வெறியுமென்னவதித வேகமெனில்
மேலும்புண்ணியஞ் செய்பவர்க்கெய்திடும்
பிரியலாகிரிவேறில்லை வைப்புதான்
பேசிடும்பெருநூல் ஞானவெட்டியிற்
குரியதாயுரையோ பிசகில்லைபாற்
கொண்டிடில் மெழுகான தடையிதே. (462)

கொண்டிடுமெழுகான தடையெடுங்
கூரிடுமெந்தப் பாண்டமதிலிடும்
வெண்டிடுமடையான மெழுகதை
விசிதமந்த தினத்திலே தாக்கிடு
ஆண்டெனுமீராறு யோகத்தினி
லபினிகுன்றிடை யனுபோகிக்காதலாற்
தாண்டிடுங்கதிர் காலைரவிமுகந்
துரியசாதனை விநாடியுமுப்பதே. (463)

யோக வரையறிவது

நாடிடுங் கடிகையது முப்பதுநன்று
மூன்று யீரஞ்சு கடிகையி
லோடும்வாசியுள் ளடக்கத்தாரையி
லூதங்காற்றையு பாயமாயூதிடுந்
தேடியண்டங் கீழோடிவாசிவருஞ்
சிங்குவங்குவென் றேத்திடுமௌனமாய்
பாடியேவிடுமாலை காலைக்குள்ளே
பாருமுப்பத்தி ரெண்டுவிநாடியே. (464)

முதற்றீக்ஷை மூன்று மண்டல மனுஷ்டிக்கில் நடனவொளி காணலா மெனல்

நாடிக்கோர் கடிகையும் விநாடிதா
நடத்தலாலொரு மண்ட்லமிவ்விதம்
வாடிக்கையோமற்ற யிருமண்டல
மாறிடுங்கண்ட தாரையினோசையால்
ஆடியேநடன மிடும்வாசிகாண்
அந்தவிநாடியது மூன்றுமானதால்
வேடிக்கையும் விநோதமும் பார்க்கலாம்
விநாடிமூன்று மண்டலங்கள் மூன்றுமே. (465)

மைற்றதோர்மறு மண்டலம்நாலினில்
வாசிவாசி நாலுக்குள் விநாடியுங்
கைற்றிடுங்கரு வாகுமிதுபொருட்
கண்டபேர்க்கு கலிவந்துயெய்துமே
வித்தையோ கடிகைக்கு விநாடிகாண்
வேண்டிடு மறுபத்துநாலுமெனிற்
சுத்தவான் கடிகைக்கு விநாடியுந்
தொடுரசம்பொழிந் துதவுமாண்டையே. (466)

2-வதில், 64-நாடியும் ஒவ்வொன்றாய்ப் பணியுமெனல்

ஊதவுமுதல் தீக்ஷையிந்தப்படி
யோர்கடிகைசென் றூதவுமிரண்டினிற்
பேதநாடியறுபத்து நாலதும்
பிரிந்திடாமலுஞ் சேருமவ்வொன்றதா
ஓதவுங்கடிகையும் விநாடிதான்
ஊதிடும்கண்ட தாரைவழியதாம்
வாதம்பத்துடன் பித்தமும்பத்துடன்
மருவிடும்படி சேத்துமம்பத்ததே. (467)

இந்தவிதமிருபடி யேரவுமுந்தன்
    துணையன்றி யொருவரறிந்திலேன்
சந்தயங்கட்க்ஷணப் போதிலும்மிரா
    யந்ததோர்பிணி யான்மவிசாரமும்
வந்தபோது மருவியுங் கட்டிடுஞ்
    சிந்தையேதுசிவன் செயலெய்திடுங்
கந்தனுக்குமுன் கணபதிவல்லபை
    முந்தியான்தொழுதற் சனையாண்டையே. (468)

அறுபத்து நாற்சரக்குகளுஞ் சுத்திசெய்யுமுறையும் நீரும் பாகங்கள் விவரம்

அற்சித்தேனடியேன் றிருவள்ளுவ
    னறுபத்துநாற் சரக்கானதவைகளு
வற்சித்தேனடி வந்தம்பிறந்திடும்
    அளவற்றசரக் கானதும்நீறிடுங்
கெற்சித்தேன் கெடிசுத்தியறிந்திடிற்
    கேளுமிருகங் கிருதத்திலஞ்சுதான்
பற்சித்தேன்பசு நெய்தனிலஞ்சுதான்
    டாடினோம் பங்கம் பாளையிற்சுத்தியே. (469)

பாடினோம்வெள்ளைப் பூண்டினிலஞ்சுதான்
    பார்த்தெருக்கன் பூசாத்தினிலஞ்சுதான்
நாடினோந்தேசிப் பாலுங்கேசரிப்பால்
    நல்லெலுமிச்சம்பாலு மேஷத்தின்பாற்
பூட்டினோமுசல்ரெத்தமு மாங்கிஷம் பொற்கையான்
    கருங்கையானுஞ் செய்கையான்
தேடினோமாடா தோடைகள்ளியின்
    பால்துருக்கள்ளி சதுரக்கள்ளியிஞ்சியே. (470)

வேறு கொச்சகக்கலிப்பா

செப்பிடுங் காண்நஞ்சடக்கி
    தேத்தன்வித்து புங்கன்எட்டி
ஒப்பிடுங்காண் முத்துச்சிப்பி
    ஒட்டகத்தின் பாலமுரி
கைப்பிடுமோ பால்நண்டு
    கடுக்காய்த் தோடானையின்பால்
குப்பிடுமேசங்கு சுண்ணங்
    கூறுமணற்றவளை நெய்யே. (471)

மணக்காளா நெய்யிலுப்பை
    மண்பரண்டி செங்கொடியாம்
வண்ணவழு கண்ணியொடு
    மாவிலங்கு வேலிப்பனை
யெண்ணமெனும் பொன்னூமத்து
    வெய்திடும் வேலிபருத்திக்
கன்னலின் சாரல்லி
    கருமத்தன் கருநொச்சியதே. (472)

கிடைத்தற்கரிதாகிய மூலிகைகள்

மூவிலைக்குருந்தபல்லி முதலைநெய்யும் பேச்சுறாநெய்
தாவுங்கடற்செஞ்சொரியுந் தந்தியின்பால்அமுரி
காவும்பாலாசு நண்டுங் கருங்கொடி செங்கத்தாளை
மேவிடுங்கருத்தநெல்லி விழுதிகருப்பானதுவே. (473)

செந்துராகாட்டுக் கருணைச் சித்துழாய் கைப்புவசளை
ஐந்திலைகோவைக் கிழங்கு வாகாசத்தின் கெருடன்
சீந்தலிற்பொற்சீந்திலொடு தேவகின்னரிகலப்பை
கூந்தற்பனைப்பால் முசுட்டைக் கோடக சாலையதுவே. (474)

வேறு

சோதியின்பாலுமழுகண்ணி பேய்ப்புடற் சிவதையது
நீதிக்கசப்புமருதனுங்காட்டுள்ளி நிலம்புரண்டி
வீதிக்கருப்பும்விழுதின் குக்கன்விருக்ஷமதும்
பேதியதாகும்பிரமிப்பொன்மூலி பேய்ச்சின்னியே. (475)

கறுப்புவாதண்டையானைப் பிரண்டை கற்றாமறையுஞ்
சிறப்புப்பொன்கஞ்ச வல்லாளன்மூலி திகைப்பூடது
மறப்புச்செங்கொல்லைப் பல்லியும்வாடிமதி மயக்கித்
திறப்புநீர்மேலும் நெருப்பானமூலி திடமிதுவே. (476)

மூலிகைகள் - 3300

மூலியனேகமூவாயிரத்து முன்னூறெனிலுங்
காலியின்வேகங்கடற் சூழ்ந்தகில காட்டகத்தில்
பாலினம்நீரினம் நீரில்லாவேரினம் படரினமுஞ்
ஜோலியதாட்டம் வாதத்தின்மூலியுஞ் சொர்னமிதே. (477)

வேதைகட்காகுஞ் சரக்குகளின் விவரம்
வேறு

கண்டிலர்களுப்புவித்தைக் காரணமாம்வழலை யொன்று
அண்டிலர்கள் வங்கமொன்று வாகாசவுப்ப தொன்று
நன்றறியச்சூதமொன்று நாகமொன்று வெள்ளையொன்று
தன்றறியுமே துரிசு தாரமொன்று வீரமொன்றே. (478)

ஒன்றறியலிங்கமொன்று வுற்பனமாங்கெந்தி யொன்று
வின்றறியமேகௌவரி மேவிடும்பொன்னம் பரொன்று
மன்றுலகிற் பொன்நிமிளை யக்கினியும் பிறவிச்சரக்கா
மென்றுமயச்செம்பு வொன்றுமிவைகட் சுத்தவாதமதே. (479)

ஆகாய கங்கை
வேறு கட்டளைக்கலித்துறை

சுத்தச்சலமெனுமன்னை யின்நாதச்சுடரமுரி
யித்தலமேவும்பிரவினீருப் பிவையுமல்ல
வைத்திடுஞ்சுக்கிலஞ் சுரோணிதமிரண்டும் வல்லபங்காண்
கைத்திடுங்கங்கையாகாயந்நீரிற் கருப்பத்துமே. (480)

வகையறியாதபேர்க் கென்னத்தோன்றும் வையகத்திற்
பகையும்வந்தெய்தும் பரிசெய்தபேர்க்குப் பலமென்னகாண்
நகைக்குமரசற்கு நாடோறுஞ்சத்துரு நாட்டில்லையார்
தகைக்கும்பிராணஞ் சதமல்லவாதஞ் சாட்சியிதே. (481)

இத்தூல தேகத்தோடு ஈசனைப்பணி

ஏமம்வந்தெய்து மெந்நாளிருப்பவற் றேகபரந்
தாமறிந்தீசனைத் தாட்பணிந்தற்சனைச் சார்பவற்குக்
கோமளவல்லி யபிராமிவாலைக் குலவுவள்பார்
நாமறிந்தோது ஞானக்கண் சோதியை நம்பினார்க்கே. (482)

சலமேயாதாரமெனல்

ஜலமானகங்கை யன்னைமயத்திற் றானுதித்துப்
பிலமாயகில மீரேழும்வாழ்கப் பிறந்ததுநாள்
புலன்பொறியாகிய-யெண்ஜாண்ஜடமும் பூதமைந்தாய்க்
குலங்குடிகொண்ட வத்தியின்வாழ்க்கைத் குவலயமே. (483)

எண்ணெய்க்கும் பாக்கீறிபு

உப்புவின்வாறு வுவர்நிலமூசர முலகமதி
லப்புவின்சாலை புனற்சதிர்வேணி யமுரியதா
முப்புவின் கைப்பு வுவரதினெண்ணெய் யொன்றகத்துச்
செப்பினன்வாலை யபிராமிசொல்லத் தெளிந்திட்டேனே. (484)

பாவிகட்குப் பலியாதெனல்

தெளியாதபேர்க்கு மெஞ்ஞானவெட்டித் தெளிவுதருங்
களியாமல்யானுங்க ருதிவிட்டேன் கவிகருதலில்லாப்
பழிபாதகற்குங் கொலைபாதகற்கும் பலிக்குமோ சொல்
அழியாமற்காய மிருப்பவற்கேவீச னன்பு வைத்தே. (485)

கள்ளாவியாற் காரங்களை வெளுக்க
வேறு - நேரிசை வெண்பா

புவிதனிலும் வண்ணான் பூநீர்ப் பிறப்பறிந்து
செவிதனிலேயுரைத்தச் செய்திகேள் - புவிதனிலும்
வெள்ளாவிசீலை வெளுக்கும் விதமறிவீர்
கள்ளாவியாற் வெளுப்பீர்காண். (486)

உடற்சுத்தியானா லுவற்சுத்தியாமெனல்

கண்டறிவீர் வண்ணான் கருத்தை யறிந்துணர
வென்றிடுவீர் காலனையும் விண்ணுப்பாற் கண்டறிவீர்
உவர்சுத்தியெய்து முன்னுடம்பு பொன்னிற்மாங்
கவரிவையிற் கோடிகவர் காண். (487)

தூரிசு சத்தறிய

துரியமாமவற் றுரிசுசத்ததனையும் விளம்பக்
கரியகுண்டலிக் கதிர்முகன் தாளிணைப் பணிந்தும்
புரியுமாமதிப் புனலெனுங் கல்லதைப்புகல
நிருவிநின்மலர் நிருபற்றாளடியனுந் தொழுவாம். (488)

நிமிளைச்சுத்தி சுண்ண விவரமறிய

தொழுதுவான்மதித் துதித்தொருபலமது நிமிளைப்
பழுதிராதிடிற் பகர்கின்ற வமுரியிலரைப்பு
வழுதிடிலொருதினம் விடுகாமலுஞ்ஜாடி
முழுதுஞ்சென்றிவை வழித்தெடு பீங்கானி லிடுமே. (489)

வத்தவத்த வமுரி விடவும்

இடுமரைப்படி ஜலநீர்விட்டுஅ யக்கம்பாற்கிளறிக்
கடுங்கதிரவி முகம்படக்காட்டிடுங் கனலில்
விடுஞ்சலமதி லமுரிவிட்டதும் வத்தரவியிற்
படுங்கனற்படச் சுவரும்நீர் ஜலமதுஞ்சுருண்டே. (490)

அந்தப்பாகமு மருளிய மண்டலந்தனிற்
சென்றிடுமிவை யிலகியநீர்ச் சவஞ்சுவரும்
வந்துமேற்கரை வருகிடு லெண்ணெயைப் போலும்
விந்தையாயிவை விளங்கிடுமொரு பலஞ்சரியே. (491)

பூநீற்குறி யறிய

சரியபாலடைச் சங்கதின் வெண்ணிறமதுபோற்
பிரியும்நீரதும் பின்பெடுத் தவைகுறிபேசு
மறியுநதேயுவின் வெடிலவணப் பதம்வருமாய்
முறியுமெண்ணெய்போன் றிடுதற்பூநீ ரெனுமியல்பே. (492)

இயம்பிடல்ரவி நாதமுமோரிடை வியல்பின்
இயம்பிடுஞ்சீனம் வீரமுங்காலிடை நிறுத்து
இயம்புமஞ்சன மிவைகலுவத்திடுதூளாய்த்
துயம்பிடுமிவை யோரினம்பொடி சட்டிதனிலே. (493)

அடக்கஞ் செய்துவை யதின்மேலொருச ட்டிமூடிச்
சடக்கஞ்செய்தெழு சீலைமண் சந்துகளதுப்பி
முடக்கம்பார்கதிர் முகம்பட கனலதுமுடுக்கா
யிடக்கிலாமலு மியம்பவுமென் குருப்பதமே. (494)

வழலைச் சுண்ணம் அறிய
வேறு - கட்டளைக்கலிப்பா

நீரதாயடுப்பேத்தி யனலிடுச் செய்பதமொரு ஜாமமெரித்திடும்
வாறதாய் வாலுகையடுப்பினில் நீரதாகும் நிர்மல வழலையாம்
மாறிடுமஹாமேருவுநீறிடு மாறுபத்துசதுர்ப் பேருமாரணம்
நீரதாய்விடுமே நவரத்தினம் நீடாழியுப்பிதுநின் கருத்தாண்டையே. (495)

வழலைச் சுண்ணத்தால் வங்கபற்பம்

உண்மைதங்கத் தகடுகளஞ்சிடை ஒருபணத்திடை உவருப்புச் சுண்ணமுந்
தண்மையாயுமி நீர்விட்டுமத்தியுந் தணலிலும் ரவிதன் முகங்காட்டிடும்
பண்மையாகும் பரியெனுந்தங்கமாம் பற்பமாகும் பயமில்லைப் பாருகாண்
வண்மையாகும் பரியெடுத்தேபிடம் வசமதாய்க்குக் குடப்புடமிட்டிடே (496)

பத்திய விவரம்

ஆறிடும் பிடமாற்றியெத்திடு வரிசிதன்னிடை யாவின்கிருதந்தனில்
மாறிடுமொருபக்ஷந் தினந்தினம் வைத்திடுமதின் காலையுமாலைகா
நீறிடுந்துவர்கைப்புமகற்றிடு நிலைபெற வயிராக்கியமாகவுந்
தேறிடும் பசும்பாலுக்கிருதமொடு தீனிதானிச் சாபத்தியமாண்டையே. (497)

தீரும் வியாதிகளின் விவரம்

எலும்புருக்கி யிளைத்திடும் தேகமும்
இறப்புமேவிஷப் பாண்டுடன் சோகைபோம்
சுலும்புசெய்பிரமேக மகோதரஞ்
சூலைக்குன்ம சிரணபேதிபோங்
கலும்பிடும் பெரும்பாடுப் பிரமியங்காசமும்
க்ஷயமீளையும் போன்றிடிற்
சிலும்பிடும் வயர்சேத்மமுந் தொண்ணூற்றார்
சிதறியோடித் தீவாந்திரம் புக்குமே. (498)

தூரிசுச் சுண்ணம்

புத்திடுங் குருவா னத்துரிசியும்
பின்பதும்பலமாக வெடுத்திடுந்
தக்கிடும் ரசபூரமும் வீரமுந்
தடவிடும் புளுகான சவ்வாதுடன்
சக்கிடும் பணமாவது மோரிடைச்
சாற்றுவீர்மத்தித் துரிசின்மேற்
பாக்கிடுங்கவசங்களும் பூசிடும்
பதறிடாமற்பிடங் கவுதாரியே. (499)

எனமதாய்ப் பிடமற்றி வாற்றியெடு
என்னவேகந் துரிசதின் சுண்ணமாம்
ஞானதேசிகனாற்பதம் போற்றிடும்
நாட்டிடும் ரசவாதமும் வேதைகாண்
மீனமேஷமிராதிடிற் பாருமே
வேதைகோடி விளங்கிடுமாதலாற்
சோனையே பொழியுஞ் சலமூலிகைச்
சுத்தநீர்களில்லாத் தழைகளே. (500)

நீர்வராதத் தழைகளில் நீர் எடுக்க

மூலியில் நீரில்லாத் தழைகளில்
முன்னமே பணஞ் சுண்ணமுந்தாக்கிடு
சூலியாஞ் சலமாறாய்ப் புரண்டிடுஞ்
சூட்டிடுந் தயிலங்களும் பாயுமாய்
வாலிபங்களிற் பித்தநரைவிடும்
வாடிடுந்திரை தேகம்வலுவதாஞ்
சாலவுஞ் சளையாதெனில் வீரியந்
தையல்போகந்தவறிடா தாண்டையே. (501)

நரை திரை நீங்க

மாதர்போகமயக்கஞ் சுழல்களும்
வாதம்போம்பித்த மாரணமாகுமாய்ப்
பேதையான பிதற்றலு மூர்ச்சைபோம்
சூதகங்களும் சூசிகாவாய்வுபோம்
மேதினிதனில் மேகநீர் சூடதுங்
காதம்போய்கடற் புக்கிடுமாண்டைகாண்
ஓதும்நூன்மறை வேதம்விளங்கிடுந்
தாதுகட்டிடுந் தங்கமதாகுமே. (502)

போகுமூலப் புனல்நீர்சுருக்குடன்
பொருமல்விக் கல்பொறியு மேப்பங்களுந்
தாகம்போந்த மர்கதவாய்வுடன்
கம்மலுந்தாபமுஞ் சுரஜன்னியுமேகிடும்
பாகமாம்பனமாவின் கிருதத்துடன்
பஞ்சதாரை பணவிடையாகிடில்
சாகும்நோய்கட்க்ஷய மீளைகாசமும்
சாடியேவிடுந் தாக்கிட அவிழ்தமே. (503)

தாக்கிடுமதிகாலையு மாலையுஞ்
சாத்திடுமொரு பக்ஷமதாகிடில்
வாக்கியமின்னூல் வசனந்தப்பாதுகாண்
வாலைதேவி வகுத்த ப்ரபந்தமாம்
பாக்கியஞ்செய்திடும் புண்ணியற்குத்தான்
பாலுங்கிருதமிச் சாபத்தியமாகிடில்
சேர்க்கைவாசனைச் செப்பிய நூலினில்
தீர்க்குமேமருந் தீவினையேகுமே. (504)

இதிற் றூம்பர வேதையாகுமெனல்

அதிகமாகு மனேகஞ் சரக்கதும்
விதியிருந்தால் மெய்யுமே விளங்கிடும்
பதியுமே பலவேதைகளாகிடும்
பரிசவேதைப் பலன்வெகு பஞ்சமோ
கெதியடையுந் துரிசு சுண்ணத்தினாற்
கேசரிகிருபை வினோதங்களாகிடுந்
துதிபெருஞ் சொர்னபூபதி செய்யலாஞ்
சோதித்தால் தூம்பர வேதையிதாண்டையே. (505)

சூக்ஷமாகுந் துரிசதின் சுண்ணமேல் சொல்லொணாது
சொன்னால் துன்ப மெய்திடும்
பேக்ஷமெய்து பெரியோர் மறைத்ததும்
பேசுவோஞ்சவுக் காரமேயானருள்
சாட்சிப்பிரம்ம சுரூபமதாகிடுந்
தானறிந்து சவுக்கியந் தேடலாம்
வாக்ஷமாமிவைவாதம் பயப்படும்
வாரிதிக்கடற்பாரையா லாண்டையே. (506)

பாறையுப்புடன் பாரிலுப்பெய்தினா
லூரல்போமுவ குப்பதுங்கட்டிடும்
வாரியுப்புடன் வழலையுங் கூட்டினால்
மாறிடுமதியுப்பதுஞ் சுண்ணமாம்
நீரினுப்பு நிலவுப்பு கட்டினால்
பூநீருப்புவின் பூட்டையறியலாஞ்
[illegible]தற்கும் திரிமூன்றுங் கூடினால்
தீக்ஷைபத்துந் திறமாகுமாண்டையே. (507)

காயசித்தியால் வாத சித்தியாமெனல்

ஒன்றுக்கொன்று வுறவதுமாகிடி
லுலகமாளலாம் யோகிகளாகலாம்
ஒன்றுக்கொன்று அருமையதாகிடி
லண்டரண்டமனைத்துமே பொன்மயங்
குன்றுபோலுங் குவிந்திடுமேமமும்
ஒன்றுமின்று மறியலாங்காண்கிலீர்
கண்டபேர்கட் கனகமும் விண்டிடார்
காயசித்தியால் வாதமுஞ் சித்தியே. (508)

யோகிக்கெய்தும் போகிக்கெய்தாதெனல்

யோகியானா லொருமித்தறியலாம்
போகியானாலறிவது மில்லைகாண்
தியாகியானாற் திலவழி புண்ணியம்
வியாக்கிரமத்தை விடுவித்தெவர்களோ
துயாக்கிரமத்தினாற் சொன்னசொல் மாறிடுஞ்
சோம்பியேதிரிந் தோடியலைந்தனர்
சுயாக்கிரமத்தினாற் சோதித்திடலுமாய்ச்
சுகஞானவழியேறி நடப்பதே. (509)

சத்துரு மித்துரு வறிய

கல்லானைக்குக் கடலுப்பு மித்துரு
கரியுப்புக்குக் கல்லானையுஞ் சத்துரு
வல்லானைக்கு வழலையு மித்துரு
மதியுப்புக்கு வழலையுஞ் சத்துரு
வெல்லானைக்கு வெடியுப்பு மித்துரு
விண்ணுப்புக்கு வெல்லானையுஞ் சத்துரு
கொல்லுபாரை யறுபத்து நால்வரை
வெல்லலாகும் வெடியுப்பைக்கட்டிடே. (510)

காரசாரங்கட்ட மலஜலசாட்சியறிய

சலதாரைவழி தானறிந்தாலல்லோ
மலதாரைவழி மார்க்கமறியலாஞ்
சலதாரைவழிச் சாரம்பிறந்தது
மலதாரைவழி காரமுதித்தது
மலத்திலே விளைவானது நாகமாஞ்
சலத்திலே விளைவானது சாரையாஞ்
சலத்தினால் மலமாவதுங் கட்டிடு
மலத்தினாற் சலமாவதைக் கட்டிடே. (511)

மண்ணுந்தண்ணீர் மருவியபோதினிற்
பெண்ணுமாணும்பிறப் பொன்றதாகிடும்
உண்ணும்போது உவர்நிலமாகிடுஞ்
சண்ணுமேசாரு காரமுஞ் சுண்ணமாம்
விண்ணிலுப்பு விளைவு முன்னுக்குப்போ
குண்ணுபோலே குவிந்திடும் பூவதாம்
எண்ணுமீசன்உலகு ளிருக்கையில்
பொன்னுக்குகன்பொருள் தேடியலைவதே. (512)

வேறு - கலிவிருத்தம்

சலத்தினா லெழுந்தாடிய யன்னைகாண்
குலத்திலே குடிகொண்டது நாதமாம்
மலத்திலே புழுவான துதித்திடுஞ்
சலத்திலே சாரவுப்பதைக் கட்டிடே. (513)

அமுரியே அண்டபிண்ட நீரெனல்
வேறு - கட்டளைக் கலிப்பா

அமுரிகாரமந்நீரதே சுண்ணநீர்
புனலதீதநீர் பொசிந்திடும் போதிலே
அமுரியேமதிவத்தவு முப்பதாம்
நமனுமேது நாள்நாடிடு மண்டலந்

திமிரிதகுரு செப்பினவாறுதான்
விமலசுரூபமேன் மாயுரீர் மாண்பர்காள்
குமுளிநீரறியாமல் தவிக்கிறீர்
அமுரியே யண்ட பிண்டமதாகுமே. (514)

கரடிதன்னிற் கல்லுப்பது சுண்ணமாம்
போடுங்குன்றி பொசித்தவர்மாள்வரோ
வாடிடாதுமறு பிறவியதாம்
நாடிடுமிருமண்டல முண்பீராய்
மேடியாமலைக்கல்லது போற்சடம்
வாடுமோமூன்று மண்டலமுண்பீராய்த்
தேடியோடிடுமே நமனாகையாலாடும்
ஆடும்பாம்பறுபத்து நாலுமாளுமே. (515)

நிமிளைச் சுண்ணத்தால்

நிமிளைச்சுண்ணமும் நீயெடுமேபணம்
நீருமேயுமிநீரு விட்டாயிழை
நிமிளைச்சுண்ணத்தி நேர்மையதாகிடில்
நிகழ்த்திடுஞ்சவுக் காரத்தின்மேலுமே
நிமிளைச்சுண்ணந் தடவிரவியில்லை
நேரும்நாலுகடிகைக் குள்ளாமெனில்
நிமிளைபாற்சவுக்காரமுஞ் சுண்ணமாய்
நீநினைத்தபடி முடிந்தாடுமே. (516)

அறுபத்துநாலுஞ் சுண்ணமெனல்

ஆகுஞ்சுண்ண மருணன்முகம்பட
வறுபத்துநாலுபேர்களுஞ் சுண்ணமாம்
வேகுமே சரக்கான விதமெலாம்
வெந்துநீறும் வெண்ணீறதுமாகிடுந்
தோகைவாலைவாலாம் பிகையினருள்
தொந்தங்கோடித் தொழின்முறைகோடிதான்
ஆகமங்கள் நன்னூலதும் பாடினார்
நன்மொழியறிந்தோதினேன் ஆண்டையே. (517)

பரனுப்பறிய

ஆகமப்படியா னருளும்மொழி
யமுர்தமாமதியும் பறிவார்களோ
சாகவுமுயிற் சாத்தவுமில்லைபார்
சத்தியுஞ்சிவந் தானறிந்தாலல்லோ

நாகஞ்சாரையும் பாரையுங்கூடினால்
நவரத்தினங் கள்நவலோகம்நீறிடும்
பாகமுமறிந்திம் மொழி கூறினோம்
பார்த்தபேர்கள் பரனுப்பறிவரே. (518)

கற்பமுண்ணும் விவரம்

பகலுமிரவும்பகரு மொன்றானதால்
பார்த்தபோது பளிச்சென்று மின்னலாம்
ஜகதலங்களீரேழும் பணிந்திடுஞ்
சித்தராவார் சிவகங்கைகண்டபேர்
புகலுங்கற்பவல்லாரை மூலிகைதான்
புவிதனிற் கருப்பானது முண்டுபார்
சுகமதாகுமோராண்டு காடிதனிற்
சுத்தவான்சிவயோகி யுண்பார்களே. (519)

சுத்தகங்கையாவது

சுத்தகங்கைச் சுரோணித நாதமாஞ்
சொன்னால்தோஷம் வந்தெய்திடுஞ்சுக்கிலங்
கர்த்தன்சொன்னக் கருத்தறிந்தோதயான்
கவிகளேதுகாண் கண்டவர் விண்டிடார்
முத்தரானமுன்னோர்கள் நூலோதினார்
முன்னமேமுடிந்தா னதைக்காண்கிலார்
வித்துமென்னவின் னுப்பதும் விந்துதான்
மேதினிபுவி தோறும் விளைவதே. (520)

நாதமாவது

நாதமென்றாலறி விந்துநாதமாம்
நாவினாலெளி நல்லவிளம்பிடில்
பேதமில்லைத் திருவள்ளுவன் மொழிப்
பேசுவாரவனி தனில்மாண்பரும்
வேதமென்னத்திரி மூவராலுணர்
வேறுகூறு விளங்கவொண்ணாதுபார்
வாதமென்ன வைத்திய மென்னகாண்
மதியினுப்புரவி யுப்புப்பாரையே. (521)

இரவிமதிகூடி சத்தியானவாறு

மதியினாலும்வளர் விந்துவுப்புதான்
மகிமைதன் ரவியுப்புப் பூநீரெனல்
நதியினாலும்ரவி மதிகூடினால்
மதியினால்ரவி மாண்டுதுசத்திகாண்

விதியென்னவிந்து நாதமுஞ் சேர்ந்திடில்
மேலும்பாரை வெகுபிலமாச்சுதுக்
கெதியிருந்தால் கிடைத்திடுமுப்பூவுங்
கிலேசமேது கிளிஞ்சிநீர் காணுமே. (522)

வீரச்சுண்ணமறிய

நீராகாரம்நீர் மேலுங்குமிழிதான்
நித்தம்நித்தம் பூசிக்கவுமுப்பூவை
யாறாதார அன்மையமாவது
அன்னபூரணி யாட்டமிதாகுமாய்
வேறுவேறு விளங்கினபோதிலும்
வேண்டுபோதினில் வேற்றுமையாகுமோ
காரமன்னந் தண்ணீரது சாரமாம்
வீரமாவதுவே விண்ணுநீரதே. (523)

கெந்தகச் சுண்ணமறிய

வீரமென்ற நிமிளைச் சுண்ணமதில்
விதுரக்கெந்திப் பலமதுவாங்கிடு
காரச்சுண்ணங் களஞ்சுமி நீரினால்
கலந்துபூசிக் கவசமுஞ் செய்திடு
மாரவுங்கதிர்ச் சூரியன்றன்முகம்
வைத்திடுமரை நாழிரவிதனில்
தேருங்குக்குடம் வன்னிமெதுவெனில்
சிவந்தெழுந்த கனற்கொண்டு தாக்கிடே. (524)

செந்தணலினிற் செந்தீயெழுந்திடில்
வெந்துமேவிடுங் கெந்திச்சுண்ணமது
அந்தமான தவ்விதச் சுண்ணங்கேள்
ஆறியேபிட மானபின்பேயெடு
இந்தச்சுண்ண மெடுத்திடுமேபணம்
முந்திநோய்க்கு முனைந்திடு காலையில்
வந்தநோய்க்கு மாலைதனிலுண்டதாற்
தொந்தமொன்றுஞ் சொல்லாமலோடுமே. (525)

நீங்கும் வியாதிகளறிய

ஓடுமூலமுளை மூலமுஷ்ணமும்
ஆறிடும்வாய்வு சூலையுமோடிடும்
வாடிடும்வயர் நோயுமகன்றிடும்
மதுரமேக மதுமேக மாறிடுஞ்

சாடிடுஞ்சுகஜன்னிதோஷம் விடுஞ்
சரீரம்விட்டு க்ஷணப்போதிலேகிடு
மோடிடுமரையாப்பு வாழைகளும்
உடலைவிட்டுட ளோடிப்பறக்குமே. (526)

வேறு

உடலைவிட்டுனோ யோடியே பறந்திடுமாகிற்
சுடரெனுங்கனல் சொரிசிரங்கதுவிடுஞ்சூக்ஷம்
மடலெனுமருகொருக்கையு மொட்டியபுண்போம்
திடமெனுஞ்சடந் தீரும்நோய்க்காசம் போந் தெளிவே. (527)

உண்ணும் அநுபானம்

போகுங் குன்றிடைப் பற்பமுங் கிருதத்திற் புகல்வீர்
வாகுதன்குழை மத்தித்துக் காலையுமாலை
வேகும்நோய்கள் விடுபடும் வெதுப்பதும் விடுமாய்ப்
போகமுமொரு போதிலும் பிரியுமோ புகழே. (528)

மாதுமணவனைமங்கையுங் கடிகையும்பிரியாள்
வாதுகாணிவர் மருவிய புணர்ச்சியின்வாறு
தாதுகட்டிடுந் தனுவதும் விலக்கணந்தவரார்
போதுமிதேதெனிற் புணர்ச்சியும் விடுசற்றே பொருமே. (529)

என்றுமாதன ளியம்பவுமிருதயமிளகிக்
கன்றுமேவிடிற் கருத்தினைக் களித்துடன்கருதச்
சென்றுபின்பொருச் செய்தியை விளங்கவுஞ்செயலாம்
அன்றுகெந்தியினருள் பெறச் சித்தியுமரிதே. (530)

சூதகக் குளிகை

எய்துஞ்சூதமு மிலகியக் குளிகையுமெய்தில்
வயதுமாத்ததும் வருமோராயிரம் வகையுமாய்ச்
செய்திடீரொரு பலமதுங் குழிக்கல்லிலடக்கிக்
கைதொழுதடிபணியுவென குருமுனிகருத்தே. (531)

கருவுதிக்கும் வரலாறு

அருளவும் பெரியோ ரனுக்கிரகத்தந்தையி னமைப்பாற்
சரிதைவாழ்புவி யுதித்திடு மன்னையின்றவத்தாற்
கிரிகையன்னைதன் கெற்பமாங்குழி தன்னிலுதித்துக்
கருவிசுக்கில சுரோணிதங் கூடியகருவே. (532)

கருவிதொண்ணியத் தாருயிரறுபாகக்கருத்தால்
உறுதியாய்ச்சட முதித்தவாரது வளமுகமை
கருதிவாருதிச் சூக்ஷமென்றிலகிய சுரூபம்
நிருதிகாருவிந் நியலருளாலன்ன நீர்நிகழ்த்தே. (533)

மூடர் வளமை

நீடுசாகரம் நிகழண்ட கோள்கையும் நிலையாய்க்
காடுமாயிர யோசனைப் புவனமுங்கருதி
வீடுநாடுடன்மேருவுங்களர் வயல்விரும்பித்
தேடுமூடர்கட் திரிந்தலைந் துழன்றலைவாரே. (534)

உப்புப் புளியியல்பு

உப்பெனுமுவற் புளியுறப்பொருட்டினாலுணரும்
விற்பனைக்கடை வீதியில்விலைபெறுமியல்காண்
தப்பிதமிலா சர்வமூலிகையிலுஞ்சவுடாஞ்
செப்பொணாதுவ ருப்பிலாப்பண்டமுந்நீதே. (535)

விண்ணுப்பால் யாவுமடங்கும் வேறு

சூதமுமடங்கும்வெள் வங்கரசிதந்
தொந்தித்துமித் துருவிட்டுவூத
துய்யவெண்மதிபால் சந்திரனொளிவாந்
தொடுத்துசத்துரு வைத்துவூத
அதமெனுமூலி யாவதுமரண
மனைத்துமே படுஞ்சுடுகரியாய்
அறுபத்துநாலு மித்துருவதனால்
அடங்கிடுமெனும் பண்பெற்றுளவாா்
வேதசாரத்தை விளங்கலால்விந்து
விண்ணுப்பும் நாதமுங்கூடி
விதிமதிசூக்ஷங் கடந்துமேற்சுழியில்
மெய்யொளிச் சோதியிலடைவார்
நிதிபதியறிய கெதியினிலடைந்து
நிருவிதாள் மலரடிபணிந்து
நிருபமேதுதித்து பிராணசாதனையில்
நீயென்றும் நானென்றுமிலையே. (536)

வழலைபூநீரறிய வசியமாம்
வேறு ஒரடி விருத்தம்

குழிக்கல்லிலிரதஞ் சூதயானையைத்தான்
கொல்லவுமனந் துணிந்திடுமோ
ஒளிக்கொணாவிதி நூல்வள்ளுவனோதும்
ஓராயிரத்தைந் நூறுமாய்ந்தார்

வழியறிந்திடலாமதி கதிர்உறவாம்
 வழலைப்பூநீ ரதுவசியம்
வெளியோளிதிற வாமதியெனும்
 விளங்கார் மேதினிதனிலுமேயலைவார். (537)

மால் சொரூபம்

அலையெனுமுத்தி சத்திமாற்சரூபம்
 அண்டபிண்டங்களும் நீராம்
அலையதுவீசு மடவதுபோலாம்
 அதிகெந்திப் பணமொருவிடைத்தான்
வலையதுபிரளா வுமிநீர்விட்டிழைத்தலவ்
 வட்டகைப் போலதும் வருதல்
கலைபிறளாமல் மத்தித்துயெடுமே
 கதிர்முகங்களற் படக்கருதே. (538)

சந்திரனொளிவாமய மெனுமதிபார்த்
 தவறிடாதி வைமகுத்துவங்காண்
இந்திரனதுபோன்றிடும் ரசக்குளிகை
 ஈரேழுலகங்களும் மகிழ்வார்
முந்தியேநிம்பப் பழமதுக்குளதாய்
 மூடியேமுடித்து வைத்தியல்பாய்ச்
சிந்தையுமகற்று முனியருள்வாக்கியஞ்
 சேவடிபணிந் தமைத்ததுவே. (539)

வேறு மட்டு விருத்தம்

அமைப்பதாலவை யஞ்சுடநீரஞ்சுபுடங்காண்
நிமைப்பதாலு மிக்குளிகையுஞ்சாரணைக்கசையும்
இமைப்பொழுதருள் யோகசித்த துவமியல்பாந்
தமைப்படியலைந்தலைந் துடலிரந்தனராண்டே. (540)

பார்ப்பதற்கென் மொழிப் பகர்வதுமரிதரி திவைபார்
நோற்பிதுகற்ப சாதனையுண்டவர்களின்நேசங்
காற்பதும்பனிரெண் டாண்டுமேயவரை யடுத்தனர்கள்
ஏற்பதும்வாசி கொண்டிடிலுமே சூதறிந்திடுமே. (541)

வேறு-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்
பல்லவி

சூதவாலைச் சுரோணிதநாதமே
வேதஞ்சொல்லும் விதிப்படியாகுமே

சரணங்கள்

நாதவிந்துவை யானறிந்துள்ளமே
சூதவிந்தைச் சொன்னோஞ் சூதில்லாமலும்
பேதாபேதம் விளங்கலா லிம்மொழிப்
பாதைபாதை பண்டதற்க வேணுமாய்
மாதனுபோக சாதனைவெய்தினும்
வாதம்வந்துமகிழ்ந்து நின்றாடிட
லேதுயெதுயென் தந்தைசெய்புண்ணிய
மெய்திடுமிம் மதிவந்து மெய்துமே. (542)

காட்டெருவு கவுதாரிப்புடமதாம்
மூட்டும்பூமியில் மூடிக்குழியெரு
மேட்டதுமண்ணது மேல்விரவிடு
நாட்டிடுங்கனல் நாடிப்பிரியாமலுஞ்
சூட்டிடுஞ்சுடர் வன்னிதொடுத்திடு
மாட்டிடுபுட மாறியெடுத்திடுப்
பூட்டுப்பாரிது பூநீருவருடன்
ஒட்டுமேயொரு கோடிசித்தாடுமே. (543)

வாயிலிட்டுடன் வாசிகொண்டுள்ளமே
பாயஓம்ஸ்ரீயும் சிங்குவங்குவென
காயத்திரி அங்குசாயிவாவா வென
தாயிரா மஹம்மாயி ராராவெனுந்
தூயவெண்ணொளி துரியத்துரியாதீதம்
தேய்வமண்டலந் திசையதுந் தேடுமாய்
மாய்வதோர்யோனி யாசையகற்றிடப்
பாய்வதுமண்ட ரண்டங்கடந்துமே. (544)

நாகங்கெந்தி சூதநாதமுங்கூடினாற்
கோதிலாரசக் குளிகையுமாயிடும்
போகுமேவெகு தூரங்கெவனமாம்
போதமாங் கண்டதாரைக் கொண்டுதினாற்
ஆகவுமொரு கடிகைவிநாடிகாண்
சாதித்தே யசுவங்களிரண்டினும்
வாகுமைவர் வசப்படுமாகிடிற்
றோகைப்ரசாசஞ் சுழிமுனைக்காணுமே. (545)

பாடபேதம் வேகம் பூநீர் விட ரசக் குளிகையாம்

ஓங்காரமென் றாதிக்கண்டதாரை
யாங்காரங்கொண்ட டக்கிமூலாக்கினை
வாங்குவாங்கு வாசிகொண்டுல்லாசமாய்த்
தேங்கிடாமலுஞ் சீர்பிசகாதிமீ

மாங்குயிலன்ன மாதுமலரடி
வள்ளுவன் வழுகாம லுரைமொழி
சாங்கமாய்ரச கெந்தித்தயிலமே
தாசன்பண்டித ராஜன்பண்டிதனே. (546)

ஓமெனுமோரெழுத்து கொண்டாடுமே
வூதிவூதியொரு கடிகைவிடாமலும்
ஆமெனுமெழுத் தாண்டுகடிகைதான்
ஆனதாலறி உவ்வெழுத்தாற்ஜெபி
ஓமெனுமையும் ஓம் அவ்வும்சிங்கெனும்
எழுத்துணர்ந்து யேழாண்டுகும்பித்திடிற்
கோமெனும்ரசச் சூதக்குளிகைதான்
கொண்டுவாயிற் கும்பித்திடும்பாகமே. (547)

கும்பியோகக் குருமுடித்தேவிடு
நம்பிகற்பம் நடந்துவருகையில்
அம்பிகாயோகம் நாட்டத்திலேயிரு
வம்புசெய்வதோ மானிடக்கூட்டமிற்
றம்பனமுஞ் சாதித்தே மௌனமாய்ச்
சம்பிரமத்துடன் சாதனையேறிடும்
வெ:ம்பிடாமல் வீணுக்குவீண் போக்கிடா
மேவிப்பாக மியம்பினோ மாண்டையே. (548)

ஆண்டேயுந்த னனுக்கிரகமாதலாற்
பூண்டுபார்க்கயான் பூரணங்காணிடில்
வேண்டினேன் விஸ்வரூபமென்பிராணனில்
கீண்டுங்கவுனங் கேசரங்கெடியினிற்
றூண்டிடுங்குரு சொற்பிசகாதிடி
லாண்டுவேழது மானதாற்பின்புமே
கூண்டுவிட்டுக் கோகரணங்களாடலாம்
மாண்டுபோவதேன் மானிடத்தோர்களே. (549)

நளராஜபூபதி தைலம்
வேறு

நளராஜபூபதிகாண் ரத்னகெந்தி நாலுபலம்
வளமேவுதாரமது வாங்குமிருபலங்காண்
டுளராமலம்பிகையி னுற்றதுணையாலு மென்றன்
களராம்நிலத்திலேயான் காட்சியெல்லாங் கண்டனனே. (550)

மேனியென்றாலேமாசம் வெந்துவிடுமேலவணம்
ஞானியென்றுமேயமுரி நாட்டிலனவோரறியார்
ஆனியென்றால் மார்பிலடி யாணியென்றுமே விளங்கு
மேனியென்றாற் க்ஷாரமிது வீரெட்டுஜாம மரைத்தே. (551)

பொய்யுறை யில்லையெனல்

மாறாதிடைகுறையா வைத்துகணக்காய்மயனஞ்
சிராகமைப்ட'தமாய்த் தீர்க்கமுடன்மர்த்தனஞ்செய்
பேராங்கெந்தித் தைலம் புரணிசொல்லிப்பொய்யுரைப்போர்
மாறாப்பிணிகளினால் வம்மிசமுமர்த்தனமே. (552)

பொய்சூதுயானறியேன் போதமுனிவாக்கியத்தால்
மெய்சொல்லும் உப்பைவிட வேறுமூலிகை விளம்பேன்
கைவசமொருகடிமைக் காண்பதுவே சூதவெள்ளி
யைய்யம்வரும் வங்கமதுக்கம் மூலியோடிடுமே. (553)

உப்புக்கைப்பதுச் சுண்ணமாகும்வாறு
வேறு

சத்தாகுமூலியமுரிச் சுண்ணத்தினிற்றாக்கிடவு
முத்தாகுமாணிச்சூதமுங் கட்டிமுன்னிற்கவுங்
கைத்தாலுமுப்புக் கைப்ப தருஞ்சுண்ணங் கடினமதே
மைத்தாலும்வத்திக் கல்லுப்புச் சாரம்பிர பல்லியமே. (554)

பிரபல்யமாகு மீரெட்டுஜாமம்பிசகுவரா
வரமுத்திசித்தி வெய்திடினுஞ் சக்கிரவானகிரி
யரங்கொண்டறுக்கும் பகிரண்டம்நீறியத் தூதியமதாஞ்
சரசூரபாணம் ராஜாங்கபூபதிச் சத்துருவே. (555)

உருவறிந்து செய்பவருக்கு வேதைகணக்கில்லையெனல்

பரனருட்பெற்று வம்பிகைப்பாதம் பணிய வும்யான்
திறமிதுஞானவெட்டியின் சூத்திரந்தெளிந்தறியக்
கரையில்லை கோடிக்கணக்கில்லைவாதங் கண்டறிவோ
குறமுவற்பூநீர் கல்லுப்புக்ஷார முருவறிந்தே. (556)

கெந்தகத் தைலத்தின் செய்பாகம்

பணிந்திடுங்கெந்தித் தைலத்தின்வேகம் பார்க்கவென்னா
லணிந்திடும்பாக மறிவதுங்கூர்மையதை வழித்து
நினைந்திடுங்கூர்மங் கருஞ்சதைவாங்கி நேர்மைபெறத்
தணிந்திடும்மந்தச் சதைகொண்டு கல்லினிற் றாக்கிடுமே. (557)

இடித்தொருஜாம மெடுத்தந்தக்கெந்தி யிவைபிசரி
விடுத்திடுமேனித் திருவுருச்சுண்ண மெய்க்குருத்தா
னுடுத்தந்தச்செய்திக் கதிர்முகம்வார முடனுலர்த்திக்
கடுத்திடுங்காந்திக் கருவிதுஞ்சொல்லக் கணக்கில்லையே. (558)

சொல்லவுஞானச் சிரோன்மணிபாதந் தெரிசித்துயான்
வல்லபமாகு மகராஜபூபதி மகிமையினாற்
றொல்லைவராமற் கருவியுமாறு பலஞ்சம்னா
யல்லற்செய்யாமற் கலசத்திலிட்டு வறிவிப்பனே. (559)

புடபாகமறிய
வேறு

கலசமதிற்சில்லு கருதுங்கணக்கதுமுண்
டலசலில்லாமல துமூடிக் - கலசமதில்
மண்சீலையேழு வலுவாய்ரவிமுகத்திற்
கண்டெரியக் கம்பியிடுங் காண். (560)

கம்பியிட்டுப்பூமிக் காரணமாயக் குழியில்
நம்பியொருகுப்பியதில் நாட்டிக் - கம்பியதுஞ்
சாணமது கறைத்துச் சாத்திடுபின்னாவதுமே
லானமணற் கொட்டிவையு முண்மை. (561)

வைத்துவிடுமக்குழியிற் மாமலைநாடுள்ளவயற்
கைத்திடுமேகாட்டெருவின் காந்திபோய் - வைத்துவிடு
நாட்டெருவைச்சுட்டுவனல் நாடிப்புடம்வந்நியிட்டு
வாட்டிடுமன் னாளதுபோய்மாற்று. (562)

மாற்றிவிடுமாற்றிப்புட மாறிவிடுமாறினபின்
ஆற்றிவிடுமேயனலை நன்கவச - மாற்றிவிடு
குப்பியதிற்றைலங் கொண்டுபதனமதுவாய்ச்
செப்பமுட னேயருள்வோஞ் சீர். (563)

சத்திதரிசனையறிய மகபூபதித்தைலம்
வேறு தாழிசை

சீர்பூத்தருளாலும்பர்கட் செயலாவதுமறிய
ஜெகஜ்ஜோதியின்புகழோதவு மகிபூபதித்தைலம்
தார்பூத்தசெஞ்சடைமேவிய சைதன்னியபீடஞ்
சனகாதிகட்பதினெண்மருஞ் சரணாகதியடையுங்
கார்பூத்தமாற்றிருமேனிதன் கமலாயிரத்திதழிற்
கருணைப்பதமலர்ச்சேர்வையின் கருவிக்களிர் நாலும்
பேர்பெற்றிடும்ரசகூதம்ம் ப்ரபல்யமுமதனாற்
பெருவாழ்குருவரமேதரு மருள்வாய்ச்சுழி முனையே. (564)

சூதவெட்டை

அயச்சட்டி கொண்டடவாயதை யனற்பட்டிட மெதுவா
யசையத்தனைக்கசியும் படியறியப் பளிங்கதுகாண்
சுயமைத்ததுப்ரகாசமுந் துல்லியத்துட நெய்தற்
சுடர்த்தீயாலெண்ணையாவது சோதித்திடுஞ் சொகுசாம்
அமைத்ததுரசசூதமும் பலநாளதுமூட்டி
மகிபூபதித்தைலமொரு துளிவிட்டுடன் வளமாய்ச்
சயிலம்விடுந்துளிமேற்றுளித் தைலம்விடவிடவுந்
தவளநிறமதுபோலது சளையாததுரசமே. (565)

சளையாதெனில்ரசசூதமுஞ் சயலாவதுகாண்கச்
சாதித்திடுந்தைலத்தினிற் றசைவேதைகட் கோடி
யிளையாதெனிலுலட்டைபோல் வருமேபதமெதுவும்
மிதமாயனற்கனற்றான்பட வதுபார்த்தீப வொளிபோல்
உளைபோயதுகளைகோடியு முடனேயுருவதீத
மொருகோடிப்ரகாசத்திலு முகமைக்குருவதனாற்
களைதான் மதிப்பதினாறெனிற் காணுங் கருவதுவுங்
கருதார் பெரியோர்களிவைக் கண்டாலுரையாரே. (566)

இடைதான் சரிபலமாவதும் வருமேசுருக்கதுவும்
இதுபாசமுந் தவறாதிடு மயச்சட்டிதனளவிற்
புடமேயொரு பலங்காண்விதம் புகழும்வனமூலி
புவிதன் மீதிலகத்தீசர்தன் பொருளானதின்ரசமும்
படவுமொரு பலமாவது பதறாதிழைத்தடவாய்ப்
பாரிதனிலருக்கனிட பலம்ரெண்டு வெந்த்தோடுஞ்
கடுங்குளிக்கற்கொண்டுடன் களிபோன்றி வைச்சாடிக்
கவசமிடுமண் சீலைநாற் காணுங்கருத்தறியே. (567)

முப்புயிதற் கொப்பில்லையெனல்

அறிவானதுங்கனயோசனை யறிந்துங்கருத்தழிந்தார்
அறியார்ச்சுடுவாதிகளு முவர்ப்பூவறிந்தனலவார்
முறிவானயினமென்றறி முப்புவிதற்கெதிரோ
முப்பூவிலாக்குப்பைக்கெதி ருப்புவிலாதொன்று
மெறிவாதெருபலமெட்டுகாண் குழிக்குள்ளொரு பொடிசெய்
இவைபாதிகாணதிலிட்டுநீ யியல்வான தோர்கவசம்
பறிகொண்டனல்ரவிதன் முகம் படநன்றது குளமாய்ப்
பதம்பாரதிற்ஜலம்போய் கனற்பண்பட்டிது காணே. (568)

பதுவேயிடைப் புடபாகமும் பதையாமலுமிதனைப்
பசையச்சூதரச வேகமும் பாகம்மொரு குறையாய்
இதை வைத்திடாமறுமுன்படி விதுபாகமேயருள
வினையோ வயச்சட்டிதனி லினிதானொருஜாமம்
இதமைத்திடு மயமேவிய தீபத்துடன்றெளிய
செய்திப் படியகத்தீசர்தன் செயலானதோர்மூலி
மதமைத்திடுங்கலுவத்திடு மத்தித்திடுங்கடிகை
மருபின்னெருக்கனுமேவிய வாழ்மூலிவேர்த்தோடே. (569)

தோடானதைக் குளிக்கல்லினிற் றூளாகவுஞ் சதைய
சூதரசக்குளிகைக்கிதுத் துடியாகசெய்கவசம்
பாடோவிலை நாடோடிய பயமொன்றிலைகிலேசம்
பதிநாரிவைகளைமேவிடு மதிசந்திரனொளிவாம்
ஈடோயிவைக் கெதிரோபழை படியோபுடம்பதமாம்
இகரோசதுர்ப்பலமத்தனை தசதீக்ஷைகொண்டினிலுஞ்
சோடோசரிசமனோபுடமிடை யோபதமறிவீர்
சொகுசாவதுங்கோடிசூர்ய செகஜ்ஜோதி காணாண்டே. (570)

செகஜ்சோதிப்ரகாசத்துடன் ஜெனியாதிதுரசமும்
தெளிவானபேருரையார்ச்சூதஞ் சிவயோகி களியல்பு
வகமேனிவைதசதீக்ஷக ளையஞ்சுமேயறியார்
அறியப்படுங்குறி நூறது மருள்பெற்றிடுங் குளிகை
யுகவாறுதிஜலசாகர மொருதன்கடிகையுமே
யுகமண்டலப்பிரசண்டகோ ளுலகாதிதபுவனஞ்
சுகமேவியரசசாரணை யொருநூறுமோரைந்துஞ்
சுருக்கேரிடதீபாக்கினை சொன்னோம் புடம்நூறே. (571)

100 - யோசனை தூரம் கெவுனம் பாய்வரெனல்

நூறானபின்னிவையோசனை நூறோடுநூர்காத
மூலரவிரசக்குளிகைக்கெதி ரூரோடுவூர்தோறும்
நேராய்ச் சூதகவுனக்குளி நீடாழியீரேழும்
நிகரோலொருவளவோவரும் நொடியோ மூலவாசி
காரார்கவிதீறார்க்கருதாரா ரருட்பெறவுங்
கனயோகிகள் தவமேகனம் பெருமேமதி யொளிவாய்ப்
பாரார்சகமுழுதும்பகி ரண்டங்களும்பாய்வார்
பனிரெண்டையும் பதிநாறதிற் பரிசுத்தம தாண்டே. (572)

400-புடமாயின் 100-யோசனை பாயும்

பலங்கொண்டது குளிகைத்திறம் பதறாதேநீபாரு
பலநாள தும்நானூர்புடம் பகரும்படிபாகஞ்
சலமேற்றிரு நடனஞ்செயி லுலகாதிதமுனதுள்
தவியாமலுங்கடல்வாரிமேல் நனையாமலீரேழும்
வலமாய்வரும் நூறோசனை வாரிக்குமேற்பாயும்
மயமாமிவை வடவாக்கினை நிகரோயிதற் கெதிரோ
பிலமான பேரிஷி தோற்றமும் பேசாரிதின்பெருமை
பெரியோர்கள் சொல்லாமலும் மதிதெளியத் திறவானோ. (573)

ஈதறியாமல் வெகுகோடி நாளிருந்தும் பலனில்லையெனல்

தெளிந்தோர் கட்செய்விதமா மிவைச்செய் வோராரிதரிதுச்
செய்தாலொரு வுறுதிப்படிச் சிவயோகிகள் வசியம்
அளிந்தோடினற்றிசைதோருமே யனித்தியமறியாம
அந்நாள் விதித்தமைத்தப்பல வனுபோகி களதனாற்
களிந்தோர்களுங் கோடாகோடி கற்பமதின் கூராற்
சாயத்திரி தேகத்துடன் கருவியுதிப்பதனால்
ஒளிவாகியப்ரபஞ்சமு முயிராவது ஜனனம்
ஒருகோடி நாளிருந்தும்பல னுதவாதென்ன விதியே. (574)

மகபூபதித்தைலமுண்ண பத்தியம்

விதியால் மதிவருமேவிடும் வித்தால்விளைவாகும்
விளைவாம் விளைவிரகந்தனில் மிகவேதனைப் பழியாம்
அதிகாணெடுத்தைலந்தனிற் றனிகுன்றிடைக் கிருதம்
தனைத்தாக்கிடு வினையாளர்தன் சருகாதொரு பக்ஷங்
கதிர்மேகமுங் கருமேகமும் வலமாகவும் பணியுங்
கடல்புக்கிடு மெரிப்பூச்சியுங் கவிச்சானதுமாகா
நதிநீற்பசும் பாலுந்தயிர் நன்மேஷமுமதுவாம்
நளினக்காடைகவுதாரியும் நண்பாமெனுமுறையே. (575)

மகபூபதி தைலத்தால் மேகம் 21-ம் சூலைசுர ஜன்னியும் நீங்குமெனல்

நீர்த்தாரையில் நீராமையும் நீர்கட்டதுமெரிவும்
நீர்சோருதல் நீர்ப்பாயுதல் நீர்தந்தியுமேகம்
காரிட்டது போலுங்கதிர் முனைதாரைபுண் சிலையுங்
கல்லாலடித்ததுபோலுடன் வில்நாணியுங் குடைதல்
வீரிட்டிது மதுமேகமும் வினைவிட்டிடும் பௌத்திரம்
மிகவேதனைப் பதினெண்சூலை விதமிந்த வாரறிதல்

தூரிட்டது வெகுபாச்சலுந் துர்மாங்கிஷங் கொறுக்கைச்
சேத்மங்களுஞ்சிதறிவிடுந் தேகங்களுஞ்சுகமே. (576)

சுகமாய்ப்பிணி வினையேகிடுஞ் சுரம்விட்டிடுஞ் சுடர்போஞ்
சுகசன்னியுஞ் க்ஷயகாசமும் பகையானநோயகலும்
அகம்விட்டகமதுதாண்டிடும் வகைகற்கந்தே னெனினும்
வால்மிளகு வேற்கொம்புடன் கிராம்போடதி மதுரம்
துகைதான்களஞ்சதுவானதுந் தொடுத்தேவெதுப்பனலில்
துடியாய்ப்பலம் வகைதான் சரிசமனாமொருகலசஞ்
செகமேவியக்களஞ்சாமிடைச் சீனியொடுகிருதந்
கிருதத்துடன் பணமாமிடைச் செயற்கண்டி வையறியே. (577)

பார்க்கும் பரிபூரணாதிதப் பசுமைசரக்கிதுகாண்
பலனோய் தன்க்கிடுபூபதிப் பகர்வாய் கெந்தித்தைலம்
ஆர்க்கும் பணவிடையாகுத லனுப்பானமிதூட்டி
அருணன் முகவுதயந்தனி லதிகாலையுமாலைச்
சேர்க்கும் பதசெளரியத்துடன் செலுத்திவிடும் பக்ஷந்
தினபோஜனங்கிருதத்துடன் பசும்பாற் பசுந்தயிராம்
மார்க்கத்துடனிவைதாக்கிடு மகிபூபதித்தைலம்
மனதாரயான் செய்திப்படி வசனிப்ப துமாண்டே. (578)

மதியுப்பறிந்து வுழைத்தவர்கட்கு யாவுமாமெனல்

வசனிப்பது வொருமண்டலமணிமந்திரவவிழ்தம்
மதியுப்பறிந்துரையாய்குரு வாக்கியந்தவறாமல்
நிஜமாமிவைபுவிபாரினில் நினைவாயறிந் துழைத்தால்
நிகரோவிதுக்கதீதங்களும் நவலோகம் பொன்வயதாந்
துஜராஜர்தன் மகிபூபதிச் ஜெகமேவியதைலஞ்
சொன்னார் குருமுனி வாக்கியஞ் சுகவாக்கெனவமுர்தந்
தசைநாதித்திசைநாடியுந் தாதுங்கனவிருத்தித்
தரணி தனில்மனிதற்கிவை சாதித்திடலாமே. (579)

தனயோகபூபதியை புருஷர்க்கீவதெனல்

சாதித்திடும் புருஷர்க்கிவை தனயோகபூபதியைச்
சருகாமலும் வருமுன்னிடைத் தவர்க்கொப்பதுமுண்டோ
வாதித்திடுமதனேஸ்வர மகிபூபதித்தைலம்
மகராஜிதராஜேஸ்வர வசனிப்பணமிடைகாண்
போதித்திடுந்தேன் வாரிஷி கனிகாணிவையமுர்தம்
புகழாய் மதிநிறம் போன்றது விருமேவியவனலிற்
சோதித்திடுந்தைலத்திடு துணையாய்ப் பசுங்கிருதஞ்
சுகமாய்க் களஞ்சதுபத்தது சொல்வோமினி யாண்டே. (580)

இனிதாகியவமுர்தந்தனி லிடுமேசீனியிவையு
மிதுதன்னிடையிவைதானது விராகனிடு மிழைத்துக்
கனியாகியவவிழ்தமிது கடற்புக்கிடும்நோய்கள்
கருதும் இவையொருமண்டலங் களிப்பாயுணர்வீராய்ப்
பனிதானது மேல்வீசுமோ படர்தாமரையகலும்
பசும்பாலுடன் றயிர்மோரதும் பதமாமிவை யருந்தச்
சனியேகிடும் பிணியோவிடுந் தவறாதிவைய விழ்தஞ்
சருகாமலுமொரு நாள்விடா சாதித்திடுவீரே. (581)

ஜடமிருகி தாது வலுவாகுமெனல்

சாதாரண வாதாரமுந் தத்துவந்தொண் ணூற்றாறுஞ்
சடமாதிதமெண்ஜானுடல் தாந்தான தும்விர்த்தி
வாதாதியுமிருக்கும்படி வாய்வுந்தசைவிர்த்தி
வயிரங்களின் வளமத்தனை வலுவாகிடுந்தாது
பாதாதியுமுடிமேவிய சயிலங்களுமூறும்
பனிரெண்டுடன் பதினாறுமே பதமாய்வரும் பகர்வீர்
னதுமவைமேவிட வேதாக முந்தவருந்
துரைகாணிது வரையெய்திடிற் சொல்வோ மினியாண்டே.(582)

இத்தாரணி மனிதர்க்கிடு யினிநாளிலும்பிசகா
இவைநாள் தவிர்மறுபத்திய மிருந்துமிடை குறையா
சித்தாடுவதினிமேலொரு செல்லுங்கெடுவாகில்
சீசீயிதுவெகுபாதகஞ் செய்தால் மனக்கிலேசம்
பத்தாவெனுந்தைலந்தனிற் பணமவ்விடை யிதுபாற்
பகர்வாய் பலமருள்வாய்த்தசை பரிவாயதைப் பணிந்து
முத்தாகிடுஞ்சத்தேயெடு மொன்றாயொரு மூன்றாய்
முணவாயருந்தருளிப்பசு வமுர்தமரைப்படியே. (583)

படிதானதிற் பலஞ்சீனியிடு பதமொன்றிடுப்பகர்வாய்
பசியாறிபின் நவவாடையும் பலவர்க்கமுங்கனியுந்
துடியாமிதுவெகுபோஜனஞ் சொன்னோந் தொழிலாளித்
தொடுவார் குறிம்திராவினிற் றொடுத்தோரிதி மோகம்
பொடியாய்ப் புணரதிபோகமும் புருஷற்கதிவிரகம்
புணர்வார்திவ்வியமதலீலைகள் புண்ணியஞ் சற்றேவிடுங்காண்
கெடுவாச்சுதுயிளைப்போதிடர் கிலேசமெனக் கதிகங்
கிருபாகரமடியாள்பேரிற் கெடிப்போழ்சத்தே விடுமே. (584)

சத்தாகிலுவிடுமேயுன தயவாலடியாளுந்
தனியே நில்லும்விநாடியதுஞ் சயிஞ்சுங்களையாரு
மெத்தாகிலுமினிநான்விடே னிருரெண்டுடன்ஜாம
மினிதான்பொரும் வனிமாதரே யிடையா திருகடிகைத்

கத்தாகியவித்தேவிடு கணவாயென்குருவே
காப்பாற்றுவுன்கடனே யெனைக் காத்தே ரட்சித்தருள்வாய்ப்
பத்தாவெனுஞ் சுவாமியடி பணிந்துமடமாதர்
பாலித்துடனாலிங்கனம் பகர்வார்ப்பகர்வாரே. (585)

சூதவேதையறிய

பத்தாகிலும்புடமேவிபின் பரிவேதைகளிதனாற்
பலகோடியுங்கோடாகோடிப் பகர்வோமினிப் பரிசைக்ஷ
அத்தாகிலும் ரசசூதமே யதனத்தனைப்பலமும்
ரசிதத்திடைஐயஞ்சொரு வதுவேயதுகொண்டு
வைத்தாகிலுங்குகைதன்னிலு மதிலிட்டிருமதனில்
மனதத்தனைச்சலிப்பத்திடு வசனித்திடுகுருவை
வித்தாகிலுமிடையாதிடை மெலியாதிதுசலியாது
எடுத்தேவிடும்பரிபத்தது மிகநன்றிதுவாண்டே. (586)

நூலாய்ந்துங்கருவறியா விழிகுருடர்களெனல்

தேய்வுக்கிவை வாய்வுக்கிவை செய்ஃகைப்படி மீதில்
தெளியாமன துரிதத்தொடு தெளியாவிதை யுரையா
ஆயும் பலனூற்றன்மொழி யாய்ந்தும்பலனேது
அறியார் ஜகமறியார்கரு வறியார்விழிகுருடர்
தாயுங்குருதந்தைச்செய்யற் றனக்குள்விழி தானாய்த்
தாரைவிடுஞ்சு வாசத்தொனி தனிவாசியுமுனையும்
பாயுங்கனவேகத்தொடு பகிரண்டங்கிடுகிடெனப்
பாதாளமுமேலிட்டிடப் பாயுஞ்சூதமாண்டே. (587)

ஞானவிதியறிய வெண்முத்துப்போற் குறள்பாடியது

அடியேனெனுந் திருவள்ளுவ னமுதேகவிமொழியு
மருள்தாவரமருளேவிதி யறியாமலும்வெகுநாள்
குடியாளர்தன் வேளாளர்கள் குலமேவியுமிலகுங்
குருவாகியவருள் பெற்றிடிலவர் போனபோக்காகிக்
செடியானதோர்க் குறட்பாடியு முலகங்களில் மொழிகாண்
கிலேசத்தது வெண்முத்திது கிருபைக்கிது கெடியாந்
துடிகொண்டருளிடை பின்கலைச் சுழிகண்டிலற் கியானி
றுரியாதி தமருள் பெற்றிடும் வரமுத்தி காணாண்டே. (588)

கெந்தித்தைலமறிய

மறைபின்னொரு முறைகேளினி மறைநாலுமேசோதி
வகைகண்டுனக்கெவர் சொல்வரோமருமங் களையாவும்
குருமாமுனியவர் தன்செயல் வரமேவருமமுர்தங்
குடியாயிருமதி கண்டுடன் மகலுஞ்சனி

வருமையுனக்கேன் காண்வரு மகலுஞ்சனி
வங்கனிப்பதுமிடர் போய்விடும் வளர்கெந்தி யின்தைலங்
கெருவம்மதக்கு ரோதங்களைக் கெற்சித்தடித் திடவுங்
கிலோசமிலாவமுர்தச் சிலை கெந்திப்பலம் நாலே. (589)

கிலேசமிலாவமுர்தச்சிலை கெந்தியருளியல்பாய்க்
கேளாய்ப்பொடி தூளாயெனிற் கெணிதத்துடன்கிருவி
மிலேசத்துடையோர் சேந்திடில் மேன்மேல் நரிமிரட்டி
வெகுசாய்ப்பு விதனிற்சங்கெனு மிகவும்புகழ்ந்திடுவார்
வலசேகிடுங்கணிகாலையில் விரவித்தொரு படிகாண்
வ்டிகட்டிடுரசநீர்சலம் வசனிகுப்பிவளமாய்ச்
சிலேத்துமத்தோடுதோடாதிகள் தொண்ணூற்றறுபேருஞ்
சிலநாள் குடியிருந்தேகிடுஞ் ஜலமத்தனைவாங்கே. (590)

தூளாய்ப் பொடியமுர்தச்சிலை சுயகெந்தியுமிவைகாண்
சுருக்காயெடுவொருபாத்திர மிருக்கப்பொடிஜலநீர்
றேளாகியப்பால்தானிதுத் தெளிவாய்வெகுபதமாய்ச்
செயநீரிதுவிடுமேதுளி துளிவிட்டதைப்பிசரி
வாளானதோற் கதிர்மாமுக மறவாகவைத்தெடுநீ
வளமாயிவையெழுதன்விசை வசமாய்ப் பொடிச்சியா
நாளாகிடுமொருவாரமுந் தூளாய்ப்பதம்வருசா
ரவித்ன்னதும்பொடிபோலுட நாளுக்கு நாளறியே. (591)

தெரிந்தவர்கள் குருவின்பதம் பணிந்து செய்வாராயின் தவறாதெனல்

அறியாமலுஞ் சிறியோர் கட்செய் யனுபோகமும்பிசகா
அறிந்தோர்கட் செய்ப்பதமேபத மணுகத்தனைபிசகா
தெரியாதபேரினவனூற்படி செய்கைதனை யறியால்
தெரிந்தோர்கட் செயமணி மந்திரஞ் சீர்தான் பிசகாது
குறியாயிடுமகத்தீசரன் குருவின் பதம்பணியக்
கொடிதாகிய வினைப்பாதக மெளிதாகிடு மினமாய்ப்
பரியாசமும் வெறியாய்ப்பிடித் திடையா திருந்துறுதிப்
பலபேர்மொழி வழிபார்வையும் பாழாய்விடும் விடுமே. (592)

குப்பியில் மருந்தூட்டி சீலைசெய் புடபாகமறிய

விழிபார்வையுமறியாதவ ரரிதாகிலுமருமை
வெளூர்க்குப் பியுமிரண்டொன்றொரு விதியாய்வருகிடிலும்
வழிபார்த்திடுமொரு குப்பியில் மருந்தத்தனையூட்டி
வதுசீலைமண்ணேழுஞ்செய்து மறிவிப்பதுமறிய

அழியாரவிமுகம்வீசவு மதுகுப்பியுமலா
வதுனுட்பொடி மயிர்க்கம்பிடு வறியாதொருமனிதர்
பிறியாதொருவிது வண்ணமாய்ப் பின்பத் தொருகுப்பி
பிலமாகவும் புவிதன்னிலும் புதைப்பீர்பிறியாதே. (593)

புவிதன்னிலும் வெருங்குப்பியிட் டதுபூமியிற் குழிதான்
புதைத்திட்டுடன தின்வாயினிற் பின்குப்பியை நுழைத்து
கவியத்துடனுளுந்தானதிற் கவசங்கனமதுவாய்க்
கலங்காமலுஞ் செய்தேமணற் கருதிப்படிக்கனலில்
அவிதன் புடமணல்மேல்மூடி யதுகுப்பியுந் தெரியாது
அனலானதுவொரு கூடையு மணவிட்டதையாட்டி
தவியாமலுமெருவானதைத் தணற்றீயது மாற்றி
தளராமலுமெருதள்ளிடு தனித்தேன் குருவாண்டே. (594)

க்ஷணப்போதிலும் பிரியாவிடை சருகாமலுந் தண்லுந்
தைலங்களின தின்வாடையுந் தணலாவதுங்கவிய
மணமாவதும் வருகாப்புகை மதிரத்தினவொளிவா
மலர்மேவியவருளம்பிகை மகிமைதனையறியார்
உணராவதுந்தணலாத்திடு முதிராப்படிதைல
முடுகுக்குழிப்பிடமேயெடு முறியாமலுமதனைக்
குணரத்தினமமுர்தச்சிலை குருவாகிடுமமுர்தங்
கொடிதீவினையிவையேகிடுங் குணவல்லியமாண்டே. (595)

இதற்கீடொன்றில்லையெனல்

நவரத்தினவொளிவோநிகர் நவநீதமும்நிகரோ
நானாவிதவிசிதங்களும் நடனங்களும்வினோதம்
இவைரத்தினப்ரபல்லியந் தைலமிதுபதன
இமையோர்க்கிரி பொதிகைக்கிரி யீடோவிதற்கெதிரோ
புவனங்களும் பகிரண்டமும் பாய்ந்தேபரந் திடலாம்
புகழோகோடி மதியோகோடி புனிதக்குருபதமுஞ்
சூக்ஷாதிதசூக்ஷமிதுச் சொல்லத் தொடங்கினனே. (596)

சொல்லாற்றைலத்தின்கரு சொன்னாரிலை பெரியோர்
சுருதிச்சுகஞ்சலிதற்சுழி துடிகொண்டுபின் கலையிற்
கல்லாலடிதைலத்துணர்க் காயாபுரியவையுங்
கருவூர்நகர்கனகஞ்சொரி யழகாபுரிசூழும்
வில்லாலடிதனுபாணமும் வியாக்ரமிவைக் கொவ்வா
விசிதத்தமிழ்மதுரமெனில் விசிதங்களுமறிய
பொல்லாவையு மறிவித்திடும் பொருள்காண ருளிதுகாண்
புவிமீதினில்வெகுசித்துகள் புனிதர்க்கிதுபுகழே. (597)

இந்நூலி லிடர்களொன்றுமில்லையெனல்

சுண்ணங்களின் வேகம்படச் சுருக்காய் வருந்தைலஞ்
சொர்னப்பறியீரஞ்சது சூக்ஷாதிதசூக்ஷம்
வின்னங்களுமென்பாடதும் விரதங்களுமிலைபார்
விரும்புங்கலையூதித்தண ராமல்விதமதுவாய்
அன்னமெனுங்குயிற்றன்மொழி யபிராமியி னருளால்
அனுநித்தியமறவாமலும்அடிதாள் தொழுதேத்தி
வின்னமிவையின்னூல்மொழி யிடர்தானிலை யெண்ணூர்
இசைந்தோர்கனம் வாழ்ந்தோர் புவியிழந்தோர் ஞானியவரே. (598)

இத்தைலம் உண்ணும் எடையும் அநுபானமும் அறிய

அறிவீர்தைலத்தின்குறி அதிதங்களுமறியார்
அவனிதனிற் சிவயோகிக ளறிவாரிதின்சூக்ஷங்
குறியாகவுந்தை ஈதனிற் பணமத்தனை யளவாய்க்
குறிபார்த்தெடு தேங்காயதின் குணமான தன்பாலுஞ்
சரியாகவும் பலமஞ்சினிற் சீனியடும்பலங்காண்
அசனித்திடுமதிகாலையி லவிழ்தமுணர்வீர்காண்
அறியாதெனுமொருமண்டல மிருவேளையு முணரத்
தேகந்தனிலெய்தும்பிணி ஜடம்விட்டதுபோமே. (599)

ஓர்மண்டலமுண்ண கருமேகம், ஜலமேகம், வெண்மேகம், படற்றாமரை, அரையாப்பு புண், மூலம் முத லிய நீங்கும் விவரம்

ஒருமண்டலமினம்ரெண்டது மொருநாளிலும் பிறியாது
உட்காச்சலும் விடுமூஷண மோடிவிடும்பாரீர்
கருமேகமுஞ் சலமேகமும் வெண்மேகமுமகலுங்
கர்மாந்தரவினையாவதுங் கடற்புக்கிடுமாகில்
உருவானதும் படர்தாமரை துடைவாழை களரையாப்பு
புண்வாய்வுடனுள் மூலமும் முளைமூலமும் பிரியுங்
குருசொற்படி முறையோடிதைக் குறிப்பாலளிப்பதனால்
குடியேகிடுந் தைலத்தினிற் குணமாமிலை யாண்டே. (600)

இர ங்கட்டுங் காமேசுரமு மிதற்கீநிடல்லவெனல்

இதுவானதோர் தைலந்தனி லெய்தாதொரு நோய்கள்
இருரெண்டு நாற்சாமங்களி லிரதங்களுங்கட்டும்
வதுவானதோரிடை கூறிலை வாசமெனில்வாசம்
வாடைப்பட ஸ்ரீசங்கையில் வரும்வாறிதன்பெருமைத்
திதுவானதுங்காமேசுர மெத்துவானதும்நிகரோ
தின்றாலனு போகந்தனிற் செயற்கண்டிடுஞ் சுகமாய்
மதுவானதுவிரகந்தனில் வசமாய்ப்புணர்வீராய்
மனையாளுனைவிடவுமொரு மார்க்கங்களுமிலையே. (601)

சூதங்கட்டும் பாகமறிய

மார்க்கமறிரசசூதமுங் களஞ்சேரஞ்சுபலமாம்
அயச்சட்டிடும் விளக்கேத்திடு மாறாமலு மொருநாள்
பார்க்கத்துளிப்பதமாய்விடு பகருமடிக்கடிதான்
பதறாமலுங்கீழ்மேலுடன் படியும்படிதைல
மார்க்கும்மிதுவவிழ்தமிடு மதீதப்பிணியகலு
மணல்கொண்டுடன் தணலேறிட வெட்டைக் கிதுவதீதஞ்
சேர்க்கரசம் வலுவாகிடுஞ் சேர்ந்தேகடிசாகுந்
தெளிந்தேகளிம்பற்றே புகையற்றேஜெயமாமே. (602)

புகையானதுமீரெட்டினிற் புனற்சூழ்ந்துநீர்கசியும்
புரையேது காணுறைகாணிது புவிமீதினிலரிது
புகையாயெடுமெழுபோல்வரு முருட்டிப் பலமிடைபார்
முன்போலிடை குறையாதெடு முறையெத்தனைகோடி
தகையாமலுங்கருனொச்சிவேர் தளமாய்ச்சலம் பொசிய
சார்வாயெடுகனகோடினை சற்றேகலுவத்தில்
குகைபோலவுமெழுகுப்பத மயனங்களும்வருதல்
குறியாய்க் குகைப்பதமாய்ப்பிடி பிறியரமலு மாண்டே. (603)

இடைச்சூதங்கொண்டினிமூலிகை வியல்பாய் ரசமூட்டி
இசையாகவுமதின் மேல்மூடி யிருமண்சீலைசெய்து
படைமேவிய ரவிதன்முகம் படவுங்கனல்சரகாய்ப்
பதமாயெடு வடுகன்பூசைப் பணிவாய்மலர் சொரிவாய்
வடம்பூண்டருள் திருமாலெனு மலர்பொற் பதமேவி
மகிழ்வாய்வனயெருவுங்காடை வளமாய்கனல்மூட்டித்
திடமாயிவைமாறாமலும் வேறாகிடிற்கூறாய்த்
திருமாலுடன்வரதேவியும் வரவேயுனதருகே. (604)

இவ்வாசிரியர் நூற்கோர்வை விவரமறிய

கூறார்சிவயோகிக்கொரு குறையெய்தினு மெய்தாக்
குகையாக்கிடுங்கவசங்களைக் குறிப்போடென வகத்தி
பாராயினிரசசூதமும் வெடிபாடிலைபாரீர்
பகர்வார்களோ கடுகத்தனை விடுவார்களோ பெரியோர்
வாராயினிதிருவள்ளுவ னெனும்பேரகத்தீசர்
மகிழுஞ்செயரச செந்தூரம் வசனத்துடனருளப்
பேராய் நவரத்தினமெனும் பெருனூலதைக்குறுக்கிப்
பிசகாமலு மெண்ணூறதாய்ப் பின்னூலுமைஞ் ஞூறே. (605)

அஞ்ஞூர்பஞ்சரத்தினமெனு மையஞ்சதுநாடி
யமைத்தாலனுபோகிக்கெனு மருள்வந்தெய்திடுமா
இன்னூல் நவரத்தினத்தினா லிழையாயிரங் கோர்வை
இழைத்தேனிருவினையேகிடப் பிழைத்தேன் கெந்தியதனால்
முன்னூல் பெருநூலாயிர மைஞ்ஞூரினிற்றொகுதி
முப்பூமுடிந்தாலுஞ் சக முழுதும்விலைத்தகுமோ
யென்னூலினிற் கரணாதிக ளெய்துங்குருமுடியும்
இணையொப்பினைக்கணையோவிதுவிணையோ சொல்லுமாண்டே
(606)

இணையாவதும்புடம் போட்டுட னினிநாளெனிலருள்வேன்
எடுத்தேயுரைத்திடுசூதமே யடுத்தேபலந் தாக்குக்
கணையாயொருகளஞ்சேயிடை கலுவந் தனிற்றாக்கி
கணக்காய் ரசமதுவிட்டிழைக்கருதித்திடுமிழைத்து
வணக்கத்துடன் பிசைந்துண்டைசெய் வலுவாமெடுத்ததனில்
வடிவம்வெண்ணப்பிரகமும் அவைதான் பலங்காலு
அணைக்குந்துய்யநிறந்தான்வெளு ரறிந்தே குண்டுமணிதான்
அதனுட்பருப்பதுவும்பல மதுகாலெனிலாண்டே. (607)

காலாகியசீனிப்பலங் காற்கொண்டுடன் தேன்கால்
கலியேதுகாண் கதலிக்கிழங் கதுதன்ரசத்தாட்டிச்
சூலாகிய மெழுகுபோலவு மயனந்தனைவழித்துச்
சொகுசாய்க் குகைவழியாமலும் ரசசூதமதாக்கிச்
சேலாகிடு மேல்மூடிதான் சீலையேழுஞ்செய்துச்
சீராய்க்கதிர் முகமாமதிற் செலுத்தும்படிமேவி
மாலாகிய சரகாயது மடிந்துஞ்சலஞ்சுருண்டால்
வளமாய்க்குமட்டிதன்கனல் வாயாலிவையூதே. (608)

பதினெண்பேருரையாத களங்கீதெனல்

வாய்கொண்டுட னூதிக்குகை அனல்போல்பழுத்தெனினும்
வசமாயெடுத் தாறும்படி வளமாயனலாற்றி
பாய்கொண்டது கவசத்தோடு பார்க்கும்படிசூதம்
பழமாமது ஆலங்கனி பரிக்ஷைச்செமுமையதாம்
ஆயும்படியுரையார்பதி னெண்பேர்களுமறையார்
மகிழ்பெற்றிடுங்களங்காமிது வயிரங்களின் வலுவாந்
தாயுமருள்ரசிதங்களுங் களஞ்சாவதீரஞ்சுந்
தகமைப்படி யுருக்குமுகஞ் சாதித்திடு குருவே. (609)

குரு ஒன்று தாக்க

ஒன்றே குருவாகும்படி யுருகும்முக மூட்டி
　　ஒரெட்டரை வயதென்றறி யுண்மைக்குறி யிவைகாண்
நன்றானது ரசசூதமும் நாடான திலிலகும்
　　அறிதானது மிரள்போலவு நாடுஞ்சங்கு சாயல்காண்
குன்றாகிடு மலைபோன்றிடுங் குவியுந்தனகனகங்
　　குருமா முனியருளா லெனிற் கூறுந் தொழிலுணர
பன்றாலிது பழம்போற் கனிப்பழுக்கும் பரிபலிதம்
　　பண்போரி வைமறைத்தார் பலகலையு முரைத்தாரே. (610)

கெந்திக்கட்டு

கலைதான் பனிரெண்டென்பது கதிர் சூரியனொளிவாங்
　　கருவாகிய கெந்திவலுக் கட்டென்பது மறிவீர்
பிழையேது காணெவராற்றகும் பிழைப்புக்கிவை பலமாம்
　　பிரயாசமோ கரையேறிடும் பிரயோசன மிவைதான்
தழையாலெயுங் கலைப்பட்டலைச் சளையாதெனிதவியா
　　சந்தேகமோ தசைமாத்திது சாதித்திடும் புனிதர்
வளையாதலுந் தொழிற்பார்த்திடு மலைநாடுள வளப்பம்
　　வளவான பொழிகுமரி யெனுமதியா லறிந்திடுமே. (611)

பொழிந்தேன் வளர்குமரிச் செழு புகழோ யெவரறிவார்
　　புனல்நீர்ப் பசைப்பனை னுங்கிவைப் புதுப்பாண்டமே புகல்வீர்
கழிந்தேனவை சோர்கொண்டுடன் கணக்காயிடை கருதுங்
　　கனம் நால்விரற்கடைமேற் கெந்தி கவசம்உவர் பரப்பி
ஒழிந்தச் சரக் கதுநாற்பவ முணர் வாயுவர் கீழ்மேல்
　　ஒருகால் விரற்கடை யூட்டிசோ ரொருமைப் பெறமுன்போல்
மொழியாகவு மறுபின்னிடு மதுநால் பலங்கெந்தி
　　யுடனேயடுக் கடுக்காயதைப் பூட்டிச்சோருமூடே. (612)

எரிப்புப் பாகமறிய
வேறு தாழிசை

ஊட்டிவான் குமரிசோருமேலுவிடு
　　யூடுருத்தி விசைமூன் றெனில்
லோதுங்கெந்தி பனிரெண்டு தன்பலமு
　　முன்னுழைத்துப் பதுங்கெனிலுமே
சாட்டிப் பாண்டமதிலே துலங்கவொரு
　　சட்டிகொண் டெனில்வாய் மூடிப்பின்
சார்வுமே விவளர்வாலுகை யதனிற்
　　றணலாவாரையதின் கம்பினால்

நாட்டினிலுமவ் விதமாக வன்னியிடு
    நாளொரு விசிதஞ் சாமத்தால்
நாடியே கனலும் வாடிடாமலுட
    நாளொரு கெடுவும் ராவினில்
மேட்டியா மிவையும் பாண்ட மேல்மூடியை
    மேவும் வாயைத் திறந்தலால்
விசிதவான்குமரி செழுமை சோர்கறுகி
    விவைதன் பாக பதமிவையெடே. (613)

பதமெனும் வருதற்பாகம் வன்னியிவை
    பார்த்து வாத்திவிடு பண்மையாய்
பார்க்கப் பார்க்கப் பறிபோன் றிடுதலுமே
    பசுமைதன் னிறமும் நிகரதோ
சாதம்வெந்து கறிவேறு ரூபமெனிற்
    சாங்கமாகு மிவைகாண் கிலீர்
தற்பாப் பெருமைச் சொற்ப மல்லவிது
    தங்கம் போலுருகிக் கட்டிடும்
வேதநான் மறையு மேவும் வான்குமரி
    வேதையான திதில்வேணதாய்
மேலுணர்க்குப் பெரிதாகுங் கெந்திகுரு
    மேதினி தனிலு மறிதுகாண்
தாதுவும் வலுவீராறு வாண்டெனிலுஞ்
    சாதித்தோர்க்கு பெரும் பாதைகாண்
தத்துவக ளறிதறிது கற்கவுமே
    தன்னைத் தானறிவ துண்மையே. (614)

அமிர்தமின்ன தென்றுணர

தத்துவத்தி நெறியருமை யாரறிவர்
    தபசியானவர்க ளறிவராம்
தரணிமீதினிலு மனிதாரறிவர்
    தாபரத்தினிலு மறிவரோ
வித்தையாவதெனில் ஞானவாலைதமி
    ழின்பரத்தின் மொழியமுர்தமாம்
விகடமேதுகவி மதுரமோன புனல்
    வேண தீர்த்தமதில் மேவினோர்
நத்திடும் விதுரவீரபாண்டிதர்கள்
    கருதிடு முலகில் காண்கிலீர்
கருவூர் நாட்டிலகுஞ்சந்திர புட்கரணி
    கமலமாயிரத் தெட்டிதழினில்

மத்தசித்த கணவாலை குண்டலியின்
மலர்முடிக் கமலபதம் பணிந்து
அடியனான திருவள்ளுவன் மொழிவ
தாகும் நூல்வளமிதற் கீடில்லையே. (615)

அதனிலிட்ட மருந்தாய்ந்து பார்த்துளடு
ஆனதோர் அருமைகெந்திகாண்
விதனமேதுவுனக்காக சுந்திரமே
வேதையான மருந்தருளினேன்
பதனமாகவொரு பாண்டமாமதனிற்
பழையதன் படியுமூட்டிசோர்
அதீதமாகுமிவை செய்த பாகப்படி
வாறிகெந்தியுமே பதங்கிடும்
சூதவித்தையிது புகையுங்கட்டிவிடுஞ்
சொன்னேன் சொன்னேனிவைச் சோதனை
வாதவேதை யிவைபோலுங் கோடியெனிற்
வசனமாக வுரைப்பார்களோ
பேதமாவது முன்செய்ததோர் பதமும்
பேதித்தேனறியு மண்டைகாண்
நாதங்கெந்தியிவை சோருமேலு மிடும்
நானிலத்தி லறிவார்களே. (616)

அந்தமான பரிபூரணத்தினொளி
யாதியான தொருகெந்தியும்
அம்புவியின் விளைவான தாகிடிலு
மதனில் வைத்திடும் வைப்பானதில்
கெந்தியாவதிவை ராஜராஜர் மகிழ்
கீர்த்தியெய் திடினுங் கிரிகைகாண்
கேவலம்பெரிது தீக்ஷயஞ்சுவிதங்
கேளீர்முன் பதமுங் கேள்விதான்
சுந்தரத்தீயனற் புகைகளேகி வலுச்
சுடர்கள் மாறிஜலம் பசுமையாய்ச்
சூக்ஷநாயகி சர்வேஸ்வரிகமலஞ்
சூக்ஷசடாதாரமே போற்றிபின்
மந்திரக்கிரிதன் வலமிடம்புரியு
மானுக்கா ளினியமேருசூழ்
வசனியுமொருதன் வராகனாவதிடை
வைத்துப் பாண்டுமலை சுத்தியே. (617)

சுத்திவைத்து மருந்திட்டு செய்கையிலும்
சுடர்களிட்டுவெகு துலவுபோய்
எத்திவத்திகனலண்ட ரண்டம்பிளந்
தொத்தி தொத்தியே றியேகிடும்

சித்திமுத்தி யிவைவைர மாமிகவும்
ஸ்திரமதாகிய தோர் கட்டதாஞ்
சத்திவாலை புவனாம்பிகைக்கமலத்
தாட்பணிந்து மிகவோதுவாம். (618)

கெந்தி கட்டிற்றூம்பர வேதையாகுமெனல்

ஜெந்திகட்டு வலுவேகம்வேகம்பட
கிரீயுமே குமலைச் சார்பதும்
வெந்து நீறிவிடு மந்திரக்கிரியும்
வந்துமே பணியு மாதலாற்
றொந்தங் கோடியது தூம்பர வேதையிதிர்
றொட்டு சற்குருவைக் காட்டவும்
வந்துமே பணிதல் ராஜராஜர் மகிழ்
வச்சிரக்கெந்தி யிதன்வாறிதே. (619)

மடலுமடலும் அவைதுண்டு துண்டெனிலு
வயிர்பிளந்திடு வான்குமரியை
விடவுமதினுள் ளெனிற்கந்திகட் டெனவும்
மேன்மையப்படியே வாய்மடிக்
கடலினீர் பெருகல் மலைகடோரும் புனற்
கசியுங் கண்டிலர் நீர்ச்சோரிடிற்
சடமுமிறுகி விடும்பத்தை பத்தையது
ஜாணிகள மெனுந்துண்டதே. (620)

சாணிகளமெனிற்றுண்டு முண்டெனிலும்
சாடித்தேவிடுவீர் சலம்வரா
காணீர்பண்டிதரேகதி ர்முகம்படவும்
கருதும்நீர்கள துவற்றிடும்
பேணிவாடியது சுருளகாந்தல்வரும்
பெருமைகாண் ரவிதன்கனலதால்
வாணிபமதி தவ்வாறு கண்டுவதை
வைத்தெடுத்து வசனிப்பரே. (621)

கெந்திகட்டும் பதமறிய

வசனமாவதுபின் சுருள் கட்கட்டப்பதம்
வாச்சுதென்றுவகை காண்கிலீர்
நிசமனந்தத் தொழில்மெழுகு கோடிபதம்
நேர்மைச்சுண்ணமது கோடிகாண்
பசுமையாவதுந் துரிசுச்சுண்ணமதும்
பளிங்குவர்ணமிவைப் பார்த்திடில்
அசலிதுக்கு நிகரானை வீறிடுதல்
ஆனகெந்தி யறியாண்டையே. (622)

ரசசிந்தூரத்தால் வயது ஏழரை காண்பதெனல்

வீரிடும் ரசமும் விந்துகட்டிவிடும்
வெகுவிதத்திலுஞ் செந்தூரமாந்
தேறிடும் ரசிதஞ்சத்த விராகனிடைச்
சேர்ந்திடுங் குகையிற்செம்பதுஞ்
சீரிடுமிவையும் விராகன் மூன்றெனிலும்
சேருங்கொல்லன் குகைசேர்த்திடு
மூறிடுங்கரியிட் டோங்கியூதவும்
வுருகுமாமுகங் கெந்தியே. (623)

உருகிடும்விதமும் விராகனொன்றுவிடும்
ஒன்றுவொன் றெனவுருகிடும்
வரும்பதத்திற் குகைசெங்கற்கீரியதில்
மணிவிளக்கிலிடுஞ் சயிலமாம்
இருவிதத்திலெடு மூசைசாய்த்துவிடும்
ஏழரைக்கு வயதப்புறங்
கருவில் மூலிசிவசேர்த்துனாளனேக
காட்சியாவது வுங்காண்பரே. (624)

வங்கங்கொடுத்தூத வயது எட்டரையாமெனல்

கனகமென்ன கருவங்கம் வைத்துவூதக்
கசடுசெம்பதுவுங் கருகிடும்
வினவுஞ்செங்கற் பொடிலவணம்வைத்து
புடமேவு மூன்றுவிதமானதால்
தனமுமாமதித மெட்டரைக்குமது
தளர்ச்சியாவதிலை சாட்சிபார்
மனமுமொன்று வைராக்கியமாகயிவை
வைத்துப்பாரு மாணாக்களே. (625)

ஆலப்பழத் தைலபாகமறிய

கொடிகள்மேவி கனகம்பளாவிதனைக்
குலைகள்சோரப் பழங்குமுறுமாய்
வடிவமானவுத்திரத்தி நேர்மைவளர்
வாழும்பட்சிகள் வனாந்திரங்
கடிகளாகிகனி விரையுதிர்ந்துமணற்
கருவிலாதொருமைக் காண்கிலீர்
குடிகள்மாடுமே தியாடிடுமனுகா
குவலயந்தனிலுஞ் சென்றிடே. (626)

சென்றுஆலருகே செல்லும்போதொருத்தன்
    செப்பிடிலு மொருகூடை
அன்றுபோய்மறுநாட் காலைகூடையிலும்
    அந்தவீதமொரு வாரமாய்
நன்றுநன்றென வினாடியாகிலுமே
    நாளுநாளுந் தினநாளுமாய்க்
குன்றுபோற்கனியும் நிழலிலாவதுமே
    குமுறும்நீர்களரக் கூறுமே. (627)

குமுறுநீர்கள துதொக்குதொக்கெனவுங்
    குமுரியேவிரைந் தோடுமாம்
அமுர்தபாண்டமதிலிட்டு கம்பதுவும்
    வாரியேகனியை வைத்திடும்
அமுர்தசட்டியது மேலுமூடிசீலை
    சந்துமண்ணெனி லுந்தாக்கிடும்
அமுர்தமாம் புவியிற்குழிதன் வெட்டிசிறு
    வயதனிலக்கயந் தாக்கிடே. (628)

கலயமேவியதின் மேலும்பாண்டமது
    கருதியேயடிமண் சீலையுந்
தலையுமாவதெனு மணலுந்தாக்கிவிடு
    தானதற்கு மேலெருவிடு
நிலையுமாவதெனி லெருவதும்நிறை
    நிற்பந்தத்துடனும் நின்றுதான்
உலையுமாவதறி வன்னியிட்டுபிட
    மூதியேவிடு வீர்அனலதே. (629)

கனலினாலனலுங் காந்திவீசுமது
    காட்டெருவினிட தணலதும்
புனல்சொரிந்துவருந் தைலமேவிவனற்
    புகழுமே யதீதகாரமாம்
அனலினாற்சுடர் களதீதமாகுமெனும்
    ஆலமவித்துவெனும் நேர்மைகாண்
சுனைகள்மேலருவி மலைகளூடுருவிச்
    சோனைபாயும் புனலருவியே. (630)

அந்தநாண்மறுபின்னான நாளதீதம்
    அக்குழித் தைலமதுவெனில்
விந்தையாகுமெனிற் குப்பிதன்னிவிடு
    வேதைகள் வெகுவினோதமாம்

மந்தைமாடுவரும் போலதுக்குநிகர்
மனிதர்கோடி குடிவாழ்க்கைவிட்டு
இந்தக்கோலமெனில்வாறு காணறிய
எந்தெந்தத் திசையுமேகியே. (631)

மெழுகைப் பதனஞ் செய்யும் விதமறிய

குப்பிதன்னிலிடு தைலமாமதனிற்
கொண்டுபீங்கானது வொன்றுகாண்
செப்பிடுமதனிற்றாக்கிப் பின்புமொரு
தேவையான பலம்விட்டுதான்
வெப்பிடும்வலுவு கெந்தியோர்பலமும்
வேகம்வைத்திடுவீர்க் கதிர்முகஞ்
சுப்ரமாமெழுகுதனை யெடுத்துமறு
சூக்ஷமாம்ரஜித சிமிளிலே. (632)

சிமிளில்வைத்து பதனங்கட்செய்துசிவ
காமிவாலைபதம் பூசியுங்
குமுளிதங்களொடு மெழுகுதன்னிறமுங்
கோடிகோடி ப்ரபைவீசிடில்
அமுளிதங்களொடு வருணன்றன்னொளிவு
அதீதமிந்தத் தொழிலறிவீரோ
வமுளியென்பதுவும் வான்குமரியிட
வாறுசொல்லவகை கேளுமே. (633)

மேவுமம்புவியிற் கெந்தகத்தின்மெழு
கேதுசொல்வதினி செம்புகாண்
தாவும்விராகனிடை பத்துவொன்றிடையுந்
தாக்கிமூசை தனிலனலிடு
கோபதாபமொழி யொன்றிடையுங்குரு
கொண்டுகூட்டியே துழாவிடுக்
காவலாளிவர் கனகமாமிதுவுங்
கண்டபேர்கட் கருவாளியே. (634)

சுத்தமான சுயம்பத்து மேற்பரிதஞ்
சுயம்புகாணு மிவைச்சுயம்பென
வித்துமே வினோத ஜீவனங்களுமே
வேண்டும்போது வெகுவேதை காண்
கற்றபேர்களிதைக் கைவிடாமலுமே
காட்டொணாது பரிரகசியம்
பெற்றபேரு ரசவாதம் விட்டகுறைப்
பெருமைகாணும் வெகுபெருமையே. (635)

நாலுநாலு மிரண்டான பத்ததுவும்
ரஜிதமாங் குகையி லூட்டிடு
வாலையா மிதுவுங்கெந்திமா மெழுகில்
வைத்து விராகனிடை தாக்கிடு
ஆலைபோலும் சரமாறுவோடும்பசை
யறுவிபோலு மதுபாயுமாய்
வேலைவேலை வெகுவேதை யாவதெனில்
வித்தையொன்று யினிகேட்டிடே. (636)

ஏமவிந்து பரிதங்க மாமிது
மென்னவேக மிதுவேகமாம்
பூமிவிந்து வுவற்சாரமென்றதுவின்
புகழினாலதி சாரமாம்
காமிவாலை யபிராமி யுன்றனருட்
கருணை ஞான சிவசூக்ஷுமும்
வாமிமுன்பு யெனக்கோதி வைத்தவரம்
ஆமதற்கு நிகரில்லையே. (637)

இல்லையென்னூற்றிரு வள்ளுவன்மொழியு
மெண்ணூர்சூத்திர நவரத்தினமாஞ்
சொல்லவில்லையெனில் மாண்பர்கள் வசனஞ்
சொன்னதாகி லெழுநரகில்வாழ்
வெல்லொணாதுவிந் தண்டம்இரண்டனிலு
மேவெடித்து சிரமேகிடுங்
கல்லினாலெறிதல்லில்லின் பாணமெனுங்
கண்கள்காண் ஜடமுங்கருகுமே. (638)

கருகிடுஞ் ஜடலங் கர்மனோயெய்திற்
காலனும் பிணிகொண் டெய்திலாற்
பெருகிடுஞ்சலநீர் வெகுமுத்திரக்ரீச்சுப்
பிரமேக மீறுந்தமர் பாய்ந்திடில்
மருகிடுமதனிற் கங்கைமீறிடுதல்
வாருதிபெருகற் பொங்கிடல்
இருகிடுமெரிவு வமுரிபாய்தல்சுவல்
ஈர்த்தவானீர் வளஞ்செப்புவாம். (639)

நெட்டிட்டே மதுகேணி யானவழி
நீர்கட்டு மெரிவுநிலை கொளா
தட்டிட்டேகியிது பின்னுக்கேயதையுந்
தனுவினுள் ளெரிவு புண்ணதாம்

முட்டிமுட்டியது வாய்வுமீறிடுதல்
மூலம்விட்டு முடிபளீலெனும்
வெட்டிட்டே யெரிதற்கன்மை
ரெண்டுபிளந் தெட்டியெட்டி யுதைத்தேகுமே. (640)

அபானத்தி னளவில் மூலமானகனல்
அருகிருந்து வுறவாடியும்
உபாயமாக வரும்வாதசீதளமும்
உனையே விட்டும் பிரியாதெனில்
அபாயமாகிடுதல் மேகவாதமொடும்
அணுகிடுங் கபாலசூலைகாண்
இபமுமண்டையிடி யாண்டரண்டமது
நிகரிலாத வினையெய்துமே. (641)

எய்திடுஞ்சனன மிருவினைப்பயனை
இவைதன் கெந்தியெனிற் குன்றிடை
எய்துமல்லதினியரிசி தன்னிடையில்
இடைதன் பாகமொடு வேகமாம்
மைவிழி யமுர்தவாலை மேவிவளர்
வாமியாகும் பருவங்களிற்
செய்கைமுன்பு வடிவானதோர் பதமுஞ்
சேருமேஷ மெனுஞ்செப்புவாம். (642)

செப்பும்வாதமொடு பித்தசேத்மமெனிற்
சிறந்தே தொண்ணூற் றாறுபேர்
இப்புவிதனிலு மெய்திடும்பிணிகள்
ஏகிடும் வினைகளாதலால்
தப்பிதங்கள் வருகாது கெந்தியினிற்
ஜாடிடு மதித நோய்விடும்
முப்புவித்தை யறியாத பேர்கட்டொழில்
முடிவதில்லை யினிமோசமே.. (643)

மோசமேது மெழுகே யெடுத்துமேஷ
மோனமாகு மிவைபாலினில்
வாசமாய் வருதற்காலைமாலை யொடு
மண்டலமு முண்பீ ராகையால்
காசபித்த க்ஷயமேகிடும் புகைகட்
காசியொடு கபநாசமாம்
மேகமேகிடு தற்றீரும்பத்திய மிலைத்
தீரா நோய்ப்பிணியுஞ் சிதருமே. (644)

மனிதற்கெய்தும்வினை வருகிடும்லபித
வல்வினைப் பயனிதாதலால்
அனித்தியமா நற்சடம் வச்ரதாயமெனில்
அருளினோமவிழ் தவறிவீராய்
பனிதமாமெனவு முடலிலெய்தும்வினை
யோடிவாடி ஒளித்திடுமென
வனிதைமாது மயலாலு மேகமது
வருதலுண்மையெனி லாண்டையே. (645)

கெந்திகட்டால் தாம்பர செந்தூரம்

கட்டுங்கெந்திவலு வேகமாகு மெனில்
கருதும் விராகனிடை கண்டெடு
கெட்டிசெம்பெனிலும் விராகன்ரெண் டெனிலுங்
கீர்த்தியங் கதிரவன்பாலினால்
அட்டியேது கடுகீழுமேலுமது
சாத்திடுமயன கவசமாம்
அட்டியேது யினிஅருணன் றன்முகமும்
ஆறவைத்து புளியரணையே. (646)

புளியரணையிவை லேரில்லாதபடி
போதமாகுங் கிழங்காவதும்
வளியதாகவுமேமை பதம்வருதல்
மயனமா மதனைக்கவசஞ்செய்
முளியவாக வதின்மேலும்பூசிகதிர்
உடனே தன்முகமும் வைத்திடில்
பனியிலாதபடி கோழிதன்பிடமும்
பகருஞ் சீலையது மண்செயே. (647)

சீலையேழினிலுங் கவசஞ் செய்திடுமே
செழுமையான கதிர்முகமெனில்
வாலைதேவி மலர்க்கமல பாதமடி
தொழுது வன்னி தணல்மூட்டிடு
மாலைநேரமதுவாகு மேபிடமும்
வைத்துகாலைதனில் வாங்கிடு
சோலைமா மலர்தன் மாதுதன் னருள்வந்
தொழுதுடன் பணியலாகுமே. (648)

பணியலாகும் பிடமாறியாத்தியெடு
பார்க்கும்போது செழிப்பாயிடிற்
கனியதாம்புர செந்தூரமாகுமெனில்
கண்டெடுத்து வெகுபதனமாய்த்

தனியவிராகனிடை யதுமருந்தவையுந்
தாக்கிடுவீர்சம விராகனாய்ச்
செனிதமாகும் ரசஞ்சேர்த்து கூட்டிமிகச்
சீரதாகுங் குழிக்கல்லதே. (649)

கற்குழி யெனிலுங் கல்வமாமதனிற்
கருதுங் கொம்மட்டியின் மாதளம்
வல்லபமெனிலு மதனிற்சூதமெனு
மாட்டிமா மயனமதுவென
வெல்லும் தங்கமது தகடதாகிவிடு
மேலுமா மயனம்பூசிடு
வல்லுமே பகலுங்கோழி தன்புடமு
மாறவைத்தே னருளாண்டையே. (650)

ஆறவைத்து புடமே யெடுத்துவருள்
ஆன செந்தூர மதேயிதனிற்
பேர்விளங்கும் பரியேமமாதனிற்
பேதமில்லா கனிரசமதுந்
தேரவுமதி தாம்பிரத்தின் குரு
செந்தூரந்தனையே மத்தியும்
மாறவுங் கடிகை ஜாடியே விடுவீர்
மயனமாமிவையு மாண்டையே. (651)

மயனமா மெழுகு வருதற் பாகமது
வகையதாகப் பரித்தகட்டின் மேல்
சயனமாக யிருபுரமும் பூசிரவி
தன்முகத்தினிலும் வைத்திடு
வயனமாகுங் கதிருணன் காந்திபட
வருதல் தன்பதமுமானதால்
வியனமேது விதமெழுக தாகிவிடும்
இந்தப்பாகமது செய்வீரே. (652)

இந்தப்பாக மெனிலேழு மாரற்புடம்
எய்தினால் வருதற் செழுமையாய்
அந்தசெய்தி யெனிலான பின்புயெடு
ஆன தாலதின் சூக்ஷமும்
இந்தப் பாகமறிவோர் களிந்தமுறை
எய்தினாலும் இடரோயிலை
மைந்தனென்று மனமே மகிழ்ந்துமனம்
ஆரச் சித்தியெனும் வாச்சுதே. (653)

வாச்சு திந்தமுறை வாதிகாளறிதல்
வயது வெள்ளிதனக் கேழரை
யாச்சுதிந்தகரு ரஜிதமானதிவை
யானதோரிடையு மூன்றதாங்
காச்சுதே கருதுமூசை தன்னிலிடுக்
கனலினாலுருகி ஜலமதாம்
பேச்சுமேது குருவொன்று கூடியபின்
பிழைகளேது குருவாண்டையே. (654)

இதனால் வறுமை நீங்குமெனல்

உருகிடும்பதமுஞ் செங்கற் கீறியதில்
ஊட்டியேவிடுவீர் நீட்டிப்பார்
குருவுமாகிடுதல் வயதுமேழரையுங்
கூறலாகுமிவைச் சிலுகிலை
வருவதும் பெரிது மகிழ்வதும் பொருளும்
வந்திடில் வறுமையேகிடிற்
சருகிடா முறைக ளனுபவித்துவரச்
சார்வுகண்டு மதிசாத்திடே. (655)

சார்வுகண்டு குருதமிழ் விளங்குமியற்
சாட்சிகண்டு முறையானருள்
தூரனந்தம் பழிகோபமு மிதச்
சூதுகன்ன மொடுகளவதும்
பாரளந்த யிடமேவலும் பொருள்கட்
பாசம் யாவையு மகத்திடில்
சேரனந்த வபிராமி வாலைபதஞ்
சேர்வை செய்து வடியைத்தொழே. (656)

விஷப்பாண்டும் பதினெண்விதசூலையும் நீங்குமெனல்
வேறு - சந்தக்கலி மடக்கு விருத்தம்

தெரிசித்திடும் பரிசெந்தூரந் தேகம்தனிற்பிணினோய்ச்
சீனிப்பசுங்கிறுதத்துடன் சேரும்பயிரளவு
வருஷத்துடன் ரவிசந்திர னிருவேளையுமாதல்
வசனித்திடவொருமண்டலம் வளமென்றுணர் வீராய்த்
துரிசித்தெனிற்சிறுவற்கிது பெரியோர்களுக்காகில்
துன்பங்களு முன்போக்கிடு முண்போர்க்கிதுனோய்போம்
பரிசித்திடும் வெடிசூலைபோம் பதினெண்வித வினைபோம்
பாண்டாகிய விஷப்பாண்டதும் பரந்தேகிடு மாண்டே. (657)

ஆண்மையில்லாதவர்களுண்ணும் பாகம்

விரகாதி தமில்லாவிடில் வெண்ணைப்பணவிடைதான்
மேலாகவுமதைமத்திடு வினவுமிருவேளைக்
கரணாதிகட்கருவிகளுங் கட்டுப்படுமாகிற்
காமத்தொடுகுரோதங்களிற் கலகப்படுவாராய்ப்
பிரபல்லிதமெனிலும் பொருட் பிலமாகிடிற்றாதும்
பின்கட்டது வேகத்துடன் முன்கட்டிடும் பிராணன்
இரதங்களுமுதகங்களுந் தைலமிகப்பசையு
மிடரோவிலைக்கோலாகல மேவித்தருள்வீரே. (658)

தாதும்வலு வேகத்துடன் ஜடமாவதுமிருகுஞ்
சளையாதிடிற்றனுவானதுஞ் க்ஷணப்போதிலுங்கட்டும்
வேதாகமனூலதிதன்முறை வினவும்பரிக்குருத்தான்
மெய்காணிவைபோய் போக்கிலை விதியெய்திடாதலையா
பாதாதிகள் முடியாதிதங் கேசாதிகட்டூரம்
பாடோபரியாரொப்பவர் பகற்போலிவைப் டூலிதஞ்
சேதாதிகள் அணுகாதொரு ஜனகாதிகள்சூக்ஷஞ்
சித்தாதிகள் பதினெண்மருஞ் சிரஞ்சீவியின் பதமே. (659)

இங்கிலீகக் கட்டு

சேர்வைச் செயற்றொழுதும்பணிந் தருளுந்துதி பெறவுஞ்
செயலிங்கலிகமெனுமாவதுந் திடமேவிய கட்டாம்
பார்வைக்கொரு பலமாகிய பருதிமதிநிறமாம்
பாரித்தணையா ரொப்பனைப் பாகமறி யார்தாங்
கோர்வைக்கிது வெண்ணூரெனில் முன்னூரெனுஞ்சூக்ஷங்
குருவாமிங்கிலீகமயச் சட்டிதனிற்றாக்கிச்
சார்வுக்குறிவேனென்பது சாரித்திடுவெள்ளந்
தனிநல்லெண்ணெய் யொன்றேவிதஞ்சயிலம் விளக்கேற்றே. (660)

தூரிசுச்சுண்ணமிட்ட ஜலத்தை சுருக்கிடல்

வேனென்பதுமூங்கில்முளை விண்ணீரெனுங்குருத்து
மிகவுமிடித்ததுநீர்ஜல மேவுமொருபாண்டம்
நானென்றது ஜலமார்த்தம நாடிச்சுருக்கேத்து
நவிலுமிதுவேகத்துட நன்றாமிதுகட்டும்
வானென்றது மயிற்றுத்தமே வளமாகியச் சுண்ணம்
விராகனிடு ஜலமாமதில் வருகுஞ்ஜெயநீராந்
தானென்றெனிலாங்காரமே சாதித்துடன் முறைசெய்
சாராதெனிற்சத்திராதிகட் தரணிதனில கற்றே. (661)

சத்திராதிகளதீதப் பெருஞ் சார்வாகியதொழில்கள்
சாரும்படியவர்தன்மனந் தவறும்படிவேறாய்ப்
புத்திராதிகளமிசைப்படி பூர்வஜனனங்கள்
புகழெண்படியொரு வெள்ளமும் போதத் துடனாகில்
எத்தாய்விடுமென் வெள்ளைநீ ரிட்டேலெளிப்பாகம்
இடைகூறிலைத்திடமாமெனி லெய்துமிவையாகிற்
கற்றோரிதைமெய் கொண்டெனிற் கைபாகமுந்தவறா
களிகொண்டுடனெனையாட் கொளுங் கருவூர்தனிலாண்டே. (562)

லிங்கக்கட்டு
வேறு கொச்சகக்கலிப்பா

தங்கமிவைப்பொன் னொளிவீசுஞ் ஜாதிலிங்கக் கட்டியது
மங்கமெல்லாமேமநிற மதுவரிபோய்ப்பொன் மயமாங்
கெங்கையெனுமூங்கில்முளை கேளுஞ்ஜலநீரதனி
லிங்கமவைகட்டிடுதல் நேர்மையிதுகாண்கிலரே. (663)

ரஜிதத்தின் வேதை

நேர்மையென்ன விக்குருவில் நெஞ்சகமேவிராகனிடைத்
தீர்மைப் பளிங்கதுரஜிதந் தினுசீரஞ்சுவிராகனிடு
பார்வையொரு மூசைதனிற் பாச்சிவிடுவீரதனைத்
தூரியெனவேயனலுந் தொட்டுகனல்மூட்டிடீரே. (664)

கனலதுகொண்டே யெரியக் காரணமாயூதிடவு
மனலெனிலுஞ் சூடுருவி யானபின்புமூசைதனில்
தணல்பாவிற் சற்குருவிற் றானெடுவிராகனிடை
மணல்மறவா யூட்டியதை வாங்கிடுவீர்மூசையதே. (665)

ரசித வேதை

மூசைதனிலேயிருக்கு மூலமாம் ரசிதமதைப்
பாசம்வைத்தூதியபின் பார்க்க பதினாறுகண்கள்
ஆசைவைத்துப்பாடுபட வாறேழுமாத்ததுவாந்
தேசம்விட்டுப்பின்பு மறுசேதியென்ன காண்கிலரே. (666)

வறுமையெனுஞ்சிறுமை வந்தயிடக்கூறதுபோம்
குறுமுனியின் வாக்கியத்தாற் கோடிபிணி தானொழியுந்
துர்மாங்கிஷமிவையுஞ் சொன்னோஞ்சுர சன்னிவிடும்
அருமையிஞ்சித்தேன் முலைப்பா லனுப்பானங் காண்கிலரே. (667)

அயச்செந்தூரம்

நெல்லிக்காய் கெந்தசுத்தி நேர்மைபெருங் கட்டெடுத்து
வல்லியயச் செந்தூரம் வளமதனையானருள்வேன்
மெல்லியெனுமேதியிட வெண்மையொளிப் பாலதனால்
நெல்லிக்காய்க் கெந்திதனை நிமிஷத்திலாட்டிடுமே. (668)

ஆட்டியதை மர்த்தனஞ்செய் தானஅயமேதகட்டிற்
பூட்டிவிடுமேமயனம் பூசியிருபக்கமதுங்
காட்டிவிடுமேகதிரிற் காந்திபடவைத்துயிவை
வாட்டிவிடுமண்சீலை வைத்துவிடுமேரவியே. (669)

கதிரவன் முகம்படவுங் காந்தியதினாலுலர்ந்து
சதுர்முகவனைப்பணிந்து சார்ந்து எடுத்தே அதனை
யெதிர்கொண்டிருபதெரு யெண்ணிப்புடமேகருத
விதுரமெனுங்கணலதுகொண் டெய்தும்வன்னி தாக்கிடீரே. (670)

தாக்கிவிடும் வன்னியிட்டு சாதுரியமாய்ந்தணலில்
ஆற்றிவிடுமே வயமுமாச்சுதுகாண் செந்தூரம்
பாக்கியவான் தொட்டெடுக்கப் பாழாகாதிம் மருந்து
யோக்கியவான் பண்டிதற்கு யுண்மை பணிந் தோதினமே. (671)

வேறு

உரைத்தே நெடும்புடஞ் செந்தூரவர்ணமொளிப்பதில்லை
விரைத்தேயெடுத்துகளை யாறிபக்குவ மேவினதால்
உரைத்தேன்பரணியி லடக்கிவைத்தே ணந்தச்சூதையறிந்து
உரைத்தேன்மகிபதித் துரைராஜராஜர் துதிப்பதற்கே. (672)

அரைப்புப் பாகம்

துதிக்குஞ் செந்தூரங் குழிக்கல்லிலிட்டுத் தொந்திச்சமன்
விதிக்குமிடைக்கிடை யரிதாரங்கூட்டிவிரைந் தரைக்கப்
பதிக்குங்கொம்மட்டி மாதளங்கனிரசம்பாகமது
மதிக்கமத்தித்துச்சார்கொண்டு வூட்டிவலுக் கவுமே. (673)

மயனத்தை வாங்கிப்பரித்தகடன்னில் வரிசைய தாய்
மயனத்தைப்பூசி யிருபக்கமூடி வன்னிரவி
மயனத்தைக் கொண்டு கனல்வீசுமாகில் வலுத்தபின்பு
மயனத்தை யோட்டில் வைத்துமேலோடு வசப்படுத்தே. (674)

வசமதுவாகச் சீலைமண்ணேழு வயணமதாய்
வசமதுவாகும் ரவிகாட்டிவிந்து வதுவுலாத்
தசையொடுகுக்குடவனற் கொண்டுமாட்டித் தடைவருகா
விசைவதுமாகப் புடமேழுமிந்த வியல்பறிந்தே. (675)

இயல்பாகுமேழுப் பிடமிந்தப்பாக மெய்திடினும்
அயற்சூழ்ந்தயேம செந்தூரமாகு மதையெடுத்துக்
கடற்சூழுங்குப்பி தனிலிட்டுமேலுஞ் சாந்தமதாய்ர்
குயிற்போன் மொழிச்சிவ யம்பிகை பாதங் குறிப்பறிந்தே.(676)

அம்பிகைவாலை யருள்பதம் போற்றியடி பணிந்தே
நம்பிக்கையாக யானறிந்தேனந்த ரகசியத்தைக்
கும்பித்துவம்பிகைப் பாதாரவிந்தங் குணவிசிதந்
தம்பித்துக்கும்பக ரேசகத்திலென்ன சாதித்தேனே. (677)

இப்படிவெள்ளி யிடையதுமூன்று மெடுத்துக்குகைச்
செப்பிடவைத்துக் கொல்லன்குகைதனிற் செயம்பெறவும்
அப்படியூதி யுருகிடும்பாக மானபின்புத்
தப்படியில்லா குருவொன்றுதாக்கித் தனையறியே. (678)

வேறு

சற்குருவின்பாதஞ் சரணாகெதியென்று
யுக்கிரமதாய்க்கெந்தி வளமோதக்கேள் - சற்குருவைக்
கார்த்துக்கரையேறிக் கண்டேன்கறைத் தொழிலைப்
பார்த்து மனமகிழ்ந்தேன் பார். (679)

மகிழ்ந்து குருசொன்ன வழலையெனுமுப்பைச்
செகமகிழயானுரைத்தேன் செய்கையாய் - மகிழகுரு
வேழையுந் தப்பாதிவை முறைகாண்சூக்ஷம்
வாழ்விது காணம்புவியின் வார். (680)

அகதிகட்கு அன்னமிட

அகதிபரதேசிகட்கு அன்னமிடு வின்னமிலை
பகுதியிடும் நாடோறும் பாழிலைகாண் அகதிகட்கு
மனதுவரும்படிக்கு மதியைத்திருத்துருத்தி
கனகமது விதிக்குங் காண். (681)

குடவனோரு பலங்காண் கொண்டுவொரு மூசையினில்
இடமதுவுந்தானுருக்கத் தேறினாற் - குடவனதும்
வருமதுமாத்தேழு வழலையிடபத்துகுரு
வுருக்கு முகம்விராகனிடை யொன்றே. (682)

யோகிக்காம் போகிக்காகாது

யோகிக்கொருவேளை யுண்ணவறுசுவையும்
போகிக்கேனிந்தத் தொழிற் புவியில்வாழ் - யோகிக்கு
யேவற்பொருளிடமும் இன்பமிதையகற்ற
பாகமுனக்கேன்வருதற் பார். (883)

பாரினிலுமாண்பர் பரிக்குவெகு பாடுபட்டுத்
தேறிடவுமாட்டாமற் றேங்கினார் - பாரிதனிற்
றேசங்கடோறுந் திரிந்தலைவரல்லாமல்
வாசமவர்ச் செய்பவர்தன் வாறு. (684)

வேறு

இருநூற்றிருபத்தாகிய யிருரெண்டுடநான்கு
மிலகும்புவி செகமண்டல மீரேழுடனி வையுஞ்
சரணாகெதியெனுமேவிய ஜனனங்களுஞ்சூழுஞ்
சதுர்வேதநான் மறையோதுவர் ஜனகாதிகள் ரிஷிகள்
வரமேதருங்குருசுவாமியின் அனுக்கிரகமும்புரியும்
மகிழ்வாய்ப்பதம் பெருவாய்க்குரு வுருவாயெனக்கருள்வாய்
அரன்பாதமுந்தெளிவோர்தமக் காரொப்பினைக் காணும்
ஆண்டேயகத்தீசரெனை யாட்கொண்டருள்வாயே. (685)

சாத்திரங்களைக் கருதுபவர்

ஆள்கொண்டகத்தீசரெனக் கருள்தந்திடும்போது
அடியானதுபிசகாதெனி லாரொப்பினைக் காணும்
வாழ்வாரிவைனூலாலறி மகிழ்பூபதிராஜர்
மகிழ்ந்தோர்சிலர் வாழ்ந்தோர்புவி மாண்டோர்சிலர்கோடி
மூழ்வரரறிபலபேர்களு மொன்றாகியமனமால்
ஒருமைப்படுங்குருவாலறி யொன்றைப் பிடிமனதைக்
காண்பாயதில்வெகு சாத்திரங் கருதும்படி கவியோர்
காணப்படுஞ்சூதொன்றறி கருவாளி களாண்டே. (686)

பொய்யுரைப்பாராயின்

கண்டோர்சிலர் காணோர்சிலர் கருதோர்சிலர் காண்போர்
கல்விக்கடலமுர்தச்சுழி கலியெய்திலைகாட்சி
அண்டத்தொடுபகிரண்டமு மாய்ந்தோர் பெரியோர்கள்
அனுபோகமெய்தமைப்பாகுத லாரொப்பனையீடு
விண்டோர்வனம்பெரிதாகிய விளைவான தோர்மூலி
மெய்யென்பதுபொய் சொன்னியல் வீணல்லதுபோகா
கொண்டோடியும் போவாரெம தூதாகிய வினைகள்
குடிகொண்டுடன வர்தன்பலங் குலநாசனமாண்டே. (687)

வேறு கலிவிருத்தம்

வன்னிவாய்வுவப் புவுமறிந்தபேர்
எண்ணியநினைப்பெலாஞ் கபஸ்தமாம்
பின்னியேவிடு மூலிகையிலொரு
வுன்னிதநிஜமுண்மையா மாண்டையே. (688)

வேதைவேதை வெகுவிதமாடிடற்
சூதவித்தை சூக்ஷசடாதாரமாங்
காதமேகிலீர் கண்டபேர்மூலிகை
வாதஞ்செய்வோர் வறுமைகளில்லையே. (689)

இம்மொழியி லிறுந்தாற்பிழையது
வம்பதாகு மதைக்கிழித்தேயெறி
நம்பிச்செய்கையில் நாடியகாரியம்
பம்பகமிவைப்பார்த்துக் கொளுத்திடே. (690)

நாகவித்தை

நாகவித்தை நடத்தையைச் சொல்லவும்
பாகமாகும் பரிக்ஷையைப் பார்த்திடில்
ஆகமத்த லடிதவறுமெனில்
வேகவுமொழி வேள்வியிற்றாக்கிடே. (691)

சித்தர் சிவமுத்தராவர்

சத்தியமகத்தீ சரருளினால்
வித்தையித்தொழில் வேறுகூறில்லைகாண்
சுத்தமாமதி துய்யவெண்ணுப்பினால்
சித்தரானார்ச் சிவமுத்தராண்டையே. (692)

பெண் மயிலால் பேதையராவர்

ஜன்மசாகரச் சேத்திலமுந்தினோர்
தன்மனந்தன்னைத் தானறியாதலால்
உன்மனதுனக்கேன் மறந்தாயடா
பெண்மயல்தனிற் பேதைகளாவரோ. (693)

கிண்ணம்வார்க்கும் பாகமறிய
வேறு மடக்குத்தாழிசை

சுயம்பதாகுஞ் சொன்னோஞ் சத்துநாகமாஞ்
சுத்தமாயிடு தன்னிடையோர்பலஞ்
சயனமாகுமீரெட்டு மெட்டுப்பலந்
தானதுகருக்கட்டி யதனிற்காண்

வயணமாகும் பீங்கான்சிறு மாதிரி
வன்னியிட்டுக்கொல்லன் குகையூதினாற்
செயமிதாகும் ரெண்டொன்றுமுருப்படி
செய்வீர்செய்கை விதிப்படிகாணுமே. (694)

நாகக் கிண்ணம்

செய்கையாற் கருக்கட்டி நாகந்தன்னிற்
சில்லுத்துவாரமதற்கு விழாமலும்
மெய்யதாகும் விளங்கிடுஞ்சட்டிதான்
மேலும்வைத்தறியாமல் விளங்கிடீர்
ஐயனே யகத்தீசரருளினால்
அதிதமாஞ்சிறு பீங்கானதனிலுங்
கையுமெய்யாக் கருதிடும் பாகமாய்க்
கண்டிடுங்கருவாளி யறிந்திடே. (695)

கருதினார்கட் கறுவறியாமலும்
கண்டுபார்குரு காண்பதரிதுகாண்
வருகுமேமணல்வாரி சல்லித்துடன்
வாகதாகமணல் முக்காலாவதும்
பெரிதிதுகுருப்ரபல்லிய வாழ்க்கையாற்
பேதமில்லாபிறித்து யான்கூறிடில்
விருதுமேவிய தாளியதற்குளே
வேள்வியானச் சுடரிடும்வாலையே. (696)

வன்னி பாகமறிய

வாலுகைதனில் வன்னியிட்டேயனல்
மாலையேவரும் வைத்துவடுப்பினில்
சாலதாளிச் சருவிமணலிடு
மூலமாகுமுக்காலாய் மணற்சொரி
ஞாலதாளி நடுமையமாவது
மேலுங்கிண்ணம் விரவிமணலிடு
பாலதாகும் வான்குமரிச்சோரதும்
பாச்சிடுமிரு பாண்டத்திற்றாக்கியே. (697)

பாண்டமாந்தனிற் பாச்சிடுஞ்சோரதும்
வேண்டுமுக்கால் விளங்கிடும்பாகமா
யாண்டுபத்துவது வயதானதால்
பூண்டுமேவிப்புனல் வருமுண்மைகாண்
மாண்டுபோமறுபத்து நாற்பேர்களுங்
காண்டீபமிது கற்பாதிமூலியால்
தோண்டுசெய்துத்துகைப் பனிரெண்டதுங்
கண்டுமேபிடி கற்றாழைமூலியே. (698)

செங்குமாரி செயநீர்

வான்குமரிமதி புனற்சோரிடில்
மருவிதன்சலம் வருநீர்ப்பிரளயம்
பானமாமனு போகமிவையெனிற்
பார்த்தெடுசெங்கடுக்காய்ப் பொடிவளந்
தானெனுமூன்றுபத்துடன் ரெண்டதுங்
தாக்கிடுமதின்றோடெனுந் தூளதை
ஊனெனுமிரு பாண்டமதிலிடு
உதகமாகுஞ் செயநீர் செங்கற்றாழையே. (699)

ஜெயநீராவதுஞ்சேர்த்துப் பிசைந்திடில்
மயமெனுஞ்ஜலமாறாய்ப் பெருகுந்
துயர்விலங்கியது துரிசுசுண்ணத்தினாற்
சோரினாற்சுத்தநீர் ஜலமேவருந்
தைரியத்துடன் ஜலநீர்கொண்டாறுபோகந்
தானதையினிச் சாலினிற் றாக்கிடு
மயமுமாமயமாது ஜெயநீரதை
வசனியுமொருசின்னக் கரண்டியே. (700)

சுவாலை பாகமறிய

கரண்டிதன்னிற்கருதி நீர்வாங்கிடு
கைபதம்பிசகாமல் நடுமையம்
பிரளுமாய்ப்பிரளாமற் கிண்ணத்துளே
பின்பதேநீர் பெருகவுந்தாக்கிடு
வரமருளகத்தீசர் கிருபையால்
வனாந்திரத்தினாவாரையின் கம்புநால்
சுருளவுஞ்சுருள்வன்னி கிண்ணத்துள்ளே
சுண்டிநீர்கள் சுவாலையி தாண்டையே. (701)

பரிமலைபோல் குவிக்க

சுவாலையாகுந்தொடு குறியானதால்
சுத்தநீர்ச்சலஞ்ஜெய நீர்விடுமெனில்
அலையதாகும்படி யெட்டுநாள்
இராப்பகல்கணக் காகவருந்திடில்
உலைதன்வாயிலுடன் மெழுகாஞ்சுடர்
ஒருகரண்டிதான் வாரியேயூட்டிடும்
மலைகள்போலும் வசப்படுமேபரி
வாதமென்றபேர்வாரி மண்ணப்பிடே. (702)

பிறந்தபின் இறவாதிருக்க கற்பமுண்ண வேண்டும்

மண்ணும்விண்ணுமதைப் பிசைந்தேயடி
வாயிலப்பிமறுதேசம் போய்விடு
கண்ணுங்காணுங்க வடுகளில்லைகாண்
காண்கிலீ ரிந்தனூல் விடுவார்களோ
யெண்ணியெண்ணும் விடாமலேகற்பமே
யுண்ணுமண்மேலிருந்திடு நாண்முதற்
பெண்ணுமாணும்பிறவிதன் வாழ்க்கைபோல்
பிறந்தபின்னிறவா திருமாண்பரே. (703)

செத்தபேர்க்குச் சித்தியாதெனல்

உற்றுப்பார்க்கவொருகோடி மூலிகைச்
சித்துமாடுஞ் ஜெகஜ்ஜாலமாடலாம்
வித்தில்லாவிளைவான குமரிகாண்
மெத்தவுண்டுவிது நாகக்கிண்ணமில்
எத்தும்வாரியிடர் வருகாமலும்
பற்றுவெட்டைப் படாமலருவிமண்
சுத்தவானெடு சொற்றவராதவர்
செத்தபேர்க்குச்சித்தியாது வாண்டையே. (704)

ஆசாபாசம் அநித்தியம்

ஆசாபாசமநித்திய மாதலால்
வேஷமோவறுங் கூத்தாயிருந்திடும்
பாஷைபேர்பலகூட்டங் களாகையால்
வாசமாம் அவர்வாழ்க்கையை விட்டிடுந்
தேசபாஷைகட்சில பேர்கள்கற்றுமே
பேசுவார்கள்பினத் தலறிந்தெனல்
நேசமாய்ப் பரிபூரணமாமொழி
தாசனாந் திருவள்ளுவன் சாரமே. (705)

நாகவெட்டை நிறமறிய

வள்ளலென்னுவா லாம்பிகையைத்துதி
நல்லதாகும் நாகக்கிண்ணம்வாங்கிடு
வெள்ளையாவது மேலண்டந்தன்னிறம்
வெட்டை நாகமிது வென்னவானமாம்
மெள்ளவேயெடுத்தேசி மிழ்தன்னிலு
மேலுடன்சிமிழ் மேவியேமூடிடுந்
தெள்ளுந்தேய்வுமீரஞ்சு வொன்றேகுரு
செப்பினோம்நாகவெட்டை யிதாண்டையே. (706)

நாகவெட்டை சுயம்பெனல்

மொழியிலும் நவரத்தினசிந்தாமணி
முன்னுணர்பதி னெண்மருமோதினார்
பழியிலாப்பல னூலில்மூலிகைப்
பார்த்துப்பார்த்துப் பலனில்லைதள்ளினார்
விழிகள்போலும் விளங்குமூவைந்துனூர்
அதைக்குறுக்கி விரும்புமெண்ணூறதாய்ச்
சுழிதன்ப்ரபையொளி வெளிமேவிச்
சுயம்பிவைகுக்ஷ நாகசூட்சவெட் டாண்டையே. (707)

அண்டரண்டம் பிளக்கத்தக்கச் சண்டமாருத செந்தூரமறிய வேறு-முடுகு-மடக்கு-கலித்தாழிசை

அண்டரண்டமிரண்டுமேபிளந் தக்கினியதாய்ச் சூரணம்
அதிகனோய்களனைத்துமேகிடும் அக்கிரகங்களும்மாறிடுஞ்
சண்டமாருதச்செந்தூரந்தனை யண்டர்சொற்றிருவள்ளுவன்
தமிழினாலுரையெண்ணூற்றன்மொழி சார்வுகண்டுணரும்படி
மண்டலந்தனிற் பண்டிதரறி வாலைசூதமுங் கெந்தியும்
வாசனசுத்தியில் தேறிவந்தபின் வட்டுநாகமிட்டோரிடை
விண்டலஞ்செங்கற்றாழை மூலிகை மேவிடும்ரசங்கல்லினில்
விட்டிடுமொருஜாமங்கூத்தன் குதும்பையின் ரசம்விட்டுமே
விண்டிடுஞ்சாடி மூலிகை யிருவிட்டரையொரு ஜாமமும்
வேகம்வேகமதுதன்மூலிகை யிரண்டுசாறும் விட்டாட்டுமே. (708)

கவசபாகமறிய நாற்சீர் கலித்தாழிசை

அரசன்பட்டை தானிக்காயின்றோடதும்
அறிந்துமே கடுக்காயின்றோடதும்
விரசமாமிகவேயிடித் தூள்பொடி
மேலுமேந்தி நீர்ஜலம்விட்டுகாண்
வரசமாகவைத்துவிடு மூன்றுநாள்
வைத்துமேமறு நாளரைமூன்றுநாள்
சுரசமான செம்முள்ளிச்சார் மூன்றுநாள்
சூட்டிடுங்கதிர் சூரியன்வேகமே. (709)

சூரியனும் முகஞ்சூட்டிப் பொடியெடுத்து
ஊறுங்கங்கா ஜலங்குப்பிக் கொண்டிடுத்
தேறிடும்வெள்ளைக் கல்லுமியாமதுச்
சேர்த்திடுங் கடுக்காயதின்றோடதும்

வீறிடுங் குக்கிடக்கருவிட்டெனில்
வேகமாமரை சீலையிற்பூசியும்
மாறிடுங்குப்பி வாய்விட்டுமேலெல்லா
மார்க்கமாய்க் கவசங்களுஞ்செய்திடே. (710)

விட்டிடும்ரவிதன் முகமேபட
வெங்குமேசருகா யுலர்ந்தேயது
விட்டிடும்பொடித் தானெடுத்தாக்கிடு
விந்தக்குப்பிவாய் பற்பக்கல்லாலடை
யட்டிடும்மடை யம்மருந்தேயறி
வதீதவுப்பு கடுக்காயின்றோடதுங்
கட்டிடுங் களிப்பாக்குங்குளவியின்
கருதுங்கூடு மண்ணாவதற்கதே. (711)

இருப்புச்சட்டி யினிகருவேல்பிசின்
இனியபொன்மெழுகும் வெள்ளைக்கல்லுடன்
குருச்சொலுங்குக்குட மஞ்சளின்கரு
கூறதாயரைத்தே விடும்பின்புகாண்
அருபமாவதுமே கனிசம்பழம்
அதின்ரசம்விட்டரைத்துப் பின்னாகையால்
வருமேசுக்கான் மகிழுங்கல்வெல்லமும்
வசனியொக்கவு மாட்டியரைத்திடே. (712)

அரைத்திடுமதுபாகம் வருமெனில்
அரசன்றன்பிசி னாலதுபோல்வரும்
முறைத்திடுங்குப்பி வாயடைத்தாப்பிடும்
ஊட்டிடு மெழுகானதாற் சீலைசெய்
உறைத்திடுமெனி லோட்டிலடுப்பில்லை
உடனேதாளி யதிற்புதைத்தேவிடு
புதைத்திடுமணல் நாலுவிரற்கடைப்
போட்டுத்தாளியில் மேற்குப்பிவைத்திடே. (713)

எரிப்புபாகமறிய

வசனகுப்பியின் வாய்கழுத்தேமணல்
மறையவுங் கழுத்தங்஽னேயாதலால்
நிஜமதாகிடில் வாய்தெரியும்படி
நின்றிளங்கனல் கமலதீபாக்கினை
உசிதமாகுங் தீபாக்கினைசாமமும்
உறுதியாய்க் கமலாக்கினிச்சாமமும்
விசிதமாகும் விஷாக்கிவிரகினால்
இருபத்தொன்று யிணைவிடாச்சாமமே. (714)

சாமந்தன்கெடு வாகயெறிந்திடில்
சாடிடுமே காடாக்கினியாய்க்கனல்
தாமதமோசரக்கது பொங்கினால்
சயிலவான் குமரியதின்சாதமும்
நாமிந்தப்படிக் குப்பிவாய்க்கொத்திடு
நாடிடவது மேற்சாதம்வைத்திடு
வாமிந்தபடி வைத்திடவும்வெடி
மாறினாற்கெந்தி பொட்டணம்நாலுமே. (715)

நாலுபொட்டண மாகவெடுத்து
நளினமாங்குகுப்பி தன்னிலடைத்திடு
தேலுமுன்பு சீலைசெய்தபாவனைச்
செய்கையா யெரித்திடவுமேபதம்
வாலுகைதன் னடுப்பில்வைத்தெரியவு
மாட்டுந்தீ யிருபத்தொருசாமமுஞ்
சாலவுமெச் சரிக்கையிந்தப்படி
தணலுமேவிப்பின் ஜாடித்தெறிந்திடே. (716)

தீயுமாற்றித் திறமிதுவேயறி
மாயுமோவலை சூதமுங்கெந்தியும்
தாயுந்தந்தைத் தனிநாகமூன்றதும்
பாயுமேபிணி நோயிக்கெமனதாய்
உபாயமாகவுடைத்துக் குப்பிதனை
யோகோவீதொளி வாகிடுமீதெனில்
நீயுமேமறுகுப்பி தனிலிடு
நேமிவாலைப் பதமலர்போற்றுவாம். (717)

செந்தூரத்தின் நிறமறிய

சூட்டிடினோங்கெந்திச் சூதசெந்தூரமுஞ்
சோதியான முருக்கன்பூவர்ணமாம்
நாட்டிடினோங்குரு நாதனருளினால்
நாடியேகெந்தி செந்தூரமேயெடு
கூட்டிவிட்டக் குறைவந்தேயெய்திடில்
குண்டலிதன் குருபூசைத்தியானஞ்செய்
சாட்டிடுஞ் சர்வநோய்க் கனுபானமே
சண்டமாருதச் செந்தூரமாண்டையே. (718)

சண்டமாருதமாகிய தோர்வினை
தந்தைதாயுந் தனிபோகஞ்செய்கையில்
விண்டதோர்வினை விட்டகுறையினால்
விடுந்திரிகடு காகும்வெதுப்பிதூள்

அண்டர்கோனருளா சானகத்தியன்
ஆனதால்ஞானவெட்டி மூவைந்துனூற்
கண்டுவாய்ந்துங் கலிதீர்த்திடாமலுங்
கர்மசாகர யோனிக்கிறையதே. (719)

வாதந் தமர்வாயு குன்மம்சூலை நீங்க வேறு-மடக்குத்தாழிசை

சுக்காகியமிளகும்மிவை திப்பிலியுஞ்சமனாய்ச்
சுடருமனல்வெதுப்பிப்பொடி தூளாகவுஞ்செய்து
விக்கோடு நீவெருதன்கடி பணமிட்டதுசரியாய்
விரவியதிற்றேன் விட்டுடன் மேலாகவுமத்தி
இக்கோடிவையொருமண்டலம் இருவேளைதனுறவாய்
விடுவீரனுபானத்துடன் வைக்கக்ஷயமணுகா
தக்காதிவைவாதங்களுந் தமர்வாய்வுடன்குன்மந்
தசையெண்சூலைதலைதான்வலி சாராதிடுமாண்டே. (720)

வசமாயொருபணமாமிடை மகிழ்வாய்வளமறிய
வசனித்திடுந்திப்பிலியு மதுரஞ்சமன்களஞ்சு
விசவாய்ப்பறங்கியுமாவது விவைமுக்களஞ் சதுவா
மிருதன்மருந்தனல்தன்பத மிடித்துவடித்தூளாய்
நிசமேவியதேன்றான்விடு நிமிடந்தனில்மத்தி
நிகராயிதுவுட்கொண்டீர் நிகழ்மண்டலந்தனிலும்
அசையாதினமிருவேளையு மனுபோகமாயுணர்வீர்
அடிதன் வயர்வலிநோயதற் கவிழ்தங்களும் உணர்வாம். (721)

வயிற்றுவலி முக்கல் க்ஷயங் குரல்கம்மல் நீங்கும்

வயர்நோய்வலிபிணியும்விடும் வயர்முக்கலும் விடுமாய்
வளமாய்பண மெடுநீமருந் ததுவும்மிடைகுறையா
துயரே தனுயிலைசங்கிவை துலையும்ரசம்பிழியுஞ்
சுகபத்துடன் பலனீரதில் தொடுவீர்மருந்த தனை
க்ஷயமேதிலையிவைகூடியுந் தரணி தனிலுணர்வார்
தனிமண்டலமிரு வேளையுஞ் சாதித்திடலாகும்
மயமேதோடிப் பயமேதிலை மாந்தத்தொடு க்ஷயமும்
அகலுங்குரற்கம்மல்விடு மறிவார் பெரியோரே. (722)

உளமாந்தமுஷ்ணம் நீங்க

உளமாந்தமுமிளைப்போடது களையுஞ்சோப வலியும்
உளவாய்விது உஷ்ணங் களுமோடிவிடுமாகில்
தெள்ளுமவிழ்தங்களெனில் தினமாமிருபணமும்
திரிதன்கடுகதுவோடெனில் சேரும்வெருகடிகான்

மெள்ளாடிமதீதப்பிணி வினைவிட்டிடும்நோய்கள்
விடுபட்டிடுங்கடற்புக்கிடும் விடுவித்திடும் குருவால்
உள்ளாகிடுங்குருசுவாமியி னருளேயடிபணியும்
அணுகாது நோயவிழ்தங்களி லகத்தீசனைத்துதியே. (723)

இரசகெந்தகுரு
வேறு-வஞ்சிவிருத்தம்

ஒருபணவிடையெனிற் பதமறிந்துணரிடுமுணர்வால்
கருவிதுவறிபவ ரிமையவரருளெனுங்கருதும்
இருவிதரசகெந்தி யருட்குரு பெருமைகண்டறியா
அரிதரிதெனும்வினைப் பயனெனில்வில கிடுமதியே. (724)

விலகிடும்பிணிவினை யவிழ்தமேயுணர்வினர் விளங்குங்
கலகிடுஞ்சுரஞ்சன்னி யெரிவதுமுறிவனற் கருதுந்
துலகிடுஜடம்வலு மெருகிடலவையெ னுந்துலங்கும்
நலமுடலதிரமு முதிரமுமிருகிடும்நவிலே. (725)

வினைகள் நீங்க

சிலவினையொழிவெனில் மதுரமுங்கிரிச்சிடற்சிதரும்
பலவிதவினையனு பவமிடரணுகிடா பகைபோம்
நிலவுதன்மொழிகவி விதிமலற்பொழி தமிழருளும்
உலகுதனியல்பவ ஜனனசஞ்சித குறையொழிவே. (726)

ஜன்னிஜுரம் நீங்க
வேறு மடக்குத் தாழிசை

துத்திவேருமுத்தா மணிவேருடன்
சுத்தமானதோர் வாழைச்சரகதும்
வற்றமாநரியோங்கும் பயிற்றன்வேர்
உருவிவேர் மிளகரணையின்வேரதும்
வித்துவாம் புளிமேற் பரணித்தொடும்
விசிதமாயெழு விதையறிந்தேயெடு
பற்றில்லாவகை யும்மொருகாற்பலம்
பகர்வதுமிளகொன் பதரையதே. (727)

ஒன்பதுஞ்சமனொன் றுங்குறைவிலா
நண்புசாம்பல் நலம்வெடிசீரகம்
நின்புநாலுபடி ஜலநீர்விடு
நேர்வைக்குங் சுக்குந்தும்பராட்டகம்

அன்புமேவுமது பலங்காலதா
இன்பமாஞ்சரக் கிதுவிருகூரதும்
என்புமேயிடித் தேயிதுரெண்டையும்
வெந்தணலிலிட்டுக் கொண்டிரக்கிடே. (728)

இரக்கிடும்சுகசன்னி சுரம்விடும்
எடுமேபச்சைப் பயரதின்பாகமாய்ச்
சிறக்கவுமிரு வேளைமூன்றுதினந்
தேனும்விட்டு செலுத்திடும் பண்டிதர்
பார்க்கவுமனுபோ கமறிந்திடும்
பாச்சிடுவீர் செந்தூரங் குறித்துனோய்ச்
சேர்க்கவும்பிணி தீவினையேகிடுஞ்
செப்பினோம் சன்னிதோஷம் போமாண்டையே. (729)

சத்திவிக்கல் க்ஷயம் நீங்க

சத்திவிக்கல்க்ஷயமும் விட்டேகிடும்
புத்தியாய்ப் பொடுதலையுமுப்புடன்
வெத்திதாய்க் கல்லுதனிலிரடு
முத்துப்போற் சலமோடியே பாய்ந்திடுஞ்
சத்திலா பிழிந்தேவிடும் பாகமாய்க்
குற்றமில்லா கோரோசனைக் குன்றிடைச்
சித்தமேவிச் செந்தூரமரிசிடை
மத்திகாலையு மாலையுமூட்டிடே. (730)

வைத்தியஞ் செய்ய

உரைத்து மேவியுணர்ந்திடு மூன்றுநாள்
உறத்திடும்பிணிற் றுன்பமேயேகிடும்
கிருதமிந்தகியாழ கற்கந்தனிற்
கிலேசமேது கெடிசுர சன்னிபோம்
சரத்துமே பண்டிதர்க ளறிந்திடில்
தர்மமாய விழ்தங்கள் செலுத்திடு
உறைத்திடுஞ்சத்தி விக்கலுமேப்பமும்
உடலைவிட்டு மொளித்திடு மாண்டையே. (731)

வாய்வுமேதசைப் பத்துஞ்சரீரமில்
மாறிடு மூலவாய்வு மகன்றிடும்
தேய்வுஞ்சுகவாட்கைப் பிணியிலாத்
தீவினைமுன்னோர் செய்கையினால்விடும்
மாய்வதோர்யோனிக் கேணியளவினால்
மாளவும்விதி வைத்தார்குருபரன்
பேய்கள் போலும்பினத் தித்திரிவர்தான்
பேசும்வாய்வுகு காந்தகனாண்டையே. (732)

மூலவக்கினிமீறி தாது கட்டில்

வாததேகிவயதறி முப்பதில்
வாய்வுமீறிவழக்கப் படாமலுஞ்
சரரதுவாய் மூலவக்கினி மீறினால்
தாதுகட்டில்தனி வாததேகியாம்
மாதாமாதப்பிங்ஙன மாறிடிற்
சூதவிந்துதுய்யச் சலமாகிடிற்
பேதாபேதம்பெரி யோரறிந்தனர்
பிறித்துயான் திருவள்ளுவனாண்டையே. (733)

வள்ளுவனருளா யிரத்தைந்நூறும்
ஆய்ந்து வெண்ணூர் மகத்துகள்கைவிடார்
விள்ளவும் நவரத்தின சிந்தாமணி
வேதநான்மறை யோர்கள் மகிழ்ந்தனர்
கள்ளதாதுக்கருவி லமைப்பவர்
சள்ளைசள்ளை ஜடமாதிதங்களும்
எள்ளளவுமிரதச் சைலங்களு
இல்லையில்லையிரு வினைக்கூறதே. (734)

சுத்திசெய்த சுடருப்பு சேரதாங்
கொத்திடுங்குழிக் கல்லினில் தூளதாய்ப்
பத்தில்லாதப் பலகையின் மீதினிற்
சத்துகாண்பிடித் தேசதுரங்களாய்
மத்துமேதூளிதங்களு மானதால்
பற்றப்பிசைந்தே பிடத்தேவிடுச்
சித்துமே பலஞ்சுக்கு சீவித்தோடு
ரத்தினமாய்ப்பில்லைப் போலும் நறுக்கிடே. (735)

ஒண்ணரைப்பல மசமதாகமெனில்
ஊட்டிமேவிடுவீர் விடுபின்புகாண்
பண்மையுப்புப் பலகைநடுமையும்
பள்ளஞ்செய்துடன் பாகமதாகவுங்
குண்ணுமந்தக் குழிதனிலிப்பொடி
கூறிடுமதின்வா யளவாகிலும்
உண்ணுமென் பொடியுப்பது மூடிப்பின்
எண்ணுஞ்சீலைமண் ணேழதுஞ் செய்திடே. (736)

அசமதாக - ஓமம்

மேலுமே பலகை மீதிலுப்பதை
விருதாவினில்விடாம லெடுத்திடீர்
உலகமாயிதிரோதா யியாடைகாண்
உசுதமாகவுடன் சீலைசெய்திடு

விலக்கமாம்புவிமே தினிதன்னிலும்
துலக்கமாயொரு தொந்தித் தீரைந்துகாண்
கலக்கமில்லாக்கவச மேல்தாக்கிடு
மலுக்கொண்ணாததின் மேற்பத்தெருவதே. (737)

உற்றுமே லெருபத்தொரு பாகமாய்
உபாயமாகவுடன் செய்கைமேவிடில்
சத்துருக்கனல்வன்னி யிட்டங்கனே
சார்ந்தமாய் கவசங்கருகினால்
மித்துருவினாற்சீலை மணவெந்திடு
மெத்தனவுமிவை யனலாறிடுங்
குற்றமில்லாவசமதாக வுஞ்சுக்கது
மத்திடுங்குழிக் கல்லினிற்றூளதே. (738)

குத்தல் வாய்வு குன்மம் அதிசாரம் நீங்க

கலுவமாமதிலிட்டு யிடித்தெடு
கலசந்தன்னிற் கருதிடுமிப்பொடி
வலுவதாம்வினை வயர்வலியுப்பிசம்
மாந்தம்வாயுமலிகுன்ம மூட்டம்போம்
அலுத்திடுமேய ரோசியம்விக்கற்போம்
அதிசாரங்களும் வாய்வுகுன்மம்விடும்
குலைவலி தனுக்குத்தலும் போய்விடுங்
குமுறிடுமிறைப்பேகிடு மாண்டையே. (739)

வெருகடிதன்ப்ரமாண மெடுத்துடன்
வீசிடுமனுப்பானந்தேன் விட்டதில்
மறுபடியுமத்தித்துவுட் கொள்ளவும்
வயரிறைப்புமதீ தவிரைச்சல்போந்
திருகுமேவிடுகாது பிணிவிடுஞ்
சீரும்நோய்கட்சிலக் கழிச்சல்விடு
மாறிடுமசாத்திய முமேகிடும்
மாறுதிங்கள சாத்தியமேகுமே. (740)

தீபனங்களில்லாமல் சடத்தினில்
தேங்கிடுமூலவக் கிரகமீறிடுங்
கியாபகங்களனு தினமேழுநாள்
காத்திடுமறுபத்திய மேழுநாள்
சாபம்போய் விடுந்தார் புவியேகிடுந்
தாபகங்களாய்லவணமே செப்பினோஞ்
சோபதாபவாயாசங் களையதுங்
கோபமேவிடுங்குன்ம மெட்டோடுமே. (741)

பஞ்சவக்ரகச் சூரணம்

பஞ்சவக்ரகப் பாகமும்யானருள்
    துஞ்சிடாஜாதிக் காயுங்கிராம்புடன்
தஞ்சயலவங்கப்பத் திரியேலந்
    தானதுஞ்சம பாகமாய்ச்சுக்குடன்
அஞ்சதுமிடித்தாகும் ரசாயனம்
    வெஞ்சனங்கள் வெருகடியேபதம்
குஞ்சரத்தின் குண்டலி பதம்பணிந்து
    அஞ்சனத்தில் தேன்விட்டும் மத்தித்திடே. (742)

சேத்தும சுரம் நீங்க

தாபசோபந் தலைவலிகாசமுஞ்
    கோபங்கம்மல்சுர மதும்விட்டிடும்
சோபஞ்சேத்மம் புக்கிடுந்
    தேகங்காந்தி திவ்யரத்தினமாகிடும்
தீபனாதிசெழித் திடுமக்கினி
    யாமைதன் சுரமாண்மையுமேகிடும்
நேமமாமேழுநாளை யிலும்விடும்
    நின்றுமேயிருவேளையு முண்பிரே. (743)

வேறு

பாருங்கெந்திரச செந்தூரந்தனையே
    பாடுபட்டு பரிசோதனைக்
கூறுமேவியனு பானத்திலிடுவீர்
    கோடிகோடிப் பிணியேகிடுந்
தாறுமாறுவிதஞ் சாரிடாமலுமே
    சாந்தமாமவிழதந் தாக்கிடில்
வேறுகூறுவிதம் நீர்தெளிந்துவிடா
    வேதஞ்சொல் மொழியைப்பாருமே. (744)

கனகஹேம சௌராசக்ஷதக் குளிகை
வேறு

கனகஹேம சௌராக்ஷதக்குளிகை
    காண்கிலீர்ப் பசைத நாபியுங்
காளமேக ரசகெந்தியு மிளகு
    காலிவாய் வதும்வெண் காரமுந்
தினுசதின் வகையுந்திப்பிலி யுடனுஞ்
    சேர்த்திடுவீ ரினமாறதுந்
தெளிவதாகும் சமன்கூட்டிடுஞ் சரிதன்
    செய்துயிம் முறையைத் தீர்த்திடீர். (745)

இனமதாகுங் கருமத்தன் சாறுரசம்
  விட்டுவோர் தினமு மாட்டிடீர்
இவைதன்னாகு மருந்தானதில் மயனமே
  எடுத்தொரு தன்குன்றிடை
தனமிதாகுமிவை மயனமிப்படியுஞ்
  சாதித்தேவிடுவீர் குளிகைதான்
தனலெருக்கனிடவேரும் பட்டையுமே
  தட்டியெட்டுக் கொருசலமதே. (746)

கியாழந்தன்னிற்றிருகடுகு மென்பொடியுஞ்
  சேர்த்துவைத்து விடுகுளிகையும்
நியாயமாயிருத்தன் வேளையஞ்சது
  நாள்நீயெடுத்தி டனுப்பானமில்
தயாளவிக்கலொடு சுவாசகாசமதுஞ்
  சன்னிதோஷ சுரமேவிடும்
க்ஷயாதியிறைப்பு கனலேப்பஞ்சேரபமதுஞ்
  சன்னியே விடுவதற்சாட்சியே. (747)

இதனால் தீரும் நோய்கள்

பசாசமோடுவலிகுன்ம மெட்டும்
  பதினெட்டு சூலைபறந்தோடிடும்
பழுவெலும்புமுறிந்தே முடக்கும்பவ
  பாவிதன் பிணிபறந்திடும்
நிசாசரப்பீலிகை யேவலோடுபகை
  நீர்ஜலிப்பு முகவாதநோய்
நீநினைத்தபடி நாசிதும்மலோடு
  நீட்டிடுவீர் புகைவத்தியும்
நாசமாகிவிடல் நாவரட்சியெனில்
  நரிமிரட்டி ஜுரதந்தநோய்
நடுமுதுவலிகள் தீரும் வாய்வுகனல்
  நாடியோடி விடுமாதலால்
கசாயமாவதிவை காட்டவோடும்
  வினைகருதினார் பெரியோர் கண்டுநேர்
கர்மநோயதித கருவியாலுமியற்
  காரணப்படியு முடியுமே. (748)

க்ஷயமுவாதமொடு வாய்வுபித்தம்
  எனிற்சயித்தியத் துடனேதும்மலும்
சத்திகுன்மக்ஷயம் பாண்டுசோகை
  யெனிற்றலை வலியுஞ்செவிபடுவனும்

பயங்கிலியும் பவபூதப்ரேத
　　படர்தாமரை விழிதன்நோயதும்
பயத்துடனும் பலபலபிணிகள்
　　பாகமாக வனுபோகமாய்ச்
செயற்றன்றந்தை விதிமாது
　　மையலொடு சீரணத்தொடுபிணிகளுஞ்
செலுத்திடுவீர் சௌராக்ஷதக்குளிகை
　　தீண்டவும் விஷமதோடிடுஞ்
சுயமதீதவினை கிறுகிறுப்புமுதல்
　　சூக்ஷமூலமொடு கிராணியுஞ்
சுத்தகாசிதணலெரிவு தன்வயறுஞ்
　　சொல்லாதோடிவிடு மாண்டையே. (749)

தனகனக சௌராக்ஷதக் குளிகை

தனகனக சௌராக்ஷதக் குளிகை
　　ஜாதிலிங்க ரசமிளகதுந்
தருவிகெந்தி யரிதாரமுங்கௌரி
　　சம்பிரமத்துடன் வெண்காரமும்
வனமிசையெனிலும் சூத்திரநாபிவகை
　　யெட்டுடன் சரிசமனதாய்
வசனமாகும்விதம் வாங்கியோரிடையும்
　　வளமதாக வொருமித்துமே
மனதுகந்துசௌரியார் தன்மூலிரசம்
　　வாங்கியோர் தினமத்தித்திடில்
மைபதம் வருதலுளுந்தின் பாகமிடை
　　வதுவுருட்டி ப்ரமாணமு
மினமதற்கு நிகரிடை கட்பாகமது
　　வேறுகூறு விளம்பாதலும்
வெகுவிதக்குளிகை நிழலுலர்த்திவிடு
　　வினையதற்கு விமுமவுழ்தமே. (750)

அனுபானமறிய

தேனதனிலொருகுளிகை யிட்டுயிழை
　　சேர்த்துமத்திசெய் கைவினையெனில்
தீருமேபிணிகள் தேகம்விட்டு
　　திகைத்தோடிடுஞ் சுரமுந்தோடம்போம்
வாணிபங்களொடு வாதபித்தக்ஷயம்
　　மாந்தந்தோடம் விடுஞ்சன்னியும்
வயர்வலியுமதிசார மாந்தமொடு
　　மாறியேகி விடுமாதலால்

கானல்மூலச்சுடர் நாவரட்சியொடு
காந்திநீரருவி யோடிடுங்
காதமோடி கடற்பேதமாகிவிடற்
காணும்பண்டிதர்க ளாவதால்
மோனமாகி விடல்காலை மாலையொடு
முறையெனுங் கதிர்தன்றெரிசனம்
மூலமோடிஜட மாதிதங்களுமே
முன்பின்னாகவிட லுண்மையே. (751)

கூற்றனாகிய சேத்மநாடி நீங்குமெனல்

பத்தியம்பகர்வீர் மோருஞ்சாதமுறை
பரிகரியுமறு பத்தியம்
பாச்சினாலும் வினைபற்பமாகிவிடற்
பாகமா கயிடும்பயரிடைச்
சித்தியாகு மிவைராஜராஜர்
புகழ்தேசராஜர்களு மகிழ்ந்திடில்
தேகமான ஜடமாவதற்குள் வருஞ்
சேத்துமங்கள் தொண்ணூற்றாறுபோம்
வித்தையாகு மிவைக்குளிகை
வேகமதுவேறு கூறுபிணியேகிடும்
மேதினிதனிலும் பண்டிதர்கள் செயல்
மெய்யும்பொய்யு மறிந்துண்பதாற்
குற்றமேதுவிலை சேத்மநாடியிசை
குண்டுகுண்டென வதிர்ந்திடில்
கூற்றனாகும்வினை யசாத்தியமாமெனிலுங்
கூறுங்கூறுங் குணவசனமே. (752)

பிரகாச சூதரசக்குளிகை

பூர்வமுப்பிலும் பிரகாசசூதரசம்
பூதலந்தனிலு மெய்திடிற்
ப்ரபல்லியங்கிலி கஜாதிபேதமெனும்
பேரறிந்து சரக்கெய்திடில்
வாருகெந்திகொடிவேலி நாபியது
மாவிலிங்க மொடுபாதிரி
வாய்விளங்க மிலவங்கமேலமிவை
வங்கபத்திரியும் ரேணிகஞ்
சீர்தன்திப்பிலியுமூல நாகேசுரந்
திரிபலாதி திரிகடுகதுந்
தேய்வுமாகிடுதல்தா மிரபற்பமிடை
சேருமேபணமுஞ் செய்கையாய்

மாறுலோக நிறகாந்தபற்பமொடு
வஸ்துசங்கினிட பற்பமும்
வசிகரத்தினொளிவ ப்ரகங்களதின்
வாலைசெந்தூரம தாண்டையே. (753)

வாலைதன் ரசமுங் கெந்தகத்திதினிலும்
மாறிடும் வகைகட்சமனதாய்
வகைகளுக்குமினி யீரெட்டுமினிய
மதுர வெல்லமதுங் கூட்டியும்
ஓலமாமிதனை யோர்தினத்திடனுடன்
ஊட்டியே கலுவமாட்டிடும்
ஓகோமத்தி மெழுகானதேமயனம்
உண்மையாம் பயரின்பாகமாய்க்
காலைதன் தினமும் ரவிமுகத்திலிரு
காலைதன்னி லொருகுளிகைதாம்
நாட்டிடுவீர் பிணியாளர்க் கெய்திடலுங்
கனகமாங் குளிகையூட்டிடுஞ்
சோலைமா மயில்தன்னோசை கூவுதெனில்
சூதஜன்னிகடலே ்குமாம்
சுகத்தினாற் சுகசோபதாபஜுர
தோடம்விட்டுக் கடல்புக்குமே. (754)

சுரம்யீளை காசம் குளிர் நளிர் நீங்க

புக்கிடுமொருதன் குளிகைமேலுமினி
புகல்வீர் தேனதனிற் பூட்டிடும்
புதுமையாய்க்ஷயமு மீளைகாசமொடு
பொருமல் சூடதும் பொரியதாம்
பக்குவங்களெனிற் பழயதோஷஜுரம்
பதுங்கியோடிய துபட்டிடும்
பாரனோய்களெனில் தூரவோடிவிடற்
பத்தியற்கருவி நீரிடும்
வக்கிரகங்கள்கெடு மூன்றுநாள்தனிலு
மாறிடுங்குளிர்கள்ந ளிர்கள்போம்
வசிகரமெனிலுங் காலைமாலையிது
வசனியுங் குளிகைவைத்திடும்
அக்கிரகங்களெனு மவிழ்தமாமதனில்
அட்டியில்லாத வையிட்டிடும்
அதனிலொன்றுமணி மாத்திரைவிடுவீர்
ஆண்டையென் குருவறிந்திடே. (755)

சூதம்கிராணி மூலம் பேதி நீங்க

வெந்நீர் தன்னிலொரு குளிகைத்தாக்கிவிட
  வினைகளோடிவிடு மாதலால்
விக்கல்கக்கலொடு மாந்தவாய்வுகனல்
  வேகமாகுஞ்க்ஷயம் பிரமியம்
வெந்நீர்தன்னில் சுரஜந்நிகாசமொடு
  வெட்கைமுக்கலெனில் மூர்ச்சையும்
வெகுவிதப்பிணிகளஞ்சு நாள்தனில்
  விடுபட்டேகி விடுமேயறி
கன்னிசூதகமுங்கிராணி மூலமொடு
  கனலினாலதீத பேதியுங்
காலைமாலை தினம் வேளை தன்னிலுமே
  கருதிடு மவிழ்தங் குளிகைதான்
உன்னிதச்சடல மோகோ நோய்கள்விடும்
  ஒன்றொ டொன்று வசடில்லைகாண்
உண்மை யுண்மைகெடி பத்தியம்வருதல்
  உறுதி வைத்தவிழ்த முண்பதே. (756)

பஞ்சபான வமுர்த ரசக்குளிகையறிய

பஞ்சபூத மிவையஞ்சு லோகமிவை
  சஞ்சித மெனிலுங் குளிகைதான்
நஞ்சமிர்த மிதுவே குறுத்துநவ
  சித்தர்பண்போர் களுரைத்தனர்
அஞ்சுபாண முறையோ வதீதகவி
  யாரறிது தமிழோதினார்
அகிலமேவு கடற்புவி தன்மாநிடர்கள்
  ஆரறிந்து கறையேறினார்
வஞ்சமேது குருபஞ்ச பாணரச
  வாதமேது கருவாளிகள்
அஞ்சுவா ரோஜெகமாதி தங்கள்தனில்
  அவர்கள் தன் பெருமை யறிவரோ
துஞ்சொணாது மனதஞ்சொணாது
  வழிமிஞ்சொணாது வறைகண்டனற்
சுழினை தன்னிடை பின்னமுர்த சூதரசஞ்
  சொர்க்க வாசலறிந் தடைவதே. (757)

வேறு - வண்ணவிருத்தம்

வேதசுயசெம்பு அயமாமது விளங்கும்
  வெண்கலரசிதமொடு நாகமிவையஞ்சும்
பேதமிலாமூசையிலுமே பலமரைகாண்
  இவையுருகுமேசரி தனயங்கொண்டேராவி

போதமெனிலுசமனே புகழடவதாகில்
பின்பதுமேசரிதன் கெந்திதனைக்கூட்டி
தாதுவலு கையான் ரசஞ்சாறது கொண்டுட்டிச்
சாதித்திடுமேதவியா சாடித்திருநாளே. (758)

சாடிமெழுகாமெனிலுந் தானதனைக்கொண்டு
சாருங்குகைமீதிலிடுதான் மேலோடுமூடி
யூடிகவசங்களொடு மண்சீலையுமேழு
வோகோ ரவிகாலை கனல்வாலைகதிர் வைத்தும்
பாடியெடுமேமேபுடமு மாறிகுகைபாரு
பாச்சிடுவீர்கலுவம் பாகமதுநேர்தான்
நாடிடுவீர்நாபிரசகெந்தி திப்பிலியும்
நன்மிளகுமே சரிதன் நவிலும்பொடிசெய்தே. (759)

அஞ்சுவகையுஞ்சரித னானகளஞ்சிடையும்
அதிதநிம்பழத்தின்ரச மவைதனிலுமாட்டி
மிஞ்சிடாமலுமொரு தன்சாமரைத்தாடி
மேலும்வழித்தே கடலைமிகவதுப்பிரமாணம்
வஞ்சகமில்லாக்குளிகை மதிதனிலுலர்த்தி
வாதபித்தசேத்மசுர மாமதற்குளாகில்
இஞ்சிசுரசந்தனிலினிய மருந்தூட்டி
யிரவிமதிவேளையிருநாளிற் சுரம்போமே. (760)

வாதபித்த சேத்மதோஷ ஜுரம் சூதகவாய்வு நீங்குமெனல்

தோஷஜுரஜன்னிகுளிர் சூதகத்தின்வாய்வுந்
தொட்டவுடன் குளிகையிவை கெட்டலறியேகும்
பாசமிகுந்தேவிடமும்பாமு பெரும்பாமு
பார்த்துயிடு யிஞ்சிமுலைப் பாலதுவுங்கூட்டி
பூஷணமதாகுஞ்சடம் பொரியும் வினைநீராய்ப்
பூட்டிவிடுமே திரிநாட் காட்டிலதுவேகும்
வாழ்புரியும் பத்தியமிலா வருதலிச்சாபத்திய
மறுபத்தியங் காத்திடுவீர் வகைசொல்லவாண்டே. (761)

ரச பஞ்சாவமுர்த ரசக்குளிகை
வேறு

ரசபஞ்சா வமுர்தக் குளிகையு மருள
நவசித்தர் கமலத் தாளினை
வசந்தகாலை மலரடி தொழுது சற்குருவின்
வாமிவாலைபத மேவியான்

இசைந்தகெந்திரச நாபிதிப்பிலியும்
இனியதோரிடையுஞ் சாதிக்காய்
அசுவகூதமிடை யஞ்சுமந்தயிடை
ஆகுமென் குருவே யருள்வீரே. (762)

வேறு

அதிதகெந்தியுமே யஞ்சுவிராகனிடை
ஆனதிப்பிலி யீரெட்டதாம்
அதனைசுத்தி யடவாய்க்கருதி
அழகான கல்லதனி லாட்டிடும்
விதிதனாக சிறுகீரை வேர்சலமுமேவி
சாடி வருமேபதம்
வெற்றிலையின் ரசமாவதன் வகைகள்
விட்டிடுமொருதன் சாமமும்
நிதியதோர் வகைகள் சாமமாட்டிவிடு
நேர்தே னிஞ்சிரச மவ்விதம்
நீநினைத்தபடிகடலை தன்னியல்பு
நேர்மைதன் நிழலின் முகம்பட
விதியிலங்குமிவை குளிகையாறினபின்னே
யெடுத்து சிமிழமுடைத்திடு
வேகவேகமிது தாபஜன்னிக்கிடு
மேலுணர்கள் விதித்தனர்களே. (763)

இதனால் தீரும் நோய்கள்

நீழலுலர்த்தி மணிகுளிகையொன்றுயெடு
நிகழு மிஞ்சியுட சுரசமிதில்தான்
நேமிலேவிடு வீர்ஜன்னிதோஷஜுரம்
நிலையைவிட்டு கடற்புக்கிடும்
அழலுஞ்சுக்கதுவுங் கியாழமாமதனில்
வைத்திடுமொருதன் குளிகை
மாறியோடிவிடுங் காலைமாலையிட
வாய்விட் டேங்கிவிடுமஞ்சுநாள்
வழலுமேயவர்தன் வலியுமேகிடுதல்
வாய்நீர் குன்மமது வாங்கிடும்
மாந்தமுங்கணமும் விக்கல் கக்கல்தசை
வாய்வும்வாதமது மாறிடும்
விழலதாகிவிடும் வக்கிரஜன்னியொடு
விஷசுரங்கள் முதல்விடுபடும்
வினைகளேது பிணிநோய்களேதுகுறை
வேகமேது கனலோடுமே. (764)

சூசிகாபரண வாலைரச மெழுகு

வாலையானரசஞ் சூசிகாபரணம்
    வசனமேவி வளராதலால்
வாழுமேபுவியி லிங்குலீகமது
    வாங்கிடுவீர் பலமாமெனிற்
பாலையானதுவும் பலபலென்றுதிரும்
    பகருவீர்கலுவம் பண்மையாய்ப்
பாரினிலரவதந்த மில்வருதல்
    பசுமையான விடம்பாகமாய்க்
காலனாகுமாலகாலன்றன் விஷமுங்
    கண்டுமர்த்தனஞ் செய்கலுவமில்
காலைதன்னொருநாள் சாடியுமயினங்
    கண்டுமே மயில்தன்பிச்சினால்
வேலையேது வெகுநாளுமேதுவிட
    மேவும் வெள்ளையது வாகிடும்
வெகுவிதப்பிணிகளோடு மிதனில்
    விகாரஜன்னி வெளியாகுமே. (765)

மெழுகை ஒளியாமல் சொன்னது

வெளியானபிச்சு விடுமர்த்தனமதுபின்
    மேலுமாமயிலின் காலதும்
வின்னமில்லாமயிற்குப்பி தன்னிலிடு
    வெண்ணையான ரசமையதை
பழிகளேது மயிலஸ்தியாமதனிற்
    பரணிமேற் பிரடைபோட்டிடு
பகருவீரொருதன் திங்கள்நெற்பதுவிற்
    பாச்சியே விடுவீர்ப்பாகமாய்
தொழிலுமேவிடும் வாலைகுண்டலிதன்
    சோதியான கமலங்களில்
சோடசம்பதினாற் பாதபங்கயமுந்
    தொழுதுமே துதியுஞ்சொல்கோணாதே
மொழியதாகிவிடும் பூசைநேமமதும்
    உண்மையாக வறுசுவையுடன்
உறுதிவைத்து ரசவாலைவெண்மை
    ஒளியாமற்சொன்னோ மிதுவுண்மையே. (766)

இதனால் தீரும் நோய்கள்

தாபஜன்னி சுரஜன்னியோடுவகை
    தாந்தரீகமும் ப்ரதாபமுஞ்
ஜன்னிதோஷ ஜுரபித்தவிகாரமொடு
    தாள்பிடித்துவிடுந் தோஷமுங்

கோபியானமயவாத ஜன்னிஜுரம்
குமரகண்ட வலைமூர்ச்சையுங்
சுத்தலும்வயர்தன் வலியுமேபிணிகள்
குன்மசூலைக் குடல்வாதமும்
நேமமாகிவிடல்த மரகத்தினொடு
நீடுலாவியதன் கிராணியும்
நின்றிலங்குஞ்சயகாச மீளையதும்
நெஞ்சடைப்புக் குரல்கம்மலுங்
கோபமான களைசோகைதன்விஷமுஞ்
சூடதாலும் வெளிர்சூசிகஞ்
சுத்தமான ரசவெண்ணை யூட்டிவிடுஞ்
சூசிகாபரணஞ் சொன்னோமே. (767)

வேறு - கழிநெடில் விருத்தம்

திரிதோஷமெனில் ஜன்னிசுர பார்வையுட வெதுப்பும்
சடலமதனிடர்களெனில் நாவதும்வரட்சி
அறிவதொரு குளிர்நளிராம் பொழியுஞ்சலமதுநீர்
அசதிசுரங்காலும்நடை மசைதற்கிருகிருப்பும்
முறியும் பழுவஸ்தியொடு முப்பத்திரெண்டும்
முடுகுமிசைதாளிகவு கடுகடுப்பதெனிலுங்
கடுகிவிடுமிகவுசுழற்கிரு கிருப்புக்கனலுங்
கண்காணாதோடிவிடுங் கருதினோமிதாண்டே. (768)

விழிசுழியின் பார்வையெனில் மெய்யதுமடங்கும்
வெதுப்புங்கனல் வேகமிவை விட்டுவிடும்பாரு
வழியுமது நாவில்ரச மரணசடம்போலாம்
வசிகரமுந்தப்பிகளை வாங்கிவிடுமாகில்
அழிவுகெடசரீரமது அசதியனதீதம்
அசாத்திய மெனிலொன்று ரசவெண்ணையருள்வீராய்க்
கழியுஞ்சடமெனில் விசிதங்கண்டறியச் சொல்லுங்
காலும் பெருவிரலிலெனுஞ் சத்திரமிவை செய்யே. (769)

செய்துவிடுஞ்சத்திரமய மூசியதனாலுஞ்
சீர்பெறவுஞ் சூசிகாபரணமிடத்திடமாம்
செய்துவிடுமூசியினி னாலேயெடுமயனம்
இடுமேசத்திரவாயில் ரசவெண்ணையதைப் பாச்சு
மையதுவறிந்தேயவிழ்த மூசிதனிலோட்டி
மயனமிடுசரீர மதீங்களுமேபூசு
கைதுங்கனற் சொரியுமுடற் காயமதுவனலாங்
காலவிஷங்காலிதனிற் கண்டிடும்பண்டிதரே. (770)

பத்திய பாகமறிய

பாதாதிகிசனங்களொடு பரவிடுமேயனல்தான்
பார்க்கவினை நோய்களது பட்டுவிடுமாகின்
பூதாதிகள் தணற்பறியும் புனலுஞ்சுடர்போலாம்
போய்விடிலப் பிராணன்வரும் புதுமையதைப்பாரீர்
வேதமறையோர்களுரை யோதுவார்களனந்தம்
விட்டுவிடுமேவினைகள் கொட்டிடுந்தேளாகில்
சாதாரணமாகிடுதல்சரீர மனல்வீசும்
தயிருடனேசாதங் கொடிமுந்திரியுந்தாக்கே. (771)

துய்யமதிச்சக்கரையுங் கிருதமொடுகச்சூர்
துரிதமிடுவுப்புடனே புகலைபுளிதுலவாம்
பய்யவினையோடும் பதிங்காதம் பயந்திடுமே
பகரும் ரசவெண்ணைவிடப் பலவினைகளேகும்
மெய்யிதுகண்டருளும் வெகுவிசிதநோய்கள்
வெகுபுதுமையவிழ்தமிது விட்டுவிடுஞ்சன்னி
கைபதமதாரறிவர் கருவிலமைப்பதுகாண்
கண்டேனகத்தீசரருள் காட்சிகலிதீர்ந்தே. (772)

முகப்பேதிச் சூரணமறிய

விரோசனமதர்க்கு முகர் பேதிசூரணங்காண்
மிகுத்தவவிழ்தமிதனை விசிதமுறைகேளும்
அரோசனமதற்கு அருள் வாளபருப்பாகு
அந்தயிடையாதற்கடுக்கா யெனிலுந்தோடுந்
சிரோசனமிரண்டுவிதஞ் சரிசமனதாகில்
சேருமேவகைக்கொருதன் விராகனிடைபத்து
புரோசனமதாகிவிடுஞ் சீலைகிளிகட்டி
பின்பறிநீகள்ளிமரந் தன்னையேதுளைத்தே. (773)

சுரச்சிமிளிற் பதனஞ்செய்ய வேண்டுமெனல்

துளைத்துமருந்திட்டுஅதன் றூளதனைச்சூட்டி
சீலைகிழித்தேவிடுமண் சுற்றிவிடுமேழும்
அளைத்துவொருமண்டல மவ்வீதமதுசென்றால்
அந்தக்கெடுவானது பின்னந்தமதை வாங்கி
புளைத்துரவிதன்னிலிவைப் புனல்சுவரப்பாரு
பொடித்து சுரைச்சிமிழிலிவைப்புக் கவுமடைத்து
வளைத்துவிடுமேபதன மாகவுஞ்செலுத்தி
வயிரவர்தன் பூசைதனில் வைத்துவிடுவீரே. (774)

வேண்டிய பேராகுமெனிலே வினைகட்சூழு
மெய்யுடலின் காந்தலினால் மீறிடுமேவாய்வுந்
தூண்டிவிடும் விரோசனமென் றோதுமுகர்பேதி
சூரணமெடுத்துயிரு நாசிவழியேத்து
காண்டிபமிதற்குநிகர் காணீரோவோரம்பு
கருகிடுமே வாய்வுபிரிந் தோடிடுஞ்சலிப்பும்
பூண்டுவிடும்நாசி யிருவேளை முகரேத்தும்
பொங்கிசலந்தங்கிவிடா புனல்சொரிவதாமே. (775)

அக்கிரகப்ரகாச மாத்திரை

அதிதவிரோசனமெனிலு மக்கிரகப்ரகாசம்
அளவிடவுமிவைக்கு நிகர்வஸ்துவதுமில்லை
விதிதபசைநாபிலம் வாளபருப்பிடைதான்
இவையதிதசுத்தியினி லிட்டுப்பதமாக்கி
மெதிதஜாதிக்காயிருதன் பலமெடுவினாக
வெண்காவுள்ளிதிரிபலமும் வேண்டிடுவீர் காணுந்
ததிதசிறுக்கீரைரச நீரதுவுந்தாக்கிச்
சாடியிருநாளுமிரு ஜாமமதுவென்றே. (776)

கைகால் சுரப்பு வீக்கம் முடக்கு கிருகிருப்பு குத்தல் வாய்வு நீங்குமெனல்

இரண்டுசதுர்ஜாமபரி யந்திரமயினமாட்டி
இவையுமெழுகதுவருதல் பதமதிலும்வழித்து
குறைவிலையிம்மெழுகு ப்ரமாணமதுகுன்றி
குளிகையெனிற்செய்து கதிர்முகம்பட வுலர்த்தி
கரவியொருகுளிகையெடு கதலிப்பழந்தன்னில்
கண்டிடிலுமனுபவமுங் கழியுமதுபேதிச்
சுரவும் வயர்காலுங்கர மேதுடித்தல்வீங்குஞ்
சொரூபசெருப்படையும் பசுமஞ்சள்கடுக்காயே. (777)

எய்தும்விரைவாங்கியிடித்தே பசுதனமுரி
இட்டிடும்பிசைந்து வடியிந் நீரிலதைவாங்கி
வெய்துமொருகுளிகையிடு விரோசனமாம்பேதி
வெடியவுமுன்கடிகையினில் மிகவுமருந்திடிர்காண்
கொய்திடும்பிடிப்புடன் முடக்குங்கிருகிருப்புங்
குத்தலொடு வாய்வுகடுப்பதுவும் முதலேகும்
மெய்தும்கனவீக்கந்தடிப் பதுவும்விடுமாகில்
வேகமசிரணமுமெனில் விடுபடுமேயாண்டே. (778)

வீங்கதலாய்வயருடலுமூதி தடித்திடலால்
வேதனைகள் மிகவதிகமெய் வெதுப்புமாகில்
வாங்கிடுங் காலுங்கரம் வற்றிவிடும்வீக்கம்
மாறிவிடுமே கனலும்வாய்வதும் போமனற்போம்
பாங்குடைய விரோசனமுங் குளிகையிவையாதல்
பத்தியம் பசுமோருடனே பாலித்திடுவீராய்த்
தேங்குதலாய் நோய்களதுந் தீருமஞ்சுநாளில்
சிதறும் பிணியலைகடலில் திகைத்துவிடும் பாரே. (779)

தாபசுரதோடம்விடுமே குடிநீர்கேளும்
தாகம்விடுமேகொடியால் விழுதுமுளைத்துளிரும்
பாகபதமாகும் பலமஞ்சதுவினாக
பக்குவமதாய்நறுக்கி யொருதன்னினமாக
யேகவிதமாயிருதனாழி ஜலமூட்டி
உணர்வீரெட்டுக்கொருபதமா யூட்டியனலாலும்
ஆவதும் நீர்ச்சுவருமடிக் கடிகுடிநீரூட்டும்
ஆண்டேயசுத்தீச ரருளாலகத்திடீரே. (780)

குடிசிருக்குடிநீர்விடுங் குபுகுபெனவாய்நீர்
கும்பஸ்தளமாய்ச் சொரிதற் கொடியகனல்தோஷம்
கடுகவரட்சியும் விடுதல் நாவில்சலம்பொழிதல்
கணலதிதசுரம்விடுதற் கருதிடுவீரசாத்தியம்
விடுவதுவுந்தாபசுர தோடமதும்போச்சு
வெகுவிதமாகதிரி தோடம்விடலாச்சு
தடுமோதவறாதுகுடி நீரதுவினாலே
தாபம்விடுஞ்சோபம்விடுந் தரணிதனிலாண்டே. (781)

வசிகரமதாகுங்குடி நீருணசுரமும்
மாறிவிடசீந்திற்கொடி துளசியுநன்னாரி
மசியுமுத்தக்காசு விலாமிச்சதுவேர்க்கொம்பு
மதிதமலைத்தாங்கியதன் வேர்க்கை யுஞ்சமனால்
இசையுமிவைத்தோடது நறுக்கியொருயேன
மிலிரண்டுபடிநீர்விடுத லெட்டுக்கொருபாகந்
தசனையிலாதெரிபுஞ்சல நீருஞ்சுவரிடுமாய்த்
தாபம்விடும் வசீகரமுந் தாகம்விடுமாண்டே. (782)

மதலைமுதற் 12 வயது வரைக்கும் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஊட்ட

காலையெனில் மாலையொடு ரசசெந்தூரம்பயர்காண்
கருதிவிடுங் குடிநீரதில் காணுமிருவேளை
வாலைய பிராமிபதம் பணியப்பிணியாளர்
வந்தவினையேகும்மடிந் தேமலையிற்புக்கும்

பாலைசிறுமதளை பனிரெண்டு வயதுக்கும்
பாச்சிவிடுமேபுருஷர் பரத்தையருக்கூட்டுஞ்
சேலையுடுத்தும்மடவார் ஸ்திரீகளுக்குமருள்வீர்
செதறிவிடுந்தாபசுரந் தேங்கு தலுமாமே. (783)

போதக சிந்தாமணிக்குளிகை

போதகசிந்தாமணி தன்குளிகையருள்செய்யப்
புகழும்நிருவிஷமும் ரசம்நாபியரிதாரம்
நீதகயிங்கிலிகமொடு கெந்தியும் வெண்காரம்
நேமியுமக்கிராகாரமாடு நிருவிகடுக்காயும்
நாதமெனுந்தானியொடு நெல்லியதின்தோடும்
நன்மிளகுதிப்பிலி வேர்க்கொம்பு பதினைந்தும்
வேதவிதமேசரிதன் மேவிடுங்களஞ்சு
வேருமருந்திவை விடவுமில்லையருளாண்டே. (784)

களஞ்செடுவகைக்கு பதினைந்துங்கனசுத்திக்
காண்கிலீர்கருத்தறியக் கைபதமதாக
இளைஞ்சுயிளையாதெடு விதற்குச்சமனாக
இளந்தெரிவாளத்தினிடச் சுத்தியிலதீதம்
வாளத்தின் பருப்பாகுமெனில் முன்மருந்துக்கிடையாய்
வசனித்திடுங்கலுவமதில் மர்த்தனமதாக
பளயபடிசெய்திருபத்தொருநாள் விடாதாட்டிப்
பாகமதுவாய்மெழுகு பார்த்துவழித்திடீரே. (785)

வழித்திடுமிவ்விதமெழுகு பதத்தில்வரும்போது
வளமெனிலுந்தாம்பரபற்பம் வாங்குகளஞ்சொன்று
வழித்திடுமெழுகதனை வழித்துகுன்றியதுபோல்
மதியதுபோய்ரவிமுகம் வைத்துலரயெடுத்து
குளித்துவிடுமவைகுளிகை சிமிழதனிற்றாக்கி
குமரகுருசரஹண பாவயவெனத்தியானம்
ஒளித்துவிடாதொழுதுபணி யொடுக்கம்நெற்பதுங்கி
ஒடுக்கிவிடுமூவஞ்சுநா ளொருமைப்படு மாண்டே. (786)

நெற்பதுங்குதனிலிலகுங் குளிகைச்சுடர்வேகம்
நீங்கிவிடும்பேய்ச்சுரையின் னிகழுஞ்சிமிழ் வைத்துக்
கற்போன்றிடல்கனகமணி வயிரமதுபோலாங்
கதிரிடுந்தோடாதிசுரங் கண்கணாதோடும்
விற்போன்றிடல் வீரமணி விதியைவிடவினைநோய்
வீரிட்டிடுஞ்சன்னியும் விகாரமதுபோகும்
சொற்பிரளிச் சொல்லவில்லை சூக்ஷமின்னூற் சத்தியஞ்
சுகாதீதபோதக சிந்தாமணியைப் புகல்வாம். (787)

அனுபானங்கண்டு அவிழ்தமளிக்க வேண்டும்
வேறு விருத்தம்

ஆச்சிதற்கு அனுபான மறிந்தவிழ்தங்
கொடுக்கறியாத மைத்த பேர்க்கு
ஏச்சிதற்கு மலைவலஞ் சென்றுழன்றலைந்து
தேசகும் போயிரந்தும் பிக்சைக்
கூச்சமற்றுக் குலமழிந்து குவலயமெல்லாந்
திரிந்துகுருக் காணாமல்
நீச்சர்களாயுதித்து வுவரானையெனுங்
கல்லறிந்து நிலையார்ாண்டே. (788)

ஜன்னி ஜுரம் நீங்கும்

தொடுத்துவிடு அனுபானம்
துளசிரசத்திலிடவுந் தோடமேகும்
எடுத்துவிடுங்குளிர்நளிரும் வேகமென்றஅச்
சுரமனைத்தும் விடுபட்டேபோந்
தடுத்துவிடுஞ்சன்னிக ளசாத்தியம்
விடுஞ்சாத்தியமாந் தரணியோர்க்குளண்
கொடுத்துவிடுந்திரி மூன்றாம்பிரையுஞ்
சதுர்ஜுரமும்விடுங் குளிகைக்கென்னே. (789)

விஷஜன்னி சுரங் குளிர் நீங்க

கொடுத்திடு மாடா தோடையின் மூலி
அவித்திடும் ரசத்தில் குளிகையூட்ட
அடுத்திடு மனேகசுர மனுப்பானம்
அவையறியா ரருணன் மாலை
கொடுத்திடு மிவை சுரசங் கொடுக்க
விடஜன்னி விடுங்குளிர் விட்டேகும்
நடத்து மிவைக்குளிகை யெனிலோர்
எழுதின வளவில் நாடாதாண்டே. (790)

வெதுப்புக்கனல் விக்கல் சேத்துமக்ஷயம் நீங்குமெனல்
வேறு-மடக்குத் தாழிசை

கொட்டுந்தேட்கொடுக்கா மெனுங்கோதையே
குக்கனாங்குலைத்தே விடுமேசுரம்
வெட்டிடுங்கரங் காலுங்குடைச்சலாம்
வெதுப்புமேகனல் விக்கலுமேப்பமாய்க்

கட்டுமேஜலக்கோழை சிலேத்துமங்
காரலுஞ்சய கம்மலுங்காசமாம்
முட்டுமேசுழிவாசியும் பாய்ந்திடா
முன்னமேகுளிர்ஜன்னி சுரமதே. (791)

சூடதால் குளிர்தூக்கி யெறிந்திடுந்
தும்பித்தும் பிச்சுழன்றங் கெழுந்திடும்
நாடுமேவிய நன்னாரிசுக்குடன்
நத்தைச்சூரிவேர் நாயுருவியொடு
வீடுமேவிளங்குஞ் சமூலமும்
வேர்வகைதனை வெட்டியிடித்தெடு
நாடுமேயிருநாழிச் சலம்விடும்
நாலுக்கொன்று நடத்துஞ்சுரசமே. (792)

இட்டுமேவியிரவி தணலினில்
எட்டுக்கொன்று இதையொருவேளைதான்
இட்டுமேவேர்க் கொம்புடன் திப்பிலி
மேவிடும் வால்மிளகுங் களஞ்சதாய்
கெட்டுமே சமன்குத்தி ஜலத்தில்வை
தீங்கிலாதனல் தீயதைமூட்டிடுக்
கட்டிடுங்கனற் காடாக்கினியினால்
தொட்டுப்பாரினி தொக்கிடும்நீரதே. (793)

நீரதாகிய நீரிருத்தேவிடு
நீநினைத்தபடி முடித்தேவிடும்
வேறதாகிவிடுஞ் சுரசங்கள்தான்
மேன்மையாய் விடுமேபலமஞ்சது
சீரதாகியத்தேன துங்காசிடைச்
சேர்க்கையாமணி மாத்திரையொன்றிடு
மாறிடுமே மத்தித்துக் குளிகையும்
வைத்திடுஞ் சுரசத்தில் வகுத்திடே. (794)

தாந்திரீகப்ரதாபஜன்னி மயக்கஞ் சேத்துமம் நீங்குமெனல்

தாந்தரீகப்ரதாபம் விகாரமுஞ்
சாடித்தேவிடுஞ் சாகரம்புக்கிடும்
வாந்திபித்தமயக்கஞ் சயித்தியம்
வாயினிற்கொப்பளித் தேவருங்கோழையுஞ்
சிந்தியேவருஞ்சீதளந் தும்மலுஞ்
சேத்துமந் தொண்ணூற் றறுவகையேகிடு
முந்தியிலடிமூலங் கழன்றிடு
மூட்டினம் பொடியாய்விடு மாண்டையே. (795)

பதினெண்பேர்களும் பாவித்த ஞானவெட்டி 1500

ஊணுறக்கமுமாந்தம் விலகிடும்
ஊட்டிடுமிருவேளையு மேழுநாள்
நானுணர்த்திடும் ரத்னசிந்தாமணி
நன்னூலாயிரத்தைன் னூர்வெட்டியும்
பானுணர்ந்தபண்போர் பதினெட்டுபேர்
பாவித்தார்கள் பலகலை நூல்வளம்
யானுணர்ந்தேனின்னூ லெண்ணூர்சித்திர
மாமதாவிருவேளை யவிழ்தமே. (796)

வடவாக்கினை யெண்ணெய்ப்பாகம்

மாந்தமெட்டுமகலுங் கருங்கடல்
வாரியிற் பயந்தோடி மரணமாம்
வாந்தியாகுமது வெள்ளைக்காக்கணம்
வட்டக்கிலுகிலுப்பையின் வேரதுஞ்
சாந்தியாம்பழப் பாச்சித்தகரைவேர்
சாட்டரணைச்சிரா செங்கழனிவேர்
ஆய்ந்திடுங்கீழா நெல்லியும் துத்திவேர்
ஆகுமிவ்வகையனுக்கிரக மாண்டையே. (797)

ஆதண்டம் பங்கம்பானை விளாத்திவேர்
ஆகுஞ்செப்புநெரிஞ்சிவேர்த் தும்பைவேர்
மாதேகேள்மணத்தக்காளிப் பேய்ப்புடல்
மாலின் காந்திவல்லாரை பொற்கையானுஞ்
சேதம்வாராச் சிறுபுள் ளடியின்வேர்
செவ்வகத்தியமுக்கிரா தோடைவேர்
பேதமில்லாப்பிறமிக்கு றட்டைவேர்
பெருங்குமிழிருபதுடன ஞ்சுமே. (798)

செண்பகப்பூமிளகிரு சீரகஞ்
சிறுலவுங்கபட்டை கடுக்காய்த்தோடுங்
கணக்கதாய் ஜாதிக்காயுங் கிராம்புடன்
காட்டுச்சீரகந்தாணி வேர்க்கொம்புடன்
எண்விதமிருகற் கங்களஞ்சிடை
இனியவுமுன்னுரைத்த வேரிரண்டிடை
நண்பெருஞ்சமன்சொன்ன வேர்பாகமாய்
நாட்டிலெய்திடும் நண்பர்க்குரைப்பதே. (799)

வகைவகைச் சமன்வேருஞ் சரக்கதும்
வஸ்திரகாயம் வடித்தே யிடித்தெடுத்
துகையதாகுஞ்சரக்கும் வெவ்வேறதாய்ச்
சூரணமதுவாகச் செய்தேயெடு
வகையதாய்விளக் கெண்ணெய்ப்படியது
மூட்டிடுந்தாளிச் சட்டிதனிலிடும்
பகையில்லாமற்சரக்கு வேர்ச்சூரணம்
பாச்சிடுங்கரைத்தே கதிர்வாலையே. (800)

வேரின்மூலம்விதம் விதச்சாரெடு
விராகனஞ்சுவிடு மெண்ணைதன்னிலும்
பேரின்மூலிபேதா பேதவாறுகாண்
டேதுமேகரைத்திப் படிசூரணம்
பாரிலும்புவி பானுரவிமுகம்
வாரம்வைத்திடுவாலை தணலினில்
நாரியர்வருகாதே துரத்திடு
நாளுக்குத்தினம் நாள்பார்த்திடுவீரே. (801)

நாளுமேஜலம்நாடிடு மாதலால்
நண்பிலாதிருவாரம் வைத்தேயெடு
வேளுமேஜலநீர்ப்பசை பார்த்திடும்
வேகம்வேகம் விநாயகர் பூசைசெய்
தாளுமேகதிர்ச் சூரியனில்முகந்
தாக்கிடுமொரு மண்டலஞ்சென்றதால்
ஆளுமேயகற்றீசனைத் தியானியு
அகிலமாமதிலடரும் நோயேகுமே. (802)

இரசசெந்தூர மெண்ணெயிற் கூட்டிக் கொடுக்க வேண்டுமெனல் வேறு - தாழிசை

கிணச்சூடதுமிகவேதனைக் கிலேசம்பகைச் சடலங்
கிடமேவியப்பூநாகமுங் கிருமிகளு மொழிவாம்
குணமேதிவைச் சிவயோகிகள் ரசசெந்தூரமிடையார்
தொந்தித்திடும் விராகனிடைத் தொடுமெண்ணெயிலூட்டி
உணர்வார்களஞ்சிடை கொண்டிரு ரவிகாலையுமாலை
உலகோர்களுக்கிது பாரெண்ணெய் யொருபக்ஷமுமருந்த
மணமாகியகிரந்திச்சூலை வாட்சிப்புரைபுண்கள்
வடவாக்கினைச்சுடர்ப் பட்டிட வாராது நோய்வளமே. (803)

எண்ணெய் கொடுக்குமளவறிய குன்மங் குளிர்நளிர் சுரம் நீங்குமெனல்

அணுகும்பிணி பெரியோர்களுக் கனுபோகந் துட்டிடைதான்
அதில்சூதமேரச செந்தூர மரிசியிடையூட்டு
அணுகும்படியதி காலையில் மனதத்தனையுணர
அதீதக்கனல் புண்ணுஞ்சிலை புரையாறிடுமவுழ்தம்
இளகும்படி இவையேழுநாள் சிறுவர்க்கிருவேளை
இயல்பாய்தினமகிழ்வார்பிணி யெய்தாதிவை நோய்கள்
குணவேதனை பிரியப்படுங் குறைவேதிலைக் குணமாம்
குன்மச்சூலை குளிரும்நளிர் குடிவிட்டிடுஞ்சுரமே. (804)

உள்காய்ச்சல் உளமாந்தம் மூலம் விஷப்பாம்பு மேகுமெனல்

உள்காச்சலு முளமாந்தமும் உஷ்ணங்களுமதுபோம்
உதிருஞ்சுரதோடாதிக ளுளைக்கு முசல்வலிபோம்
உள்காச்சலுமுளைமூலமு மோடும்பிணிசோகை
உக்கிராதிதப்பாண்டுவிஷ மோடியொளிந்திடுமே
அக்கிரேகமும் விடுமேவினை யதிதப்பிணியணுகா
அருள்வாய் மிளகதுவுநில வேம்பாகிடும்வசம்பும்
வெள்ளக்கிரகவிதமேழுடன் விடுமேபெருங் கிழங்கு
வினைபோம்வட்டத் திருப்பியெனில் விளங்குங்கடுகாமே. (805)

வட்டமெனுந்திருப்பிவகை வளமொன்றது பலங்கால்
வருத்தேவிடும் வெதுப்பியனல் வரும்பொன்னிறமவைதான்
கட்டங்களுமணுகாதிடில் கவலைப்படாதாகில்
கவிந்தேகணக்கது நூறெனில் கலியதெனுமணுகா
அட்டக்கணமாந்தம்விடு மருமக்கருப்பாண்டம்
அதிலிட்டிடு ஜலநாற்படி யன்னீரதிலூட்டி
இட்டத்துடனெறியிட்டன லிதுநீர்ப்பதம்வருதல்
எட்டுக்கொருஜலநீரெடு இளையா திருமனமே. (806)

இளையாதிருமனமேகுடி யின்னீர்கதிர்சூரியன்
இரவியொளிதனில்காலையி லெய்தும்படிகியாழம்
களையாதெடுரச செந்தூரங் கருதும்பயரிடையும்
கவியப்பலமது வஞ்சிடைக் காட்டும்பதறாமல்
துளைத்தேவிடுங்குடிநீர்வளஞ் சுரசன்னியும் நளிருந்
துன்பம்விடும் தாபம்விடும் தோடம்விடுமாகில்
கிளரும்வினைகிரிகைக்கிடர் கிரியாசத்தியிடரால்
கிலேசங்களுமிலேசங்களுங் கெருவங்களிலிடரே. (807)

எய்தாதிடரிதுநீர்குடி யிளையோரிதையருந்த
இன்னூலினுக்கிணையாகுமோ இயம்பும் பதினெண்மர்
பயமோபழுதிலைகாண்மொழி பழுதாகிலும்வருமோ
பரிபாஷையுமிலைகாண்பழம் பொருட் கண்டனரெவரோ
தொழுதார்சிலர் துதித்தார் சிலர்சுயத்தால்கவி யுரைத்தால்
தொடுத்தாலருள் வருமோசுகம் வரத்தால் பெரும்வாழ்வு
எய்தான்குருவனுக்கிரகமு மெய்துஞ்சிவபதவி
விசிதக்கவியமுர்தம்பொழி யிடைபின்கலை சுழியே. (808)

எய்துஞ்சுழியிடைபின்கலை மிகவுந்தொழுதடியேன்
விதிதன் செயல்மதிதந்தைசெயல் விந்தின்விளைவதனை
எய்தும் பொருளருளுந்தமிழ் கவிதன்மொழியமிர்தம்
நீடாழிசூட்புவனங்களில் நிருவிமலர்க்கமலம்
எய்தும்வளர்பரிபூரண மூவைந்து நூற்ஞானம்
முழுதும் பலகலையாய்ந் தெண்ணூர் முடிவுமறுமொழிமேல்
வயதுமொருநூற் சொச்சமும் வசனிப்பது மணியாய்
மகிழுமகிதலமேவிய மனமே மகிழ்ந்தனரே. (809)

திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய
நவரத்தின வைத்தியசிந்தாமணி
800-முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்

குருவாழ்க குருவே துணை

தெய்வத்தன்மை பொருந்திய திருவள்ளுவ நாயனார்
திருவாய் மலர்ந்தருளிய

கெவுனமணி 100.

வேதாந்தமெண்ணூர்தன்மொழி விசிதமொருநூறும்
மேவுந்தமிழ் கவிசொச்சமும் விதியாயிவையருளும்
நாதாந்தசின்மயமேவிய நவரத்தினபீடம்
நவகண்டமீரேழும்புகழ் நவசித்தர்கண்மகிழும்
பாதாம்புயநாதாக்கள்தன் பரிபூரணகமலம்
பதினெண்பலகலையாய்ந்துநூற் பாடப் பணிந்தோதும்
தாதாவெனும் பொதிகைக்கிரி தலம்வாழ்குருமுனிவர்
தாள்போற்றிருவடியேதொழு தற்சித்தோதுவேனே. (1)

ஆசான் ஆட்கொண்ட விதம்

மேவுந்திருச்சிற்றம்பல சனகாதிகள்சூழும்
விண்தாவியபொதிகைக்கிரி மேவும்வளராசான்
தாவுமகத்தீசரவர் தாள்கொண்டடியேனைத்
தமிழோதிமெய்ஞ்ஞானச்சுழி தலைமேவியகுறவர்
யாவும்பலபொருளுமருள் அமுர்தமெனக்கூட்டி
ஆதாரமேலாதாரமு மனுக்கிரகமுமளித்து
காவுவிசுழிமூலாதார ப்ராணாலயந்தந்து
கருவூர்குடிநகர்வாழெனில் கருணையளித்தாரே. (2)

இரவிக்கதிர்மிகமேவிய பகற்போன்றிட லொளிவாம்
இமையோரயன்மாலும்சிவ மறியார்ச்சுழிதலமுந்
திரவியருள்ஞானப்பதி செயல்பெற்றிடும்பெரியோர்
தினம்வாசிகொண்ட முர்தமுணர் சித்தாதிகள் பெருமை
மறலியகற்றிடுவார்மதி தலமேகுடிகொள்வார்
வாழ்வார்திருச்சிற்றம்பல மகிழ்வார்மதிபூண்டு
கரணாதிகட்பொற நீரிடக்கருவிதளைச்சுடுவார்
காந்தத்தினமுறையானுமே கருதும்வினை பொழிவே (3)

ஊசிக்காந்த மெனிலேழு வூசியிவை
 உயரத் தூக்கிவிடு மாதலால்
ஓரிரு தன்பல மாவதற்கரிய
 உறுதி வைத்துக் குழிக்கல்லினில்
வீசியேவிடு வீர்தூள தாகப்பொடி
 மேவி சம்பழநீர் விட்டபின்
மேலதாக வொருசாமஞ் சாடிவலு
 வேகமா மயன மிவையதும்
பாசி போன்றிடுதல் மெழுகு தன்பதமும்
 பார்த்தெடும் வழித்துவில்லை செயப்
பானுதன் ரவியில் வைத்திடுஞ் சுவரல்
 பாகமாகும் பதமாயெடு
பூசிதமகலி லூட்டி மேலகலும்
 புகலு மண்சீலையு மேழதும்
புனற்சலமுஞ் சுவரக்கதிர் முகம்படவும்
 பூட்டிடும் ரவியில்வைத்தெடே. (4)

சீலைசெய்திடு கணேசன் பூசையிடு
 செய்கையாய்ப் புடமுங் கோழிதான்
செவியுமூன்றுவிசைச் சாருவிட்டரையுந்
 தெளிவதாய் மயனம் வருதலால்
உலகமா மிவையுமுன் செய்தபுடமும்
 முறைதவிறப் படியு முணர்வதால்
முலையெனுஞ் சலநீர்தாழை தன்னியல்பு
 மூட்டிசாடி விடு மயனமாய்
வலைதன் மெழுகு சாமமாட்டியெடு
 வருதலால் வழியும் பில்லைசெய்
வைத்திடும் ரவியிலிட்டிடு மகலில்
 வட்டிமூடியே மண்சீலைசெய்
மாலை நேரமதில் குக்குடத்தின்புடம்
 வன்னியிட்டு மறுபின்பது
மாறிமூன்றுபுடந் தாழையின் மூலைநீர்
 வார்த்துச் சாடிப்புட மூன்றதே. (5)

செந்தூரத்தின் நிறம்

காந்த செந்தூரமும் வருதலும் புரசைக்
 காணும் பூவின்நிற மாதலால்
கண்டெடு சிமிழில் பதனமாய் மூடியுங்
 கைவசப்படுவ தரிதுகாண்
இந்த செந்தூர மிதாகு மிவ்வவிழ்தம்
 இணையொன்றில்லை யனுபானமும்

நிலைகண் டேத்திவிடு நோய்பிணிக்கிடவும்
நிகரிலாத முறையறிதலால்
விந்தையாவினிட கிருதமாமதனில்
விட்டிடுமிவையும் பணமிடை
வினவுமிந்தவித செந்தூரந்தனிலுமே
விளங்கும் பதமிவ்விதம்
சிந்தையேனுனது வறுமைநீங்கிவிடுந்
தேகமாவது சௌக்கியம்
சேத்மமாம் வினைகளிருபத்தொன்றுவிடுந்
தீருமண்டல மிதாகுமே. (6)

இதனால் தீரும் நோய்கள்

மண்டலத்திலறுங் காசரோகமெனில்
மாறியோடிவிடு மாய்கையாய்
வச்சிர தேகம் வலுவாகும் கல்தூணது
மதுரநீரதவு மாறிடும்
அண்டவாய்வுந்த மரகமும்அசுவமெனில்
ஆறுசூலையு மகோதரம்
அவுழ்தமு முணர்வீ ராவின் பாலுஞ்சிறு
பயருங் கொண்டுணர் வீராகையாற்
கண்டவர்க ளனுபோக பண்டிதர்
கட்காண்கிலார்களெனில் கண்டபேர்
கனகமாகுஞ் சடமனோய்க ளற்றுவிடுங்
கருது பத்திய மறுபத்தியமும்
விண்டுனோய்விடுமே தந்திமேகம்வெடி
சூலைகுன்ம க்ஷயம் வேர்படும்
விசிதமோர் தினமிரண்டு வேளையுணர்
மேலும்மேலும் வினைதீருமே. (7)

வினைப்பயன்விடுபட்டேபோ மெய்க்குருவிளக்கத்தாலும்
இணையிதற்கவிழ்தமேது இன்னந்தேன்களஞ்சி வாங்கி
முனைந்திடுமனுபானத்தில் முன்புமண்டலந்தான் போலும்
கனைந்திடும் நோய்களேகுங் காந்தசெந்தூர மூட்டே. (8)

சச்சுவாய்வு நீங்கும்

செந்தூரம் பணந்தான்கொண்டு தேனதுங்களஞ் சிதாக்கி
இந்திரன் முகத்திநேரே இருந்துநீகுழைத்துமத்தி
மந்திரத்தியானஞ்செய்துமகிழ்ந்து மண்டலந்தானுண்ண
தந்திரமாகவெய்துஞ் சச்சுவாய்வதும்போமே. (9)

பசும்பயர்பாலுஞ்சோரும் பத்தியமுருங்கைப் பிஞ்சும்
விசிம்பிடுந் துவரையாதல் வெள்ளையாமேடம் வத்தல்
கசுவெனிலெல்லாந்தள்ளுங் காந்தசெந்தூரத்தாலும்
நசிந்துபோம் பாண்டுசோகை நசித்திடும்வீக்கம் போமே. (10)

நசித்திடுமஸ்திச்சூடும் நஞ்சுதிண்ணவற்கு மெய்து
இசுவுடன் வலியுமேரும் இளந்தையின்முறடு நீங்கும்
பசுந்தயிர் புளிப்புமைந்து பாலதும் பலமுமைந்து
மசியும்நோய்ப்பணசெந்தூரம் அவுழ்தமத்தித்துவுண்ணே. (11)

கண்விழித்துலக்கமாம்

உண்ணுமண்டலத்தினோய்போம் உண்பது மிரண்டுவேளை
கண்விழிதுலக்கமாகுங் காலையுமாலையுண்டால்
விண்ணொளியறியலாகும் விருப்பமாம்விழிதன் பார்வை
எண்ணுள்ளகாலம் வாழ்வார் இந்திரனொளி காண்பாரே. (12)

வெண்குட்டம் நீங்கும்

பித்தபாண்டதுவும்போகும் பிறமிநீராமையேகும்
வைத்திடுஞ்செந்தூரத்தால் வசீகரமாகும்நோய்போம்
சுத்தமாஞ்சங்கன்சாற்றில் தொடுத்துமண்டலமேயுண்டால்
வித்தகனருளால் சாத்தியம் வெண்குட்டமது போமாண்டே. (13)

மதுரந்தேன்கிருதம்ரெண்டும் வைத்திடுபண செந்தூரம்
விதுரநோய்சடம் விட்டேகும் வேளைகொள் தினந்தான்ரெண்டு
பதறிடாதிரண்டுபக்ஷம் பத்தியமாகவுண்டால்
கதிரவனொளிவுங்காணுங் காந்தியுமதீத மாண்டே. (14)

காந்திமிகுங் கதிரவனொளிவதாம்
வாந்திதன்னை வராமல்நிறுத்திடும்
மாந்தமெட்டு மலைக்கிரியேகிடு
ஏந்தனோய்க ளெழுகடல்புக்குமே. (15)

மாறுமாறு மகோதரமண்டலம்
தேறுந்தேறுமே திப்பிலிசுக்குடன்
கோறுங்கோறுங் குறுமிளகுமனல்
நீறும்நீறும் நெருப்பில்வெதுப்பிடே. (16)

ஒண்ணரைப்பல மோடதிலிட்டும்
கண்ணெயுங்கனற் காந்திச்சுடர்பட
வெண்ணயுமிவை வீசிடுஞ்சூரணம்
பண்ணுமேகிருதம் பாலுந்தேனாகுமே. (17)

பாலுந்தேன்பஞ்ச தாரையிலும்மிரு
காலங்கண்டு கருதிடுவார்களோ
தேலுந்தேலுந் திசைவாய்வதும்விடுந்
தூலம்விட்டுத் துலைதூரமேகுமே. (18)

தூரதூர துன்மாங்கிஷமேகிடு
மாரமார வனேகநாளில்லைபார்
காரகாரவுங் கம்மல்க்ஷயம்விடும்
நாறுநாறும் நாசிப்புண்ணாறுமே. (19)

அரிதாரக் களங்கு

அப்புமுப்புமறிந்து செய்தாலல்லோ
செப்பொணாதரிதாரக் களங்கதாம்
சுப்பிரமாய்க் களஞ்சாவதும்பத்திடை
பொற்பரிதபொன் கெந்தியவ்விடையே. (20)

அன்னபேதியு மவ்விடையேசமன்
சொன்னதோர் சரக்காவதுஞ்சுத்திசெய்
நன்னயரச நாகமுமந்திடை
அன்னமேயிடைட் யைந்துஞ்சரியதே. (21)

சூதகக் களங்கு

தொந்தியுஞ் சூதநாகமுருக்கிடு
விந்ததோர்சரக் கேத்துங்கலுவமில்
பொந்தியும்பூ வரசன்வித்தேயெடு
தந்ததோர்குழி தைலமிரக்கிடே. (22)

குப்பியை யெரியிடும் பாகம்

தைலம்விட்டு சாடித்திடுஞ்சாமம்நால்
செயலதைவழித் தேசிறுவில்லைசெய்
அகிலமீதில் அருணன்முகம்பட
சைலகுப்பி தனக்குமண்சீலையே. (23)

சீலைமண்ணேழுஞ் செய்துவுலர்த்திடுச்
சாலகுப்பி சரக்கையுந்தாக்கிடு
வாலைவாய்தமர் மயிருஞ்சொருகிடு
வேலையுண்டோபின் வேறொருகுப்பியே. (24)

குப்பிவாயில்முன் குப்பிநுழைத்துமே
ஒப்புறவாவுளுந்து மாவெண்கரு
இப்பதமேயெழு சீலையுஞ்சுத்திடில்
தப்பொணாது தரணியிற்புடமதே. (25)

மருந்திருக்கு மதுகுப்பிகுப்பிமேல்
பொருந்தவும்பூமி தன்னிற்புகட்டிடு
வருந்துமேவி மண்சீலைவலுத்திடு
மருந்துங்குப்பி யதுமணல்சோறிடே. (26)

சோறவுமணற் சுத்தியிருவிரல்
ஏறவுமெருவிட்டிடு குப்பிமேல்
கூறவுந்தணல் கொண்டிடுவன்னிதான்
ஆறவும்புட மவ்விதமாகுமே. (27)

ஆறிடும்புட மாறினபின்னெடு
வாறிடுங்கவ சங்களும்வாங்கிடு
கூறிடுங்களங் காவதுங்குப்பியில்
சோறிடுஞ்சூத நாகத்தின் ஆட்டமே. (28)

வங்கதார மதுரசநாகமும்
அங்கமாங்களங் காகுமெடுத்திடு
தங்கங்கச்செம்பு தைலமாங்கெந்தியால்
சிங்கமன்னையின் செய்கையாலாண்டையே. (29)

லிங்கக் கட்டு

சிங்கமாகுந் தெளிந்திடுலிங்கமாம்
லிங்கமாவ தொருபலம்வாங்கிடு
தங்கமேஅயச் சட்டிதனிலிடு
மங்கொணாது நல்லெண்ணெய்யூற்றியேத்திடே. (30)

ஏத்தியேயிரு சாமஞ்சுருக்கி
பார்த்திடும்பத மாகத்தைலமுந்
தூத்திடுமே றுளிதுளிவிட்டிடும்
செற்றிடுமே திருப்பித்திருப்பிடே. (31)

திருப்பியேவிடுந் தேங்கிடாலிங்கமுஞ்
சுருக்கிடும்வலு சோதிப்ரகாசமாம்
மருப்பொணாது மால்சிங்கித்தைலமாம்
இரும்புபோல்வலுத் தேயிருலிங்கமே. (32)

வேறு

வலுத்திடும்வலு வேகமதாகிடும்
    மதியில்பத்துக்கொன் றியவும்பொன்னதாம்
நலுத்திடுமேவய தேழரையாமெனில்
    நாடினார்கள் நாதாக்கள்மகத்துவம்

பலித்திடும்பரி வேதைக்குமீண்டுபோம்
 பாரிலும் பண்டிதற்கிதுவேண்டுமாம்
துலைத்திடுமாது தோகைமையல்விடும்
 சொன்னதெல்லாஞ் சுருக்கங்காணாண்டையே. (33)

சொன்னதோராரி தாரக்களங்கெடுத்
 தொட்டும்பாராயச் சட்டிதனிலிடு
வன்னகெந்தி தைலங்கொண்டூட்டிடு
 மாறிடுமிரு சாமஞ்சுருக்கிடு
அன்னையேஅபி ராமிபதம்பணிந்து
 ஆனபின்பு அர்ச்சித்துப்பூசித்திடு
வின்னமேது பொன்போலதுவர்ணமாம்
 மெய்விளங்கிடு மேன்மைப்பெருவீரே. (34)

ஏழுமூன்று மிரண்டெனில்மூசையா
 லிவையுருக்கிப்பத மேவரும்போதினில்
வாழுமேவரும் பாகமறிவதால்
 வருதலிற்குரு வொ[illegible]று கொடுத்திட
தாழ்வுமேது தனியெட்டரையதாம்
 தாழ்ந்தபேர்கள் தரணியில் வாழ்வர்காண்
சூழுஞ்சூழுஞ் சூக்ஷமவைதுரண்கிலீர்
 சூக்ஷாசூக்ஷஞ் சுருக்கமடியவரே. (35)

அ[illegible]தார பீயம வேறு

[illegible] ளகத்தில் தனியீயஞ்செய்பவர்
நாளதுண்டோ நாயுருவிலிருப்பது
மாளுமீய மதனைப்பயல்களில்
நாளுமாண்பிள்ளை நண்ணமுரியதே. (36)

உப்புதனி லொருவிராகனிடை
தப்புமோகுழிக் கல்லினிற்பாச்சிடு
அப்பவேயரி தாரம்பலமிடு
முப்புதொட்டு மூலிகையாலாகுமே. (37)

மூலிவளம்
வேறு கலிமடக்குந் தாழிசை

பூவாடோங்கு மூலிகையின் பூவதாம்
 புகலுஞ்சுந்திர புட்பாதிமூலிகையாம்
தாவிடுமே மருக்களின்பூவதாம்
 தரணிதனிற் பூங்காவிலிருப்பதாம்

வாவிசேருங் கொய்யாமரப்பூவெனில்
வஸ்துவிந்த மகிமையைக்காண்கிலார்
கோவிதங்கும்பல் கும்பலாமேவிடிற்
கூறினோங்குண வாசமிதாண்டையே. (38)

வங்க செந்தூரம்

எங்குமுண்டு ஈயத்திற்செந்தூரஞ்செய்
இணங்குமேவும் இதில்சத்திராதுகாண்
அங்குமுண்டு வம்புவிதன்காவினில்
அழகதாகஅம் மூலிவளப்பர்காண்
இங்குமுண்டு எங்கெங்குமுண்டாமெனில்
இருக்குமந்த இடங்களறிந்திடீர்
வங்கமேவு மழுகண்ணமுலிபோல்
வாழுமேவளர் மூலியுங்கொய்திடே. (39)

கொய்திடுமந்த மூலிகைவாங்கிடும்
கொண்டெடு சிறுபிள்ளையமுரிதான்
எய்திடுமிவை நீருவிட்டேயிடித்
தேங்கிடாமல் எடுத்துப்பிழிந்திடு
மெய்யிதாகுங் குழிக்கல்லதனிலும்
இவைதன்மூன்று வகைமருந்தேயிடித்து
எய்துமேவிவைச் சாறுவிட்டாட்டிடு
தேங்கொண்ணாதொரு ஜாமமுமாட்டிடே. (40)

ஆட்டிடும்போ ததுபதங்காண்கிலீர்
ஆகுமைப்பத மவ்விதமானபின்
நாட்டில்மேவிடுங் கூத்தங்குதம்பையும்
நாடெலாமுண் டனேகவனாந்திரங்
கூட்டுமேவீயம் மூலிகைவாங்கிடு
கூறினோஞ்சிறு பிள்ளையமுரிகாண்
வாட்டிடுமே பின்னீர்விட்டுச்சாடிடு
வாங்கிடீரசமாட்டி யரைத்திடே. (41)

அரைக்கரைக்கமைப் பதமதுபோல்வரும்
அவ்வதமெழு காகிடுஞ்சாமமில்
திரைத்திடுமை மெழுவழித்தேயெடு
வென்னமாயமிம் மைசதுர்ப்பில்லைகாண்
கரைத்திடுங்கதிர் கானல்முகம்பட
காந்தியிலுலர்ந் தேயெடுமூசையில்
திரைத்திடாது செப்புத்தகடொன்றதப்பி
செய்வியுமூசை வாய்க்குச்சரியதே. (42)

சரியதாகு முக்காலரைக்காலதாய்ச்
சாங்கமாய்மூசை வாய்க்குநெருக்கிடு
வரியதாகும் வரியின்மேலோடது
வைத்துச்சந்துவாய் மண்சீலைசெய்திடு
குரியதாகக் கதிர்முகந்தாக்கிப்பின்
கொண்டிடும்பெரி தானயெருவதாய்ப்
பிரியமாயிது ரெண்டுயெருவிலா
பின்புமேசிறு நாலெருவாகுமே. (43)

நன்றுமேபுடங் காற்றடியாதிடம்
நாலெருவு விட்டேயனல்மூட்டிடு
வென்றுமேகனல் ஆறியெடுப்பதால்
மேலும்வைத்த செம்புத்தகடேயெடு
கண்டுமேவும் பதங்கமதாகிடுங்
காண்கிலுமதைக் கத்தியால்வாங்கிடு
விண்டிடீரிவை வீணற்பதறிடா
மேலுமே மெதுவாயெடுபற்பமே. (44)

பற்பமுஞ்சிறு மூசையில் தாக்கிடு
பார்த்துமேவக் கரியில்வைத்தூதிடு
இற்பதென்ன இவையீயமாகிடும்
இன்னமுமயச் சட்டியில் வைத்திடு
சிற்பதென்ன செழுங்கனலாயெரி
தீபமாகும்நல் லெண்ணெயும்விட்டிடு
உற்பமாய்விளக் கேற்றித்தீபாக்கினை
ஊட்டிடும்பொன் கெந்தித்தைலமே. (45)

தைலமூட்டித்தனி ரெண்டுசாமமுந்
தாக்கிடும்துளி தான்துளியாமெனில்
வைரமாகும் வலுவதுவெட்டையாம்
வங்கமாமிதிற் கீடெதுமில்லைபார்
மைலமில்லா் வடிவதும்பொன்மய
மதியுமேமுதேய் வானதுமூன்றிடைப்
புலயனென்றிடும் பொத்திடுமாமெனில்
பொதிகைமேவுமகத் தியனுரைத்ததே. (46)

உருக்குமாமுக மொன்றுகுருக்கொடு
ஓடுமேவய தெட்டரையாமெனில்
பெருக்கமாயெடுத் தேசிலவாதிகள்
பேசுவார்கள் பெருமைதாகவுஞ்

சிறுக்குமோகஜகத் தோர்கள்பழித்தனர்ச்
சிறுமையேகிடுஞ் சிலகாலம்வாழ்தலால்
குருமுனிவர் குறித்தெனக்கோதினார்
கோருமென்மதி போன்றிடவெய்துமே. (47)

என்மதியா லெடுத்துரைத்தேன்தமிழ்
எய்திடுமமு தக்கவிபாடலால்
சொன்னதோர்திரு வள்ளுவன்சொன்மொழி
சூக்ஷமெண்ணூறிது சொச்சம்நூறினில்
வின்னமில்லை விகற்பமுமில்லைகாண்
விரித்துதரைத்தேன் வெகுவிதநூற்பயன்
மன்னருமண்டலீகர்மகிழ்வார்
மால்தேவிவரலாறு மகிழ்ந்தேனே. (48)

அற்புதம்

இல்லைதார மியம்பினதோர்முறை
வெல்லலாமோ விதமெண்பரிகைக்ஷயுஞ்
சொல்லார்சொல்லார் வெகுசுளுவோயிலை
கல்லுமேலெமு துங்கருத்தாமெனில்
புல்லதாமோ பொருளுங்கல்லாவதுஞ்
செல்லுமோகெடி பூடும்பொன்னாகுமோ
கொல்லவந்தெமன் [illegible]வினையதாம்
இல்லமேயுள் துள்ளமறிந்திடே. (49)

இல்லையில்லை யெண்சாணுடலுக்குளே
சள்ளையென்று சாகாக்கால்வேகாத்தலை
வல்லுமேபக லானதறிந்தபேர்
விள்ளலாகும் வினைப்பயன்ரெண்டதும்
தொல்லையேது மஹாமேகலேகியங்
கள்ளணென்ற கர்மநோயகற்றிடும்
நல்லவன்குரு நாதனருளினால்
எள்ளளவுமிதிற் பிசகில்லையே. (50)

மஹாமேகலேகியம்
வேறு

திருமருவும்வடிவழகா மாதுவாலைச்
செங்கமலப்பாதமலர் தெரிசித்தேயான்
மருவுந்திருபொற்கமலம் பணிந்துபோற்றி
மஹாமேகலேகியமும் வணங்கிச்சொல்ல

கருவுருவாயெனையீன்ற அன்னையார்தன்
கருணைவைத்து நவரத்தினமணிகளாகக்
குருவினனுக்கிரகமதன் கிருபையாலுங்
கூறுகிறேனாண்டேயினி கூறுவேனே. (51)

வேறு

கூறுவேன் கடுக்காய்த்தோடுந்தாணியுங்
குறித்ததோர் நெல்லிக்காய்த்தோடுசீரகம்
நேருஞ்சுக்குத் திப்பிலிமிளகுடன்
ஏலரிசி கிராம்புமதுரமும்
தேருமே கருவாயுடன் பட்டையுஞ்
சேர்க்கையாலும் லவங்கப்பத்திரியும்
ஏறுமே ஜாதிக்காயும் நருக்குடன்
இன்னமு மெவாக்ஷாரம்வால்மிளகே. (52)

வாய்விளங்க மக்கிராகாரத்துடன்
வசனியுமென் கோட்டமுமாதலால்
தூயதன்சம னொன்றுபலமரை
சூட்டி.னோமாவின் கிருதமரைப்படி
சேயெனுமபலந் தேனதும்பத்ததாஞ்
செய்கையிவ்விதக் கார்கோல்நன்னாரியும்
வேயெனும் வெட்டிவேர்கீழாநெல்லிவேர்
விகிதமேவகை யொன்றுக்கரையதே. (53)

பலமெனுமரை யாகுஞ்சரிசமன்
பார்த்தெடுத்து மேநீர்படிநாலது
வலமாமாவின்பால் படியதுமரை
வார்த்தோரிடை கமுகின்பூச்சார்படி
சாலவுஞ்சம் பழச்சார்படியரை
சாற்றிடுங்கையான் சாருபடியரை
கோலமாஞ் சிறுக்கீரைச் செருப்படைக்
கொண்டிடும்படி யாவதரையதே. (54)

கீழாநெல்லி அரைப்படிச்சாறதுங்
கேளுங்கற்றாழைச் சாறுமரைப்படி
வாழ்வதோர்சரக் காவதுஞ்சூரண
மற்றும்வேர்கள் வகையெல்லாஞ்சூரணம்
தாழ்வுமேதொரு தாளிதன்சட்டியில்
தண்ணீர்தேன்பசு நெய்யதுவாமெனில்
வேழமாமுகன் குண்டலிவல்லபை
விகசிதமென்குரு மாமுனித்தியானமே. (55)

வேறு

தாளியிவையானதொரு சட்டிதனிலிவ்வகைகள்
பாலுமதைவிட்டேயடுப்பிற் பக்குவத்திலும் பதமாய்த்
தேளிதுவென்றேகனலுந் தீபமதுபோலெரிக்க
நாளிலைநீர்ச் சுண்டியிவை நடப்பதுவுங் கண்டிலரே. (56)

லேகிய பாகம்

தொக்கிவிடும்பாகதுபோற் சூக்ஷமதுவேயறிந்து
புக்கிவிடுமேயிறக்கிப் பூட்டிவிடுஞ்சூரணத்தைத்
தக்கிவிடுமேயளறித் தானதனையேதுழவி
சொக்கிவிடலேகியமே துதித்துவிடுமே பணிந்தே. (57)

பணிந்துவகத்தீசர்பதம் பாயாசமன்னமுடன்
அணிந்துவறுசுவையுடனே அர்ச்சித்துவாராதனைசெய்
வணிந்து குருக்கிருபையினால் மகாமேக லேகியத்தைக்
கனிந்து கலசந்தனிலுங் கருதிவிடும்பக்ஷமதே. (58)

பக்ஷமதுவாகிலும்பின் பார்போன்திடவினைகள்
அக்ஷணமேலேகியத்திற் சமன்கழற்சிக் காயின்விதம்
உச்சந்தள்ளிக்காலையிலு முண்பதுவுமாலை யெனில்
அக்ஷணமேவேளையிரு அவ்விதமாய்க் கொள்வீரே. (59)

கோலமென்னகோலமின்னூல் குருமுனியால் வந்தவிதி
ஞாலனமென்னவுண்டவிழ்தம் நாற்பது நாளுண்ணயிலும்
பாலனதுவாகுமுடல் பத்தியந்தானிச்சைகொள்ள
வாலைவயதாகுஞ்சடம் வச்சிரம்போலாகிடுமே. (60)

பத்திய விவரம்
வேறு

கிருதம்நெய்யாகு மாவின்பசுந்தயிர் கெடியதுமோர்
வருத்தத்துவரை யவரைவழுதலை வருமதுபிஞ்
சிறுத்தப்பசும்பயர் வெள்ளாட்டின்பாலுஞ் சிறுமுருங்கை
முறித்திடுந்தேனு மரைக்கீரைமுள்ளூ வெள்ளரியே. (61)

வெள்ளரிச்சுண்டை யாதண்டம்வத்தல்வெள்ளாட்டிறைச்சிக்
குள்ளையுங்காடைக் கிளூவையுமுள்ளான் சிறுமுசலும்
தள்ளிடும்பச்சைப் புறாவெனுமாமைத்தசை யிதுவாம்
கள்ளுங்கோரக்கர் மூலப்புளிப்புகை கைப்பும் விடே. (62)

தீரும் வியாதிகள்

விட்டிடுஞ்சூலைக் கிரந்தியும்வாய்வு விக்கல்கக்கல்
கட்டிடுஞ்சேத்துமந் தொண்ணூற்றாறுங் கடற்புக்கிடும்
மட்டில்லாச்சூசிச் சூதகவாய்வு மாந்தமெட்டும்
வெட்டிடும்நோயை மகாமேகலேகியம் விளங்கினதே. (63)

வச்சிரகண்ட மணிகண்டமாலை வாயடைப்பு
முச்சிதப்பிளவை தவடப்பிளவை யோனிப்புற்று
மச்சதுமேகமதுரநீர்ப்பாளை மகோதரமுந்
தீச்சிடுஞ்சூலை யூன்வாய்வுமச்சுந்தவறிடுமே. (64)

இசுவெட்டுக்குன்ம மினியட்டமூல மெய்தும்வெடி
அசவெட்டுமாந்த மன்னத்திரேச மறைக்கடுவன்
கசிவெட்டுப்புண்கள் கனல்வன்னியரோசிகம் காதுமந்தம்
விக்கும்விக்கலேப்பங காசமும்வாந்தி விடுபடுமே. (65)

வேறு

வலிகுன்மநாக்கட்டு மகோதரமும் நீரிழிவுக்
கலக்மெனில்மேகமொடு காந்தல்போம் வலிகுன்ம
மேகமிருபத்தொன்றும் வெடிப்புண்கள் சூலையறும்
தாகமறுஞ் சோபகளை போமே. (66)

ஜன்னிஜுரதோடமருஞ் சாந்தமதுவாகுமெனில்
இன்னவிதப்பாண்டுசொரி வெய்திடா - ஜன்னிஜுர
மகாமேகலேகியமு மண்டலங்கொண்டேவரவுந்
தேகமும் விசிகரமாஞ் செப்பு. (67)

சார்ந்துவவைலேகியமும் தானதுசெந்தூரபற்பம்
சேர்ந்துவொருமண்டலமுஞ் சென்றதால் சார்ந்துமிவைச்
சூலகெந்தி வாளமிவைத் தோகைமடமாதரசே
வாதசடமாமெனிலும் வாழ். (68)

என்றுமிடலேகியமு மெய்துமிவைச்செந்தூரம்
வென்றுதினமாகிலுமே விட்டுவிடா - என்று மிவைக்
கண்கள்விழியொளிவாங் காணுமதாற்சுக்கிரனும்
உங்களுக்கெல்லாந்திரியு முண்மை. (69)

ஆனந்தபைரவி மாத்திரை
இ-ம் கல்லுளிசித்தன் தருவு
பல்லவி

தனந்தனந் தனதனனந்-தனம்
தனந்தனந்தனந் தனதனனாம்.

அநுபல்லவி

அபிராமிசிவஞான சவுந்தரி
கமலபதமருளானந்த
வயிரவன்மாத்திரைகாண் குருஸ்தான
மறிந்துணர்வேனிவை யாண்டே.

சரணங்கள்

கணேசகுண்டலிசர ஹணபவமே - கிருபை
மணமகிழ்ந்தருட்பரி பூரணமே-சிவ
ஞானையுனதனுக்கிரக ரகசியமே-கண
பதியும் வல்லபைகந்தன் காப்பாமே. (70)

ஜாதிலிங்கமிளகு திப்பிலியுங் கடைச்
சரக்கும்வெண்காரமதுஞ்-ஜெகஞ்
ஜோதியிந்துப்புஞ் சூத்திரநாபியது-மிடைத்
தூக்கிடுமிருகளஞ் சிறுசமனாம்-வித
மாதியெனுமிவைதன் சரக்கேழுங்-குளிக்
கலுவமதினிலிடு மறிந்துணர்வாய்ப்-புவி
மேதினியிலகுஞ் சம்பழச்சாற்றா-லிதனை
விதமொருநாள் கைவிடாமலுமே. (71)

மெழுகுதன்பதமதி லேவழித்துக்-கதிர்
வெய்யலில்ரவிபட நிழலுலர்த்தி-நிலம்
பழுதெனுமே வருகாதிடிலுஞ்-சுரைப்
பரணிதனிலு மிதைப்பதனமதாய்ச்-சேகரி
வழுதாதிடிலனுப்பானமறி-தினம்
வைத்துயிஞ்சிச்சுரச மதில்குன்றிப்-பிணி
யழுவைச்சுரமது விட்டலைந்தோடு-கா
மாலையிரண்டு மறிந்தவிழ்தமிதே (72)

காலையுமாலை யிரண்டஞ்சுதினம்-ஓடாச்
கருதிடுவீர்ப்பிணி நோயதற்கும்-பின்னும்
பாலையில்வருஞ்சன்னித் தோஷஜுரம்-பரந்
தோடுமெனுமிதனைப் பகர்வீர்காண்-வினை
மாலையில்வருமூணாம் பிறையதுவுமலை
கடலதுவுந்தாண்டிப் புக்கிடுமாய்ச்-செயல்
வேலையிவைகுருத் தொட்டுணர்வதனாற்-சர்வ
விஷஜுரதோஷமெனில் விடுமாண்டே. (73)

குகாந்தகன் மாத்திரை
வேறு

வாய்வெனுமே குகாந்தகன்மாத்திரை
மாதுகெந்திப் பலமுக்காலாகவுந்
தூயவும்பொன்னரி தாரமதனிடைச்
சூத்ரநாபியுஞ் சூதமுமவ்விடைத்

தாயெனுமனோசிலையு மவ்விடைச்
சாத்திரபேதி வெண்காரமு மவ்விடை
நேயமாமிங்கிலீகமு மவ்விடை
நேர்மையாய்ச் செயசுத்தி செய்தானதே. (74)

வேறு

சுத்திசெய்துச் சுகாந்தமாங்கல்லினில்
சத்தியமாய்விடுஞ் சம்பழச்சாற்றினால்
குத்தியேவிடு வீர்குழிக்கல்லினிற்
சித்தியாகுந் தினமூன்றுநாளிலே. (75)

அரைப்பு பாகம்

மூன்றுநாளு முனைவிடாதாட்டிடும்
வேண்டியேமய னமெழுகாகுமாய்
தூண்டியேவிடு வீர்வழித்தேயெடுக்
காண்டிடுமிவைக் கண்டெடுகுன்றியே. (76)

குன்றிடைநிழல் தன்னிலுலர்த்திடு
நின்றிடுஞ்சிமி ழ்தன்னிலடைத்திடு
வென்றிடும்விஷ வெட்கைச்சுரம்விடும்
சென்றுமேவிபின் தீயினிற்புக்குமே. (77)

அனுபானம்

தேனும்விட்டுத் திரிகடுகுப்பொடி
மானேவைத்திடு மத்தித்துக்குன்றிவை
மானுமேமழு வேந்தியநாதனுங்
கானுமேவிக் கனவிற்கருதிடே. (78)

வாதஜன்னி வருமையபித்தமுங்
கேதுராகுதன் கீடுங்கிணங்களும்
சூதசன்னிசுகசன்னி தாந்திரீகஞ்
சேதமாகித் தீவாந்திரம்புக்குமே. (79)

சூரியன்கதிர் சோதியொளிவினில்
வாரியே மதுரமிட்டுக்குன்றிடை
நாரியர்முலைப் பாலிலிரண்டுமே
தேறியேவிடுஞ் செய்துமத்தித்திடே. (80)

மத்திகாலை மதியிலுணர்த்திடு
வைத்திடுமைந்து நாள்வீதமாகிலும்
எற்றியெடு மெண்சாணுடல்விட்டுமே
மத்தியெய் முன்னோர்கள் சொல்வாக்யமே. (81)

மேகராஜாங்கத் தெண்ணெய்
வேறு

எட்டெட்டுமறு பத்துநாற்போது
 மெய்திடும்பற்ப செந்தூரஞ்சுண்ணமும்
வெட்டிடும்மேக ராஜாங்கத்தெண்ணெய்தான்
 வேகமென்ன மேகங்களிருபதும்
கட்டிடுமெம பாசக்கயற்றினாற்
 கானற்சூழ்ந்து கரிகிடுமாதலால்
கெட்டிவீரக் கெடிவீரச்சிங்கமாம்
 கெருவமில்லாயான் கேழ்வியிதாண்டையே. (82)

சீரணித்திரு மேவுமலர்ப்பதம்
 சித்திவிநாயகன் மத்தக்கெஜமுகன்
வாராணிற்றிரு மாமலரஞ்சகி
 மாதுஅன்னை மலர்ப்பதம்பான்றுதி
பூரணிப்புவ னாம்பிகைதன்னருள்
 போற்றினே னடியேன்திருவள்ளுவன்
நாரணிசிரோ நாயகிபொற்பதம்
 நாண்மலர்துதித் தேன்குருவாண்டையே. (83)

முன்னையு முக்கத்தாரிவிலாமிச்ச
 மூலியிற்கொடி வேலிப்பருத்தியும்
இன்னிலத்திற சிறுசின்னியுங்கொன்னையு
 மிலவனுங்கொங்கு விருட்சமுமுல்லையும்
நன்மலர் நன்னாரிவிழுதியும்
 நத்தைச்சூரி யுருவியமுக்கிரா
பின்னைமாமல ராம்பலுந்தோடையும்
 பேராமுட்டி சித்தாமுட்டியாண்டையே. (84)

வேறு

முத்துச்சங்கு முதியார்தன் கூந்தலுஞ்
சித்துமேவுஞ் சீதாச்செங்கழனியும்
விற்றுக்கையான் வில்வத்தின்வேர்வெட்டிவேர்
கூற்றனாகுங் குதம்பையி தாண்டையே. (85)

வேறு

வாறுதன்மூலிவேர் வகைத்தோடும்
 வாங்கிடுவன்னியில் வெதுப்பி
வனமதிலிலகு மூலிதன்ரசமும்
 மறுவொரு பாண்டமிலூட்டி

வேதனோடுமிகப் பதமுலர்த்தி
யிவையெடுத் தடுப்பினிலேற்றி
வெதுப்பிப்பொன்னிறம் போலெடுத்துக்
கல்லுரலில்மேவுஞ் சூரணம்செய்து
பாரிதுக்கடைதன் சரக்கதும்பறங்கிப்
பட்டையுந்தாணிக் கடுக்காய்ப்
பகரிலகியதோரரத்தை யுங்கோட்டம்
பரங்கிசாம்பிராணி கொம்பரக்குஞ்
சிறுமிளகுடனே திப்பிலிஏலஞ்
சீரகம் சிறுநாகப்பூவுஞ்
செழுஞ்சுக்குமதுரஞ் செவ்வியங்கார்
கோற்சிங்கியுந் தாரமிதாண்டே. (86)

தெளிவதாயிவைதன்வகைக் காற்பலமாய்ப்
தினுசதை யனலிலும்வெதுப்பிச்
செய்கைதானிடித்துச் சூரணப்பதமாய்ச்
செண்பகப்பூவுங் கஸ்தூரி
பொழியவும் அதிதுர மாய்ச்சொரியும்
பொதிகைநாயக னருட்கிருபைப்
பூரணப்பச்சைக் கற்பூரஞ்சவ்வாது
புழுகோரோசினை குங்குமப்பூச்
சுழிமுனைக்கமலமிடம் வலம்புரியும்
சூரணம்வகைக்குக் காற்பலமாய்ச்
சூட்டியே பொடித்துப் பாண்டங்கொண்டதனிற்
சிற்றாமணக் கெண்ணெயுமிரண்டு
வழிபடமிகவுஞ் செவ்விளநீரும்
ஆவின்பால்தேசிப் பால்பசுநெய்
வான்குமரியின்சோர் சலமும்வல்லாரை
மணக்காளான் நெய்யுங்காற்படியே. (87)

கனகரத்தினமாங் கோபுரந்தாங்கிக்
கதிர்ப்புனர் தண்டுநீர்க்காகங்
கருதும்வெள்ளருகு சின்னிபொற்கையான்
காற்படிரசமதுங் கணக்காய்
தளம்பெரும்பாண்ட மதனிலூட்டிடுமே
சாத்திடுமெண்ணை நெய்ப்பாலுஞ்
சாருஞ்சூரணமுங்கரைத்து தன்னடுப்பிற்
சரக்குத்தூளது வெனுந்தாக்கி
மனம்வரும்வளரப் பருப்பதுமரைத்து
வகையொரு பலமதிலூட்டி
வாடைசேராமல் வன்னியிட்டெரிக்க
வரும்பதம் நீரெல்லாஞ்சுவரும்

தினமெனுமுத்திர நக்ஷத்திரம்வருநாட்
செழுங்கதிர்க் காலையிலுதையம்
தீபாக்கினைக்கடிகைச் சென்றுபின்கமலம்
தீயெடுத் திடுவதும்பதமே. (88)

எண்ணெயெரிப்பு

சிறுகொதிகொதித்துவருங் கடுகதுவும்
செலுத்திடும் நீரெல்லாஞ்சுவரும்
தீதணலாற்றிப் பாண்டமுமிறக்கிச்
செலுத்திடுவாடை தன்பொடியைக்
கருவிசெந்தூரங் களஞ்சதுமூட்டி
கடிகைசென்றிருத் திடுங்கலையங்
கடுகுவெவ்வேறாய் கட்டியேதிரளுங்
கடுகுதன்பெருமை யாரறிவார்
நெறிவிளங்கதிதக் குருமுனியருளால்
நிகழ்த்தினே நிருபமாய்த்தமிழால்
இறுபதமன்னைக் கமலபொற்பதமும்
நெறிதவறாமலும் போற்றி
பெரும்பிறப்பகற்றும் நெற்பதுங்கேற்றிப்
பின்னுமண்டல மிருந்தெடுத்துப்
பெற்றியதோர்வினையும் பக்ஷத்திலொடுங்கி
பின்னிட்டுப் போய்விடுமாண்டே. (89)

குட்டம்குடல் வலிக்ஷயகாசம்

குட்டமும்பதிநெட்டட்ட குன்மங்களும்
குடல்வலி மூலமெட்டகலும்
கொடியகிராணிகளுஞ் சுரசன்னிதோஷங்
கொளுமசாத்திய மறிந்தூட்டக்
கட்டமுமணுகுஞ் க்ஷயமொடுகாசங்
கண்வலிவிழி குருடனைத்துங்
கால்கரமுடக்கல் கடிவிடந்திரும்பல்
கண்டுமுரடு கண்முரடுகளகலுந்
திட்டியும்வீக்கந் தீபனமந்த
மசீரணவாந்தி விக்கலும்போம்
தினமொருகரண்டிகண்டு துட்டிடைதான்
செலுத்திடிலிச் சாபத்தியமாம்
நட்டமுமில்லைகாண் சிவரும்பாலை
நடத்துமுவ்வித மறிந்துணர
நரகம்போய்சொற்க நாள்வரையிலுமே
நல்வினைப் பிறவிகாணாண்டே. (90)

பல்லவி

தனந்தனந்தன தனதனனந்-தனந்
தனந்தனாந்தன தனனனாம்

சரணங்கள்

வனந்தனிலுவர் பூபூர்க்கு-மதி
ரவிமுகம்பட காகாய்க்கு-மின்
திறந்திடீர்ப்புவி பூநீர்மே-லிடி
விழுந்திடுமின்னல் கொழித்துமழை-தினஞ்
சொரிந்திடும்புன லுவருருகி-நிலம்
பரிந்ததிர்முன்ன மதுபாய்ந்து-யினந்
தெரிந்திடுமாசி பவர்ணமியில்-நிலை
பிறிந்திடா தெடுவீர்மனமே. (91)

அகிலபுவனமதி லடையாளம்-அஞ்சு
நிலத்திலொருநிலமென் றறிவிராய்ப்-பகிர்
அண்டமீரேழும்பதி நாலுலகும்-படி
சோதித்திடவும் பாரில்பரிகைஷிந்த-மகி
தலமலைகடலிவை நேர்மேற்கு-வட
திசைமுதல்தென்றிசை நடுப்போக்கு-ஜெக
மிவைதனிலும் ராயபுரிபாலைத்-திட
மிவையுந்தர் மபுரிநிலப் போக்கே. (92)

பஞ்சநிலமிவையஞ் சுவர்பூர்க்குங்-கொக்குப்
பறவைகளிருந்திடும் பாவனையா-யிது
அஞ்சுமேவெளூர் துய்யநிறமதுவாம்-வயி
டூரியமெனும் பூவதைக்கேளா-யது
நஞ்சிவையானுவர் பெண்ணதுவாம்-நாத
விந்திவைக்கூறதாயும் பிள்ளையதா-மெனில்
கொஞ்சிடுவாரிரு கூறுமொன்றே-குடி
வாழ்தல்நிலமறிந் தெடுமனமே. (93)

எண்ணூறிவைமொழியி லெடுத்துரைத்தோமிவை
சொச்சமறிவது நூறிதிலுரைத்தோ-மினங்
கீண்ணும்பசுவுமொரு துறையிலும்வாழ்-விதி
கருவுங்குருவறியா தென்செய்தேன்யான்-இனி
மண்ணும்விண்ணுமறிந் தெடுத்துருவாய்-வடி
வங்களினமறியா தென்செய்வோம்-நாம்
எண்ணமிரண்டது மொன்றாய்முடிந்தால்
ஒருகோடி விதமறியலா மனமே. (94)

வேறு

இந்தவிதம் புவியறிந்து யெடுப்பாரில்லை
இனமறிந்து கல்லெடுத்துச் சுடுவாரில்லை
நிந்தனை யென்பேரிற்குற்றஞ் சொல்வாரில்லை
நீநினைத்தப் படிமுடியு முடிப்பாரில்லை

மைந்தனே யேலேலசிங்க முனைப்போலில்லை
  மாநிலத்திற் குரைப்பதில்லை மதிப்பாரில்லைச்
சுந்தரமே கல்லுவரு மமுரிதன்னாற்
  சுத்திதசதீக்ஷயினால் சுண்ணமாச்சே. (95)

சுண்ணமிவை மித்துருவேயாகும்
  தொட்டசரக் கறுபத்துநாலுநீறாம்
முன்னமேயானறிந்துரைத்தேன் கிளியானாலும்
  ஒருமொழி சொல்லிருமொழியா யுரைக்கும்
இம்மொழியிற் பிழையிருந்தாலெரித்துப்போடுபாரு
  யில்லாட்டாலிவ்விதஞ்செய் யினிசெய்யாட்டால்
மன்னவனேயண்டமிடிந் தனேகஞ்சுக்கல்
  மரணமெய்துந்தலைதெறிந்து மடிவார்தாமே. (96)

அகிலபுவனங்களதி லலைந்தாலென்ன
  அண்டரண்டஞ்சுத்தியுமே திரிந்தாலென்ன
மகிதலமென்றறிந்துகற்பங் கொண்டாலென்ன
  வளர்பிறையுந் தேய்பிறையு மறிந்தாலென்ன
சுசியோடறுசுவையகற்றி யிருந்தாலென்ன
  சுத்தசைவக்கிரிகையிலுந் தெளிந்தாலென்ன
முகிவுமுடிவைந்தாண்டு நிருவியுண்டால்
  முறிந்துயெண்ணெய் கக்கிவிடுமுதகமாமே. (97)

கற்பமுண்ண
வேறு

எண்ணைகக்கிவிடுமன்ன முண்டுவருமே
  விதிப்பதுவர் தள்ளிடும்
உண்ணவுண்ண கடுங்காரமேருங்
  கறியுப்பகத்திவிடு மொருபோதும்
விண்ணடுத்தவறு சுவையகத்திவிடு
  மமுதுபச்சரிசி யாதலால்
விண்ணுமண்ணும் சிவக்கியானமேதவிர
  இருவிநீரமுதில் கொண்டிடும்
புண்ணதாகும்புவி நீரகற்றிவிடு
  போகங்காய்கற் மீன்மாங்கிஷம்
யெண்மயல்புகைநீர் வஸ்தபினிமது
  பேடியாவதுங் கஞ்சாவிடும்
தண்குடத்துநதிநீர் ஜலமொழிய
  கருதொண்ணாது வினைவனமெலாங்
கண்குடத்து ஜலநீ..ர விட்டுமறு
  காசினியில் சலந்தள்ளிடே. (98)

கற்பதேகத்தில் நேரிடும் வியாதிகள்

ஐயமீரியனலாற் சுடல்கனலும்
அங்கமாதிதமும் வீசிடல்
அக்கினியதீதத்தாப தோடஜுரம்
அணுகிடிலுந் துய்யாவவின்பால்
செய்திடுமிளகு சீரகங்கரிய
வேம்புடனும் புளியாரைதான்
சிறுபயருடனுந்தேனும் கூட்டிடுதல்
சீதளம் வருதலுடல்தனில்
பையரத்தையும் வேர்க்கொம்புடன்புரசை
பதுமலரமுரி நீரினில்
பத்துக்கொன்று குடிநீரருந்திவிடப்
பறக்குமேஜுர முஞ்சீதளங்
கொய்யும் வாய்வுகுடி கொண்டுகொந்திவிட
கூடுஞ்சுக்கு சிறுக்கீரைவேர்
குடிநீர்தன்அமுரி பத்துக்கொன்றுவனல்
குருகவுஞ்சுரசங் கொண்டிடே. (99)

வேறு

இந்தவிதமருந்த யெண்ணெய்க்கக்குஞ்சுத்தஜலம்
மந்தஜலத்திலுவ ரைத்துபல-மிந்தஜலம்
வாரிநீர்வாழி வயிடூரியவுப் பொன்றுபலந்
தேறிவிடுந் தீக்ஷய துஞ்செய்யே. (100)

செய்கையதுசிப்பித் தேத்துதசை தீக்ஷபுனல்
ஐயமில்லாச்சுத்தஜல மந்தவுவர்-செய்கைவிதம்
சட்டிதனிலிட்டுமறு சட்டிசிறுசாய்க்காவிய
அட்டியில்லாக் கோழிப்புடமாண்டே. (101)

வாச்சுதிவைசுண்ணம் மடக்குச்சிறுசாயிரண்டு
ஏச்சுதிவைமடக்கி லிந்தசுண்ணம்-வாச்சுதெடு
பேர்பாதியிட்டுப் பின்னும்வைடூரியவுப்
பாரறிவாரோ அறியாராண்டே. (102)

வைத்திடுமேற்பாதி வைடூரியத்தைமூடிவலுச்
சுத்திடுமண்சீலைதிரி மூன்றெனிற்காண்-வைத்துவிடு
குக்குட மும்பத்தெருவாங் குமுரிடுமே சுண்ணமதும்
கொக்குஞ்சரக் காதிமுஞ்சுண்ணம். (103)

சரக்குப்பலமென்று சற்குருவுமேகழஞ்சு
அரக்குமுமிநீர்தனா லதைக்குழைத்துச்-சரக்கதுமேற்
கவசமதுபுகட்டிக் கதிர்முகமுங்காட்டி
அவிழ்தமெனுந் தமழகொண்டாட்டே. (104)

ஆட்டியதின்மேலு மறக்குத்திச்சீலையுணர்
வாட்டிவிடும்பத்தெருவில் வாலையா-மாட்டிவிடு
மெந்தயிலை யெந்தசரக் கிவ்விதமாய்ச் செய்கைபடி
அந்தயிலையென் றுரையுமாண்டே. (105)

நவரத்தினமணி நன்னூர்சுருக்கமாஞ்
சிவமெஞ்ஞானச் சிந்தாமணிச்சூத்திரம்
மவுனபீட மாணாக்கர்மகிழ்ந்திடுங்
கெவுனயோகக் கிருகையுமாய்ந்துணர்
விவேகமாமொழி வேதம்விளங்கிடில்
சுவர்கள்கோடி கண்டெடுத்துணர்வரோ
தவமேலாறு வாதார மீராறுயிர்
கௌனங்கண்டுணர் காட்சியடைவரே. (106)

இன்னூல்சாத்திர மெண்ணூர் சுருக்கிடைச்
சொன்னோஞ்சொச்சனூறு சூத்திரமாதலாற்
பன்னுமாமறைப் பாடல்மூவைந்துநூர்
வண்ணச்சிந்து வைத்தியவாதமும்
நன்னூலாய்ந்து நற்பொருளருளதும்
மண்ணுள்ளவரை வாழிமென்மேலதாம்
யன்னையம்பிகை யாண்டேயருட்பதம்
முன்னமேமுழுது முற்றும் ரத்தினமே. (107)

வேறு எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

நவரத்தினமொன்பது மிலங்குமொழிதமிழ்கவிதை
நவகண்டபுவன மவைசூழ்
நகரிலகுமகிதலமீரேழு புகழதிவீர
ஞானமூ வைந்துநூறில்
சிவகுருமெய்ஞ்ஞான வகத்தீசரருளாலும்
திருவள்ளுவனெனும் பேரதனால்
திகிரிகடலகிலமிவை முனிரிஷிதபோதனர்கள்
சித்தர்பதினெண்பேர் மகிழுந்
தவமறைநன்னூல் விசிதரத்தினசிந்தாமணி
சாத்திரமெண் ணூற்றியாறும்
சரிதையில்விளங்குமதி யமுர்தமழைப் பொழியவும்
சதகோடி யுகவரையும்வாழ்
கெவுனமணிசொச்சமொரு நூறுமிவையெட்டுகவி
கைவல்லியப் பாடலுரையுங்
[illegible]சவிலகு விடைபின் சுழிபரிபூரணக்
கருணா[illegible] முற்றே. (108)

கெவுனமணி முற்றிற்று.

தாமரை
நூலகம்